# ABRIDGED REPORT

OF THE

# ROYAL COMMISSION ON AGRICULTURE IN INDIA

இந்தியாவில் விவசாய சம்பந்தமாய்

நியமிக்கப்பட்ட

# ராஜாங்கக் கம்மிஷன்

---

## ரிபோர்ட்டின் சுருக்கம்


சென்னை

கவர்ன்மெண்ட் அச்சுக்கூட சூபரின்டென்டெண்ட் அவர்களால் அச்சிடப்பட்டது.

---

1930


PRICE, Re. 1-8-0]

# இந்தியாவில் விவசாய சம்பந்தமாய்

நியமிக்கப்பட்ட

# ராஜாங்கக் கம்மிஷன்

---

## ரிபோர்ட்டின் சுருக்கம்

சென்னை

கவர்ன்மெண்ட் அச்சுக்கூட சூபரின்டென்டெண்ட் அவர்களால்
அச்சிடப்பட்டது.

1930

# குறிப்பு.

இந்தியாவில் விவசாய சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட ராஜாங்கக் கம்மிஷன் செய்த ரிபோர்ட்டைப் பொது ஜனங்களில் சிலர் மாத்திரமே வாசிக்கக்கூடும். அவர்களைக்காட்டிலும் அதிக ஜனங்கள் அந்த ரிபோர்ட்டில் கண்டிருக்கும் பிரதான முடிவுகளை வாசிக்கும்படிச் செய்யும் உத்தேசத்துடன் மேற்படி ரிபோர்ட்டின் இந்தச் சுருக்கம் தயார்செய்யப்பட்டிருக்கிறது. ஏதாவதொரு பகுதியைப் பொறுத்தமட்டில் இந்தச் சுருக்கத்துக்கும் பூர்த்தியான ரிபோர்ட்டில் அதற்குச் சரியான பாகத்துக்கும் அர்த்தத்தில் எவ்வகையான பேதமாகிலும் இருப்பதாகத் தோற்றும்பட்சத்தில், பூர்த்தியான ரிபோர்ட்டையே அதிகாரவாயிலாக வெளியிடப்பட்ட தஸ்தவேஜாக எப்போதும் கொள்ளவேண்டும்.

ஜே. ஏ. மதன்,

எப். டபில்யு. எச். ஸ்மித்,

1928-ம் ௵ ஏப்ரல் ௴ 14௳. கூட்டுக் காரியதரிசிகள்.

## பொருளடக்கம்.


பக்கம்

1. முன்னுரையும் பூர்வ சரித்திரமும் .. ... .. 1
2. விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி வேலையை ஒழுங்குபடுத்துவது .. .. .. .. ... .. 5
3. விவசாய அபிவிருத்தியும் கைப்பற்று நிலங்களை உட்பிரிவினை செய்வதும் துண்டுதுண்டாகப் பிரிப்பதும் .. .. 14
4. விவசாய முறைகளைச் செய்துகாட்டுவதும் பிரசாரவேலையும். 24
5. பிராணிகளை வைத்து நிர்வாகம் செய்வது .. .. 33
6. காடுகள் .. .. .. .. .. .. 41
7. கால்நடைகளுக்குக் காணும் வியாதிகளும் அவைகளைப் பரவவொட்டாமல் தடுப்பதும் .. .. .. .. 45
8. நீர்ப்பாய்ச்சல் .. .. .. .. .. 57
9. போக்குவரவு சாதனங்களும் சரக்குகளை விற்பனை செய்வதும் 69
10. விவசாயத்துக்குப் பொருளுதவி செய்வது .. .. 79
11. கூட்டுறவு .. .. .. .. .. 85
12. கிராமம் .. .. .. .. .. .. 93
13. கல்வி .. .. .. .. .. .. 104
14. கிராமக் கைத்தொழில்களும் கூலிவேலையும் .. .. 119
15. தோட்டவேலையும் தோட்டப் பயிர்களும் .. .. 123
16. விவரக்கணக்குகள் .. .. .. .. .. 127
17. விவசாய சம்பந்தமான ஊழியவர்க்கங்கள் .. .. 135
18. பலவகைப்பட்டவை .. .. .. .. .. 150
19. முடிவுரை .. .. .. .. .. .. 153

# இந்தியாவில் விவசாய சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட ராஜாங்கக் கம்மிஷன் ரிபோர்ட்டின் சுருக்கம்.

---

### 1. முன்னுரையும் பூர்வ சரித்திரமும்.

*பிரதான ரிபோர்ட்டின் 1-ம், 2-ம் அத்தியாயங்கள்.*

இந்தியாவில் விவசாய சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட ராஜாங்கக் கம்மிஷனானது இந்தியாவில் விவசாயத்தின் நிலைமையையும் கிராமங்களின் திரவிய சம்பந்தமான நிலைமையையும்பற்றி பிரத்தியேகமாய் ஆராய்ச்சி செய்து ரிபோர்ட் செய்வதற்காக முதன்முதல் நியமிக்கப்பட்ட கம்மிஷனாகும். 1880-ம் வருஷத்திலும் 1898-ம் வருஷத்திலும் 1901-ம் வருஷத்திலும் பஞ்ச விஷயமாய் நியமிக்கப்பட்ட கம்மிஷன்களும் 1903-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட நீர்ப்பாய்ச்சல் கம்மிஷனும் 1915-ம் வருஷத்தில் கூட்டுறவு சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட கம்மிட்டியும் விவசாயத்தை அபிவிருத்தி செய்வதற்காகவும் கிராமப் பிரஜைகளின் க்ஷேமத்தையும் செல்வத்தையும் அதிகப்படுத்துவதற்காகவும் அனேக சிபாரிசுகள் செய்தன. பஞ்சவிஷயமாய் நியமிக்கப்பட்ட கம்மிஷன்களின் ரிபோர்ட்டுகள் - இந்தியாவின் விவசாய அபிவிருத்தியைக்குறித்த சரித்திரத்தில் முக்கியமாய்க் கவனிக்கத்தக்க விஷயங்களாகும். பஞ்சத்தின் உக்கிரத்தைக் குறைப்பதற்கோ பஞ்சத்தினால் விளையும் கஷ்டங்களை ஜனங்கள் முன்னிலும் நன்றாக சமாளித்துக்கொள்ளக்கூடியவர்களாயிருக்கும்படிச் செய்வதற்கோ கவர்ன்மென்டார் என்ன ஏற்பாடுகள் செய்வது அவசியமோ அந்த ஏற்பாடுகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வதே பஞ்சவிஷயமாய் நியமிக்கப்பட்ட கம்மிஷன்களின் பிரதான வேலையாயிருந்தது. இது சகஜமேயாகும். 1880-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட கம்மிஷனானது பொதுவாக ஒரு முடிவுக்கு வந்தது. அதாவது, "இனிமேல் உணவுப் பொருள்கள் கிடைக்காமற்போய் அதனால் ஜனங்கள் துன்பம் அடையாதிருக்கும்படிச் செய்யவேண்டுமானால், தேசத்துக்குள் இருக்கும் போக்குவரவு மார்க்கங்களை அபிவிருத்திசெய்து வர்த்தகம் தாராளமாய் நடப்பதற்கு ஏற்பட்டுள்ள தடங்கல்களையெல்லாம் நீக்குவதோடுகூட, தகுதியான பிரதேசங்களில் நீர்ப்பாய்ச்சல் சாதனங்களை விஸ்தாரப்படுத்தி விவசாயத்தையும் அபிவிருத்தி செய்யவேண்டும்" என்பது அடுத்த இருபது வருஷ காலத்துக்கு இந்தியாவிலே விவசாய பூமிசம்பந்தமாகவும் பரிபாலன சம்பந்தமாகவும் நல்ல சீர்திருத்தங்கள் செய்வதற்கு இந்தக் கம்மிஷன் செய்த பிரேரேபனைகள் மூலமாய்த் தீவிரமான தூண்டுதல் ஏற்பட்டது.

விவசாயத்தைச் சீர்திருத்தும்பொருட்டு சாஸ்திரீய முறைகளை அனுசரித்து வேலை செய்துவரும் விவசாய இலாகாக்கள் விருத்தியடைந்ததற்கேயன்றி கூட்டுறவு நாணய இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதற்குங்கூட 1901-ம் வருஷத்துக் கம்மிஷனே காரணமாகும். "விவசாய சம்பந்தமான பிரசினைகள் விஷயமாய் இடைவிடாமல்

ஆராய்ச்சி செய்து பார்ப்பதே தற்காலத்தில் அத்தியாவசியமானது" என்று மேற்படி கம்மிஷன் தீர்மானித்தது, ஆனால், அந்தப்படி தீர்மானித்ததுடன்கூட பின்வருகிறபடி எச்சரிகையும் செய்தது; அதாவது, "மாமூல் கட்டாயம் கிடைக்குமென்னும் நிச்சயம் ஏற்படுவதால், நிலத்தை நம்பியிருக்கும் ஜனங்களுக்குக் கஷ்டம் ஏற்படுவது தள்ளிக்கொண்டு மாத்திரம் போகும்; ஆனால், ஜாக்கிரதையாகவும் விவேகத்துடனும் பிரவர்த்தித்துச் சிக்கன முறைகளை அனுசரித்துவந்தால் மாத்திரமே அந்தக் கஷ்டம் நிவர்த்தியாகும்." என்று எச்சரிக்கை செய்தது. விவசாய முறையை அபிவிருத்தி செய்வதும் விவசாய விஷயமாய் ஆராய்ச்சி வேலை செய்வதும் அவசியமென்று முந்திய கம்மிஷன்கள் வற்புறுத்திச் சொல்லியிருந்தன. ஆனால், ஆரம்பத்தில் விவரக்கணக்குகள் தயார்செய்யும் வேலையிலும் பஞ்சம் ஏற்பட்டிருக்கும் நிலைமைகளில் அவைகள் விஷயமாய்ப் பிரவர்த்திப்பதற்காகப் பலவகையான சாதனங்களை அமைப்பதிலும் விவசாய இலாகாக்கள் தங்கள் காலத்தைப் பெரும்பாலும் செலவிட்டு வந்தன. விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி வேலையானது விட்டுவிட்டுச் செய்யப்பட்டு வந்ததேயொழிய, தொடர்ச்சியாய் நடந்ததே கிடையாது. மேலும், சாஸ்திர முறைகளின்படி வேலை செய்யும் ஒரு இலாகாவை ஏற்படுத்த முயற்சி செய்யப்படவேயில்லை. அந்த வேலை செய்பவர்கள் குறைவாயிருந்ததே அதற்கு முக்கிய காரணமாகும்.

ஆயினும், இந்த நூற்றாண்டின் ஆரம்பத்திலே விவசாயத்தை சாஸ்திர ரீதியாய்க் கற்றுணரவேண்டுமென்னும் ஊக்கம் க்ரேட் ப்ரிட்டனிலும் இந்தியாவிலும் விசேஷமாய் ஜனித்தது. மேலும், 1901-ம் ஸ்ல்த்தில் பஞ்ச விஷயமாய் நியமிக்கப்பட்ட கம்மிஷனும் 1903-ம் ஸ்ல்த்தில் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமாய் நியமிக்கப்பட்ட கம்மிஷனும் செய்த சிபாரிசுகளின் பயனாக, விவசாய ஆராய்ச்சிக்கும் அபிவிருத்திக்கும் சம்பந்தப்பட்டதாய் முன்னேற்றம் அடையத்தக்க முறை ஒன்றை கர்ஸன் பிரபு அவர்களின் கவர்ன்மெண்டார் ஆரம்பித்தார்கள். இந்திய விவசாயம் அபிவிருத்தி அடைந்திருப்பதற்கு அவர் தூரதிருஷ்டியுடன் செய்த காரியங்களே பெரும்பாலும் காரணமாகுமென்று சொல்லவேண்டும்.

1903-ம்ஸு ஜூன்மீ 4உ இந்தியா கவர்ன்மெண்டார் ஸ்டேட் ஸெக்ரெடரி அவர்களுக்கு ஒரு நிருபம் அனுப்பினார்கள். பீஹாரைச் சேர்ந்த தர்பங்கா ஜில்லாவிலுள்ள பூஸாவில் விவசாய ஆராய்ச்சிச் சாலை ஒன்றையும் பரிசோதனைப் பண்ணை ஒன்றையும்விவசாயக் கலாசாலை ஒன்றையும் ஸ்தாபிப்பதற்குரிய திட்டம் ஒன்று மேற்படி நிருபத்துடன் அனுப்பப்பட்டது. அந்த நிருபமானது இந்தியாவில் விவசாய ஆராய்ச்சி வேலை ஒழுங்காய் ஆரம்பிக்கப்பட்டதைக் குறிப்பிடுகிறது. சிகாகோவிலிருக்கும் மிஸ்டர் ஹென்ரி பிப்ஸ் என்னும் அமெரிக்கக் கனவான் ஒருவர் பிரயோசனகரமாயுள்ள எந்தக் காரியத்துக்காவது உபயோகிக்கும்படியும், அந்தக் காரியம் சாஸ்திரீய ஆராய்ச்சிக்குச் சம்பந்தப்பட்டதாயிருந்தால் உத்தமமென்றும் சொல்லி கர்ஸன் பிரபுவினிடத்தில் உதாரகுணத்துடன் உபகாரார்த்தமாய் 30,000 பவுன் கொடுத்திருந்தார். அந்தத் தொகையில் பெரும்பாகத்தைக் கர்ஸன் பிரபு மேற்படி ஆராய்ச்சி ஸ்தா

னத்தை ஸ்தாபிப்பதற்காகச் செலவு செய்தார். மேற்சொல்லிய நிருபத்தில் சுருக்கமாய்க் குறிப்பிடப்பட்டிருந்த திட்டத்தை அனுசரித்து, பூர்த்தியான முஸ்தீபுகளோடு கூடிய ரசாயன பரிசோதனைச் சாலைகளுள்ள ஆராய்ச்சி வேலை ஸ்தானம் ஒன்றும், பரிசோதனைப் பண்ணை ஒன்றும், மாணவர்களைப் பழக்குவதற்காக விவசாயக் கலாசாலை ஒன்றும், பிரதேசத்தில் உற்பத்தியாகும் கால்நடைகளை விருத்திசெய்வதற்காகக் கால்நடைப் பண்ணை ஒன்றும் பூஸா எஸ்டேட்டில் ஸ்தாபிக்கப்பட்டன.

இந்தியா கவர்ன்மெண்டாரின் நேர் மேல்விசாரணைக்கு உட்பட்டிருக்கும் ஒரு மத்திய ஸ்தாபனமானது தங்களுடைய திட்டத்தின் படி தலைமை ஸ்தானமாக மாத்திரமே இருக்கக்கூடுமென்பதையும், அதே காலத்தில் மாகாணங்களிலும் விவசாயம் உள்ளபடி அபிவிருத்தி அடைந்தாலொழிய மேற்படி ஸ்தாபனத்தினால் எவ்வித நன்மையும் விளையமாட்டா தென்பதையும் கர்ஸன் பிரபு அவர்களின் கவர்ன்மெண்டார் பூர்த்தியாய்க் கண்டறிந்தார்கள். ஆகவே, மாகாணங்களில் விவசாய சம்பந்தமான ஆராய்ச்சியையும் பரீட்சையையும், அதற்குச் சம்பந்தப்பட்ட வேலைகளைச் செய்துகாட்டுவதையும் கல்வி கற்பிப்பதையும் அபிவிருத்தி செய்வதற்காக வருஷாவருஷம் 20 லட்ச ரூபாய் பிரத்தியேகப்படுத்திவைக்க தாங்கள் உத்தேசித்திருப்பதாய் இந்தியா கவர்ன்மெண்டார் 1905-ம் வருஷத்தில் தெரிவித்தார்கள். பின்பு அந்தத் தொகை 24 லட்ச ரூபாய்க்கு உயர்த்தப்பட்டது. கவர்ன்மெண்டார் நிறைவேற்றும்படி கொண்ட நோக்கம் என்னவென்றால், மூன்று வருஷகாலம் போதனை செய்யும் விவசாயக் கலாசாலைகளை எல்லா மாகாணங்களிலும் ஸ்தாபிப்பதும், ஆராய்ச்சி வேலை செய்வதற்கும் போதனை செய்வதற்கும் நிபுணர்களாயுள்ள சிப்பந்திகளை அந்த ஸ்தாபனங்களில் ஏற்படுத்துவதுமேயாம். அங்கங்கே சோதனைப் பண்ணைகளை தகுதியான உத்தியோகஸ்தர்களின் மேல்விசாரணையின்கீழ் ஏற்படுத்தி, அவர்கள் பயிரிடுபவர்களோடு நெருங்கிக் கலந்து சீர்திருத்தமான விவசாய முறைகளை அனுஷ்டிக்கும்படி அவர்களுக்குப் போதனை செய்யும்படியான கடமை அந்த உத்தியோகஸ்தர்களுக்கு ஏற்படும்படிச் செய்து, அதன் மூலமாக மேற்படி கலாசாலைகளுக்கும் ஜில்லாக்களுக்கும் சம்பந்தம் உண்டாகும்படிச் செய்ய உத்தேசிக்கப்பட்டது. இந்த திட்டத்தை அனுசரித்து, பூனா, கான்பூர், நாக்பூர், லையால்பூர், கோயம்புத்தூர், ஸைபூர் என்னும் இடங்களில் கலாசாலைகள் புதிதாய் ஏற்படுத்தப்பட்டன அல்லது ஷை இடங்களில் ஏற்கனவே இருந்தவை மறுபடியும் ஒழுங்காய் அமைக்கப்பட்டன. 1921-ம் வருத்தின் முடிவில் ஸைபூரில் இருந்த கலாசாலை மூடிவிடப்பட்டது. 1924-ம் வருத்தில் மாண்டலேயில் ஒரு கலாசாலை திறக்கப்பட்டது. பெரும்பான்மையான மாகாணங்களில் பிரத்தியேகமாய் விவசாய இலாகா வொன்று ஏற்படுத்தப்பட்டதுமல்லாமல், சாஸ்திர நிபுணர்களான சிப்பந்திகளும் நியமிக்கப்பட்டார்கள்.

ஜில்லா வேலையின்பொருட்டு ஒரு மாகாணமானது பல ஸர்க்கில்களாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. ஒவ்வொரு ஸர்க்கிலும் ஒரு விவசாய இலாகா டெப்யுடி டைரெக்டரின் கீழ் இருக்கிறது. தம் ஸர்க்கிலிலுள்ள பரிசோதனைப் பண்ணைகள், விதைப் பண்ணைகள்,

விவசாய முறைகளைச் செய்துகாட்டும் பண்ணைகள், இந்த வேலைகளுக்குரிய நிலத்துண்டுகள் ஆகிய இவைகளின் நிர்வாகத்துக்கும், விதையையும் கருவிகளையும் பகிர்ந்து கொடுப்பதற்கும், பொதுவாய் விவசாய சம்பந்தமான பிரசாரம் செய்வதற்கும் டெப்யுடி டைரெக்டர் முதலில் உத்தரவாதியாவார். மாகாண விவசாய ஊழிய வர்க்கத்திலிருந்து எடுத்துக்கொள்ளப்பட்ட விவசாய அஸிஸ்டன்டுகளையும் இதர சிப்பந்திகளையும் அவருக்கு ஏற்படுத்திக் கொடுத்திருக்கிறது.

விவசாய இலாகாக்கள் பெரிதும் அபிவிருத்தி அடைந்திருக்கிறதென்பதை எவரும் மறுக்கமுடியாது. ஆனால், இதுவரையிலும் மொத்த விஸ்தீர்ணத்தில் வெகு சிறிய பாகத்துக்கு மாத்திரமே அந்த இலாகாக்களினால் விளையக்கூடிய நன்மை பரவியிருக்கிறது. ஆனால், எங்களுடைய ரிபோர்ட் முழுவதிலும் இந்த இலாகாக்களின் திறமையை விருத்திசெய்யும் பிரசினையைக்குறித்தும் அவைகளின் வேலையை இந்தியாவில் விவசாயம் செய்யும் விஸ்தீர்ணம் முழுவதும் பரவச்செய்யும் பிரசினையைக் குறித்தும் நாங்கள் விரிவாய்ச் சொல்லியிருக்கிறோம். ஆயினும், பின்னும் விரிவான பிரசினையின் ஒரு அம்சமாகவே நாங்கள் இதை பாவிக்கிறோம். அந்தப் பிரசினை என்னவென்றால், சுற்றிலுமுள்ள நிலைமைகள் எம்மாதிரி இருந்தால் பயிரிடுபவர் விவசாய இலாகாவும் மற்ற இலாகாக்களும் தமக்குச் சொல்லக்கூடிய ஆலோசனைகளையும் செய்யக்கூடிய உதவியையும் பெற்று அவைகளை எவ்வளவு பிரயோசனகரமாய் உபயோகித்துக் கொள்ளக்கூடுமோ அவ்வளவு பிரயோசனகரமாய் உபயோகித்துக்கொள்ள இஷ்டப்படுவாரோ அப்படிப்பட்ட நிலைமைகளை உண்டாக்குவதேயாகும். ஆகவே, எங்களுடைய விசாரணையானது கிராமங்களின் க்ஷேமத்துக்கு நெருங்கிய சம்பந்தமுடையவைகளான சகல இலாகாக்களின் வேலைகளுக்கும் வியாபிக்கிறது. எல்லா வழிகளிலும் விருத்தியடைவதற்கு அனுகுணமாயிருக்கக்கூடிய நிலைமைகளைச் சுற்றிலும் உண்டாக்கும் விஷயத்தில் விவசாய இலாகா, வெடரினரி (கால்நடை வைத்திய) இலாகா, காட்டிலாகா, நீர்ப்பாசன இலாகா, கூட்டுறவு இலாகா, பப்ளிக் ஹெல்த் (பொதுஜன தேகாரோக்கிய) இலாகா, கல்வி இலாகா, கைத்தொழில் இலாகா ஆகிய இவைகளில் ஒவ்வொன்றும் இன்ன விதமாய்ச் சகாயம் செய்யக்கூடுமென்று எடுத்துக்காட்ட நாங்கள் முயற்சி செய்கிறோம். சுருக்கமாய்ச் சொல்வோமானால், கிராமவாசிகள் இப்போதிருப்பதைக்காட்டிலும் இன்னும் சௌக்கியமாய் வாழும் நிலைமையை அடையும் விஷயத்தில் உதவி செய்வதற்கான சகல வழிவகைகளையும் யோசித்துச் சொல்வதே எங்கள் நோக்கமாகும். அந்த வழிவகைகளோ-இப்போதிருப்பவைகளைக் காட்டிலும் நல்ல விஷயங்களிடத்தில் கிராமவாசிகளுக்கு ஒரு விருப்பம் உண்டுபண்ணக்கூடியவைகளாயிருப்பதுடன், அவர்களில் ஒவ்வொருவரும் தம்முடைய சுயமரியாதையையாவது தம்மிடத்திலுள்ள புருஷனுக்குரிய சுதந்தர உணர்ச்சியையாவது குறைத்துக்கொள்ளாமல் தங்களுக்கு வீண் ஆசைகள் உண்டாவதனின்றும் தங்களைத் தடுத்துக் கொள்ளும்படி செய்யக்கூடியவைகளாயும் இருக்கவேண்டும்.

## 2. விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி வேலையை ஒழுங்குபடுத்துவது.

பிரதான ரிபோர்ட்டின் 3-ம் அத்தியாயம்.

1919-ம்வருஷத்திலே ராஜாங்க அமைப்பில் செய்யப்பட்ட மாறுதல்கள் காரணமாக, இந்தியா கவர்ன்மென்டார் - "மாற்றப்பட்ட" இலாகாக்களின் பரிபாலன சம்பந்தமாய் மேற்பார்வையிடுவதற்கும் கட்டளைகள் பிறப்பிப்பதற்கும் மேல்விசாரணை செய்வதற்குமுள்ள சகல அதிகாரங்களும் மிகவும் சிறிய அளவுக்குத் தவிர மற்றப்படி தங்களுக்கு இராதபடி செய்துகொண்டார்கள். எங்களுடைய விசாரணைகளைக்கொண்டு நோக்கும்போது, விவசாயம், கால்நடை வைத்தியம் என்னும் இலாகாக்கள் அந்தப்படி மாற்றப்பட்ட இலாகாக்களில் மிகவும் முக்கியமானவைகளாகும். மத்திய ஏஜென்ஸிகள், ஆராய்ச்சி வேலைக்குரிய ஸ்தாபனங்கள், தொழில் துறையிலும் சாஸ்திரீய முறைகளிலும் பழக்குவதற்கான ஸ்தாபனங்கள் ஆகிய இவைகளின் பரிபாலனமானது "மத்திய" இலாகாவாகக் கொள்ளப்பட்டு இந்தியா கவர்ன்மென்டாரிடமே வைத்துக்கொள்ளப்பட்டது. ஆனால், மேற்படி ஸ்தாபனங்கள் செய்யும் வேலையை மாகாணங்களிலுள்ள இவைகளைப்போன்ற ஸ்தாபனங்கள் செய்யும் வேலையுடன் சம்பந்தப்படுத்தி நடத்துவதற்காகப் பிரத்தியேக நிபந்தனை எதுவும் ஏற்படுத்தப்படவில்லை. எனவே, அதிமுக்கியமான ஆராய்ச்சி வேலையின் விஷயத்தில் மாகாண இலாகாக்கள் இன்ன கோட்பாடுகளை அனுசரிக்கவேண்டுமென்று சொல்லி அவைகளின் வேலை முறையும் தங்களுடைய வேலை முறையை ஒத்திருக்கும்படி செய்யக்கூடிய ஒரு மத்திய ஸ்தாபனத்தின் மூலமாய் ஏற்படும் தூண்டுதல் மேற்படி மாகாண இலாகாக்களுக்கு இராமற்போயிற்று. மத்திய இலாகாவும் மாகாண இலாகாக்களும் செய்யும் ஆராய்ச்சி வேலையையாவது மாகாணங்களுக்குள் செய்யப்பட்டுவரும் ஆராய்ச்சி வேலையையாவது ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தி நடத்த 1919-ம்வருஷத்திய ராஜாங்க அமைப்பில் பிரத்தியேக நிபந்தனை எதுவும் ஏற்படுத்தப்பட்டிராவிட்டாலும், அந்த அமைப்பின் தன்மையை நோக்கும்போது இது காரியத்துக்காகத் தகுதியான சாதனங்களை ஏற்படுத்துவதைத் தடுக்கக்கூடியதெதுவும் அதில் இல்லையென்று தெரியவருகிறது.

விவசாயத்துறையில் அடையக்கூடிய அபிவிருத்திக்கெல்லாம் பரிசோதித்துப்பார்ப்பதே அடிப்படையான வேலையாகும். விவசாய முறைகளைச் செய்துகாட்டுவதற்காகவும் பிரசாரவேலை செய்வதற்காகவும் ஏற்படுத்தப்பட்ட ஸ்தாபனம் எவ்வளவு திறமையானதாயிருந்தபோதிலும், ஆராய்ச்சி மூலமாய்க் கிடைக்கும் உறுதியான அஸ்திவாரத்தைப் போன்ற உண்மைகளை ஆதாரமாகக்கொண்டு அந்த ஸ்தாபனம் வேலை செய்துவராதபட்சத்தில், அது மணலின் மேல் கட்டப்பட்ட வீட்டைப் போன்றதேயாகும். சென்ற கால் நூற்றாண்டிலே பல வழிகளில் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருந்தபோதிலும், இந்த தேசத்திலே விவசாய ஆராய்ச்சியானது இன்னும் பால்ய தசையிலேயே இருந்துவருகிறதென்பது மிகையாகாது. ஆராய்ச்சி செய்யப்படுவது இன்றியமையாததென்பதை ஜனங்கள்

அரைமனதோடு அங்கீகரித்திருக்கிறார்கள். அது சம்பந்தமாகத் திறமையாய் வேலை செய்யக்கூடிய ஸ்தாபனங்களை ஏற்படுத்துவதும் அந்த ஸ்தாபனங்களில் திறமையாய் வேலை நடத்துவதும் முக்கியமென்பதை இன்னும் எவரும் அறிந்துகொள்ளவில்லை. அமெரிக்காவிலுள்ள யுனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் ஐக்கிய நாடுகள், கனடா, ஆஸ்ட்ரேலியாவைப் போன்ற ஏராளமான விஸ்தீர்ணமுடையவைகளாயும் பிரதேச பரிபாலனம் பலமடைந்தும் இருக்கிற இதர தேசங்களில் விவசாய விஷயத்தை சாஸ்திர ரீதியாய் ஒழுங்குபடுத்தி வேலை செய்துவருவதைப்பற்றிய சரித்திரத்துடன் ஒப்பிட்டுப்பார்க்கையில், பிரஸ்தாப விஷயத்தை ஒழுங்குபடுத்தி வேலை நடத்துவது அவசியமென்று இந்த தேசத்தினர் உணராதிருக்கிறார்களென்று தெரியவருகிறது. ஆனால் அது காரணமாக ஆச்சரியம் உண்டாக வேண்டியதில்லை. ஷை தேசங்கள் அனுசரித்துவரும் ஒழுங்கு முறைகளை நாங்கள் ஜாக்கிரதையாய் ஆராய்ந்து பார்த்திருக்கிறோம். அவர்களின் பிரதிநிதிகளை விசாரிக்கும் அவகாசமும் எங்களுக்குக் கிடைத்தது. விவசாய ஆராய்ச்சி சம்பந்தமான துறைகளிலும் பொதுவாய்க் கிராம அபிவிருத்தித் துறைகளிலும் மத்திய ஸ்தாபனம் ஒன்று பிரவர்த்திப்பது அவசியமாகுமென்பதை ஜனங்கள் பூர்த்தியாய் அங்கீகரிக்கும் காலம் அந்த தேசங்களில் ஏற்கனவே வந்திருப்பதைப்போலவே இந்தியாவிலும் வருமென்று நாங்கள் நம்புகிறோம்.

விவசாயம் இன்னும் அதிகமாய் அபிவிருத்தியடையவேண்டுமென்று ஜனங்கள் விரும்புகிறார்களென்பதில் சந்தேகமில்லை. ஆகவே, இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்த அக்ரிகல்சுரல் அட்வைஸர் என்னும் விவசாய விஷயங்களில் ஆலோசனை சொல்லும் உத்தியோகஸ்தரின் உத்தியோகத்தை அப்படியேவைத்துக்கொண்டிருப்பதானுலும், மந்திரிமார்களும் விவசாய இலாகா டைரெக்டர்களும் சபைகள் கூடுவதனாலும் விவசாய போர்ட் கூட்டங்கள் கூடுவதனாலும் என்ன பிரயோசனம் உண்டாகக்கூடுமோ அதைக்காட்டிலும் அதிக பிரயோசனம் உண்டாகும்படியாக விவசாய விஷயமாய் மத்திய இலாகா நடத்தும் வேலையையும் மாகாணங்களில் நடத்தும் வேலையையும் ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தி நடத்தும் உத்தேசத்துடன் செய்யப்படும் பிரேரேபணைகளைத் தேசமுழுவதும் ஜனங்கள் பொதுவாய் அங்கீகரிக்கக்கூடிய காலம் இப்போதே வந்திருக்கிறதென்று வாஸ்தவத்தில் நாங்கள் நினைக்கிறோம்.

இந்தியா கவர்ன்மெண்டாரால் பூசாவில் பராமரித்துவரப்படும் விவசாய ஆராய்ச்சி சாலையைப்பற்றி ஏற்கனவே சொல்லியிருக்கிறது, இந்தியாவில் விவசாய ஆராய்ச்சி முன்னேற்றம் அடையவேண்டுமானால், பூஸாவுக்கும் மாகாண விவசாய இலாகாக்களுக்கும் மாகாண விவசாய இலாகாக்களில் ஒன்றோடொன்றுக்கும் முன்னிலும் அதிக நெருங்கிய சம்பந்தம் ஏற்படும்படிச் செய்வது முக்கியமென்று நாங்கள் திடமாய் எண்ணுகிறோம். இப்படிப்பட்ட சம்பந்தம் ஏற்படும்படிச் செய்வதற்காக வெவ்வேறான பல திட்டங்களைப்பற்றி நாங்கள் ஆலோசித்திருக்கிறோம். பிரிவு பிரிவாகப் பிரித்து நடத்தும் ஆராய்ச்சியென்று சொல்லப்படக்கூடிய ஆராய்ச்சி செய்வது சாத்தியமாவென, அதாவது இந்துதேசத்து மத்திய பஞ்சு கம்மிட்டியைப்

போன்ற மாகாண கம்மிட்டிகளை ஏற்படுத்துவது சாத்தியமாவென நாங்கள் பரிசோதித்துப் பார்த்திருக்கிறோம். இதர கஷ்டங்கள் ஒருபுறமிருக்க, மாகாணங்களையே அனுசரித்து ஆராய்ச்சி வேலை செய்யும் ஒரு ஸ்தாபனமானது - பூஸாவில் நடந்துவரும் வேலையின் ஒழுங்குமுறைக்கும் மாகாண ஆராய்ச்சி ஸ்தாபனங்களில் நடத்தப்படும் வேலையின் ஒழுங்குமுறைக்குப் பொருத்தமானதாயிராது. ஏனென்றால், ஷை ஒழுங்குமுறையானது - முற்றிலும் வேறாகவும், பின்னும் தர்க்க சாஸ்திர ரீதியாகவும் ஆராய்ச்சி வேலையை விவசாய சாஸ்திர சம்பந்தமான பிரிவுகளாகப் பிரித்து அந்தப் பிரிவினையை ஆதாரமாகக்கொண்டு ஏற்படுத்தப்பட்டதாகும். மேலும், பூஸாவின் மேல்விசாரணையை இந்தியா கவர்ன்மெண்டாரிடமிருந்து பிரித்து, மாகாணப் பிரதிநிதிகள் அடங்கியதாய் ஓரளவுக்குக் கவர்ன்மெண்டாரின் மேல் விசாரணைக்கு உள்ளாகாதிருக்கும் ஒரு நிர்வாக சபையினிடத்தில் விடுவது சாத்தியமாயிருக்குமாவென்றும் நாங்கள் ஆலோசித்துப் பார்த்திருக்கிறோம். ஆனால், இந்தப்படி மாற்றும்பட்சத்தில், பூஸாவில் நடக்கும் ஆராய்ச்சி வேலைக்கும் மாகாணங்களில் நடக்கும் ஆராய்ச்சி வேலைக்கும் எம்மாதிரி சம்பந்தம் ஏற்படுவது அவசியமோ அம்மாதிரி சம்பந்தம் அனுஷ்டானத்தில் ஏற்படுமாவென்று நாங்கள் சந்தேகிக்கிறோம். முடிவாய், நாங்கள் பூஸாவுக்கும் மாகாண ஆராய்ச்சி வேலை ஸ்தாபனங்களுக்கும் சம்பந்தம் ஏற்படும்படியாக புதிய ஸ்தாபனம் ஒன்று அமைப்பது அவசியமென்னும் தீர்மானத்துக்கு வந்திருக்கிறோம். அந்த ஸ்தாபனத்தைப் பொறுத்தமட்டில் பூஸாவுக்கும் மாகாண ஆராய்ச்சி வேலை ஸ்தாபனங்களுக்கும் ஒரே மாதிரியான சம்பந்தம் ஏற்படும்.

விவசாய ஆராய்ச்சி சம்பந்தமாய் ஏகாதிபத்திய சபை ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்றும், இந்தியா முழுவதிலும் விவசாய ஆராய்ச்சி வேலையை அபிவிருத்தி செய்வதும் அது இன்ன முறைகளின்படி நடத்தப்படவேண்டுமென்று ஆலோசனை சொல்வதும் வெவ்வேறு பாகங்களில் நடக்கும் வேலையை ஒன்றோடொன்று சம்பந்தப்படுத்தி நடத்துவதும் அந்த சபையின் பிரதான வேலையாய் இருக்கவேண்டுமென்றும் நாங்கள் பிரேரேபிக்கிறோம். ஏகாதிபத்திய ஆராய்ச்சி ஸ்தாபனங்களின்மேலாவது மாகாண ஆராய்ச்சி ஸ்தாபனங்களின்மேலாவது அந்த சபையானது பரிபாலன விஷயத்தில் எவ்விதமான மேல்விசாரணை அதிகாரமும் செலுத்தாது. ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த விவசாய இலாகாக்களும் மாகாண விவசாய இலாகாக்களும் ஆராய்ச்சி வேலைக்குச் சம்பந்தப்பட்ட சகல விஷயங்களிலும் என்ன முறைகளை அனுசரிக்கவேண்டுமென்பதை மேற்படி சபையைக் கேட்டுத் தெரிந்துகொள்ளக்கூடும். மேலும், மேற்படி இலாகாக்கள் ஆராய்ச்சி வேலை விஷயமாய் எவையேனும் திட்டங்களை ஏற்படுத்திக்கொள்ள விரும்பும்பட்சத்தில், அந்த திட்டங்களைக் குணதோஷ ஆராய்ச்சிக்காகவும் அங்கீகாரத்துக்காகவும் அந்த சபைக்கு அனுப்பக்கூடும். அப்படிப்பட்ட சபை ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று பிரேரேபிப்பதில் எங்களுடைய நோக்கம் என்னவென்றால், கால்நடை வைத்திய சம்பந்தமாயும் விவசாய சம்பந்தமாயும் இந்த தேசத்தில் நடத்தப்படும் ஆராய்ச்சி வேலைகளெல்

லாம் அடங்கிய ஸ்தாபனம் ஒன்றை மாகாண கவர்ன்மென்டுகளுக்கு ஏற்படுத்திக்கொடுப்பதும், அந்த ஸ்தாபனத்தின் விஷயத்தில் தங்களுக்கு வாஸ்தவமானதும் தீவிரமானதுமான சிரத்தை இருக்கிறதென்னும் உணர்ச்சி அவைகளுக்கு உண்டாகும்படிச் செய்வதுமேயாகும். விவசாய ஆராய்ச்சி வேலை விஷயத்தில் மாகாணங்களில் செய்யப்படும் வேலைகளிலுள்ள குறைவைப் பூர்த்தி செய்வதற்கு வேண்டிய திரவியத்தின் பரிபாலனம் அந்த சபையாரிடம் ஒப்புவிக்கப்படும்பட்சத்தில், மேற்சொல்லிய சிரத்தை மிகவும் அதிகரிக்குமென்பதில் சந்தேகமில்லை. ஆகவே, செலவு செய்யப்படாதபட்சத்தில் மீண்டும் கவர்ன்மெண்டாரைச் சேர்ந்து விடவேண்டியதாயிராத 50 லட்ச ரூபாயுள்ள ஒரு நிதியின் பரிபாலனத்தை அந்தச் சபையாரிடம் ஒப்புவிக்கவேண்டுமென்றும், திரவிய சம்பந்தமான நிலைமை இடம் கொடுக்கும்போதெல்லாம் அந்த நிதியில் தொகைகள் சேர்த்துக்கொண்டு வரவேண்டுமென்றும் நாங்கள் பிரேரேபிக்கிறோம். பிரயோசனகரமாய் வேலை நடக்கவேண்டுமானால் இந்தத் தொகைக்குக் குறைவாய்க் கொடுப்பது போதாதென்பது எங்களுடைய அபிப்பிராயம். மேலும், இப்போதுள்ள ஸ்தாபனங்களுக்குப் பிடிக்கும் செலவுக்காகவும் சகஜமாய் அவைகளில் ஏற்படும் அபிவிருத்திக்குப் பிடிக்கும் செலவுக்காகவும் சந்தர்ப்பத்துக்கேற்றபடி மத்திய கவர்ன்மென்டின் வருமானங்களிலிருந்தாவது மாகாண கவர்ன்மென்டுகளின் வருமானங்களிலிருந்தாவது ஏற்பாடு செய்யப்படுமென்று எண்ணியே இவ்வளவு குறைந்த தொகையை பிரேரேபிப்பது எங்களுக்குச் சாத்தியமாயிருந்தது. விவசாய ஆராய்ச்சி சபையையும் விவசாய ஆராய்ச்சி நிதியையும் இந்திய சட்டநிரூபண சபையாரின் ஆக்டின் மூலமாக அமைக்கவேண்டும். விவசாய ஆராய்ச்சி சபைக்கும் ஆராய்ச்சி நிதியின் பரிபாலனத்துக்குமுள்ள சம்பந்தமானது இந்துதேசத்து மத்திய பஞ்சு கம்மிட்டிக்கும் 1923-ம் வருஷத்திய இந்துதேசத்துப் பஞ்சுவரி ஆக்டில் கண்ட நிபந்தனைகளின்படி சேகரிக்கப்பட்ட நிதிக்கும் ஏற்பட்டுள்ள சம்பந்தத்தைப் போலவேயிருக்கும். நிர்ணயிக்கப்படக்கூடிய திட்டங்களுக்கு உட்பட்டு, மேற்படி நிதியிலுள்ள மூலதனமும் அதிலிருந்து கிடைக்கும் வருமானமும் அந்த சபையாரால் வரப்பெற்றுக்கொள்ளப்படும் வேறே ஏதேனும் நிதியும் அந்த சபையின் செலவுகளைச் செய்வதற்காகவும், இந்தியாவில் விவசாயத்தின் நன்மையை உத்தேசித்து விவசாய ஆராய்ச்சி வேலையையும் சிறப்ப சாஸ்திர ரீதியான ஆராய்ச்சி வேலையையும் விருத்திபண்ணுவதற்காக என்ன ஏற்பாடுகள் செய்ய ஷை சபையார் தீர்மானிக்கக்கூடுமோ அந்த ஏற்பாடுகளுக்காகப் பிடிக்கும் செலவைச் செய்வதற்காகவும் உபயோகிக்கப்படும். இந்த சபையாருக்குள்ள அதிகாரங்கள் விஷயமாய், இந்துதேசத்துப் பஞ்சுவரி ஆக்ட் 15-வது பிரிவின்படி பிறப்பிக்கப்பட்ட விதிகளைப்போல் எடுகேஷன்-ஹெல்த்-லாண்ட்ஸ் டிபார்ட்மென்டில் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களால் பிறப்பிக்கப்படும் விதிகளின்படி ஒழுங்கேற்படுத்தப்படும். இதர விஷயங்களுடன்கூட, இந்த விதிகளில் ஒப்பந்தங்கள் செய்துகொள்வதற்கும் உத்தியோகஸ்தர்களையும் ஊழியக்காரர்களையும் நியமித்து அவர்களுக்குச் சம்பளம் கொடுப்பதற்கும் ஷை சபைக்குள்ள அதிகாரங்களைக் குறித்து ஒழுங்

கேற்படுத்தப்படும். பின்னும், அந்த விதிகளில் செலவு செய்யும் விஷயத்தில் மேஷ சபையாருக்குள்ள அதிகாரங்கள் விஷயமாய் ஒழுங் கேற்படுத்தப்படுவது மல்லாமல், ஜாரி செய்யப்படுவதற்காக அவர்க ளுடைய பட்ஜெட்டை (வரவுசெலவு திட்டத்தை) ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களுக்கு அனுப்புவதற்காகவும் அவர்களுடைய கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காகவும் பிர சித்தம் செய்வதற்காகவும் நிபந்தனையும் ஏற்படுத்தப்படும். இந்தப் படி அமைக்கப்படும் விவசாய ஆராய்ச்சி நிதியானது நாளாவர்த்தி யில் தனிநபர்கள் கொடுக்கும் உபகாரத் தொகைகள் மூலமாய்ப் பெரிதும் பலப்படுமென்று நாங்கள் மனப்பூர்த்தியாய் நம்புவதாக இங்கே தெரிவிக்க விரும்புகிறோம். இந்தியாவில் விவசாய ஆராய்ச் சிவேலை முன்னேற்றமடைவதற்காக அமெரிக்கா கண்டத்து மிஸ்டர் ஹென்ரி பிப்ஸ் என்பவரும் பம்பாயிலிருந்த காலஞ்சென்ற ஸர் ஸஸ்ஸூன் டேவிட் என்பவருந்தான் இதுவரையில் உதவி செய்தி ருக்கிறார்கள். இவ்விரண்டு கனவான்களைத்தவிர வேறே எவரும் இவ்விஷயத்தில் உதவி செய்யவில்லையென்பது திருப்தியுடன் பா ராட்டக்கூடிய விஷயமல்ல.

ஆராய்ச்சிவேலை செய்பவர்களை அந்த வேலை செய்வதற்குப் பழக்குவது மேற்படி சபையின் முக்கிய அலுவல்களில் ஒன்றாகும். அந்த சபையின் நிதியில் ஒரு பாகத்தை மாணவர்களுக்கு ஆராய்ச்சி வேலை சம்பந்தமாய் உபகாரச் சம்பளங்கள் கொடுப்பதற்கு உபயோ கிக்கவேண்டும். இந்த உபகாரச் சம்பளம் பெறக்கூடிய மாணவர் கள் - விவசாயத்துக்குச் சம்பந்தப்பட்ட சாஸ்திர ரீதியான ஆராய் ச்சி வேலையில் தீவிரமான பயிற்சி பெறுவதற்குக் கிடைக்கும் அவகா சத்தைப் பூர்த்தியாய் உபயோகித்துக்கொள்ளும் சக்தியுடைய வர்களென்று எண்பித்துக் காட்டியிருக்கவேண்டும். இந்த சபை யார் தங்களுக்குக் கிடைக்கும் சமாசாரத்தைச் சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்கு அனுப்புவார்கள். மேலும், அவர்கள் பயிர்களுக் காகவும் கால்நடை நிர்வாகத்துக்காகவும் பாற்சாலைகள் வைத்து நடத்துவது சம்பந்தமான விஷயங்களுக்காகவும் கால்நடை வைத் திய சம்பந்தமான விஷயங்களுக்காகவும் பீரோக்கள் (பிரிவுகள்) ஏற் படுத்துவார்கள். இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்த விவசாய ஆலோசனை நிபுணரால் தற்சமயம் செய்யப்பட்டுவரும் பிரசுர வே லையை இந்த சபையார் ஏற்றுக்கொண்டு, விவசாய சாஸ்திரத்தின் குறித்த பிரிவுகளில் நிபுணர்களாயுள்ளவர்கள் அந்தப் பிரிவுகள் சம் பந்தமாய்க் கூட்டங்கள் கூடுவதற்காக ஏற்பாடு செய்வார்கள். ஆராய்ச்சி ஸ்தானங்களை இந்த சபையார் நேராய் மேல்விசாரணை செய்யவேண்டுமென்பதோ, அவர்கள் நிபுணர்களைத் தங்கள் சொந்த சிப்பந்தியாக வைத்துக்கொள்ளவேண்டுமென்பதோ எங்கள் உத்தே சமல்ல. குறித்த யாதொரு ஆராய்ச்சி வேலையானது இந்தியா முழு வதுக்கும் முக்கியமானதா ஏதேனும் ஒரு பிரதேசத்துக்கு மாத்திர மே முக்கியமானதா என்று இந்த சபையார் தீர்மானிக்கவேண்டும். மேலும், அது இந்தியா முழுவதுக்கும் முக்கியமானதாயிருந்தால், அதை இந்தியா கவர்ன்மெண்டைச் சேர்ந்த யாதொரு ஆராய்ச்சி வேலை ஸ்தாபனத்தில் செய்வது உசிதமாயிருக்குமா, யாதொரு

மாகாண ஆராய்ச்சிவேலை ஸ்தாபனத்தில் செய்வது உசிதமாயிருக்குமா, அல்லது முற்றிலும் அப்படிப்பட்ட ஸ்தாபனங்களுக்கு வெளியே யாதொரு சர்வகலாசாலையில் தனிநபர்களாலாவது வேண்டுமென்றால் வெளிதேசத்திலாவது செய்வது உசிதமாயிருக்குமா வென்றும் அவர்கள் தீர்மானிக்கவேண்டும். இந்த சபையின் திரவிய நிலைமை தற்கால ராஜாங்க அமைப்புக்கு ஒத்ததாயிருக்கும்படிச் செய்யும்பொருட்டு, விவசாய ஆராய்ச்சி வேலையை யாதொரு மத்திய அதிகாரி அபிவிருத்தி செய்வது பொதுஜன நன்மையை நோக்கும்போது யுக்தமாயிருக்குமென்று நிர்ணயித்து, அதை அதிகாரங்களை ஒப்புவிப்பதைக்குறித்த விதிகளில் சேர்ப்பது அவசியமாகும்.

மத்திய ஆராய்ச்சிவேலைச் சபையுடன் சம்பந்தப்பட்டிருக்கும்படியாக, பெரிய மாகாணங்கள் ஒவ்வொன்றிலும் மாகாண ஆராய்ச்சி வேலைக் கம்மிட்டி ஒன்றை ஸ்தாபிக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்வோம். அந்தக் கம்மிட்டியானது ஷை சபையுடன் கூட்டாய் நெருங்கி வேலை செய்யும்.

அந்த சபையில் 39 மெம்பர்கள் இருக்கவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம். இந்த மெம்பர்களில் மூன்று பேர் பூரா காலமும் வேலை செய்பவர்களாயிருப்பார்கள். அவர்கள் யாரென்றால்; அக்கிராசனாதிபதி - இவர் அனுபவம் பெற்ற பரிபாலகராயிருக்க வேண்டியதுமல்லாமல், சாத்தியமானால் இந்திய நிலைமைகளை அறிந்தவராயிருக்கவும் வேண்டும்; இரண்டு சிறந்த சாஸ்திர நிபுணர்கள் - இவர்கள் விவசாயம் செய்பவர்களின் நன்மையையும் கால்நடைகளை வைத்து நிர்வாகம் செய்பவர்களின் நன்மையையும் முறையே கவனிக்கக்கூடியவர்களா யிருக்கவேண்டும். மிச்சமுள்ள முப்பத்தாறு மெம்பர்களில் எட்டு பேர் இந்தியா கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படுவோர்கள்; பதினெட்டு பேர் மாகாண விவசாய இலாகாக்களுக்கும் கால்நடை வைத்திய இலாகாக்களுக்கும் பிரதிநிதிகளாயிருப்பார்கள்; மூன்று பேர் இந்திய சர்வகலாசாலைகளின் பிரதிநிதிகளாகவும், இரண்டு பேர் முறையே இந்துதேசத்து மத்திய பஞ்சுக் கம்மிட்டியார், தோட்டப்பயிர் செய்பவர்கள் ஆகிய இவர்களின் பிரதிநிதிகளாகவும் இருப்பார்கள். ஐந்து பேர் அவர்களுடைய சாஸ்திரீய ஞானம் அல்லது இதர விசேஷ யோக்கியதாம்சங்களுக்காகப் பிரஸ்தாப சபையாரால் நேமகஞ்செய்யப்பட்டு இந்தியா கவர்ன்மெண்டாரால் அங்கீகரிக்கப்படவேண்டியவர்களாயிருக்கும் உத்தியோகஸ்தர்களல்லாத மெம்பர்களாயிருப்பார்கள். அக்கிராசனாதிபதியையும் பூராகாலமும் வேலை செய்யும் இரண்டு மெம்பர்களையும் ஐந்து வருஷகாலத்துக்கு நியமிக்கலாம். இதர மெம்பர்களைச் சாதாரணமாய் மூன்று வருஷகாலத்துக்கு நியமிக்கலாம். இந்தக் கால அளவுகளை அதிகப்படுத்துவதற்காக நிபந்தனை ஏற்படுத்தவேண்டும்.

மேற்படி சபையார் சாதாரணமாக வருஷத்தில் இரண்டு தடவைக்கு அதிகமாய்க் கூட்டம் கூடுவது அவசியமென்று நாங்கள் நினைக்கவில்லை. இந்தியாவில் வெவ்வேறு இடங்கள் ஒன்றுக்கொன்றுக்குள்ள நீண்ட தூரத்தை நோக்கும்போது, இதைக்காட்டிலும் அடிக்கடி கூட்டம் கூடும்பட்சத்தில், அந்த சபையின் மெம்பர்களில்

பெரும்பான்மையோரின் சாதாரண அலுவல்களுக்கு மிகுந்த பாதகம் ஏற்படும். அது விரும்பத்தக்கதல்ல. ஆயினும், கூட்டங்கள் கூடுவதற்கு இடையிலுள்ள காலத்தில் வேலை நடந்தேறுவதற்காக நிபந்தனை ஏற்படுத்துவது அவசியமாகும். மேற்படி சபையை அமைப்பதற்குரிய சட்டத்தில், அந்த சபையார் ஆலோசனை சபையிலுள்ள கவர்னர் ஜெனரலவர்களின் அனுமதியை முன்னதாகப் பெற்று, இதர விஷயங்களுடன்கூட தங்களுடைய மெம்பர்களுக்குள்ளிருந்தே ஸ்டாண்டிங் பைனான்ஸ் கம்மிட்டியென்னும் நிலையான திரவியசம்பந்தமான கம்மிட்டி ஒன்றைத் தேர்ந்தெடுத்து ஏற்படுத்துவதற்காகவும், சபையார் செலுத்தக்கூடிய எவையேனும் அதிகாரங்களை அந்தக் கம்மிட்டிக்குப் பிரித்துக் கொடுப்பதற்காகவும் விதிகள் செய்ய அவர்களுக்கு அனுமதி கொடுப்பதாயுள்ள நிபந்தனையொன்றை ஏற்படுத்துவதே மேலேகண்ட பிரகாரம் வேலை நடந்தேறும்படிச் செய்வதற்கு மிகவும் உசிதமான மார்க்கமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். சபையார் எந்தக் காலத்திலாகிலும் ஏற்படுத்தக்கூடிய நிர்ப்பந்தங்களுக்கு உட்பட்டு, இந்தக் கம்மிட்டியார்-அந்த சபையின் நிதியை மேல்விசாரணை செய்வது விஷயமாயும் செலவு செய்வது விஷயமாயும் சபையாருக்குள்ள சகல அதிகாரங்களையும் செலுத்துவார்கள். மேலும், அவர்கள் மேற்படி சபையாரால் தங்களுக்குப் பிரித்துக் கொடுக்கப்படும் இதர அதிகாரங்களையுங்கூட செலுத்துவார்கள். சபையின் அக்கிராசனாதிபதியானவர் உத்தியோக முறைமையில் இந்தக் கம்மிட்டியின் அக்கிராசனாதிபதியாயிருப்பார். சபையின் பூராகாலமும் வேலைசெய்யும் இரண்டு மெம்பர்களும் அந்தக் கம்மிட்டியின் மெம்பர்களாயிருக்கவேண்டும். இவைகளைத்தவிர நாங்கள் சொல்லும் ஆலோசனை இன்னும் ஒன்றே ஒன்றுண்டு. அதாவது, ஆராய்ச்சி வேலை செய்யும் ஸ்தாபனங்களுக்குச் சகாயத் தொகைகள் வேண்டுமென்று செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்களின் விஷயத்தில் பிரவர்த்திப்பது மேற்படி கம்மிட்டியின் பிரதான அலுவலாயிருக்குமாகையால், சபையின் மெம்பர்களில் யாதொரு ஆராய்ச்சிவேலை ஸ்தாபனத்துடன் நேராக சம்பந்தப்பட்டிருப்பவர் எவரும் கம்மிட்டியில் மெம்பராயிருக்கக்கூடாது. திரவிய விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்டிராமல் தாங்கள் செய்யவேண்டியதாயுள்ள இதர வேலையில் பெரும்பாகத்தை ஸப் கம்மிட்டிகள் மூலமாகச் செய்வது உசிதமாகுமென்று அந்த சபையாருக்குத் தெரிய வருமென்பதில் சந்தேகமில்லை. விசேஷ பிரசினைகளின் விஷயத்தில் பிரவர்த்திக்கும்போது தங்களுக்குத் துணைபுரிவதற்காக மேற்படி சபையைச் சேர்ந்திராத வெளி நபர்களை மெம்பர்களாய்த் தெரிந்தெடுத்துச் சேர்த்துக்கொள்ள இந்த ஸப் கம்மிட்டிகளுக்கு அதிகாரம் இருக்கவேண்டும். இந்தியா கவர்ன்மென்டின் தலைமை ஸ்தானங்களாயுள்ள டெல்லியும் ஸிம்லாவுமே இந்த சபையின் தலைமை ஸ்தானங்களாயிருப்பதற்கு மிகவும் தகுதியானவைகளாகும். க்ரேட் ப்ரிட்டனுக்காக ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் டெவெலப்மென்ட் கம்மிஷனைப் போன்ற (அபிவிருத்தி சம்பந்தமான கம்மிஷனைப் போன்ற) ஒரு கம்மிஷனை இந்தியாவுக்காகவும் ஏற்படுத்தக்கூடுமென்னும் விஷயம் சகஜமாய் எங்களுக்குத் தோற்றியது. அந்த யோசனை மனத்தைக் கவரக்கூடியதே. என்றாலும், தற்கால ராஜாங்க அமைப்பின் காரணமாக விதிக்கப்பட்டிருக்கும் வரையறைகளைக் கவனிக்கும்

போது, இப்போதைய நிலைமைகளிலே இம்மாதிரியான எந்த பிரேரேபணையைப்பற்றியும் ஆலோசிப்பதற்கு இடமிராமல் இருக்கிறது. நிலைமைகள் மாறுகிறபட்சத்தில், கிராமங்களின் முன்னேற்றத்துக்கு அனுகுணமாயுள்ள சகல வேலைகளும் நாங்கள் பிரேரேபிக்கும் விவசாய ஆராய்ச்சி வேலைச்சபையின் அலுவல்களில் அடங்கும்படியாக அதை விஸ்தாரப்படுத்தக்கூடும்.

விவசாய ஆராய்ச்சிவேலைச் சபை ஏற்படுத்தப்படுவதன்மேல், இந்தியா கவர்ன்மென்டைச் சேர்ந்த விவசாய ஆலோசனை நிபுணர் ஒருவரை வைத்துக்கொள்வதற்குள்ள அவசியம் இராமற்போய் விடும். தற்காலம் இந்த உத்தியோகஸ்தர் பூஸாவிலுள்ள ஸ்தாபனத்தின் டைரெக்டராய் இருந்துவருகிறார். பூஸாவுக்குப் பூரா காலமும் வேலைசெய்யும் டைரெக்டர் ஒருவர் அவசியமாயிருப்பார். அவர் - அந்த ஸ்தாபனத்தின் விஷயத்தில் பரிபாலன சம்பந்தமான மேல்விசாரணை செய்துவருவதுடன், இப்போது விவசாய ஆலோசனை நிபுணரின்கீழ் இருந்துவரும் ஸப் ஸ்டேஷன்கள் விஷயத்திலுங்கூட பரிபாலன சம்பந்தமான மேல்விசாரணை செய்யவேண்டியிருக்கும். ஆனால், முக்தேசரத்திலிருக்கும் கால்நடை வைத்திய ஆராய்ச்சிக்குரிய இம்பீரியல் இன்ஸ்டிட்யூட்டின் விஷயத்தில் மேல்விசாரணை செய்யமாட்டார். அது விஷயமாய் (பிரதான ரிபோர்ட்டின் 9-ம் அத்தியாயமாகிய) 7-வது பிரிவில் வேறே ஏற்பாடுகளைப் பிரேரேபித்திருக்கிறோம். உயர்தர மாகாண விவசாய ஊழிய வர்க்கங்களைப் புதிதாய் ஏற்படுத்துவதன்மேல், விவசாய சம்பந்தமான உயர்தர கல்வி கற்பிக்கும் ஸ்தானமாக பூஸாவின் அலுவல்கள் வெகுசாய் விரிவாக்கப்படக்கூடும். மேலும், பூஸாவை மிகவும் உயர்தரமான போதனை அளிக்கும் ஸ்தாபனமாக ஏற்படுத்துவதற்கு இன்ன மாறுதல்கள் அவசியமாகுமென்று ஆலோசனை சொல்வது விவசாய ஆராய்ச்சிவேலைச் சபையின் கடமையாகும். புதிதாய் ஏற்படுத்தப்படும் உயர்தர மாகாண விவசாய ஊழிய வர்க்கங்களில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்கு, பட்டம் பெற்ற பிறகு அங்கீகரிக்கப்பட்ட ஒரு முறைப்படி வித்தியாப்பியாசம் பெறுவதை முக்கியமான யோக்கியதாம்சமாகக் கொள்ளவேண்டும். விவசாய ஆராய்ச்சி வேலை செய்யும் விஷயத்தில் சர்வகலாசாலைகள் அதிகமாய்க் கலந்துகொள்ளுமென்று நாங்கள் நம்புகிறோம். அவைகள் இந்தப்படி செய்வதைச் சுலபமாக்கும்பொருட்டே விவசாய ஆராய்ச்சி வேலைச்சபையில் அவைகளுக்குப் பிரதிநிதிகள் இருக்கவேண்டுமென்று நாங்கள் பிரேரேபித்திருக்கிறோம். அவைகள் அளிக்கும் சாஸ்திரீய போதனையின் தரத்தைச் சீர்திருத்துவது அவைகள் செய்யவேண்டிய முதல் காரியமாகத் தோற்றுகிறது. சர்வகலாசாலைகளில் விவசாய சம்பந்தமாய் நடத்தப்படும் ஆராய்ச்சி வேலைக்காக மேற்படி சபையார் க்ரான்டுகள் கொடுக்கலாம். பூஸாவுக்கும் சர்வகலாசாலைகளுக்கும் மிகவும் தகுதியான சம்பந்தம் ஏற்படுத்த வேண்டுமானால், பிரஸ்தாப மாணவர் எந்த சர்வகலாசாலையின் பட்டதாரியாயிருந்தாரோ அந்த சர்வகலாசாலையின் M. Sc. அல்லது D. Sc. பட்டம் பெறுவதற்கு வியாசம் எழுதி அனுப்பும்போது பூஸாவில் நடக்கும் ஆராய்ச்சி வேலையைப்பற்றி வியாசம் எழுதி அனுப்பக்கூடியபடி ஏற்பாடு செய்யவேண்டும்.

பயிர்களை ஆதாரமாகக்கொண்டு ஆராய்ச்சி வேலை நடத்தும்படி கவர்ன்மென்டார் ஏற்பாடு செய்வது சௌகரியமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படாவிட்டாலும், எந்த வியாபாரிகளாவது தங்களுடைய நன்மையை உத்தேசித்து அந்தப்படி ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நினைக்கும்பட்சத்தில், அவர்கள் இந்திய மத்திய பஞ்சு கம்மிட்டியார் செய்திருப்பதைப்போல் ஒரு சபையாக ஏற்பட்டு வேலை நடத்துவதற்கு எவ்வித ஆட்சேபணையும் இருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை. ஆனால், இது காரியத்துக்காக வேண்டியிருக்கும் பணத்தை அவர்களே சேகரித்துக்கொள்ள இஷ்டப்பட வேண்டும். பெருஞ் சணலின் விஷயத்தில் சில விசேஷ அம்சங்களைக் கவனிக்கவேண்டியிருக்கிறது. ஆகவே, அதைப் புலத்திலிருந்து தொழிற்சாலைக்குக் கொண்டுபோவது வரையில் அந்த வியாபாரத்தில் ஏற்பட்டுள்ள சகல பிரிவுகளின் நன்மையையும் கவனித்துவரும்படியான கம்மிட்டி ஒன்றை ஏற்படுத்துவது மிகவும் உசிதமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். விவசாய ஆராய்ச்சி வேலைச் சபையின் அக்கிராசனாதிபதியானவர் மத்திய சணல் கம்மிட்டியின் அக்கிராசனாதிபதியாக இருக்கவேண்டும். அந்தக் கம்மிட்டியின் வேலைக்காக கவர்ன்மென்டார் வருஷாவருஷம் 5 லட்ச ரூபாய் கொடுத்து திரவிய சகாயம் செய்துவரவேண்டும்.

இந்தியா முழுவதுக்கும் உபயோகமாயிருக்கக்கூடிய ஆராய்ச்சி வேலை ஸ்தாபனமொன்றை ஏற்படுத்துவதற்குப் பூஸாவானது எல்லா விஷயங்களிலும் சிறந்த லட்சணங்கள் பொருந்திய இடமல்ல. ஆகவே, விவசாய ஆராய்ச்சி வேலைச் சபையார் - சிறிய ஸப் ஸ்டேஷன்களை ஸ்தாபிப்பதனால் உஷ்ண தேசமாகிய இந்தியாவைப் பொறுத்த பிரசினைகள் விஷயமாய்ப் பூஸாவில் ஏற்பட்டுள்ள குறைகளை எம்மட்டில் நிவர்த்திசெய்யக்கூடுமென்று நிச்சயிக்கவேண்டியிருக்கும். மேலும், விவசாய ஆராய்ச்சி வேலையை விருத்திபண்ணுவதற்காகத் தங்களுடைய சுவாதீனத்தில் கொடுத்துவைக்கப்படும் திரவியத்தை அப்படிப்பட்ட ஸப் ஸ்டேஷன்களை ஏற்படுத்தும் விஷயத்தில் தக்கபடி எம்மட்டில் உபயோகிக்கக்கூடுமென்பதையும் அவர்கள் தீர்மானிக்கவேண்டியிருக்கும்.

இப்போதிருக்கும் நிலைமைகளில், விவசாய போர்டின்மூலமாக மாத்திரமே இதர விஷயங்களுடன்கூட, இந்திய சமஸ்தானங்களை ப்ரிடிஷ் இந்தியாவைச் சேர்ந்த விவசாய பிரசினைகளிலும் அவைகளைப் பைசல் செய்வதற்காக அனுசரிக்கப்படும் முறைகளிலும் சம்பந்தப்படும்படிச் செய்யக்கூடும். ஆகவே, ஆராய்ச்சிவேலைச் சபை ஏற்படுத்தப்பட்ட பிறகுங்கூட, அனேக உபயோககரமான காரியங்களை டை போர்டானது செய்யவேண்டியிருக்குமென்று நாங்கள் அபிபபிராயப்படுகிறோம். ஆகையால், மேற்படி போர்டானது ஆராய்ச்சி வேலைச் சபை அக்கிராசனாதிபதியின் அக்கிராசனத்தின் கீழ் கூடிவரவேண்டுமென்பதும், அந்த போர்டின் அமைப்பில் எவையேனும் மாறுதல்களைச் செய்தால் அதன் உபயோகம் அதிகப்படக்கூடுமென்று தோற்றும்பட்சத்தில், அப்படிப்பட்ட மாறுதல்களைப் பற்றி ஆராய்ச்சி வேலைச் சபையார் இந்தியா கவர்ன்மென்டாருக்கு ஆலோசனை சொல்லவேண்டுமென்பதும் எங்களுடைய திடமான அபிப்பிராயமாகும்.

### 3. விவசாய அபிவிருத்தியும் கைப்பற்று நிலங்களை உட்பிரிவினை செய்வதும் துண்டு துண்டாகப் பிரிப்பதும்.

பிரதான ரிபோர்ட்டின் 4-ம் அத்தியாயம்.

இந்தியாவில் விவசாயத்தை இன்ன வகைகளில் அபிவிருத்தி செய்யக்கூடுமென்று யோசனை சொல்வதே இந்தக் கம்மிஷனின் பிரதான வேலையாகும். இந்தவேலை விஸ்தாரமானதாயிருக்கிறது. மண்வகைகளும் அவ்வவ்விடத்திய நிலைமைகளும் விவசாய முறைகளுமோ பெரிதும் வித்தியாசப்படுகின்றன. வெவ்வேறு வகைப் பயிர்கள் செய்யப்படும் விஸ்தீர்ணங்கள் ஏராளமாயிருக்கின்றனவென்பதைக் காட்டுவதற்காக, பின் வரும விஷயங்களைக் குறிப்பிடலாம். அவை என்னவென்றால், 800 லட்ச ஏகராவுக்கு மேற்பட்ட நிலத்தில் நெல்லும், சுமார் 240 லட்ச ஏகரா நிலத்தில் கோதுமையும், 330 லட்ச ஏகரா நிலத்தில் சோளம், கம்பு என்னும் பெருந் தினைவகைகளும், 180 லட்ச ஏகரா நிலத்தில் பஞ்சும், 140 லட்ச ஏகரா நிலத்தில் எண்ணெய் எடுக்கும் பிரதான விதை வகைகளும், 140 லட்ச ஏகரா நிலத்தில் கொள்ளு முதலிய கோதுப்பயிர்களும் பயிராகின்றனவென்பதே.

இந்தியாவின் மண் வகைகளைப் பொதுவாக நான்கு தொகுதிகளாகப் பிரிக்கலாம்; அவையாவன:—(a) மண் கட்டி கட்டிகளாயுள்ள பிரதேசங்களில் இருக்கும் செம்மண் வகைகள்; (b) பஞ்சு விளையும் கறுப்பு மண் வகைகள், அதாவது கரிசல் பூமி; (c) வண்டல் நிறைந்த மண் வகைகள்; (d) பருக்காங்கல் சேர்ந்த மண் வகைகள். விவசாய சம்பந்தமான லட்சணங்களைப் பொறுத்தமட்டில், இந்த மண் வகைகள் விசேஷமாய் வித்தியாசப்படுகின்றன. ஆகவே, மண் வகைகளைப் பரீட்சித்துப் பார்ப்பது உசிதமாயிருக்குமென்று எங்களிடம் அடிக்கடி வற்புறுத்திக் கூறப்பட்டது. அம்மாதிரி பரீட்சித்துப் பார்ப்பது முக்கியந்தானென்று நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். ஆயினும், அமெரிக்காவைச் சேர்ந்த யுனைடெட் ஸ்டேட்ஸ் என்னும் ஐக்கிய நாடுகளில் இப்போது செய்யப்பட்டுவரும் மண் வகைகளைப்பற்றிய பரீட்சையைப் போன்ற ஒரு பரீட்சையை இந்தியா முழுவதன் விஷயத்திலும் செய்ய இந்த தருணத்தில் ஏற்றுக்கொள்வது சாத்தியமான காரியமாக எங்களுக்குத் தோற்றவில்லை. மண் வகைகளைப் பற்றிய பரீட்சையைப் பூர்த்தியாகவும் சாஸ்திர முறைப்படியும் செய்வதற்குப் பிடிக்கும் மிகவும் அதிகமான செலவை உத்தேசித்து, நாங்கள் ஒரு சிபாரிசு செய்கிறோம். அதாவது, குறித்த யாதொரு பிரசினையைத் தீர்மானிக்கவேண்டியிருக்கும் போதாவது, ஏற்கனவே எழுதிவைக்கப்பட்டிருக்கும் பிரயோஜனகரமான சங்கதியின் தாற்பரியத்தைப் பின்னும் பூர்த்தியாய்த் தெரிந்துகொள்ளும்பொருட்டு மண் வகைகளை ரஸாயன ஆராய்ச்சிச் சாலையில் பரிசோதித்துப் பார்க்கவேண்டியிருக்கும் போதாவது மாத்திரமே, விவசாய இலாகாக்கள் தீவிரமான பரீட்சைகள் செய்து பார்க்கவேண்டும்.

இந்தியாவிலுள்ள மண் வகைகளின் வளம் இப்போது நாளுக்கு நாள் குறைந்துகொண்டே வருகிறதா என்னும் பிரசினையைப்பற்றி விசேஷமாய் வாதிக்கப்பட்டிருக்கிறது. பரிசோதித்துப் பார்த்தனுல் எங்களுக்குக் கிடைத்துள்ள ஆதார அம்சங்களைக்கொண்டு நோக்கும்

போது, இந்தியாவிலுள்ள பெரும்பான்மையான நிலங்களின் வளம் சமநிலையிலிருக்கிறதென்று ஏற்படுகிறது. ஆகவே, இப்போதுள்ள சாகுபடி நிலைமைகளின்படி நிலத்தின் வளம் பின்னும் பீடாய்ப் போய்விடக்கூடுமென்று சொல்வதற்கில்லை. விவசாய இலாகாக்களிலுள்ள ரஸாயன சாஸ்திரிகள்-அவ்வவ்விடங்களிலுள்ள மண்ணின் வகைகளையும் அவ்வவ்விடங்களிலுள்ள மண்ணின் நிலைமைகளையும் பரிசோதித்தறிவதில் அதிகமாய்க் கவனம் செலுத்தியிருக்கிறார்கள். வாஸ்தவத்தில், பிரதேச பிரசினைகள் விஷயமாய் ஆராய்ச்சி வேலை செய்யல் தொடங்குவதற்குமுன் அப்படிப்பட்ட பரிசோதனை செய்வது முக்கியமாகும். இந்தப்படி மண் விஷயமாய்ச் செய்யும் பரிசோதனைகளின் முடிவாக செடிகளுக்கு வேண்டிய உணவுப் பொருள்கள் குறைவாயிருப்பதாகக் கண்டுபிடிக்கப்படும்பட்சத்தில், எரு சம்பந்தமான பிரசினைகளைக் கவனிப்பதற்கு இடம் உண்டாகிறது. இம்மாதிரியான ஆராய்ச்சிகளே எரு சம்பந்தமாய்ப் பரிசோதனைகள் செய்து பார்ப்பதற்கு ஆதாரமாயிருந்திருக்கின்றன. அஸ்திவாரம் நன்றாய்ப் போடப்பட்டிருந்தபோதிலும், இப்போது நடந்துவரும் ஆராய்ச்சி வேலையைக் காட்டிலும் அதிக ஆராய்ச்சி வேலை செய்வது அவசியமென்றும், ஆராய்ச்சி வேலை செய்பவர்களின் சிப்பந்தியைப் பெரிதும் அதிகப்படுத்தினாலொழிய சீக்கிரமாகவும் தொடர்ச்சியாகவும் அபிவிருத்தி அடையமுடியாதென்றுமே ஏற்கனவே கிடைத்திருக்கும் முடிவுகளைக்கொண்டு நாங்கள் தீர்மானிக்கவேண்டியிருக்கிறது. எல்லாவற்றிலும் முக்கியமாய்க் கிருமி சாஸ்திர சம்பந்தமாகவும் பிரகிருதி சாஸ்திர சம்பந்தமாகவும் பிராணி சாஸ்திர சம்பந்தமாகவும் ஆராய்ச்சி வேலை நடத்துவதற்காக விசேஷ நிபுணத்துவம் வாய்ந்த உத்தியோகஸ்தர்களின் உதவியைப்பெற்றுப் பயன் அடையக்கூடிய காலம் வந்திருக்கிறது.

வெள்ளத்தண்ணீர் மேற்புறத்து மண்ணை அரித்துவிட்டது காரணமாக குறிப்பாய்ச் சில இடங்களில் மண்ணின் வளம் குறைந்து போயிருப்பதாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. ஐக்கிய மாகாணத்தில் ஆறுகள் பாயும் பிரதேசங்களில் காடுகள் ஏற்படுத்துவதனாலும், பம்பாயில் நிலத்தை மேடாக்கி மண்ணினாலும் கல்லினாலும் கரைகள் கட்டியும் மேலேகண்ட விதமாக கெடுதி நேரிடாதபடி தடுக்கப்பட்டிருக்கிறது. மேற்கு வங்காளத்திலும் பொதுவாய் வட இந்தியாவில் மலை அடிவாரங்களிலுள்ள ஜில்லாக்களிலும் சோடா நாக்பூரிலுங்கூட இந்தக் கஷ்டம் இருந்துவருகிறது. ஐக்கிய மாகாணத்திலும் பம்பாயிலும் சித்திகரமாயிருந்திருப்பதாகத் தெரிய வரும் முறைகளை மேற்படி பிரதேசங்களிலும் அனுசரிக்கக்கூடுமோ என்று பரிசோதித்துப் பார்க்கவேண்டும்.

ஜாக்கிரதையாய் விசேஷ வேலை செய்யப்பட்டு வந்தபோதிலும், சாதாரண விவசாய வேலை காரியங்களுக்குச் சீர்திருத்தமான எருவை உபயோகிக்கும் விஷயத்தில் சிறிதும் அபிவிருத்தி ஏற்படவில்லையென்று ஒப்புக்கொள்ளவேண்டியிருக்கிறது. நிலத்தை வளப்படுத்துவதற்கான எருவகைகளைச் சிக்கனமாய் உபயோகிப்பதைக் குறித்த விவசாய இலாகாக்கள் திட்டமாய் ஆலோசனை சொல்லும் நிலைமையை இன்னும் அடையவில்லை. சீர்திருத்தமான வகைகளைச் சேர்ந்து

பயிர்கள் பூர்த்தியாய்ப் பயிராகவேண்டுமானல், அவைகளுக்குச் சாதாரணமாய்ச் சாகுபடி செய்யப்படும் பயிர்களுக்குப் போடுவதைக் காட்டிலும் இன்னும் தாராளமாய் எரு போடவேண்டுமென்று சொல்வதற்கு நியாயம் இருக்கிறது. ஆனல், இது விவசாய இலாகாதார் வெகு ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்துப் பார்க்கவேண்டிய விஷயமாகும். பரிசோதனைகள் செய்துபார்த்ததன் முடிவாய் தெரியவந்த அனேக விஷயங்கள் சேகரிக்கப்பட்டிருக்கின்றன. இவைகளை நன்ருய் ஆராய்ந்து அதனுல் ஏற்படும் முடிவுகளை ஒன்ரோடொன்று சம்பந்தப்படுத்திப் பார்க்கவேண்டும். நிலத்தை வளப்படுத்துவதற்கான எருவகைகளை இன்ன அளவுக்கு லாபகரமாய் உபயோகப்படுத்தலாமென்பதை எவ்வளவு சரியாய் நிச்சயித்தறியக் கூடுமோ அவ்வளவு சரியாய் நிச்சயித்தறியும் பொருட்டுப் பரிசோதனைகள் நடத்துவதற்காக நிஷ்கரிஷையான திட்டம் ஒன்றை ஏற்படுத்தவேண்டும். இது மிகவும் முக்கியமான விஷயமாயிருக்கிறபடியால், பரிசோதனை வேலைகளை இன்னபடி நடத்தவேண்டுமென்று யோசனை சொல்லும் பொறுப்பை ஆராய்ச்சி வேலைச் சபையார் ஏற்றுக்கொள்வது தகுதியாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிருேம். எங்கும் ஒரேமாதிரியாயுள்ள முறைகளின்படி பரிசோதனைகள் செய்யப்படும்படி பார்த்துக்கொள்ளும் பொருட்டும், ஒரு மாகாணத்தில் கிடைத்த முடிவுகளை மற்ற மாகாணங்களுக்கும் பயன்படும்படிச் செய்யும் பொருட்டும் பரிசோதனைகளை இன்ன விதமாய்ச் செய்வது சிலாக்கியமாயிருக்குமென்பதைக் குறித்து மேற்படி சபையார் யோசனை சொல்லக்கூடிய ஸ்திதியில் இருக்கவேண்டும்.

மிகவும் சுலபமாய்க் கிடைக்கக்கூடிய பயிர்களின் உணவுப் பொருள் கொல்லைகளில் சேரும் எருவேயாகும். ஆனல், வீடுகளில் அடுப்பை எரிய விடுவதற்குப் பசுஞ்சாணத்தைக்கொண்டு தட்டின வறட்டியை உபயோகிப்பது காரணமாக மேற்படி எருவில் மிகப் பெரும் பாகம் விவசாயத்துக்கு உபயோகப்படாமல் போகிறது. இது துரதிர்ஷ்டமேயாகும். நிலக்கரியும் விறகும் கிராக்கியாயுள்ள இடங்களிலே, வறட்டிக்குப் பர்த்தியாக வேறே எந்த வஸ்துவைத் திருப்திகரமாய் உபயோகிக்கலாமென்று சொல்லப்படவில்லை. பருத்திமார், கரும்பினின்றும் சாறைப் பிழிந்துவிட்ட பிறகு நிற்கும் சக்கை முதலியவைகளைப் போன்ற பயிர்களின் கழிவுப்பொருள்களை எரிவஸ்துவாக உபயோகிக்கும் வழக்கம் பின்னும் வியாபிக்கும்படிச் செய்யும்பட்சத்தில், தொழு எரு வீணுவது வெகுசாய்க் குறையக் கூடும். ஆயினும், எரிக்கும் காரியத்துக்காக அந்த எருவின் எந்த பாகம் உபயோகிக்கப்படுவதில்லையோ அந்த பாகத்தையாவது கெடாமல் வைத்திருக்கும் விஷயத்தில் அதிக முயற்சி எடுத்துக்கொள்ளலாம். இவ்விஷயத்தை விவசாய இலாகாக்கள் அவசியம் கவனிக்க வேண்டும். எருக்கலவைகளையும் கூட்டுக்கொல்லை எருவையும் தயார்செய்வதும் மனிதர்களின் மலம் கிடைக்கக்கூடிய இடங்களில் மியுனிஸிபாலிடியார் அந்த மலத்துடன் கரி முதலியவைகளைச் சேர்த்து கலப்பு எருவைத் தயார்செய்வதும் பரிசோதித்துப் பார்க்க வேண்டிய விஷயங்களாகும். மலத்துடன் ரஸாயன முறைப்படி மண்ணைக் கலந்துவிடும் பட்சத்தில், மலத்தை உபயோகிக்கும் விஷ

யத்தில் பயிரிடுபவர்களுக்குள்ள ஆட்சேபனைகள் நீங்கிப்போய் விடும். முக்கியமாய் சிறு அளவில் பயிரிடுபவருடைய சௌகரியங் களைக் கவனிக்கும்போது, அவர் வெவ்வேறு பயிர்களை மாறிமாறி பயிரிட்டுக்கொண்டு வரும்போது பயறு வகைகளை இன்ன வரிசைக் கிரமப்படி பயிரிடலாமென்பதும் அந்தப்படி பயிரிடுவதனால் இன்ன பிரயோசனம் உண்டாகக்கூடுமென்பதும் பசுந்தாள் எருவுக்குரிய பயிர்வகைகளைச் சாகுபடி செய்வதனால் இவ்வளவு சிக்கனமும் லாபமும் ஏற்படுமென்பதும் ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்துப் பார்ப்பதற்குரிய இதர விஷயங்களாகும்.

இந்தியாவில் பயிரிடப்படும் வஸ்துக்களில் எண்ணெய் எடுக்கும் விதைகள் முக்கியமானவை. அவைகளைப் பிண்ணாக்கு ரூபத்தில் எருவாக உபயோகிக்கும் பட்சத்திலே, சேர்க்கையாயுள்ள நைட்ரொஜன் என்னும் உப்புவாயு மிகவும் ஏராளமாய்க் கிடைக்கும். தற்காலத்தில் அவை இது காரியத்துக்காக அதிகமாய் உபயோகிக்கப்படுவதில்லை. அவைகளின் மூலமாய்ப் பயன் அடையவேண்டுமானால் அதற்கு ஒரே வழிதான் உண்டு. எண்ணெய் எடுக்கும் கைத்தொழிலை விருத்திபண்ணுவதே அந்த வழியாகும். அதனுடன் கூட கால்நடைகளை நிர்வாகஞ்செய்யும் விஷயத்தில் பெருத்த மாறுதல்கள் செய்யவேண்டியதுமல்லாமல் கால்நடை எருவை அடுப்பெரிக்கும் காரியத்துக்காக உபயோகிக்கும் வழக்கத்தை விட்டுவிடவும் வேண்டும். எண்ணெய் எடுக்கும் கைத்தொழிலை விருத்திசெய்கிற பட்சத்தில், அதன் மூலமாக இந்திய விவசாயிக்கு மிகுந்த நன்மை ஏற்படுமென்பதில் சந்தேகமில்லை. ஆகவே, அந்தப்படி விருத்தி செய்வது எவ்வளவுமட்டில் சாத்தியப்படுமென்னும் விஷயத்தைப் பரிசோதித்துப் பார்க்கும்படி சகல பிரதேச கவர்ன்மென்டுகளுக்கும் நாங்கள் சிபாரிசு செய்வோம்.

நிலக்கரியிலிருந்து உப உற்பத்திப் பொருளாகக் கிடைக்கும் அம்மோனியா ஸல்பேட்டும் உப்புவாயு (தழைசத்து) கிடைக்கக்கூடிய மற்றொரு ஆதாரமாகும். ஆனால், அதன் விலையானது மிகவும் அதிகமாயிருப்பதால், கரும்பு முதலிய தோட்டப்பயிர்கள் போன்ற மிகவும் விலையுயர்ந்த பயிர்களுக்கு மாத்திரமே அதை உபயோகிப்பது சாத்தியமாயிருக்கிறது. ஆகவே, சிறு அளவில் பயிரிடுபவருக்கு அதனால் வெகுசாய் அனுகூலம் ஏற்படமாட்டாது.

உப்புவாயு - பாஸ்பேட்டுகள் ஆகிய இவ்விரண்டையும் கொடுக்கக்கூடிய இதர எருவினங்கள் எலும்பும், எலும்புத்தூளும், மீன் எருவுமேயாகும். எலும்பைப் பொடியாக்கும் கைத்தொழிலை இந்தியாவில் பெருத்த அளவிலே நடத்தலாம். ஸர்க்கார் சம்பந்தமில்லாமல் அப்படிப்பட்ட யந்திரசாலைகளை ஏற்படுத்தும்படி தனி நபர்களைத் தூண்டுவதற்குமுன், எலும்பைப் பொடியாக்கும் கைத்தொழிலின் திரவிய சம்பந்தமான பிரசினைகளைப்பற்றி இதுவரையில் செய்திருக்கும் பரிசோதனையைக்காட்டிலும் இன்னும் எவ்வளவோ நன்றாய்ப் பரிசோதனை செய்வது அவசியமாயிருக்கிறதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். எலும்புத்தூளை உபயோகிப்பது

இன்ன விலைக்குள் அடங்கும் பட்சத்திலும் அதை இன்ன பயிர்களுக்கு உபயோகிக்கும் பட்சத்திலும் பயிரிடுபவருக்கு அது லாபகரமாயிருக்குமென்பதற்கு ஆதாரமாயுள்ள விஷயங்களை முதலில் திட்டமாய்த் தெரிந்துகொள்வது அவசியமாகும். இந்தப்படி ஆதாரமாயுள்ள விஷயங்களைச் சேகரிப்பதற்கு விவசாய இலாகாக்கள் சீக்கிரத்தில் ஏற்பாடு செய்யவேண்டுமென்று நாங்கள் யோசனை சொல்லுகிறோம். எண்ணெய் எடுக்கும் விதைகளுக்கும் பிண்ணுக்குக்கும், எலும்புக்கும் எலும்புத்தூளுக்கும் அல்லது மீன் எருவுக்கும் ஏற்றுமதித் தீர்வை விதித்து அவைகளின் ஏற்றுமதியை மட்டுப்படுத்துவதற்காவது அவைகளை ஏற்றுமதி செய்யக்கூடாதென்று தடுப்பதற்காவது நியாயம் எதுவும் இருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை

சீர்திருத்தமான வெவ்வேறு வகைப் பயிர்களை சாகுபடி செய்யும் விஷயத்தில் விவசாய இலாகாக்கள் முக்கியமாய்ச் சித்திகரமாக வேலை செய்திருக்கின்றனவென்று சொல்லலாம். மேலும், இந்தப் பிரிவைச் சேர்ந்த அவைகளின் வேலையில், பயிரிடுபவர்கள் அந்த இலாகாக்களுக்கு மனப்பூர்த்தியாய் உதவி புரிந்திருக்கிறார்கள். சுமார் தொண்ணூறு லட்ச ஏகரா பூமியில் இப்போது வெவ்வேறு வகையைச்சேர்ந்த சீர்திருத்தமான பயிர்கள் சாகுபடி செய்யப்பட்டு வருகின்றனவென்று மதிப்பிடப்படுகிறது. இந்தப் பயிர்கள் சாகுபடி செய்யப்படும் மொத்த விஸ்தீர்ணத்தில் இது ஒரு சிறிய பாகந்தானென்பது வாஸ்தவமே. ஆனால், அப்படியிருந்தாலுங்கூட, இது விஷயமாய் உள்ளபடி வேலை ஆரம்பிக்கப்பட்டிருக்கிறதென்று சொல்லலாம். பஞ்சு, கோதுமை, நெல், வேர்க்கடலை, சணல் ஆகிய இவைகளைப் பயிரிடும் விஷயத்தில் மிகவும் அதிகமாய் அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. ஆயினும், முக்கியமாய் தினை வகைகள், பயறு வகைகள், எண்ணெய் எடுக்கும் விதை வகைகள் ஆகிய இவைகளின் விஷயத்தில் பின்னும் வேலை செய்வதற்கு இன்னும் எவ்வளவோ இடமிருக்கிறது.

விளைவின் விஷயத்திலாகிலுஞ்சரி குணத்தின் விஷயத்திலாகிலுஞ்சரி அக்கம்பக்கத்தில் ஏற்பட்டிருக்கும் விசேஷ நிலைமைகளுக்குத் தகுதியாயிருக்கும் விஷயத்திலாகிலுஞ்சரி, சாதாரணமாய்ச் சாகுபடி செய்யப்படும் மாசூல்களைக் காட்டிலும் மேலான வகைகளைச் சேர்ந்த மாசூல் கிடைக்கும்படிச் செய்வதற்கு மூன்று முறைகள் இருக்கின்றன. அவை என்னவென்றால், பொறுக்கியெடுப்பதும், சங்கர ஜாதி ஒன்றை உற்பத்தி செய்வதும், சீதோஷ்ண ஸ்திதிக்குப் பொருத்திக்கொள்வதுமேயாகும். இம்மூன்று முறைகளில், பொறுக்கியெடுப்பதே மிகவும் நன்மை விளையக்கூடிய முறையாகவும், இந்திய நிலைமைகளில் சீர்திருத்தம் உண்டாவதற்கு உடனே பெரிதும் இடம் கொடுக்கக்கூடிய முறையாகவும் இருப்பதாய்த் தோற்றுகிறது. சங்கர ஜாதிகளை உற்பத்தி செய்யும் வேலை விசேஷ நிபுணத்துவம் வேண்டியிருக்கும் வேலையாகும். அதற்கு விசேஷப் பயிற்சியுடையவர்களாயும் இந்திய நிலைமைகளை விஸ்தாரமாய் அறிந்திருப்பவர்களாயுமுள்ள உத்தியோகஸ்தர்கள் வேண்டும். சீதோஷ்ண ஸ்திதிக்குப் பொருத்திக்கொள்வதென்பது அன்னிய தேசத்து

மாதிரிகளை இந்திய நிலைமைகளுக்கேற்றபடி பொருத்திக்கொள்வதாகும். இந்த விஷயத்திலே, சமீப காலத்தில் நாம் செய்திருக்கும் அருமையான காரியங்களில் மிகவும் கவனிக்கத்தக்கதாயிருப்பது கம்போடியா பருத்தி சாகுபடியேயாகும். இம்மாதிரி பரிசோதனை செய்து பார்ப்பது முக்கியமாயிருந்தபோதிலும், இந்தியாவிலே ஏற்கனவே சாகுபடி செய்யப்படும் பயிர்கள் சம்பந்தமான வேலையைக் காட்டிலும் அதை முதன்மையானதாகக் கொள்ளக்கூடாது. பொறுக்கியெடுப்பதனாலோ சங்கர ஜாதிகளை உற்பத்தி செய்வதனாலோ எத்தகைய புதிய மாதிரிகளை உற்பத்தி செய்யக்கூடுமாயினும், புதிய ஒருமாதிரியை உற்பத்தி செய்யத் தொடங்கும் பட்சத்தில், ஏற்கனவே பயிர் செய்யப்படும் மாதிரிகளிலிருந்து கிடைக்கும் அனுகூலங்களை விட விசேஷமான அனுகூலங்கள் அந்தப் புது மாதிரியிலிருந்து கிடைக்குமென்று நன்றாய் ஸ்தாபிக்கப்பட்டிருந்தாலொழிய, அந்தப் புதிய மாதிரியை உற்பத்திசெய்யத் தொடங்கக்கூடாது. எந்தப் பிரதேசங்களுக்குப் புதிய மாதிரிகள் தகுந்தவையென்று கருதப்படுகிறதோ அந்தப் பிரதேசங்களிலுள்ள, நிலங்களைப்போன்ற நிலங்களில் அவைகளை உபயோகித்து நன்றாய்ப் பரிசோதனை செய்வதும் முக்கியமாகும். மேலும், பயிரிடுபவர் சகஜமாய் வெவ்வேறு பயிர்களை மாறிமாறிச் சாகுபடி செய்துவருகையில் பிரஸ்தாப புது மாதிரியை அதற்குரிய காலத்தில் சாகுபடி செய்கிறபட்சத்திலே, அது எவ்வளவு மட்டில் பிரயோசனகரமாயிருக்குமென்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதும் முக்கியமாகும். அப்படிப்பட்ட பரிசோதனைகளைத் தொடர்ச்சியாய்ப் பல வருஷ காலம் செய்துபார்க்கவேண்டும்.

இனி, உண்டாக்கப்பட்ட சீர்திருத்தமான விதைகளைப் பங்கீடு செய்யும் பிரசினையைப்பற்றி பேசுவோம். இது விஷயத்தில் இந்தியாவின் நிலைமைகள் சிறிதுமட்டில் விசேஷமானவைகளாயிருக்கின்றன. பூஞ்செடிகளின் விதைகள் அல்லது காய்கறிகளின் விதைகள் விஷயத்தில் தவிர மற்ற விதைகளின் விஷயத்திலே, விதை வியாபாரிகள் என்னும் சொற்றொடர் ஐரோப்பிய நாடுகளில் எந்த அர்த்தத்தில் உபயோகிக்கப்படுகிறதோ அந்த அர்த்தத்தில் விதை வியாபாரிகளே இந்தியாவில் இல்லை. இனி அனேக வருஷங்கள் வரையில், விதைகளைப் பங்கீடுசெய்யும் வேலையானது விவசாய இலாகாக்களாலேயே பெருகுசாய்ச் செய்யப்பட்டுவரவேண்டியிருக்குமென்று தோற்றுகிறது. ஊக்கமுடையவர்களென்று எண்பிக்கப்பட்ட விதை வியாபாரிகள் கிடைக்கும் பட்சத்தில், அவர்களைச் சகல வழிகளிலும் ஆதரிக்கவேண்டும். இப்போதுள்ள நிலைமைகளிலே, விதைகளைப் பங்கீடு செய்யும் விஷயத்தில் கூட்டுறவு ஸ்தாபனங்களைச் சேர்ந்தவர்கள் விவசாய இலாகாக்களுக்கு மிகச் சிறந்த வகையில் உதவி புரியக்கூடுமென்று தோற்றுகிறது. ஆயினும், விதை வியாபாரிகளினின்றும் வேறானவர்களாயும் ஸர்க்கார் சம்பந்தமற்றவர்களாயுமிருக்கும் விதை ஏஜெண்டுகளையும் நியமிக்கலாம். அவர்கள் விவசாய இலாகாக்களின் நம்பிக்கைக்குப் பாத்திரமானவர்களாயிருக்கவேண்டியதுமல்லாமல், முத்திரை போட்ட பைகளிலாவது டப்பங்களிலாவது அந்த இலாகாக்கள் அனுப்பும் விதைகளில் மாத்திரமே வியாபாரம் செய்பவர்களாயிருக்கவும் வேண்டும்.

நம்பகமான விதை வியாபாரிகள் இந்தத் தொழில் செய்ய ஏற்படுகிறவரையில், சுத்தமான விதைகளைப் பொறுக்கியெடுக்கும் வேலையையும் பங்கீடு செய்யும் வேலையையும் விவசாய இலாகாக்களே மேற்பார்வையிட்டுவரவேண்டும். இது விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய முறை விஷயமாய்க் கண்டிதமான விதிகள் எவையும் ஏற்படுத்துவது சாத்தியமல்ல. அவ்வவ்விடத்திய நிலைமைகளை அனுசரித்து அந்த இலாகாக்கள் நடந்துகொள்ளவேண்டும் மேலும், சுத்தமான விதைகளை உற்பத்தி செய்வதற்கும் பங்கீடு செய்வதற்கும் அவ்வவ்விடத்தில் கிடைக்கக்கூடிய ஏஜென்டுகளை அந்த இலாகாக்கள் உபயோகித்துக்கொள்ளவேண்டும். ஆனல்,- பிரஸ்தாப இலாகாவைச் சேர்ந்தவைகளாயும் தனி நபர்களைச் சேர்ந்தவைகளாயுமுள்ள விதைப் பண்ணைகளின் சங்கியை மெத்தவும் அதிகரிப்பது மிகவும் விரும்பத்தக்கதாகும். இவைகளை சம்பந்தப்பட்ட இலாகாதாரே வைத்து நடத்திவரலாம் அல்லது அவர்களுடைய மேற்பார்வையின்கீழும் மேல்விசாரணைக்குட்பட்டும் அவர்களுக்காக விதைகளை உற்பத்திபண்ண ஒப்புக்கொள்ளும் கிருஷிகர்கள் வைத்து நடத்திவரலாம். இதுவிஷயத்தில்கூட கூட்டுறவு இயக்கம் மிகுந்த உதவி புரியக்கூடும்.

விதைகளைப் பங்கீடுசெய்யும் பிரசினை மிகவும் முக்கியமானது. ஆகவே, கூட்டுறவு ஸ்தாபனங்களும் இதர ஸ்தாபனங்களும் எவ்வளவு உதவி செய்யக்கூடுமோ அவ்வளவு உதவியும் செய்தாலுங் கூட, விதைகளைப் பங்கீடு செய்யும் விஷயத்திலும் பரிசோதிக்கும் விஷயத்திலும் பிரவர்த்திப்பதற்காக விவசாய இலாகாவுக்குள்ளேயே பிரத்தியேகமான ஸ்தாபனம் ஒன்று இருப்பது அவசியமென்று நாங்கள் எண்ணுகிறோம். இந்த வேலையின் விசாரணை வகிக்கும் உத்தியோகஸ்தரானவர் விவசாய இலாகா டெப்யுடி டைரெக்டரின் அந்தஸ்துடையவராயிருக்கவேண்டும். மேலும், அவர் விதைகளைப் பரிசோதித்துப்பார்ப்பது, பங்கீடு செய்வது ஆகிய இவைகளின் நிர்வாகத்துக்குச் சம்பந்தப்பட்ட நேர்ப்பொறுப்பு முழுவதையும் ஏற்றுக்கொள்ளவேண்டும். கூட்டுறவு சங்கங்களின் மூலமாகவும் இதர சங்கங்கள் மூலமாகவும், விதை வியாபாரிகள் கிடைக்கக்கூடிய இடங்களிலெல்லாம் அவர்கள் மூலமாகவும், விதை ஏஜென்டுகள் மூலமாகவேயன்றி இலாகாவைச் சேர்ந்த சிப்பந்திகள் மூலமாகவும் அவருக்குத் தகுதியானவர்களென்று தோற்றக்கூடிய வேறே எவரேனும் ஏஜென்டுகள் மூலமாகவும் விதைகளைப் பங்கீடு செய்யும் விஷயத்தை ஒழுங்குபடுத்தி அமைப்பது அவருடைய வேலையாகும். விதைகளைப் பங்கீடு செய்வதை விவசாய இலாகாக்கள் லாபம் கிடைக்கும் ஒரு ஆதாரமாக எண்ணக்கூடாது. ஆயினும், அந்த வேலையானது - அதற்காகப் பிடிக்கும் செலவுக்கு வேண்டிய பணத்தை அதனின்றும் சம்பாதிப்பது நியாயமென்று எண்ணக்கூடிய ஒரு தசையை அடைந்திருக்கிறது.

விவசாய சம்பந்தமான என்ஜினீரிங் (சிற்ப) வேலையானது விவசாய இலாகாக்கள் செய்யும் வேலைகளின் ஒரு முக்கியமான பிரிவாகும். மேலும், இதுவரையில் அந்தப் பிரிவு விஷயமாய்ப் போதுமான கவனம் செலுத்தப்படவில்லையென்று நாங்கள் அபிப்

பிராயப்படுகிறோம். இந்தப் பிரிவைப் பூர்த்தியாய் மீண்டும் ஒழுங்கு
படுத்தி அமைக்கவேண்டுமென்றும், சகல விஷயங்களிலும் அது
விவசாய இலாகாவைச் சேர்ந்த ஒரு முக்கியமான பாகமாயிருக்க
வேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். என்ஜினீரிங்
பிரிவுக்கு வேண்டிய உத்தியோகஸ்தர்களைப் புதிதாய் ஏற்படுத்தப்
பட்ட உயர்தர மாகாண விவசாய ஊழியவர்க்கங்களைச் சேர்ந்தவர்
களை என்ன ஷரத்துகளின்மேல் எடுத்துக்கொள்ளுகிறார்களோ அதே
ஷரத்துகளின்மேல் எடுத்துக்கொள்ளவேண்டியது மாத்திரமேயல்லா
மல், அந்த ஊழியவர்க்கங்களின் தொகுதியில் அவர்களைச் சேர்த்துக்
கொள்ளவும் வேண்டும். பம்ப் செய்யும் (யந்திரத்தினால் தண்ணீர்
இறைக்கும்) வேலையும் கிணறுகளுக்காகத் தொளை போடும் வேலையும்
முக்கியமானவைகளாயிருக்கும் மாகாணங்களிலே, இந்த வேலையை
என்ஜினீரிங் பிரிவின் ஒரு பகுதியாரிடம் ஒப்புவிக்கும் பட்சத்திலும்,
விவசாய சம்பந்தமான யந்திரங்கள் கருவிகள் ஆகிய இவைகளின்
விஷயத்தில் பிரத்தியேகமான ஒரு பகுதியார் பிரவர்த்திக்கும் பட்சத்
திலும் அது வெகுசாய் லாபகரமாயிருக்கக்கூடும். கிணறுகள் ஏரா
ளமாயிருக்கும் இடங்களிலே, தண்ணீர் எடுப்பதற்கான ஏற்றம் முத
லிய சாதனங்களில் செய்யவேண்டியவேலையை மூன்றாவதொரு பகுதி
யாரிடத்தில் ஒப்புவிப்பது உசிதமாயிருக்கக்கூடும். ஆயினும், விவ
சாய இலாகாவைச் சேர்ந்த என்ஜினீரிங் பிரிவின் சகல வேலைகளும்
விவசாய இலாகா டைரெக்டருக்குக் கீழ்ப்பட்டிருக்கும் ஒரு ஸீனியர்
என்ஜினீர் சாஸ்திரீய முறைப்படி செய்யும் மேல்விசாரணைக்கு
உட்பட்டிருக்கவேண்டும். இந்த ஸீனியர் என்ஜினீரை, சந்தர்ப்பங்
களை அனுசரித்து அவசியமாயிருப்பதற்கேற்றபடி என்ஜினீரிங் பிரி
விலிருந்தாகிலும் வெளியிலிருந்தாகிலும் தேர்ந்தெடுக்கலாம். கருவி
கள் யந்திரங்கள் ஆகிய இவைகளின் விசாரணை வகிக்கும் உத்தியோ
கஸ்தரை அதிஜாக்கிரதையாகத் தேர்ந்தெடுக்கவேண்டும். அவர்
என்ஜினீராயிருக்கவேண்டியது மாத்திரமேயல்லாமல், விவசாய சம்
பந்தமான யந்திரங்களையும் கருவிகளையும் உபயோகிப்பதில் பழக்க
முள்ளவராயிருக்கவும் வேண்டும். வண்டி முதலியவைகளை இழுப்
பதற்காக இந்தியாவில் உபயோகிக்கப்பட்டுவரும் கால்நடைகள்
இழுக்கவேண்டியிருக்கும் கருவிகள் சம்பந்தப்பட்டமட்டிலே அவை
களுக்கு இவ்வளவு சக்தி இருக்கிறதென்பதைக்குறித்து விசாரணை
செய்வது என்ஜினீரிங் பிரிவார் தீர்மானிக்கவேண்டிய மிகவும்
முக்கியமான பிரசினைகளில் ஒன்றாகும். மேலும், அன்னிய தேசங்
களில் உபயோகிக்கப்படும் மாதிரியாயுள்ள கருவிகளை உபயோகிக்கும்
உத்தேசத்துடன் இந்த தேசத்திலேயே உபயோகிக்கப்பட்டுவரும்
கருவிகளை விலக்குவதற்கு முன்னே, பயிரிடுபவர் எந்த நிலைமைகளில்
வேலைசெய்துவருகிறாரோ அந்த நிலைமைகளில் இவ்விரண்டு மாதிரி
களின் குறைகுணங்களை ஒப்பிட்டுப்பார்க்கும் பொருட்டுப் பூர்த்தி
யாய்ப் பரிசோதனைகள் செய்துபார்ப்பது அவசியமாகும். பொதுவாக
விவசாய இலாகாக்களின் நோக்கம் அடியிற்கண்டபடி இருக்க
வேண்டுமென்று நிர்ணயிக்கலாம். அதாவது, பற்பல நிலைமைக
ளுக்கு ஏற்றவைகளாயும் பொருத்த அளவில் செய்துகொள்ளத்
தக்கவைகளாயுமுள்ள சில மாதிரிகளான கருவிகளையும் யந்திரங்
களையும் உண்டுபண்ணுவதே மேற்படி இலாகாக்களின் நோக்கமாயிருக்க

வேண்டும். புதுமாதிரிகளான விவசாயக் கருவிகளையும் யந்திரங்களையும் உபயோகிக்கும்படிச் செய்வதைவிட ஏற்கனவேயுள்ள கருவிகளையும் யந்திரங்களையும் சீர்திருத்துவது மிகவும் பிரயோசனகரமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

புதுமாதிரிகளை உண்டுபண்ணும்போது, அவைகளைச் செய்யும் வேலையை இந்தியாவிலுள்ள யந்திரமுதலியவைகள் செய்பவர்களே ஏற்றுக்கொள்வது உசிதமாகும். அந்தப்படி செய்யப்படும் கருவிகளையும் யந்திரங்களையும் இந்தியாவில் விசேஷ தூரங்களிலுள்ள பிரதேசங்களுக்குக் கொண்டுபோவதில் பல கஷ்டங்கள் இருக்கின்றன. அந்தக் கஷ்டங்களை நிவர்த்திப்பதற்கு நாங்கள் ஒரு யோசனை சொல்வோம். அதாவது, விவசாயக்கருவிகளுக்கும் யந்திரங்களுக்கும் வாங்கப்படும் ரெயில்வே கேள்வு வீதங்களைப் புனர்விமரிசை செய்து, அந்த வீதங்களைக் குறைப்பது சாத்தியமாயிருக்கும்போதெல்லாம் அவைகளைக் குறைக்கும் விஷயத்தைப்பற்றி ரெயில்வே அதிகாரிகள் அனுகூலமாய் ஆலோசனைசெய்து சௌகரியம் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். இது சம்பந்தமாய் மற்றொரு விஷயமும் எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. அதாவது, சில கருவிகளும் யந்திரங்களும் நீங்கலாக எல்லா விவசாயக் கருவிகளையும் யந்திரங்களையும் தீர்வையில்லாமலே இந்தியாவுக்குள் கொண்டுவர அனுமதி கொடுத்திருக்கையில், இறக்குமதி செய்யப்படும் இரும்புக்கும் எஃகுக்கும் உயர்ந்த பாதுகாப்புத் தீர்வைகள் விதிக்கப்படுகின்றனவென்றும், இதனால் வேலைசெய்யப்பட்டிராத சாமான்கள் இறக்குமதி செய்யப்பட்டவைகளாயிருந்தாலுஞ்சரி இந்தியாவில் உற்பத்தி செய்யப்பட்டவைகளாயிருந்தாலுஞ்சரி அவைகளை வாங்கும் விஷயத்திலே இந்தியாவில் மேற்படி யந்திரங்கள் முதலியவை செய்பவர்களுக்குச் செலவு மெத்தவும் அதிகரித்துவிடுகிறதென்றும் தெரிவிக்கப்பட்டது. இவ்விஷயத்தை இந்திய டாரிப் போர்ட் என்னும் ஏற்றிறக்குமதிச் சாமான்களின் தீர்வை விஷயமாய் விசாரணை செய்யும் சபையார் பரிசோதித்துப் பார்க்கலாமென்று நாங்கள் நினைக்கிறோம்.

வெயில் மிகுந்த பிரதேசங்களிலும் மழை பெய்யுமென்னும் நிஷ்கரிஷையிராத பிரதேசங்களிலுமுள்ள கிருஷிகர்களின் ஜீவனமே சாதாரணமாய் மிகவும் கஷ்டமானது. பயிர்கள் முற்றிலும் மழையையே எதிர்பார்த்திருக்கவேண்டிய அப்படிப்பட்ட பிரதேசங்களில் பயிரிடுவது சம்பந்தமான பிரசினைகளை விவசாய இலாகாக்கள் இது வரையில் கவனித்துவந்ததைவிட இன்னும் அதிக நெருக்கமாய்க் கவனிக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

இந்தியாவில் கிருஷிகர்கள் சாகுபடி செய்யும் பயிர்கள் வேறு இடங்களில் கிருஷிகர்கள் சாகுபடி செய்யும் பயிர்களைப் போலவே கேடு விளைக்கத்தக்க பூச்சிகளின் உபத்திரவங்களுக்கும் செடிகளுக்குக் காணும் வியாதிகளுக்கும் உட்பட்டவைகளாயிருக்கின்றன. இவை வெளியிலிருந்து வராதபடி (1914-ம்வருஷத்து 2-வது ஆக்டாகிய) நாசப்படுத்துகிற பூச்சிகளையும் கொள்ளை நோய்களையும் குறித்த ஆக்டினால் அவர்களுக்குப் பாதுகாப்பு ஏற்பட்டிருக்கிறது. அந்த ஆக்டின்படி ஏற்படுத்தப்பட்டிருக்கும் விதிகள் போது

மானவையாகும். ஆனால், கடலோரத்திலுள்ள இந்திய சமஸ்தானங்களும் இது விஷயத்தில் ஒத்துழைக்கும்படிச் செய்வது முக்கியமாகும். மேலும், கேடு விளைக்கத்தக்க மேற்படி பூச்சிகளும் வியாதிகளும் இந்தியாவிலிருந்து பர்மாவுக்கு வருவதைத் தடுப்பதற்காகச் சட்டம் ஏற்படுத்துவது உசிதமாயிருக்குமா என்னும் விஷயத்தைப் பற்றி பர்மா கவர்ன்மென்டார் ஆலோசனை செய்யவேண்டும். இந்தியா கவர்ன்மென்டாரேயன்றி மாகாண கவர்ன்மென்டுகளும் சிற்றுயிரிலக்கண சாஸ்திர சம்பந்தமாகவும் தசைநார் விவரண சம்பந்தமாகவும் பிரவர்த்திப்பதற்காகத் தாங்கள் ஏற்படுத்தியிருக்கும் சிப்பந்திகளைச் சாத்தியமானமட்டில் பலப்படுத்தவேண்டும். சென்னை ராஜதானியிலே பயிர்களுக்குக் கேடு விளைக்கத்தக்க பூச்சிகளையும் வியாதிகளையும் குறித்த ஆக்டொன்று 1919-ம் வருஷத்தில் ஜாரி செய்யப்பட்டது. அம்மாதிரியே, இதர மாகாண கவர்ன்மென்டுகளும் அவ்வவ்விடத்திய பயிர்களுக்குக் கேடு விளைக்கத்தக்க பூச்சிகளையும் வியாதிகளையும் தடுப்பதற்காகவும் ஒழிப்பதற்காகவும் சட்ட நிரூபணம் செய்வதும் உசிதமாயிருக்கக்கூடும். காட்டு மிருகங்களாலும் கிருமி வர்க்கத்தாலும் உண்டாகும் கெடுதியே பயிர்களுக்கு நேரிடக்கூடிய இதரவகையான அபாயமாகும். துப்பாக்கி லைஸென்ஸுகளை இப்போது கொடுப்பதைக் காட்டிலும் இன்னும் தாராளமாய்க் கொடுப்பதனாலாவது, குறைந்த செலவில் பிரயோசனகரமாய் அடைப்பு ஏற்படுத்தும் முறையைக் கண்டுபிடிக்கக்கூடுமானால் அந்தப்படி அடைப்பு ஏற்படுத்துவதனாலாவது காட்டு மிருகங்களினால் உண்டாகும் அபாயத்தை வெகுசாய் நிவர்த்தி செய்துவிடலாம். இது விவசாய இலாகாக்கள் பரிசோதித்துப் பார்க்கக்கூடிய விஷயமாகும். கிருமி வர்க்கத்தால் பயிர்களுக்கு விசேஷ சேதம் உண்டாக்கப்படுகிற பட்சத்திலே, அவைகளை அழிப்பதற்காகப் பஞ்சாபிலும் ஸிந்திலும் ஏற்படுத்தியிருப்பதைப்போல் ஒரு பிரத்தியேகமான சிப்பந்தியை ஏற்படுத்தலாம்.

பிரதான ரிபோர்ட்டின் 6-ம் அத்தியாயம்.

சில மாகாணங்களில் கைப்பற்று நிலங்களை உட்பிரிவினை செய்வதனாலும் துண்டுதுண்டாகப் பிரிப்பதனாலும், விவசாய அபிவிருத்திக்குப் பெருத்த தடை ஏற்படுகிறது. பிதிரார்ஜ்ஜித சொத்தை உரிமை வழியாய் அடைவது சம்பந்தமாக ஹிந்துக்களுக்குள்ளும் மகம்மதியர்களுக்குள்ளும் அனுசரிக்கப்பட்டுவரும் சட்டங்களின்படி அசையாப்பொருளை வாரிசுகள் எல்லோரும் சாதாரணமாய்ச் சமபாகங்களாக அடையவேண்டியிருக்கிறது. முக்கியமாய் இந்த சட்டங்கள் காரணமாகவே கைப்பற்று நிலங்கள் உட்பிரிவினை செய்யப்படுகின்றன. உரிமை வழியாய்ச் சொத்தை அடைவது சம்பந்தமான சட்டங்களினால் அல்லாமல், வாரிசுகளுக்குள் சொத்தைப் பங்கிடுவது விஷயமாய் ஏற்பட்டிருக்கும் சட்டத்தை அமுலுக்குக் கொண்டுவரும் முறையினாலேயே பெரும்பாலும் நிலங்கள் துண்டுதுண்டாகப் பிரிக்கப்படுகின்றன. இந்தப் பிரசினை விஷயமாய்ப் பஞ்சாபில் கூட்டுறவு இலாகாதார் தக்கபடி முயற்சி செய்துவருகிறார்கள். அங்கே அவர்களுடைய முயற்சிகளின் காரணமாக சித்திகரமானவையென்று பிரத்தியட்சமாய்த் தெரியவரும் சில

முடிவுகள் ஏற்பட்டிருக்கின்றன. மத்திய மாகாணத்திலும் இது விஷயமாய்ச் சட்டநிருபணம் செய்யப்பட்டிருக்கிறது. பம்பாயிலும் பின்சொல்லிய முறையை அனுசரிக்க உத்தேசித்திருக்கிறது. கைப் பற்று நிலங்களை ஒன்றாய்ச் சேர்ப்பதை ஆதரிப்பதற்காக ஏற்படுத் தப்படும் யாதொரு சட்டத்தில் என்ன பொதுக்கோட்பாடுகளை அனுசரிக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோமோ அவைகள் இன்னவையென்று பிரதான ரிபோர்ட்டின் 127-வது பாராவில் நாங்கள் கண்டெழுதியிருக்கிறோம்.

## 4.—விவசாய முறைகளைச் செய்துகாட்டுவதும் பிரசார வேலையும்.

பிரதான ரிபோர்ட்டின் 6-ம் அத்தியாயம்.

விவசாய ஆராய்ச்சி வேலை பயிரிடுபவருக்குப் பிரயோசனகரமா யிருக்கும்பொருட்டு, அந்த ஆராய்ச்சி வேலையிலிருந்து கிடைக்கும் முடிவுகள் அவர் சாதாரணமாய் அனுசரித்துவரும் வழக்கத் தின் ஒரு பாகமாய் அமையும்படியான ரூபத்தில் அவைகளை அவருக் குத் தெரிவிக்கவேண்டும். எழுதப்படிக்கத் தெரியாதவர்கள் மிக வும் அதிகமாயிருக்கும் இந்தியாவைப்போன்ற ஒரு தேசத்திலே, விவசாய முறைகளைக் கண்ணால் காணக்கூடியபடி செய்துகாட்டு வதே விவசாய அபிவிருத்தியினால் விளையும் நன்மைகளைப் பயிரிடும் வகுப்பார்கள் அறியும்படிச் செய்வதற்கு மிகவும் சிறந்த மார்க்க மாகும். ஆனால், சீர்திருத்தமான ஒரு முறையைப் பொதுவாய் ஜனங்கள் அனுசரிக்கும்படி சிபாரிசு செய்வதற்குமுன், அதை ஒரு ஸர்க்கார் பண்ணையில் செவ்வையாய்ப் பரிசோதித்துப் பார்க்கவேண் டும். பயிரிடும் எந்த நபருக்கு அந்த முறை சிபாரிசு செய்யப்படு கிறதோ அவர் அதை அனுசரிப்பது சாத்தியமாயிருக்கவேண்டியது மல்லாமல், கவனிக்கக்கூடிய அளவுக்கு அதன் மூலமாய்த் திரவிய லாபம் ஏற்படவும் வேண்டும். அந்த லாபமானது அதிக விளைவு கிடைப்பது மூலமாகவோ பயிரிடுவதற்குப் பிடிக்கும் செலவு குறை வது மூலமாகவோ அவருக்கு ஏற்படவேண்டும்.

விவசாய முறைகளைச் செய்துகாட்டுவதற்கு இரண்டு வழிகள் இருக்கின்றன. அவை என்னவென்றால், சர்க்கார் நிருபணைப் பண் ணையில் மேற்படி முறைகளைச் செய்துகாட்டுவதும், ஒரு துண்டு நிலத்தில் அவைகளைச் செய்துகாட்டுவதுமாகும். பயிரிடுபவர் அனு சரிக்கும் முறைகளை மாற்றும்படிச் செய்யவேண்டுமானால், விவசாய இலாகாதாரரின் மேல்விசாரணைக்குட்பட்டாவது அவர்கள் சொல் லுகிறபடியாவது ஒரு சிறு துண்டு நிலத்தில் பயிர் செய்து மாசூலி லாகிலும் பயிர் செய்யும் முறையிலாகிலும் ஏற்படும் அபிவிருத்தி யைப் பிரத்தியட்சமாய்க் காட்டுவதுதான் மிகச் சிறந்ததும் விரை வில் பயன்படக்கூடியதுமான மார்க்கமென்று அனேகமாய் ஏகோ பித்து அபிப்பிராயம் கொள்ளப்பட்டிருக்கிறது. இந்தப்படி செய்வ தனால் ஒரு நன்மை ஏற்படுகிறது. அதாவது, சீர்திருத்த முறை களைக் கிராமத்துக்குள்ளேயே செய்துகாட்டுவது சாத்தியமாயிருக்கி றது. அந்த முறைகளைச் செய்துகாட்டுவதற்கான சர்க்கார் நிருப ணைப்பண்ணையின் விஷயத்திலோ ஒருவித ஆட்சேபணை செய்வதற்கு

இடம் ஏற்படுகிறது. அந்தப் பண்ணையில் பயிர் செய்வது விஷயமாய் அனுசரிக்கப்படும் முறைகள் தம்முடைய சக்திக்கும் நிலைமைக்கும் ஏற்றவையல்லவென்று பயிரிடுபவர் மனத்தில் ஒரு விதமான சந்தேகம் உண்டாகிறதென்று ஆட்சேபிப்பதற்கு இடம் ஏற்படுகிறது. அனேகமாய் சற்று விஸ்தாரமான ரீதியில் அமைக்கப்பட்டிருக்கும் பண்ணைக்கட்டிடங்களையும், அங்கே உபயோகிக்கப்படும் சிறந்த கால்நடைகளையும் நவீனமான கருவிகளையும், ஜாக்கிரதையாய்ப் புலத்தை அமைத்திருப்பதையும் அவர் நோக்கும்போது, அங்கே அனுசரிக்கப்படும் முறைகள் முற்றிலும் தம்முடைய சக்திக்கு மிஞ்சினவையென்று அவர் எண்ணக்கூடும். மேலும், விவசாய முறைகளைச் செய்து காட்டும் பண்ணையினால் ஏற்படும் பலனை அந்தப் பண்ணைக்கு அடுத்தாற்போல் சமீபத்திலுள்ள கிருஷிகாகள் மாத்திரமே தெரிந்துகொள்ளக்கூடுமாகையால், ஷை பண்ணையின் உபயோகம் வெகு குறைவாகவே இருக்கிறது. ஆயினும், மேற்படி முறைகளைக் கிருஷிகரின் சொந்த நிலத்திலேயே செய்துகாட்டுகிற பட்சத்தில், இம்மாதிரி ஆட்சேபனைகள் எவையும் ஏற்படுவதற்கு இடமிராது. என்றாலும், புகையிலையைப் பதப்படுத்துவதற்காக குறித்த ஒரு முறையை அனுசரிப்பதனாலாவது வெள்ளைச் சர்க்கரை அல்லது உயர்ந்தரகம் வெல்லத்தைத் தயார் செய்வதற்கான சிறிய யந்திரோபகரணங்களினாலாவது ஏற்படும் நன்மைகளைப் பிரத்தியட்சமாய்க் காட்டுவதைப் போன்ற விசேஷ காரியங்களுக்கு விவசாய முறைகளைச் செய்துகாட்டும் பண்ணைகள் அவசியமாயிருக்கலாமென்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். அதாவது, கைத்தொழில்களுக்குச் சம்பந்தப்பட்டவைகளாகவும் விவசாயத்துக்குச் சம்பந்தபபட்டவைகளாகவுமுள்ள வேலைகளைச் செய்துகாட்டவேண்டியிருந்தால் அதற்கு விசேஷ பண்ணைகள் அவசியமென்பதை நாங்கள உணர்ந்திருக்கிறோம். ஆனால், உள்ளபடி பயிரிடுவது சம்பந்தமாய் அனுசரிக்கப்படும் முறைகளைச் செய்துகாட்டவேண்டியதாயிருக்கும்பட்சத்தில், ஒரு நிலத்துண்டில் அந்தப்படி செய்துகாட்டுவதே மிகவும் தகுதியானதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

விவசாயமுறைகளைச் செய்துகாட்டும் வேலையைச் சோதனைப் பண்ணைகளில் நடத்தவே கூடாது. அப்படிப்பட்ட பண்ணைகளில் செய்யப்படும் வேலையானது பரிசோதனார்த்தமாய்ச் செய்யப்படும் வேலையாயிருப்பது காரணமாக ஏற்படும் திட்டங்களின் தன்மையை நோக்கும்போது, அந்தப் பண்ணைகளில் அனுசரிக்கப்படும் முறைகள் சாமானிய கிருஷிகர்களால் அனுசரிக்கப்பட முடியாதவைகளாயிருக்கின்றன. ஆயினும், சோதனைப் பண்ணையில் மிகுதியாயுள்ள நிலத்தை விவசாய முறைகளைச் செய்துகாட்டுவதற்காகப் பிரத்தியேகப்படுத்திவைப்பதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. விதைப் பண்ணைகளை விவசாய முறைகளைச் செய்துகாட்டுவதற்கான பண்ணைகளாக உபயோகிப்பதனால் ஸ்பஷ்டமாய் அனுகூலங்கள் ஏற்படுவதாக எங்களுக்குத் தெரியவருகிறது. ஆனால், அப்படிப்பட்ட பண்ணையின் பிரதம நோக்கத்துக்கு இதனால் பிரதிகூலமாய்ப் பாதகம் ஏற்படக்கூடாது. விதைப் பண்ணைகளை மேலேகண்டபடி உபயோகிக்கும்பட்சத்தில், சீர்திருத்தமான சாகுபடி முறைகளை அனுசரிப்பதனாலாவது எரு வகைகளை உபயோகிப்பதனாலாவது,

தமக்குக் கொடுக்கப்படும் விதையின் மூலமாக மொத்த மாசூல் இன்ன அளவுக்கு அதிகப்படக்கூடுமென்பதைக் கண்டறிய கிருஷிகருக்கு விசேஷ அவகாசங்கள் ஏற்படுகின்றன.

இலாகாதார் வைத்து நடத்திவரும் பண்ணைகளுக்காகப் பிடிக்கும் செலவை அந்தப் பண்ணையிலிருந்தே அடையவேண்டுமா என்னும் பிரசினையைப்பற்றி அடிக்கடி வாதம் செய்யப்படுகிறது. முற்றிலும் பரிசோதனார்த்தமான வேலைக்காகவே ஏற்படுத்தப்பட்டிருக்கும் பண்ணைகளிலிருந்து அந்தப்படி அடையமுடியாது. அவைகள் சம்பந்தப்பட்டமட்டில் வரும்படி விஷயம் முற்றிலும் இரண்டாவதாகக் கருதப்படவேண்டிய அம்சமேயாகும். விதைப் பண்ணைகளில் நடத்தப்படும் விதை சம்பந்தமான வேலையைப் பொறுத்தமட்டில், அந்தப் பண்ணைகளுக்காகப் பிடிக்கும் செலவுக்கு வேண்டிய வருமானமாகிலும் அவைகளிலிருந்து கிடைக்கும்படி சாதாரணமாய் எதிர்பார்க்கவேண்டும். பண்ணை வைத்து லாபமடையக்கூடுமென்பதை ருஜுப்படுத்திக் காட்டுவதற்காக ஸ்தாபிக்கப்படும் காட்சிப் பண்ணைகளிலிருந்து உள்ளபடி லாபம் கிடைக்காமற்போகுமானால், அப்படிப்பட்ட பண்ணைகளை ஏற்படுத்துவதன் நோக்கம் நிறைவேறாமல் போய்விடும். பிரஸ்தாப இலாகாவின் பொதுப் பிரசார வேலையை விருத்திபண்ணுவதற்காக ஜில்லா விவசாயப் பண்ணைகளும் தாலூகா விவசாயப் பண்ணைகளும் ஏற்படுத்தும்போது, அவைகளிலிருந்து கட்டாயம் லாபம் கிடைக்கவேண்டுமென்று எதிர்பார்ப்பது கூடாது.

விவசாய முறைகளைச் செய்துகாட்டும் பண்ணைகளிலும் விதைப் பண்ணைகளிலும் குறித்த விஷயங்களைப்பற்றி கிருஷிகர்களுக்குச் சொற்ப காலம் போதனை செய்கிறபட்சத்தில், அது விவசாய இலாகாக்களுக்கும் கிருஷிகருக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்படுவதற்குச் சிறந்த மார்க்கமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த போதனாமுறைகளை மிகுந்த யோசனையுடன் ஏற்படுத்தி, அவைகளைக் கற்பிக்க சிப்பந்தியைச் சேர்ந்த குறித்த ஒரு உத்தியோகஸ்தரை நியமிக்கவேண்டும். கிருஷிகர்கள் அவைகளைக் கற்றுக் கொள்ள முன்வரும்படி செய்வதற்காக ஸ்டைபெண்ட் என்னும் உபகாரச் சம்பளமாவது தங்குவதற்கு இலவசமாய் வசதியிடமாவது ஏற்படுத்திக் கொடுப்பது சம்பந்தமான பிரசினையை அவ்வவ்விடத்து அதிகாரிகள் பைசல் செய்துகொள்ளவேண்டும்.

பயிரிடுபவரின் சொந்த நிலத்தில் விவசாய முறைகளைச் செய்துகாட்டும் விஷயத்திலே இப்போது இரண்டு பத்ததிகள் அனுஷ்டானத்தில் இருந்துவருகின்றன. முதல் பத்ததியின்படி, விவசாய முறைகளைச் செய்துகாட்டுவதற்காக ஒரு நிலத்துண்டை குத்தகைக்கு எடுத்துக்கொண்டு, அதில் சாகுபடி சம்பந்தமான வேலை முழுவதும் இலாகாவைச் சேர்ந்த சிப்பந்தியால் செய்யப்படுகிறது. மற்றொரு பத்ததியின்படியோ, சாகுபடி சம்பந்தமான வேலையானது ஆரம்பத்திலிருந்து முடிவுவரையில் விவசாய முறைகளைச்

செய்து காட்டும் உத்தியோகஸ்தரின் நேர் மேற்பார்வையின்கீழ் பயிரிடுபவராலேயே செய்யப்படுகிறது. முதல் பத்ததியின்படி, விவசாய முறைகளைச் செய்துகாட்டிக்கொண்டுவருகையில் சேகரிக்கப்படும் ஆதாரங்கள் சரியானவையென்று பெரிதும் நம்பலாம். இதுவே அந்தப் பத்ததியினால் ஏற்படும் அநுகூலமாகும். இரண்டாவது பத்ததியின்படி, வேலை முழுவதும் பயிரிடுபவராலேயே செய்யப்படுகிறபடியால், செய்துகாட்டப்படும் சீர்திருத்தமான முறையினால் உண்மையில் இன்ன பிரயோசனம் உண்டாகிறதென்பதைப் பயிரிடுபவர் நன்றாய்த் தெரிந்துகொள்ளக் கூடியவராயிருக்கிறார். இதுவே இந்தப் பத்ததியினால் ஏற்படும் அனுகூலமாகும். இவ்விரண்டு பத்ததிகளினாலும் தனித்தனியாய் அனுகூலம் ஏற்படுகிறதென்று எண்ணிப்பதற்கு அவைகளில் அனேக அம்சங்கள் இருக்கின்றன. ஆகவே, அவைகளை எல்லா மாகாணங்களிலும் அனுசரித்து அதனால் ஏற்படும் முடிவுகளை ஒத்திட்டுப்பார்ப்பது பிரயோசனகரமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

விவாசாய முறைகளைச் செய்துகாட்டுவதற்காக எந்தக் கிருஷிகரின் நிலம் உபயோகிக்கப்படுகிறதோ அவருக்கு நஷ்டம் ஏதாகிலும் உண்டானால் அதைக் கட்டிக்கொடுபபதாக உத்தரவாதம் செய்ய வேண்டுமா என்னும் பிரசினை ஏற்படுகிறது. உத்தரவாதம் செய்து கொடுக்கும் முறை யுக்தமானதா என்னும் விஷயம் சந்தேகத்துக்கிடமானதாயிருக்கிறதென்று நாங்கள் நினைக்கிறோம். உத்தரவாதம் செய்துகொடுக்காத பட்சத்தில் விவசாய முறைகளைச் செய்துகாட்டுவதற்கு வேண்டிய நிலத்துண்டுகள் கிடைக்காமற் போவதாயிருந்தால், அந்தப்படி உத்தரவாதம் செய்துகொடுப்பது அவசியமாயிருக்கலாம். அநுசரிக்கப்படும் முறைகள் எந்தக் காரணத்தினாலாகிலும் தவறிப்போய் அதனால் பயிரிடுபவருக்கு நஷ்டம் ஏற்பட்டிருந்தால், உத்தரவாதம் செய்துகொடுக்காவிட்டாலுங்கூட ஏதேனும் பிரதிபலனாகிலும் கொடுக்கத்தான் வேண்டும்.

சிறிய கால அளவுகளுக்குப் போதனை செய்யும் முறையை ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறோம். மற்ற எல்லாத் துறைகளையும்விட சீர்திருத்தமான கருவிகளை உபயோகிக்கும் வழக்கத்தை அபிவிருத்தி செய்வதில்தான் அந்த முறை மிகவும் பிரயோசனகரமாயிருக்கும். மேற்படி போதனை முறையில் அந்தக் கருவிகளை உபயோகிக்கும் விதத்தை மாத்திரமேயல்லாமல் அவைகளைப் பழுது பார்க்கும் விதத்தையும் கற்றுக்கொடுத்தால் முக்கியமாக அது பின்னும் பிரயோசனகரமாயிருக்கும். மேலும், ஊர் ஊராகச் சென்று சீர்திருத்தமான கருவிகளை உபயோகிக்கும் முறைகளைச் செய்துகாட்டி அவைகளைப் பலரும் கையாளும்படி செய்யும் விஷயத்தில் எவ்வளவோ முயற்சி எடுத்துக்கொள்ளலாமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அந்தப்படி கருவிகளின் உபயோகத்தை ரூபித்துக் காட்டுகிறவர்கள் சாத்தியமாயிருக்கும்போதெல்லாம் விடுதியான பாகங்களைத் தங்களுடன்கூட எடுத்துக்கொண்டுபோகவேண்டும். மேலும், அவர்கள் புதிய பாகங்களைப் பொருத்துவதையும், கருவிகளைச் சரிவர அமைத்துக்கொள்வதையும் பழுது பார்ப்பதையும் கிராமக் கம்மாளர்களுக்குக் கற்றுக்கொடுக்கத்தக்க போதகர் ஒருவரையும் அழைத்துக்கொண்டு போகவேண்டும். விலை உயர்ந்த

வையாயுள்ள கருவிகளையும் யந்திரங்களையும் வாடகைக்குக் கொடுப்பதற்கு விவசாய இலாகாதாரராகிலுஞ்சரி, அந்த இலாகாதாரருடன் கலந்து ஆலோசித்து அவைகளைச் செய்பவர்களாகிலுஞ்சரி தகுதியான ஏற்பாடுகள் செய்வார்களானால், அந்தக் கருவிகளையும் யந்திரங்களையும் உபயோகிப்பது அதிக விரைவாய்ப் பரவும். விவசாயப் பொருட்காட்சிகள் வைப்பது முக்கியமாகுமென்று வற்புறுத்திச் சொல்லவும் விரும்புகிறோம். இந்தப் பொருட்காட்சிகளில், பொருட்காட்சி எந்தப் பிரதேசத்தில் நடத்தப்படுகிறதோ அந்தப் பிரதேசத்துக்குத் தகுதியான யந்திரங்களையும் கருவிகளையும், கால்நடைகள் - மாசூல் ஆகிய இவைகளின் மாதிரிகளையும் காட்டிவைக்க வேண்டும். அவ்வவ்விடத்தில் பயிரிடுபவர்களுக்குச் சரியான அபிப்பிராயம் ஏற்படும்படிச் செய்யும் விஷயமாய் இந்தப் பொருட்காட்சிகள் முற்றிலும் பயன்படக்கூடியவைகளாயிருக்கவேண்டுமானால், அவைகளை ஒரே இடத்தில் இல்லாவிட்டாலும் தேசத்தின் ஒரே பாகத்திலாவது பிரதி வருஷமும் நடத்திக்கொண்டேவருவது முக்கியமாகும். விவசாய சாமான்களை விற்பனை செய்வதற்காக சர்வதமாய் ஸ்தாபிக்கப்பட்டுள்ள கடையொன்றை ஒழுங்காய் அமைக்கப்பட்டிருக்கும் மார்க்கெட்டுகளில் நன்றாய்த் தெரியும்படியாக ஏற்படுத்தவும்வேண்டும். அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளை ஏற்படுத்த வேண்டுமென்று பிரதான ரிபோர்ட்டின் 11-ம் அத்தியாயத்தில் நாங்கள் சிபாரிசு செய்திருக்கிறோம் (கீழே 74-வது பக்கத்தைப் பார்க்கவும்). மேலும், பெரிய சந்தைகளும் உற்சவங்களும் இந்தியாவில் வெகு சாதாரணமாய் நடக்கின்றன. அப்படிப்பட்ட சந்தைகளிலும் உற்சவங்களிலும் விவசாய இலாகாதார் தகுதியான சாமான்களைக் காட்சிப் பொருள்களாக வைக்கலாம்.

பற்பல விவசாய இலாகாதார்கள் தாங்கள் வெளியிடும் இதர பிரசுரங்களுடன் கூட சுதேச பாஷைகளில் துண்டு பத்திரிகைகளையும் அறிக்கைப் பத்திரிகைகளையும் சஞ்சிகைகளையும் காலெண்டரென்னும் பஞ்சாங்கங்களையும் பிரசுரித்து வருகிறார்கள். மேலும், அனேக மாகாணங்களிலுள்ள விவசாய இலாகாக்கள் இங்கிலிஷிலும் சுதேச பாஷைகளிலும் பிரசுரிக்கப்படும் சமாசார பத்திரிகைகளுக்குக் கிரமமாய் விஷயங்களை எழுதி யனுப்பி வருகின்றன. இந்தப் பிரசுரங்கள் சித்திகரமாயிருப்பது, பற்பல மாகாணங்களிலுள்ள பிரஜைகளில் எத்தனைபேர் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருக்கிறார்களோ அதைப் பொறுத்திருக்கிறது. ஆகவே, இதுவிஷயத்தில் பொதுவாய் எவ்விதமான திட்டங்களையும் ஏற்படுத்த எங்களுக்கு விருப்பமில்லை. ஆயினும், சுதேச பாஷைகளில் பிரசித்தம் செய்யும் துண்டு பத்திரிகைகளில் என்ன விஷயத்தைப்பற்றிச் சொல்லியிருக்கிறதோ அதைத் திட்டமாய்ச் செய்துகாட்டுவது சம்பந்தமாக அந்தத் துண்டு பத்திரிகைகள் வெளிவிடப்பட்டாலொழிய, அவைகளினால் சிறிதும் பயன் விளையமாட்டாதென்று நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம். யாதொரு விஷயத்தை எந்த ரூபத்தில் பிரசித்தப்படுத்தும் பட்சத்தில் அதை ஜனங்கள் நன்கு பாராட்டுவார்களென்று தோற்றுகிறதோ அந்த ரூபத்தில் மேற்படி விஷயத்தைப் பிரசித்தப்படுத்துவதை நாங்கள் அங்கீகரிக்கிறோம். சுதேச பாஷைகளில் பிரசித்

தம் செய்யும் துண்டு பத்திரிகைகளைப்பற்றி நாங்கள் சொல்லியிருக்கும் விஷயங்கள் ஒளி விசித்திர புகைப் படங்களைக் காட்டியாகிலும் அவைகளைக் காட்டாமலாகிலும் செய்யப்படும் உபன்னியாசங்களுக்கும் ஸினிமாடொக்ராப் மூலமாய் விவசாய வேலை முறைகளைக் காட்டுவதற்குங்கூட பிரயோகப்படும். இம்முறைகளைக்கொண்டு பிரசாரவேலை செய்வதுடன்கூட இன்ன முடிவுகள் ஏற்படுமென்று வாஸ்தவத்தில் செய்துகாட்டினுலொழிய அந்தப் பிரசாரவேலையினுல் சிறிதும் பிரயோசனம உண்டாகமாட்டாது. ஸினிமா காட்சிகள் மூலமாய்க் காட்டப்படும் விஷயங்கள் சம்பந்தப்பட்டமட்டில், விவசாய சம்பந்தமான பிலிம் என்னும் படமானது கிராம வாழ்க்கையைப்பற்றியும் சராசரி கிராமவாசியின் மனப்பான்மையைப்பற்றியும் நன்ருய் அறிந்துள்ள ஒருவரால் ஜாக்கிரதையாய்த் தயார் செய்யப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அந்தப் படம் எந்தப் பலனை உத்தேசித்துத் தயார்செய்யப்பட்டதோ அந்தப் பலன் உண்டாகாமற் போகக்கூடும். இக்காரணத்தினுல் விவசாய இலாகாக்கள் தங்களுக்கு வேண்டிய படங்களைத் தாங்களே தயார்செய்துகொள்வது யுக்தமாயிருக்காதா என்னும் விஷயத்தைக் குறித்து ஆலோசனை செய்யவேண்டும்.

சிறிதுகாலத்துக்குமுன் வங்காளத்திலும் பஞ்சாபிலும் ஒரு சுவாரசியமான பரீட்சை செய்துபார்க்கப்பட்டது. இந்த சந்தர்ப்பத்தில் அதைப்பற்றி நாங்கள் குறிப்பிட விரும்புகிறேம். ரெயில்வே, பப்ளிக் ஹெல்த் (பொதுஜன சுகாதாரம்), விவசாயம், கைத்தொழில, கூட்டுறவு, கால்நடை வைத்தியம் ஆகிய இவைகள் சம்பந்தப்பட்ட இலாகாதார்கள் பல விஷயங்களை நேரில் செய்துகாட்டுவதற்கான வண்டித்தொடர் ஒன்றைப் பிரயாணம் செய்யும் காட்சிச்சாலையாக அமைத்து, அதை ஷை மாகாணங்கள் முழுவதும் விஸ்தாரமாய்ப் பிரயாணம் பண்ணும்படி செய்தார்கள். இதில் பற்பல இலாகாக்களின் காட்சிப் பொருள்களைப் பொது ஜனங்களுக்குக் காட்டிக்கொண்டுபோனதுடன்கூட, அந்த வண்டி நின்ற ஒவ்வொரு இடத்திலும் பிலிம் என்னும் காட்சிப் படங்களைக் கொண்டும் ஒளி விசித்திர புகைப் படங்களைக் கொண்டும் விஷயங்களை விளக்கிக்காட்டி பல உபன்னியாசங்களும் திறந்தவெளியான இடங்களில் செய்யப்பட்டன. வங்காளத்திலும் பஞ்சாபிலும் செய்து பார்க்கப்பட்ட மேற்படி பரீட்சையின் முடிவுகள் தெரியவரும்போது, அப்படிப்பட்ட காட்சித் தொடர் வண்டியொன்றை ஏற்படுத்துவது சாத்தியமாயிருக்குமா என்னும் விஷயத்தை இதர மாகாண அதிகாரிகளும் ஆலோசித்துப் பார்க்கவேண்டும்.

பிரசார வேலை செய்வதற்கான இதர முறைகளைப்பற்றி யோசிக்கும் பட்சத்தில், பிரதமத்தில் அமைக்கப்பட்டபடிக்குள்ள விவசாய சங்கங்கள் மூலமாக அனேகமாய் இதுவரையில் பிரயோசனம் எதுவும் ஏற்படவில்லை. ஏனென்ருல், ஷை சங்கங்களுக்கு மெம்பர்கள் எந்தப் பிரதேசத்திலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்டார்களோ அந்தப் பிரதேசம் சாதாரணமாய் மிகவும் விரிவாயிருந்தபடியால், பிரயோசனகரமான முடிவுகள் ஏற்படுவது சாத்தியமாயிருப்பதற்குப் போது

மானபடி கவனித்து வேலை செய்யக்கூடவில்லை. திட்டமாய் இன்ன வேலை செய்யவேண்டுமென்னும் நிஷ்கரிஷை ஏற்படாத பட்சத்திலே, அனேகமாய் வேலை எதுவுமே செய்யப்படுவதில்லை. நிலங்களில் நேர்ப்பற்று குறைவாயிருந்தவர்களிலிருந்தே அடிக்கடி மெம்பர்கள் சேர்க்கப்பட்டு வந்தார்கள்; அல்லது ஷை சங்கங்கள் ஒரே ஒரு மெம்பர் ஊக்கத்துடன் வேலை செய்துவந்ததையே மிதமிஞ்சி நம்பியிருந்தன. விவசாய இலாகாக்களைச் சேர்ந்த சிப்பந்திகளோ மிகவும் குறைவாயிருந்தபடியால், அவர்கள் இந்த சங்கங்களை எவ்வளவு நெருக்கமாய்க் கவனிக்கவேண்டுமோ அவ்வளவு நெருக்கமாய்க் கவனிக்க முடியாமலிருந்தது. ஆயினும், சென்ற சில வருஷங்களிலே, பம்பாயிலும் மத்திய மாகாணத்திலும் ஷை சங்கங்களில் அனேக சங்கங்கள் கிடைத்திருக்கும் அனுபவத்துக்கேற்றபடி திருத்தியமைக்கப்பட்டு, தீவிரமாய் வேலை செய்யும் சங்கங்களாய் மாறியிருக்கின்றன. சிறிய சங்கங்களில் ஆரம்பித்து அவைகளை விருத்தி செய்துகொண்டு போவது, அதாவது தாலூகா சங்கங்களில் ஆரம்பித்து ஸர்க்கில் சங்கங்களும் ஜில்லா சங்கங்களும் ஏற்படும்படியாக வேலை செய்துகொண்டு போவதே இப்போது மத்திய மாகாணத்தில் அனுசரிக்கப்படும் ஆசாரமாயிருந்து வருகிறது. பம்பாயில் ஒரு வகையான சுவாரசியமான அபிவிருத்தி உண்டாகிவருகிறது. அங்கே தாலூகா அபிவிருத்தி சங்கங்களும் விவசாய சம்பந்தமான டிவிஷன் போர்ட் என்னும் சபைகளும் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. இந்தப்படி ஏற்படுத்தியிருப்பதானது - விவசாய அபிவிருத்தி விஷயத்தில் விவசாய இலாகாதாரரும் கூட்டுறவு இலாகாதாரரும் செய்துவரும் பிரசார வேலையை ஒன்றுபடுத்த இதுவரையில் செய்யப்பட்டிருக்கும் முயற்சிகள் எல்லாவற்றிலும் மிகவும் ஒழுங்கான முறையில் செய்யப்படும் முயற்சியாகும். யாதொரு சங்கம் ஏற்படுத்தப்பட்ட பிறகு கூடுமான சீக்கிரத்தில் விவசாய இலாகாதாரரும் கூட்டுறவு இலாகாதாரரும் தாலூகாவை ஸர்வே செய்ய வேண்டுமென்பதே இதன் கருத்து. அப்படிப்பட்ட சங்கங்கள் ஏற்பட்டிருக்கும் இடங்களிலே அவை விவசாய சங்கங்களாலும் கூட்டுறவு அபிவிருத்திக் கம்மிட்டிகளாலும் இவைகளைப் போன்ற இதர சங்கங்களாலும் இதற்குமுன் செய்யப்பட்டுவந்த வேலையை ஏற்றுக்கொண்டிருக்கின்றன. இந்த சங்கங்கள் முற்றிலும் ஆலோசனை செய்யும் சபைகளேயாகும். அவை தாலூகாவில் நடத்தப்படவேண்டிய வேலையின் திட்டத்தை அங்கீகரிக்கின்றன. சீர்திருத்தமான கருவிகளை இன்ன விதமாய் உபயோகிக்கவேண்டுமென்று செய்துகாட்டுவதும் சீர்திருத்தமான விதையையும் எருவையும் உபயோகித்தால் இன்ன பயன் ஏற்படுமென்று காட்டுவதுமே அந்த சங்கங்களின் பிரதான நோக்கமாகும். ஆனால், எந்த சீர்திருத்த வேலைகளாகிலும் விவசாய இலாகாவைச் சேர்ந்த சிப்பந்தியால் பயிரிடுபவரின் சொந்த நிலத்தில் சித்திகரமாகச் செய்துகாட்டப்பட்டிருந்தாலன்றி மற்றப்படி, அந்த சீர்திருத்த வேலைகளைச் செய்துகாட்ட மேற்படி சங்கங்கள் ஏற்றுக்கொள்வதில்லை. புலத்தில் வேலை செய்பவர் ஒருவரை அனுப்பும்படி யாதொரு சங்கத்தார் கேட்கும் பட்சத்தில், அவரை முற்றிலும் அவர்கள் கீழேயே வேலை செய்யும்படி விவசாய இலாகாதார் அனுப்புகிறார்கள். அவருக்கா

கப் பிடிக்கும் செலவைச் சங்கத்தின் திரவியத்திலிருந்து செய்ய வேண்டும். ஷை சங்கத்தின் வேலைக்காக வேண்டியிருக்கும் பணமானது - நன்கொடைத் தொகைகளைக் கொண்டும், கூட்டுறவு சங்கங்களும் தனி நபர்களும் மொத்தமாகக் கிராமங்களும் செலுத்திவரும் வருஷாந்த சந்தாத் தொகைகளைக் கொண்டும், கவர்ன்மெண்டார் வருஷவாரியில் கொடுக்கும் க்ரான்டென்னும் சகாயத் தொகையைக் கொண்டும் ஏற்படுத்தப்பட்ட ஒரு மூலதன நிதியிலிருந்து கிடைக்கிறது. தற்காலம் கவர்ன்மெண்டார் கொடுக்கும் ஷை க்ரான்ட் தொகையானது ஆயிரம் ரூபாய்க்கு மேற்படாமல் இதர ஆதாரங்களிலிருந்து சங்கத்துக்குக் கிடைக்கும் வருமானத்துக்குச் சமமாயிருக்கிறது. தாலூகா அபிவிருத்தி சங்கங்கள் டிவிஷன் போர்ட் என்னும் சபைகளின் மேற்பார்வையின்கீழ் வேலை செய்கின்றன. அந்த சபைகளில் உத்தியோகஸ்தர்களாயுள்ள இரண்டு மெம்பர்களும் உத்தியோகஸ்தர்களல்லாத நான்கு மெம்பர்களும் இருக்கிறார்கள். இந்த நான்கு மெம்பர்களில் இரண்டுபேர் கூட்டுறவு இயக்கத்துக்குப் பிரதிநிதிகளாகவும் இரண்டுபேர் விவசாயத்துக்குப் பிரதிநிதிகளாகவும் இருக்கிறார்கள். ஷை சபையானது பிரதி கால் வருஷத்திலும் குறைந்தது ஒருமுறையாகிலும் கூட்டங்கூடி, அதன் நடவடிக்கைகளைப் பற்றிய ரிபோர்ட் ஒன்றை விவசாய இலாகா டைரெக்டருக்கும் கூட்டுறவு சங்கங்களின் ரெஜிஸ்ட்ராருக்கும் அனுப்பவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. தாலூகா சங்கங்களுக்காக ஒதுக்கிவைக்கப்பட்டிருக்கும் கவர்ன்மென்ட் க்ரான்ட் தொகைகளை இந்த சபையார் பகிர்ந்து கொடுப்பதுமல்லாமல், கவர்ன்மென்ட் க்ரான்ட் தொகையின் ஒரு பாகத்தைக் கூட்டுறவு சங்கங்களுக்குக் கடனாகக் கொடுப்பதற்காகப் பிரித்துக்கொடுக்கும் வேலையை மேல் விசாரணை செய்தும் வருகிறார்கள். இந்த வேலையானது இதற்குமுன் கூட்டுறவு சங்கங்களின் ரெஜிஸ்ட்ராருடைய விசாரணையில் இருந்துவந்தது. பிரசார வேலை சம்பந்தமான காரியங்களுக்காக யுக்தானுசாரமாய்க் கொடுக்கப்படும் க்ரான்டைப் பகிர்ந்து கொடுக்கும் வேலையை ஷை சபை ஏற்றுக்கொள்ளுகிறது. இந்த வேலையானது இதற்குமுன் விவசாய இலாகா டைரெக்டரால் பரிபாலிக்கப்பட்டு வந்தது. கவர்ன்மென்டாராலாவது, விவசாய இலாகா டைரெக்டர், கூட்டுறவு இலாகா ரெஜிஸ்ட்ரார் ஆகிய இவர்களாலாவது ஏற்படுத்தப்பட்ட முறையைத் தங்கள் டிவிஷனில் இன்ன விதமாய் நிறைவேற்ற வேண்டுமென்பதைப்பற்றி ஷை சபையார் பிரதேச உத்தியோகஸ்தர்களுக்கு ஆலோசனை சொல்லவேண்டுமென்றும் எதிர்பார்க்கப்படுகிறது. பொது முக்கியதையுடைய பிரசினைகளைப் பற்றி அது ஆராய்ச்சி செய்து, பிரஸ்தாப டிவிஷனின் திரவிய நிலையை விருத்திசெய்வதற்காக என்ன ஏற்பாடுகள் செய்வது அவசியமென்று அதற்குத் தோற்றுகிறதோ அந்த ஏற்பாடுகளைச் சம்பந்தப்பட்ட இலாகாதாருக்குத் தெரிவிக்கிறது. கூட்டுறவு யூனியன்கள் ஏற்பட்டிருக்கிற இடங்களில் அந்த யூனியன்கள் மூலமாகவும் அப்படிப்பட்ட யூனியன்கள் ஏற்பட்டிராத இடங்களில் தனித்தனியாயுள்ள கூட்டுறவு சங்கங்கள் மூலமாகவும் விவசாய இலாகா சம்பந்தமான பிரசார வேலையைக் கூடுமானமட்டில் நடத்திவரவேண்டுமென்று பம்பாய் கவர்ன்மென்டார் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். பிரசாரவேலை செய்துவரும் சகல சிப்பந்திகளின் வேலையையும்

குறித்து ஒரு ரிபோர்ட்டை சம்பந்தப்பட்ட இலாகாக்கள் ஒவ்வொரு கால்வருஷத்திலும் மேற்படி சபையாருக்கு அனுப்பிவருகின்றன. அது அந்த சபையார் எழுதும் அபிப்பிராயக் குறிப்புகள் சகிதமாக விவசாய இலாகா டைரெக்டருக்கும் கூட்டுறவு சங்கங்களின் ரெஜிஸ்ட்ராருக்கும் அனுப்பப்படுகிறது. ஷை சபையார் செய்யும் எவை யேனும் சிபாரிசுகளைப்பற்றி டைரெக்டரும் ரெஜிஸ்ட்ராரும் கூட்டாய் ஆலோசனை செய்து அவைகளின்மேல் உத்தரவு பிறப்பிக்கிறார்கள். இதர மாகாண கவர்ன்மெண்டுகள் நன்றாய் ஆலோசனை செயது பார்க்கத்தகுந்த ஒரு மாதிரி இந்த முறையின் மூலமாக ஏற்படுகிற தென்று நாங்கள எண்ணுகிறோம். இந்த முறையையோ இதைப் போன்ற வேறே ஏதேனும் ஒரு முறையையோ அனுசரித்தால் மாத்திரமே கூட்டுறவு சஙகங்களும் இதர சங்கங்களும் செய்யக்கூடிய உதவியை விவசாய இலாகாக்கள் சீத்திகரமாய் உபயோகப்படுத்திக் கொள்ளக்கூடுமென்று நாங்கள் உறுதியாய் நம்புகிறோம்.

தாலூகா அபிவிருத்தி சங்கங்களின் வேலையைக் குறித்து சற்று விவரமாய்ச் சொல்லியிருக்கிறோம். ஏனென்றால், கூட்டுறவு இலாகாக்கள் மூலமாய்ச் செய்வது சாத்தியமாயிருக்கும் பிரசாரவேலையைச் செய்ய மொத்தத்தில் விவசாய இலாகாக்கள தவறிப்போயிருக்கின்றனவென்று நாங்கள் எண்ணுகிறோம். இந்தியாவிலுள்ள பல மாகாணங்களில் கூட்டுறவு இயக்கமானது கடன் கொடுப்பதைத் தவிர வேறே எந்த வேலைகளையும் விஸ்தாரமாய் ஏற்றுக்கொள்ளக் கூடிய தசையை இன்னும் அடையாதிருப்பதனாலேயே இம்மாதிரி நிலைமை பெரும்பாலும் ஏற்பட்டிருக்கிறது. ஆயினும், விவசாய இலாகாக்களும் கூட்டுறவு இலாகாக்களும் போதுமானமட்டில் நெருங்கி வேலை செய்யாதிருப்பதும் மேற்படி நிலைமை ஏற்பட்டிருப்பதற்குக் காரணமாயிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. விவசாய இலாகாக்கள் செய்துவரும் பிரசாரவேலையில் கூட்டுறவு நாணய சங்கங்களை இப்போது உபயோகித்துவருவதைக் காட்டிலும் மிகவும் அதிகமாய் உபயோகித்துக்கொள்ளவேண்டும்.

விவசாய முறைகளைச் செய்துகாட்டும் சகல வேலைகளையும் பிரசார சம்பந்தமான சகல வேலைகளையும் நன்றாய்க் கவனிப்பது முக்கியமாகுமென்னும் விஷயத்தை வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறோம். இது காரணம்பற்றி சிறு யூனிட் என்னும் பரிமாணப் பிரதேசங்களைத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒரு சிறு விஸ்தீர்ணத்தில் அனுசரிக்கப்படும் விவசாய சம்பந்தமான வழக்கத்தில் அபிவிருத்தி சம்பந்தமான ஒரு முறை செவ்வையாய் ஸ்தாபித்மாகிவிட்டால், அதைப்பற்றிய விவரங்களானவை நிலைமைகள் ஒரே மாதிரியாயுள்ள தொடர்ச்சியான விஸ்தீர்ணங்களில் சகஜமாய்ப் பரவிவிடுகின்றன. சீர்திருத்தமான விதை வகைகளைப் பங்கிடு செய்யும் விஷயத்தில் முக்கியமாய்க் கவனத்தையெல்லாம் செலுத்தவேண்டும். அந்தப்படி செய்யும்பட்சத்தில், ஒரு சீர்திருத்தமான விதை வகையை மொத்தத்தில் முன்னிலும் அதிக சுலபமாய் உற்பத்தி செய்யக்கூடும். மேலும், அவ்வகையான விதைகளுக்கு வியாபாரிகள் பிரீதியுடன் அதிக விலை கொடுக்கும்படியும் செய்யக்கூடும். இம்மாதிரியே விவசாய முறைகளைச் செய்துகாட்டும் காரியத்துக்காகத் தேர்ந்தெடுக்கும் விஷயங்கள் கண்டிப்பாய்க் குறைவாக இருக்கவேண்டும். விவசாய இலாகாக்க

ளின் ஊக்கத்தைப் பல வழிகளில் சிதறிப்போகும்படி செய்யக்கூடாது.

விவசாய முறைகளைச் செய்துகாட்டும் வேலையையும் பிரசாரவேலையையும் பற்றிய பிரசினைகள் மிகவும் முக்கியமானவைகளாகும். ஆகவே, இது காரியத்துக்காக விவசாய இலாகா டெப்யுடி டைரெக்டரின் அந்தஸ்துடைய உத்தியோகஸ்தர் ஒருவரை விவசாய இலாகா டைரெக்டரின் ஆபிஸில் ஏற்படுத்திவைப்பது உசிதமாயிருக்குமென்றும், மாகாண முழுவதிலும் பிரசாரவேலையை ஏற்படுத்தி ஒழுங்குபடுத்துவதே அவருடைய அலுவலாயிருக்கவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். பிரசார சம்பந்தமான பற்பல திட்டங்களின்படி வேலை செய்யப்பட்டுவருவதைக் கவனித்துவருவதும், அவைகளினால் ஏற்படும் பலாபலன்களை எழுதிவைப்பதும், அவைகள் முன்னிலும் சித்திகரமாயிருப்பதற்கு இன்ன முறைகளை அனுசரிக்கவேண்டுமென்று ஆலோசனை சொல்வதும் அவருடைய வேலையாகும். இதர மாகாணங்களிலும் இதர தேசங்களிலும் நடத்தப்படும் பிரசார வேலையைப்பற்றியும் விவசாய முறைகளைச் செய்துகாட்டுவது சம்பந்தமாய்ச் செய்துபார்க்கப்படும் பரீட்சைகளைப்பற்றியும் அவர் சாத்தியமானமட்டில் தெரிந்துவைத்துக் கொள்ளவேண்டியதுமல்லாமல், பொதுவாய் ஜில்லாக்களில் என்ன நடந்துவருகிறதோ அதை ஆராய்ச்சிவேலை செய்துவரும் சிப்பந்திக்குத் தெரிவித்துக்கொண்டிருக்கவும் வேண்டும்.

விவசாய இலாகாவையும் கால்நடை வைத்திய இலாகாவையும் தவிர கிராமங்களின் க்ஷேமத்துக்குச் சம்பந்தப்பட்ட இதர இலாகாக்களின் பிரசார வேலையைத் தாலூகா அபிவிருத்தி சங்கங்கள் விவசாய சங்கங்கள் ஆகிய இவைகளைக் காட்டிலும் அதிக பொதுத்தன்மை வாய்ந்த சங்கங்கள் மூலமாய் நடத்திவைப்பது மிகவும் நல்லதென்று நாங்கள் எண்ணுகிறோம்.

ஒவ்வொரு வருஷத்திலும் மிகவும் விசேஷமான விவசாய சம்பந்தமான சீர்திருத்தம் ஒன்றை நூதனமாய் உண்டாக்குபவருக்கு வருஷா வருஷம் இந்தியா கவர்ன்மென்டார் பரிசு கொடுத்துவரும் பட்சத்தில், இந்தியாவில் விவசாய அபிவிருத்தி உண்டாவதற்குச் சிறந்த தூண்டுதல் ஏற்படுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தப் பரிசு கொடுப்பதைக்குறித்த நிபந்தனைகளைச் சாத்தியமான மட்டில் திட்டமாய் ஏற்படுத்தவேண்டும். புதிய அல்லது சீர்திருத்தமான கருவிகளைக் கண்டுபிடிப்பதையோ புதிய அல்லது சீர்திருத்தமான மாகூல் வகைகளை ஆசாரத்துக்குக் கொண்டுவருவதையோ ஷை பரிசு பெறுவதற்கு உரிமையளிக்கும் வகையைச் சேர்ந்த வேலைக்கு உதாரணங்களாகக் காட்ட விரும்புகிறோம்.

## 5. பிராணிகளை வைத்து நிர்வாகம் செய்வது.

பிரதான ரிபோர்ட்டின் 7-ம் அத்தியாயம்.

கடைசியாய் வெளியிடப்பட்ட விவரக்கணக்குகளின்படி ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள வெவ்வேறு வகையான கால்நடைகளின் சங்கியை அடியிற்கண்டதாகும் :—

| | வட்சம். |
|---|---|
| பசுமாடுகளும் எருமைகளும் .. .. .. | 1,510 |
| செம்மறியாடுகளும் வெள்ளாடுகளும் .. .. | 625 |
| குதிரைகள், கோவேறு கழுதைகள், கழுதைகள் .. | 3[illegible] |
| ஒட்டகங்கள் .. .. .. .. .. | [illegible] |

விவரக் கணக்குகள் கிடைக்கக்கூடிய 66 இந்திய சமஸ்தானங்களி லே, 1924-25-ம்வருஷத்தில் 360 லட்சத்துக்கதிகமான பசுமாடு களும் எருமைகளும், 250 லட்சத்துக்கதிகமான செம்மறியாடுகளும், வெள்ளாடுகளும், 10 லட்சத்துக்கதிகமான குதிரைகளும் கழுதைக ளும் கோவேறு கழுதைகளும், 2,62,000 ஒட்டகங்களும் இருந் தன. இந்தியாவைப்போல் வேறெந்த தேசத்திலும் கால் நடைகள் அவ்வளவு முக்கியமானவையல்ல. பால் முக்கியமேயானு லும், அது இரண்டாவதாகவே கவனிக்கப்படத்தக்கதாகும். கலப் பைகளையோ வண்டிகளையோ இழுப்பதே கால்நடைகளின் பிரதான வேலையாகும். எருதில்லாமல் சாகுபடி சம்பந்தமான வேலை எதுவும் சாத்தியப்படமாட்டாது. எருதில்லாமல் மாகுலே ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோக முடியாது.

இயற்கையமைப்புகளிலும் கால்நடைகளின் சங்கியையிலும் மாகாணத்துக்கு மாகாணம் விசேஷ வித்தியாசங்கள் இருந் தாலுங்கூட, கால்நடைகளின் சொந்தக்காரர்கள் அவைகளை நிர்வாகம் செய்துவரும் முறைகள் இந்தியாவில் பொதுவாக ஒரே மாதிரியாயிருந்து வருகின்றன. ஜனநெருக்கமாயிருக்கும் சில ஜில்லாக்களின் விவரங்களை நுட்பமாய் ஆராய்ச்சி செய்துபார்த்தால், சாதாரணமான கால்நடைகளின் மொத்த சங்கியையானது நிலத்தில் வேலை செய்வதற்கு வேண்டியிருக்கும் பிராணிகளின் சங்கியையை அனுசரித்து பிரதமத்தில் நிஷ்கரிஷை செய்யப்படுவதாகத் தெரிய வருகிறது. இந்தியாவில் வைத்துவரப்படும் கால்நடைகளின் சங கியையை இதர தேசங்களில் வைத்துவரப்படும் கால்நடைகளின் சங்கியையோடு ஒத்திட்டுப்பார்த்தால், விவசாயத்தின் இப்போதைய தரத்தைக் குறைக்கவேண்டிய அவசியமிராமலே, வேலைசெய்து வரும் எருதுகளின் சங்கியையைக் குறைப்பது சாத்தியமாயிருக்கு மென்று தெரியவருகிறது. இந்தக் கால்நடைகள் திறமையுள்ளவை களாயிருந்தால், பயிரிடும் காரியத்துக்கு வேண்டிய கால்நடைகளைக் காட்டிலும் அதிகமான கால்நடைகள் வாஸ்தவத்தில் இருந்துவருவ தாகத் தெரியவரும். இந்தக் கால்நடைகளின் சங்கியையைக் கவ னிக்கும்போது தோஷமானநிலைமை ஏற்பட்டிருப்பதாகத் தோற்று கிறது. யாதொரு ஜில்லாவுக்குள் இருக்கும் கால்நடைகளின் சங்கி யையானது எத்தனை எருதுகள் வேண்டியிருக்கின்றனவோ அதைப் பொறுத்ததாயிருப்பதுமல்லாமல், அதை அனுசரித்தும் கிட் டப்படுத்தப்படுகிறது. திறமையான கால்நடைகளை விருத்தி செய்வதற்குரிய நிலைமைகள் எவ்வளவுக்கெவ்வளவு சீர்கெட்டி ருக்கின்றனவோ அவ்வளவுக்கவ்வளவு அதிகமாய்க் கால்நடை களை வைத்துவருவதற்கு இடம் ஏற்படுகிறது. பசுக்கள் வளம் குன்றி அவைகளின் கன்றுகள் குட்டையாய்ப் போய்விடுகின்றன. பயிரிடுபவர்களுக்கு இதனால் திருப்தி ஏற்படாமல், பிரயோசனகர மான எருதுகள் கிடைக்கும்படிச் செய்யும்பொருட்டு கால்நடைகளை மேன்மேலும் விருத்திசெய்து வருகிறார்கள். கால்நடைகளின் சங் கியை அதிகமாவது காரணமாகவோ, பயிர்த்தொழில் விர்த்தியாவத னால் நல்ல மேய்ச்சல் நிலத்தைப் பயிரிடுவதற்காக எடுத்துக்கொள் வது காரணமாகவோ, கால்நடைகளுக்கு வேண்டிய தீனி கிடைப் பது கஷ்டமாய்ப் போய்விடுகிறது. இதனால், பசுமாடுகள் பின்னும்

க்ஷீணித்துப் போகின்றன. கால்நடைகள் மட்டமாய்ப் போய் அவைகளின் சங்கியை அதிகப்பட்டுக்கொண்டு வரவர, நல்ல கால் நடைகளை விருத்தி செய்வதற்கான நிலைமைகள் விரைவில் பீடாய்ப் போகின்றன. ஏனென்றால், மட்டமாயிருக்கும் நூறு கால்நடை களுக்கு எவ்வளவு தீனி வேண்டியிருக்குமோ அவ்வளவு தீனியே அவைகளைக் காட்டிலும் இருமடங்கு பாரியாயிருக்கும் ஐம்பது கால் நடைகளுக்கு வேண்டியிருக்குமென்று எண்ணக்கூடாது. கால் நடைகள் மட்டமாய்க்கொண்டு வரவர, அவைகளின் பரிமாணத்துக் கேற்றபடி அவைகளுக்கு வேண்டியிருக்கும் தீனியின் அளவு அதி கப்படுகிறது. ஆகவே, இந்தியாவைப்போல் வருஷத்தின் சில பரு வங்களில் கால்நடைகளுக்குத் தீனி கிடைப்பதே அரிதாயுள்ள ஒரு தேசத்திலே மட்டமான கால்நடைகளை விசேஷமாய் வைத்திருப்பத ஞல், கால்நடைகளின் தீனி பிரமாதமாய்க் குறைந்துகொண்டே வருகிறது. இம்மாதிரி நீண்டகாலமாய் நடந்துகொண்டே வந் திருக்கிறபடியாலும், இந்தியாவிலுள்ள கால்நடைகளின் சங்கியை மிகவும் அதிகரித்துவிட்டபடியாலும், அனேக பிரதேசங்களிலுள்ள பிராணிகள் மிகவும் மட்டமானவைகளாய்விட்டிருக்கிறபடியாலும், சீர்கெட்டுப்போய்க்கொண்டுவரும் நிலைமையை மாற்றி இந்த தேசத்திலுள்ள கால்நடைகளின் தரத்தை விருத்தி பண்ணுவது இப்போது கஷ்ட சாத்தியமான வேலையாயிருக்கிறது. ஆனால், இந்தியாவில் விவசாயம் அபிவிருத்தியாவது கால்நடைகளின் தரத் தைச் சீர்படுத்துவதைப் பெரிதும் பொறுத்ததாயிருக்கிறது. இது யாருக்குமே சாதாரணமாய்த் தெரிகிறதில்லை. எப்படியாயினும் இந்த வேலையைச் செய்தாகவேண்டும்.

கால்நடைகளை இப்போது நிர்வாகம் செய்துவரும் முறையில் முக்கியாம்சமான மாறுதல்கள் செய்யப்பட்டாலொழிய, கால்நடை களின் தரம் குறைந்துகொண்டே போகக்கூடுமென்று அஞ்சவேண்டி யிருக்கிறது. சீர்திருத்துவதற்கான ஒரு முறையில் பின்னே சொல் லியிருக்கும் நான்கு விஷயங்களும் பிரதானமான அம்சங்களாகும். அவை என்னவென்றால், (a) உழவு வேலைக்கு வேண்டிய கால்நடை களின் சங்கியையைக் குறைப்பது; (b) உழவு வேலைக்கு வேண்டி யிருக்கும் கால்நடைகளின் திறமையை அதிகப்படுத்துவது; (c) பயிர் வேலைக்கு வேண்டிய எருதுகளின் சங்கியையைக் குறைப்ப தற்கு அனுகுணமாயிருக்கும் சகல விஷயங்களையும் கவனிப்பது; (d) பால் கறக்காத பசுக்களையும் சினைப் பசுக்களையும் செவ்வை யாய்ப் பார்த்துக்கொள்ளும்படி செய்வது.

கால்நடைகளைப் போஷிக்கும் மாதிரியே அவைகளை வளர்த்து வருவது சம்பந்தமாய் மிகவும் முக்கியமாகக் கவனிக்கவேண்டிய விஷயமாகும். தொழுவங்களில் வைத்து போஷிக்கும் முறை இந்தி யாவில் சிறிதும் ஆசாரத்தில் இல்லை. ஆகவே, மேய்ச்சலுக்காகச் சௌகரியங்கள் கிடைக்கும்படி செய்வது இந்தியாவில் முக்கிய மாய்க் கவனிக்கப்படவேண்டிய விஷயமாகும். ஏறக்குறைய இந்தி யாவின் ஒவ்வொரு பாகத்திலும் பொதுவான மேய்ச்சல் பூமிகளிலும் கிராமங்களுக்கு அடுத்தாற்போலுள்ள புல் உற்பத்தியாகும் சகல நிலங்களிலும் சாதாரணமாய்க் கால்நடைகளை அமிதமாய் மேய

விட்டுவைக்கிறார்கள். இந்த நிலைமை சீர்ப்படுமென்று நம்புவதற்கு இடமில்லாமல் இருக்கிறது. யாதொரு பிராணி வேலை செய்யாமலிருந்தால், அதற்குச் சாகுபடிதாரரின் கைப்பற்று நிலத்தில் தீனி கிடைக்காதபோது அது காட்டில் போய் மேய்ந்து தன் தீனியைச் சம்பாதித்துக்கொள்ளவேண்டுமென்னும் வழக்கம் ஏற்பட்டிருக்கிறது. இதனால், சாகுபடிதாரர் தன் கால்நடைகளின் க்ஷேமத்தை உத்தேசித்து விசேஷமாய்த் தியாகம் ஏதுவும் செய்ய இஷ்டமில்லாதவராயிருக்கிறார். கால்நடைகளின் நிர்வாகத்தைப் பற்றிய வரையில் பொதுநிலைமை யின்னதென்று பின்வருமாறு சுருக்கமாய்ச் சொல்லலாம். சாதாரண சாகுபடிதாரர் தம்முடைய உழவு மாடுகளுக்கும் எருமைகளுக்கும் தாம் செய்யக்கூடியதைச் செய்கிறார். அனேகமாய் அவர் அவைகளை நன்றாய்ப் பாதுகாக்கிறார். ஆனால், பருவ மழை தவறிப்போகும் காலங்களில் நல்ல சாகுபடிதாரர்களுக்கும் அவர்களுடைய கால்நடைகளில் மிகச் சிறந்த கால்நடைகளுக்குங்கூட கஷ்டங்கள் உண்டாகின்றன. இதில் பசுமாட்டின் நிலைமைதான் தௌர்ப்பாக்கியமானது. தொழுவத்தில் அதற்குத் தீனி கிடைப்பதில்லை. கிடைத்த இடத்தில் மேய்ந்து தன் வயிற்றை அது நிரப்பிக்கொள்ள வேண்டியிருக்கிறது. சிறிய கால்நடைகளுக்கும் பசுவுக்குப் போட்டியாயுள்ள எருமையின் கிடாக் கன்றுகளுக்கும் இதே கதிதான். அவை பொதுவான மேய்ச்சல் பூமிகளில் மேய்ந்தோ பயிர்களில் புகுந்து மேய்ந்தோ தம் தீனியைத் தேடிக்கொள்ள வேண்டியவைகளாயிருக்கின்றன.

ஆயினும், எங்கும் இம்மாதிரியே இருந்துவரவில்லையென்றும் கால்நடைகளைச் சிரத்தையாய்ப் பார்த்துக்கொள்ளும் இடங்களில் சிரேஷ்டமானவையென்று அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இனங்களைச் சேர்ந்த பல கால்நடைகள் இருக்கின்றனவென்றும் குறிப்பிடுவது நியாயமேயாகும். இவைகளில், பஞ்சாபிலுள்ள ஹரியானா, ஸாஹிவால் கால்நடைகளும், ஸிந்திலுள்ள தார் பார்க்கர், ஸிந்தி கால்நடைகளும், குஜராத்திலுள்ள கான்க்ரேஜ் கால்நடைகளும், கத்தியவாரில் கிர் (gir) கால்நடைகளும், சென்னை ராஜதானியிலுள்ள ஓங்கோல் கால்நடைகளும் மிகவும் பிரசித்தமானவையென்று சொல்லலாம்.

கால்நடைகளின் அபிவிருத்தி விஷயத்தில் அவைகளுக்குத் தீனி போடுவதும், அவைகளை உற்பத்திசெய்து வளர்ப்பதும் முக்கியமான இரண்டு அம்சங்களாகும். தீனி போடுவதை நாங்கள் முதலாவதாகக் கொள்ளுகிறோம். ஏனென்றால், கால்நடைகளுக்குச் செவ்வையாய்த் தீனிபோட்டு வளர்ப்பது சாத்தியமாகிற வரையில் அவைகளை உற்பத்திசெய்யும் வகையில் மேம்பட்ட அபிவிருத்தி ஏதுவும் செய்வது சாத்தியமல்ல. இந்த நிலைமையில் மிகவும் கஷ்டமான சந்தர்ப்பம் எதுவென்றால், குறித்த ஒரு காலத்தில் கால்நடைகளுக்குத் தீனி கிடைக்காமற் போவதேயாகும். தேசத்தின் எல்லாப் பாகங்களில் இல்லாவிட்டாலும் பெரும்பான்மையான பாகங்களில் தென்மேற்குப் பருவக் காற்று அடிக்கத் தொடங்குவதற்கு முற்பட்ட இரண்டு அல்லது மூன்றுமாத காலம் தீனி கிடைக்காமற் போகிறது. சென்ற நூற்றாண்டில் ஜனத்தொகை அதிகமானது

காரணமாக பயிரிடப்படாமலிருக்கும் நிலம் குறைந்துபோனதே கிராமத்தைச் சேர்ந்த நிலங்களில் கால்நடைகளை மட்டுக்கு மிஞ்சி மேயவிடுவதற்கு மிகவும் வெளிப்படையான காரணமாயிருக்கிறது. ஆகவே, மேய்ச்சல் பூமியை விஸ்தாரப்படுத்த வேண்டுமென்று அனேக சாட்சிகள் வற்புறுத்திக் கூறியதில் ஆச்சரியம் ஒன்றும் இல்லை. எந்த வகைகளில் இது விஷயமாய்ச் சௌகரியங்கள் ஏற்படுத்தக்கூடுமென்று நாங்கள் தீர ஆராய்ச்சி செய்து பார்த்ததில், இப்போதிருக்கும் மேய்ச்சல் பூமிகளைப் பெரிதும் விஸ்தாரப்படுத்துவது சாத்தியமல்லவென்றும், ஆகவே ஏறகனவே புல் உற்பத்தியாய் வரும் நிலத்தில் புல் அதிகமாய் உற்பத்தியாகும்படிச் செய்யும் மார்க்கத்தைப் பிரதானமாய்க் கவனிக்கவேண்டுமென்றும் அபிப்பிராயப்படுகிறோம். இந்த வகையில் முயற்சிகள் செய்வதற்கு எவ்வளவோ இடம் இருக்கிறது. இப்போதுள்ள மேய்ச்சல் பூமிகளில் புல் அதிகமாய் உற்பத்தியாகும்படிச் செய்யவேண்டுமானால், அடியிற்கண்ட வழிகளில் செய்யலாம் :—

(a) பொதுவான நிலத்தில் கால்நடைகளை மேய்ப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்தலாம் ; மேலும், மேய்ச்சல உரிமைகள் பெற்றிருப்பவர்களில் பெரும்பான்மையோருடைய சம்மதத்துடனும், கிராமத்தார்களில் ஒரு தொகுதியாருக்கு, உதாரணமாக யாதொரு பஞ்சாயத்துக்கு அல்லது கூட்டுறவு சங்கத்துக்கு, கொடுக்கப்படும் அதிகாரத்தைக் கொண்டும் மாறிமாறி மேய்க்கும் முறையை ஏற்படுத்தலாம் ;

(b) சில இடங்களில், பொது நிலத்தில் குறித்த ஒரு விஸ்தீர்ணத்தைக் கிராமத்தைச் சேர்ந்த கால்நடைகளின் அபிவிருத்தி சம்பந்தமான ஒரு கூட்டுறவு சங்கத்தின் உபயோகத்துக்காகப் பிரித்து வைக்கலாம் ;

(c) மலைப்பிரதேசங்கள் அதிகமாயிருக்கும் ஜில்லாக்களில் கால்நடைகளை மேய்ப்பதற்கான சௌகரியங்கள் மற்ற இடங்களில் இருப்பதைக் காட்டிலும் அதிகமாயிருக்கின்றன ; அப்படிப்பட்ட இடங்களிலே, கிராம நிலங்களின் அனுபோகதாரர்களைத் தொகுதிகளாகப் பிரித்து அவர்களுக்கு அடியிற்கண்ட திட்டங்களின்படி நாமமாத்திரமான வீதங்கள் விதித்து அடைமானம் செய்துகொடுப்பதற்காக பிரதேசங்களுக்கு எல்லைக்குறிப்பு ஏற்படுத்தப் பிரயத்தனம செய்யவேண்டும் :—

(i) பிரஸ்தாப பிரதேசத்தில் மாறிமாறி கால்நடைகளை மேய்க்கவேண்டும் ;

(ii) பிரஸ்தாப தொகுதியார்க்குச் சொந்தமாயிராத கால்நடைகளை விலக்கிவிடவேண்டும் ;

(iii) அந்தப் பிரதேசத்தின் ஒரு பாகத்தை வெயில்காலத்தில் உபயோகித்துக்கொள்ளும்பொருட்டு புல் அறுப்பதற்காகப் பிரத்தியேகப்படுத்திவைக்கவேண்டும்.

இயற்கையாயுள்ள மேய்ச்சல் பூமிகளில் தண்ணீர் கிடைக்காதது காரணமாக அவைகளை உபயோகிப்பது சாத்தியமாயிராத இடங்களிலே, தண்ணீர் கிடைக்கும்படிச் செய்வது சாத்தியமாவென்று

பரிசோதித்துப் பார்க்கவேண்டும். இந்தியாவின் சில பாகங்களிலே, தண்ணீர் கிடைக்காதது காரணமாக பூர்த்தியாய் உபயோகித்துக்கொள்ளப்படாமலிருக்கும் மேய்ச்சல் பிரதேசங்கள் ஏராளமாய் இருக்கக்கூடும்.

இயற்கையாய்க் கிடைக்கும் மேய்சசலுக்கு உடன்சேர்க்கையாகவோ அதற்குப் பர்த்தியாகவோ, உலர்ந்த புல்லை அறுத்துச் சேர்த்துவைத்துக்கொள்வது முக்கியமாகும். பசும்புல் முதலிய கால்நடைகளின் தீனியை உலர்ந்துபோகாதபடி பாதுகாத்து வைப்பதும் வெகுசாய்ச் சாத்தியமாயிருக்கிறது. ஆனால், அந்தப்படி பாதுகாத்துவைப்பதில் அனேக கஷ்டங்கள் இருப்பதுமல்லாமல், பயிரிடுபவர்கள் அந்த முறையை இதுவரையில் அனுசரித்ததுமில்லை. இதுவிஷயமாக விசேஷமாய்ப் பிரசாரவேலை செய்வது அவசியமாயிருக்கிறது. கால்நடைகளின் தீனி சம்பந்தமான நிலைமையை இன்னும் அனேக வகைகளில் சீர்திருத்தலாம். வைக்கோல் முதலியவைகளை வெட்டும் கருவியை உபயோகிப்பதும், வைக்கோல் பின்னும் உருசியாய் இருக்கும்படி செய்யும்பொருட்டு அதனுடன் விலை சரசமாயுள்ள மாவையும் சம்பார வஸ்துக்களையும் சேர்ப்பதும், வைக்கோலிலிருந்து பூர்த்தியான பிரயோசனத்தை அடையும் பொருட்டுச் சரியான காலத்தில் அறுவடை செய்வதும், கால்நடைகளின் தீனிக்கு வேண்டிய பயிர்வகைகளைச் செய்யும்படி உற்சாகப்படுத்துவதும் இதுசம்பந்தமாய்ப் பின்னும் பரிசோதனை நடத்தி ஆராய்ச்சி செய்வதற்கேற்ற சில துறைகளாகும். ஈஜிப்ட் தேசத்து க்ளோவர் என்னும் புல் வகையின் விதையை அதிக பணச்செலவில்லாமல் இந்தியாவில் விசேஷமாய் உற்பத்தி செய்யக்கூடுமானால், அந்தப் புல்வகையை உற்பத்திசெய்வது பெரிதும் சாத்தியமாயிருக்குமென்று தெரியவருகிறது. கவர்ன்மென்ட் ஜலாதாரங்களிலிருந்து நீர் பாய்ச்சிக்கொள்வதற்கான கட்டணங்களை வஜா செய்து கொடுத்தோ குறைந்த விதங்களின்படி கட்டணங்கள் பெற்றுக்கொள்ள ஒப்புக்கொண்டோ பயறுவகைகளைச் சாகுபடிசெய்வதைச் சகல வகைகளிலும் ஆதரிக்கவேண்டும்.

ஜாக்கிரதையாய் உற்பத்திசெய்து கால்நடைகளை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில், இப்போது கிடைக்கக்கூடிய சிறந்த கால்நடைகளின் சுத்தமான மாதிரிகளையும் சீர்திருத்தமான மாதிரிகளையும் ஏற்படுத்துவதே நோக்கமாயிருக்கவேண்டும் "இருவகைக் காரியங்களுக்கு," அதாவது, வண்டி முதலியவைகளை இழுக்கும் காரியங்களுக்கும் பால் நெய் உற்பத்தி ஆகிய இந்தக் காரியங்களுக்கும் தகுதியான கால்நடைகளை உற்பத்திசெய்யப் பிரயத்தனப்பட்டு மேலேகண்ட அபிவிருத்தி வேலைக்கு ஹானி உண்டாக்கக் கூடாது. வண்டி முதலியவைகளை இழுப்பதற்கான நல்ல கால்நடைகளுக்கு அவசியமாய் இருக்கவேண்டிய லட்சணங்கள் அவைகளுக்கு இருக்கும்படி செய்வதற்கு முற்றிலும் பொருத்தமாயிருக்கும் அளவுக்கு மாத்திரமே பசுமாடுகள் முதலியவை பால்கொடுக்கும் குணத்தை அதிகப்படுத்தவேண்டுமென்றும், இதுவே வண்டி முதலியவைகளை இழுப்பதற்கான கால்நடைகளை உற்பத்திசெய்யும் விஷயத்தில் அனுசரிக்கவேண்டிய பொது விதியாயிருக்கவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

கால்நடைகளை அபிவிருத்திசெய்யும் விஷயத்தைக் கவர்ன்மென்ட் இலாகாக்கள் இப்போது சிரத்தையுடன் ஆரம்பித்திருந்தபோதிலும், மொத்தத்தில் வேண்டியிருக்கும் அளவுக்கு இளவெருதுகளைச் சவதரிக்கும் விஷயத்தில் கவர்ன்மென்ட் கால்நடைப் பண்ணைகளில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தி மிகக்குறைவேயாகும். அப்படிப்பட்ட எருதுகளை ஜில்லாக்களுக்குப் பிரித்துக்கொடுப்பது விஷயமாய் ஒழுங்கேற்படுத்துவது சம்பந்தமான பொதுக் கோட்பாடாக, ஐக்கிய மாகாணத்தில அனுசரிக்கப்பட்டுவரும் முறையை அனுசரிக்கவேண்டுமென்று வேறொரு இடத்தில் நாங்கள் சிபாரிசு செய்திருக்கிறோம். அந்த முறை என்னவென்றால், தேர்ந்தெடுக்கப்பட்ட சில ஜில்லாக்களுக்குமட்டுமே பொலிஎருதுகளை அனுப்பி, பசுக்களையும் அவைகளின் கன்றுகளையும் அனுப்பப்பட்ட எருதுகளையும் கிரமமாய்ப் பார்வையிட்டு வருவதேயாகும். ஆகவே, தேர்ந்தெடுக்கப்பட்ட விஸ்தீர்ணங்களில் கால்நடைகளை உற்பத்திசெய்வது சம்பந்தமான வேலைகளைத் தீவிரமாய் நடத்தவேண்டுமென்று 1923-ம் வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட பம்பாய் கால்நடைக் கமிட்டியார் செய்திருக்கும் சிபாரிசை நாங்கள் ஆமோதிக்கிறோம். கவர்ன்மென்ட் பண்ணைகளிலிருந்து எருதுகளைப் பொறுக்கியெடுத்து அனுப்புவதனால் கவனிக்கத்தக்க அளவுக்கு அபிவிருத்தி ஏற்படவேண்டுமானால், விஸ்தீர்ணங்களைத் தெரிந்தெடுப்பதும் கால்நடைகளைப் பார்வையிடுவதும் அத்தியாவசியமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

பட்டணங்களில் பால் உபயோகிக்கிறவர்களுக்காக பால் உற்பத்திசெய்யும் விஷயத்தில் சிக்கலான அனேக பிரசினைகள் ஏற்படுகின்றன. பயிரிடுபவர் பாலையும் அதிலிருந்து கிடைக்கும் பொருள்களையும் உபயோகிக்கிறாரென்பதில் சந்தேகமில்லை. ஆனால், இவைகளுக்காக அவர் எருமைகளையே பெரிதும் நம்பியிருக்கிறார். பசுவையோ அவர் முக்கியமாக தம்முடைய எருதின் தாயாக பாவிக்கிறார். பால் கறப்பதற்து அதற்குள்ள சக்தியைப்பற்றி அவர் அவ்வளவு முக்கியமாய்க் கவனிப்பதில்லை. பட்டணங்களுக்குப் பால் சர்ப்பரா செய்வதற்காக சித்திகரமாய் ஏற்பாடு செய்யவேண்டுமானால், கால்நடைகளின் தீனி ஏராளமாய்க் கிடைக்கக்கூடிய அல்லது சுலபமாய்ப் பயிரிடப்படக்கூடியப் பிரதேசமும், பாலைக் கொண்டு போவதற்குப் போதுமான ஏற்பாடுகளும், தகுந்த மாதிரியான பசுக்களும் முக்கியமான அம்சங்களாகும். பாற்சாலையின் காரியங்களுக்காக வைத்திருக்கும் பசுவானது பால் கறக்கும் கால அளவில் சராசரியில் 5,000 பவுண்ட் பால் கொடுப்பதாயிருக்கவேண்டும். மேலும், சராசரியில் 8,000 பவுண்ட் பால் கொடுக்கக்கூடிய பசுக்களைச் சம்பாதிப்பதே நோக்கமாயிருக்கவேண்டும். சங்கர ஜாதிப் பசுக்களை உற்பத்தி செய்வதைவிட உள்நாட்டில் உற்பத்தியான பசுவினங்களைப் பொறுக்கியெடுத்து அபிவிருத்தி செய்வதே விவசாய இலாகாக்கள் அபாயமின்றி அனுசரிக்கக்கூடிய முறையாகும். மேலும், இம்முறையையே எருமைகளின் விஷயத்திலும் அனுசரிக்கவேண்டும். பட்டணங்களில் பால் உபயோகிப்பவர்களுக்கு இப்போது செய்யப்படும் பால் சர்ப்பரா மிகவும் அதிருப்திகரமாயிருக்கிறது. பெரிய நகரங்களிலுள்ள மியுனிஸிபல் சபைகள் பால் சர்ப்பரா செய்வதற்காகக் கூட்டுறவு சங்கங்களை ஏற்படுத்துவதுடன்கூட, பெரிய

பால் சர்ப்பரா பண்ணைகளை ஸ்தாபிக்கும் விஷயத்தையும் அபி விருத்திசெய்து, விசேஷ மூலதனம் படைத்தவர்களும் தொழில் நடத்தும் சக்திவாய்ந்தவர்களும் பெருத்த அளவில் பால் உற்பத்தி செய்யும் வேலையை ஏற்றுக்கொள்ளும்படிச் செய்வதற்கான வழி வகைகளைச் செய்யவேண்டும்.

கால்நடை சம்பந்தமான அபிவிருத்தி வேலையின் மேல்விசாரணையைச் சாதாரணமாய் விவசாய இலாகாக்களிடம் ஒப்புவிக்கவேண்டும். ஆனால், பஞ்சாபிலுள்ள ஹிஸ்ஸார் பண்ணையானது - கால்நடைகளை உற்பத்திசெய்யும் விஷயத்தில் விசேஷ யோக்கியதாம்சங்கள் பெற்றுத் தொடர்ச்சியாய்க் கால்நடை வைத்திய உத்தியோகஸ்தர்களாயிருந்து வருபவர்களின் மேல்விசாரணையின்கீழ் இப்போது இருந்துவருகிறது. அந்த ஏற்பாட்டில் எவ்வித மாறுதலும் செய்யும்படி நாங்கள் சிபாரிசு செய்யவில்லை. கால்நடை வைத்திய உத்தியோகஸ்தர்கள் கால்நடை சம்பந்தமான அபிவிருத்தி வேலையில் தங்களுக்கு விசேஷ யோக்கியதை இருப்பதாகக் காட்டிக்கொள்ளும் பட்சத்தில், அவர்களைக் கால்நடைப் பண்ணைகளில் வேலைபார்க்கும்படி ஏற்படுத்தவேண்டும். ஒவ்வொரு பெரிய மாகாணத்திலும் கால முழுவதும் இதே வேலை செய்யும் கால்நடை நிபுணர் ஒருவரை ஏற்படுத்தவேண்டும்.

பிராணிகளின் நிர்வாகத்துக்கும் பாற்சாலை வேலைக்கும் சம்பந்தப்பட்ட இம்பீரியல் இன்ஸ்டிட்யூட் என்னும் ஸ்தாபனம் ஒன்று இப்போது பங்களூரில் இருக்கிறது இது பிராணிகளின் போஷணையைப்பற்றிய பிரிவென்றும் பாற்சாலை வேலைக்கும் கால்நடைகளை உற்பத்திசெய்து வளர்ப்பதற்குமான பிரிவென்றும் இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருக்கிறது. முந்திய பிரிவானது சரீரதர்ம சாஸ்திர சம்பந்தமான ரஸாயன நிபுணரின் கீழும், பிந்திய பிரிவானது இம்பீரியல் டேய்ரி எக்ஸ்பெர்ட் என்னும் பாற்சாலை நிபுணரின் கீழும் இருக்கிறது. பங்களூரிலுள்ள பண்ணை மாத்திரமேயல்லாமல், வெல்லிங்க்டன், கார்னல் என்னும் இடங்களிலுள்ள பண்ணைகளும், குஜராத்திலிருக்கும் ஆனந்த் என்னும் இடத்திலுள்ள பாலேடு தயார்செய்யும் சாலையும் பின்னே சொல்லப்பட்ட பிரிவுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. பிராணிகளின் போஷணையைப்பற்றிய பிரிவின் சிப்பந்தியை அதிகப்படுத்தவேண்டுமென்றும், பிராணிகளின் போஷணை சம்பந்தமான பிரசினைகளை ஆராய்ச்சி செய்வதற்காக ஒரு ஆராய்ச்சி வேலை ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கான திட்டம் ஒன்றைத் தயார்செய்யவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த ஸ்தாபனத்தின் சிப்பந்திகளும் மனிதர்களின் போஷணை விஷயமான பிரசினைகள் சம்பந்தமாய் வேலை செய்பவர்களும் நெருங்கிக் கலந்து வேலை செய்யவேண்டும். விவசாயமானது இப்போது மாகாண விஷயமாய் ஏற்பட்டிருப்பதை உத்தேசித்து, மேற்படி ஸ்தாபனத்தைச் சேர்ந்த பாற்சாலை வேலைப் பிரிவையாகிலும், அதைச் சேர்ந்த கால்நடைகளை உற்பத்திசெய்து வளர்ப்பதற்கான ஸ்தானங்களையாகிலும் நிரந்தரமாய் வைத்திருக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்யவில்லை. ஆனால், கால்நடைகளை உற்பத்திசெய்து வளர்ப்பதற்காக கார்னலில் ஏற்படுத்தியிருக்கும் ஸ்தானத்தை மாத்திரம் எடுக்காமல் வைத்திருக்கவேண்

டும். ஏனென்றால், மத்திய ஆராய்ச்சி வேலை சம்பந்தமாய்க் கால் நடைகளை உற்பத்திசெய்து வளர்ப்பதைப்பற்றிய பரீட்சைகள் எவையேனும் செய்துபார்க்க வேண்டுமானால், அப்படிப்பட்ட பரீட்சைகள் செய்துபார்ப்பதற்குரிய பிரதான ஸ்தானமாய் அமைவதற்கு அஃ்தே இடம் மிகவும் பொருத்தமானதாயிருக்கிறது. ஒவ்வொரு மாகாணத்திலும் கால்நடை நிபுணர் ஒருவர் இப்போது இருந்து வருகிறார் அல்லது கூடிய சீக்கிரத்தில் ஏற்படுவார். கால்நடைகளை உற்பத்திசெய்து வளர்ப்பதைப்பற்றிய பிரசினைகள் பெரும்பாலும் அந்தந்த இடத்துக்குச் சம்பந்தப்பட்ட பிரசினைகளாகும். ஆகவே, கால்நடைகளை உற்பத்திசெய்து வளர்ப்பதாகிய சாதாரண வேலையை மாகாணங்களே ஏற்றுக்கொள்வது சகஜமும் தகுதியுமாகும். மேலும், தங்களுடைய மாணவர்களுக்குப் பாற்சாலை வேலை சம்பந்தமான போதனை செய்ய ஏற்பாடு செய்வது மாகாணக் கலா சாலைகளின் கடமையாகுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். பாற்சாலை வேலை சம்பந்தமாய் ஆராய்ச்சி வேலை நடத்துவது அவசியமாயிருந்து, அது இந்தியா முழுவதுக்கும் பிரயோசனப்படக்கூடிய தன்மையுடையதாயிருந்தால், அப்படிப்பட்ட ஆராய்ச்சி வேலையை ஆனந்த் என்னும் இடத்திலுள்ள பாலேடு தயார்செய்யும் சாலையில் நடத்துவதைக்காட்டிலும், பூஸாவிலோ, ரஸாயன துறையில் உதவி சுலபமாய்க் கிடைக்கக்கூடிய சாஸ்திர சம்பந்தமான முஸ்திபுகள் அமைக்கப்பட்டிருக்கும் வேறே யாதொரு இடத்திலோ நடத்துவது அதிக பிரயோசனகரமாயிருக்கும். இப்போதுள்ள இம்பீரியல் டேய்ரி எக்ஸ்பெர்ட் என்னும் நிபுணர் உத்தியோகத்திலிருந்து விலகிப்போவதற்குமுன் இந்தப் பிரேரேபனைகளை அமுலுக்குக் கொண்டு வரவேண்டுமென்று நாங்கள் சி-ாரிசு செய்யவில்லை. மேற்சொல்லிய மூன்று பண்ணைகளையும் ஆனந்திலுள்ள பாலேடு தயார்செய்யும் சாலையையும், போஷணை சம்பந்தமான பெரிய ஸ்தாபனத்தை ஏற்படுத்துகிறவரையிலும் பூஸாவில் செய்ய வேண்டுமென்று சொல்லியிருக்கும் மாறுதல்கள் செய்யப்படுகிறவரையிலும், எடுக்காமல் வைத்திருக்கவேண்டும்.

ஏற்கனவே குறிப்பிட்டிருக்கிறபடி, விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி வேலைச்சபையின் மெம்பர்களில் ஒருவர் கால்நடை நிர்வாகம் செய்துவருபவர்களின் பிரதிநிதியாயிருப்பார். அவர் - கால்நடைகளை உற்பத்திசெய்து வளர்க்கும் துறையிலாவது, பிராணிகளின் போஷணை சம்பந்தமான துறையிலாவது கால்நடைகளின் வைத்திய சாஸ்திரத்திலாவது நிபுணத்துவம் வாய்ந்தவராயிருக்க வேண்டும். அவர் இந்த மூன்று துறைகளிலும் சமமான யோக்கியதையுள்ளவரா யிருப்பாரென்று எதிர்பார்க்க முடியாதாகையால், விசேஷ பிரசினைகளின் விஷயத்தில் பிரவர்த்திப்பதற்காக அவருடைய தலைமையின்கீழ் அதததற்கென்று நிபுணர்கள் அடங்கிய கமிட்டிகளை அமைப்பதற்காக ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

## 6. காடுகள்

காடுகள் விவசாயத்துக்குச் சகாயகரமானவையென்று அடிக்கடி சொல்வதுண்டு. விவசாயிகளின் தேவைகளுக்கு அவை அந்தப்படி சம்பந்தபட்டமட்டில், நாங்கள் அவைகளைப்பற்றி விவகரிக்கிறோம்.

பிரதான ரிபோர்ட்டின் 8-ம் அத்தியாயம்.

காடுகள் விவசாயிகளின் கால்நடைகளுக்கு வேண்டிய தீனியையும் அவர்களுடைய வீட்டு உபயோகத்துக்கு வேண்டிய விறகையும் வெட்டுமரத்தையும் கொடுக்கின்றன. கரைந்து போகக்கூடிய நிலத்தைக் காப்பாற்றும் விஷயத்தில் காடுகள் செய்யும் உதவியானது விவசாய சம்பந்தமாகவும் கவனிக்கத்தக்கதாயிருக்கிறது.

பாரெஸ்ட் கோட் என்னும் சட்டத்தின்படி, சில கட்டணங்களைச் செலுத்தியாவது கட்டணங்கள் இல்லாமல் இலவசமாகவாவது காடுகளில் கால்நடைகளை மேய்ப்பதற்கு அனுமதி கொடுக்கபபடுகிறது. அனேக இடங்களில் மேய்ச்சலுக்குப் பதிலாகப் புல் அறுப்பதை வைத்துக்கொண்டால், அது காடுகளின் அபிவிருத்திக்கு அநுகூலமாயிருக்குமென்று நாங்கள் எண்ணுகிறோம். ஆனால், கால்நடைகளைக் காடுகளில் மேய்க்கும் இப்போதைய வழக்கமானது இன்னும் வெகுகாலம் வரையில் காடுகளின் பொருளாதாரத்தில் ஒரு முக்கியமான அம்சமாயிருந்துவரும். ஆகவே, காடுகளைச் சரியாக விருத்தி செய்வதற்கும், விரும்பத்தக்க புல் வர்க்கங்களை அழிந்துபோகாமல் காப்பாற்றுவதற்கும் கெடுதி ஏற்படாமல் காடுகளில் தீவிரமான மேய்ச்சலுக்கு இடங்கொடுக்கும் விஷயத்தைக் கூடிய சீக்கிரத்தில் தீர்மானிப்பது உசிதமாயிருக்குமென்று எங்களுக்குத் தோற்றுகிறது.

கால்நடைகளுக்கு வெட்டிப்போடும் தழை முதலிய தீனியைப் பற்றிய பிரசினையானது தற்போது க்ஷாமம் அல்லது பஞ்சம் நேரிடும் காலங்களில்தான் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய தாயிருக்கிறது. ஆனால், தேசத்தில் கால்நடைகளின் அபிவிருத்திக்கேற்றபடி கால்நடைகளைத் தொழுவத்தில் கட்டிவைத்து அவைகளுக்குத் தீனி போடும் வழக்கம் விருத்தியடையக்கூடும். அப்போது தழை முதலியவைகளை வெட்டிப்போட்டுக் கால்நடைகளுககுத் தீனி கொடுக்கும் விஷயம் அதிக முக்கியமானதாய் ஏற்படும். ஆகவே, காட்டுப்பிரதேசங்களிலிருந்து கால்நாடைகளுக்குத் தீனி சர்ப்பரா செய்வது சாத்தியமா வென்பதைக் காட்டு இலாகாதாரும் விவசாய இலாகாதாரும் ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். காட்டில் விளையும் புல் வர்க்கங்களை விருத்திசெய்வதற்காகவும் கால்நடைகளை மேய்ப்பதைக்காட்டிலும் சிலாக்கியமாகப் புல் வெட்டும் வழக்கத்தை விசேஷமாய அனுசரிக்கும்படி செய்வதற்காகவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். இந்த சந்தர்ப்பத்தில், இடம்விட்டு இடம் கொண்டுபோகக்கூடிய கால்நடைத் தீனிக்கு வாங்கும் ரெயில்வே கட்டண விதங்களைப்பற்றி முக்கியமாய்க் கவனிக்க வேண்டியிருக்கிறது. மேலும், லாபம் சம்பாதிக்கும் ஸ்தாபனங்களாகத் தங்களுடைய நிலைமைக்குப் பொருத்தமாய் ரெயில்வே பரிபாலகர்கள் கால்நடைத் தீனியை இடம்விட்டு இடம் கொண்டுபோவதற்கு மிகவும் குறைந்த விதங்களை வாங்கச் சம்மதிக்கவேண்டும்.

விவசாயி சம்பந்தப்பட்டமட்டில் அடுத்தபடி மிகவும் முக்கியமான விஷயம் என்னவென்றால், வீட்டுக்காரியங்களுக்காக விறகும் வெட்டுமரமும் ஏற்படுத்திக் கொடுப்பதேயாகும். இந்தியாவின் அனேக பாகங்களில் பசுஞ் சாணத்தைக்கொண்டு செய்த வறட்டி

களை எரிக்கும் வழக்கம் மிகச் சாதாரணமாயிருப்பது எல்லாருக்கும் தெரிந்த விஷயமே. தற்போது மிகப் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு நிச்சயமாய்க் கிடைக்கக்கூடிய எரிகரும்பு வறட்டிதானென்று இந்த வழக்கத்துக்கு ஆதாரமாகச் சொல்லக்கூடும். ஆகவே, இவ்வழக்கத்தைக் கண்டிப்பதற்கு அல்லது நிறுத்துவதற்குமுன், வறட்டிக்குப் பதிலாக வேறே வகையான எரிகரும்பு கிடைக்கும்படிச் செய்வது சாத்தியமா என்பதைப்பற்றி ஜாக்கிரதையாய்ப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும். விறகு, அடுப்பு கரி, நிலக்கரி ஆகிய இவை வறட்டிக்குப் பதிலாக உபயோகிக்கக் கூடிய வஸ்துக்கள். ஆனால், தமக்கு எருவாக உபயோகப்படக்கூடிய சாணத்தை எரிப்பதைவிட கெடு வஸ்துக்களில் ஏதேனும் ஒன்றை உபயோகிப்பது தமக்கு மலிவாயிருக்குமென்று விவசாயிக்கு நம்பிக்கை ஏற்படும்படியாகக் காட்டவேண்டும். கட்டை, அடுப்புக்கரி அல்லது நிலக்கரியின் விலையையும் உபயோகத்தையும், சாணியை எரித்துவிடுவதனால் விவசாய உற்பத்திக்கு ஏற்படக்கூடிய நஷ்டத்தோடு ஒப்பிட்டுப் பரிசோதித்துப் பார்ப்பது அவசரமாய்ச் செய்யவேண்டிய காரியமாகும். இந்தப் பிரசினையிலுங்கூட ரெயில்வே கம்பெனியார் சாமான்களுக்கு வாங்கும் கட்டண வீதத்தைப்பற்றிய விஷயம் வருகிறது. இப்போது அனுசரிக்கபபட்டுவரும் முறையை மாற்றுவதற்குப் பரம்பரையாக ஏற்பட்டிருக்கும் வழக்கம் பெருத்த தடையாயிருக்குமென்பதும் எங்களுக்குத் தெரியும். துரபிமானத்தை ஒழிப்பதும், வறட்டியைப்போலவே சரசமாய்க் கிடைக்கக்கூடியதும் சித்திகரமாய் உபயோகிக்கக்கூடியதுமான ஒரு வஸ்துவை அதற்குப் பதிலாய் ஏற்படுத்திக்கொடுப்பதும் முக்கியமாய்ச் செய்யவேண்டிய காரியங்களாகும். விறகுகள் அதிகமாய்க் கிடைக்கும்படி செய்வதற்காக காடுகளை விர்த்திசெய்வது சாத்தியமாவென்னும் விஷயத்தையும் நன்றாய்ப் பரிசோதித்துப் பார்க்கவேண்டும்.

விவசாயிகளுக்கு, அதிலும் முக்கியமாகக் காடுகளின் அக்கம்பக்கத்தில் வசிப்பவர்களுக்கு, காடுகள் சம்பந்தமான கைத்தொழில்களின் அபிவிருத்தி விஷயம் மிகவும் முக்கியமானதென்று நாங்கள் எண்ணுகிறோம். காடுகள் சம்பந்தமான கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் வேலையை நிஷ்கரிஷையாய் ஒரு உத்தியோகஸ்தரின் பொறுப்பில் விட்டுவைக்கும்பொருட்டு, காடுகளின் உற்பத்திப் பொருள்களை உபயோகித்துகொள்வது சம்பந்தமாய் ஆலோசனை சொல்லக்கூடிய உத்தியோகஸ்தர் ஒருவரை ஒவ்வொரு மாகாணத்தும் நியமிக்கவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

தற்போது இடம்விட்டு இடம் மாற்றிப் பயிர்செய்யும் வழக்கத்தினால் தேசத்தின் சில பாகங்களிலிருக்கும் குன்றுகளின் மேலுள்ள காடுகளுக்கு மிகுந்த சேதம் உண்டாகிறது. மத்திய மாகாணத்தில் இடம்விட்டு இடம் மாற்றிப் பயிர்செய்யும் வழக்கத்தை நாளாவர்த்தியில் நிறுத்துவதற்காக அனுசரிக்கப்பட்டிருக்கும் முறைகளை, மற்ற மாகாணங்களில் இவ்விஷயத்தில் ஈடுபட்டிருக்கும் உத்தியோகஸ்தர்கள் ஆராய்ச்சிசெய்வது பிரயோசனமாயிருக்குமென்று தோற்றுகிறது. காடுகள் விசேஷமாய்ச் சீர்கெட்டுப்போயிருந்தால், மழை அதிகமாகப் பெய்யும் பிரதேசங்களில், அதாவது 60 அங்குலத்துக்கு

மேல்மழைபெய்யும் இடங்களில், முக்கியமாய்ச் செய்யவேண்டிய பரிகாரம் என்னவென்ருல், அந்தக்காடுகள் இயற்கையாய்மறுபடியும் சீர்ப்படுவதற்கு இடம் உண்டாகும்படியாக விவசாயிகளாலும் அவர்களுடைய ஆடுமாடுகளாலும் சேதம் உண்டாகாதபடி பாதுகாப்பு செய்வதேயாகும். சொற்ப மழை பெய்யும் பிரதேசங்களில் சாதாரணமாய்த் திருப்திகரமாகச் செய்யக்கூடிய பரிகாரம் ஏதுவுமில்லை. ஆனுல், ஜாக்கிரதையாய்த் தெரிந்தெடுக்கப்பட்ட பிரதேசங்களில் லேஷ காடுகளைச் செயற்கையாகச் சீர்ப்படுத்துவது சாத்தியமாயிருக்கலாம். ஆயினும் அதற்கு அதிக செலவு பிடிக்கும்.

வெட்டு மரத்துக்கு வேண்டிய மரங்கள் பயிராவதற்காவது விறகுக்கு வேண்டிய மரங்கள் வைத்துப் பயிர் செய்வதற்காவது மிகவும் தகுதியாயிருக்கும் பிரதேசங்களென்றும், அல்லது சீதோஷ்ண நிலைமை காரணமாகவோ இயற்கையமைப்பு காரணமாகவோ பாதுகாப்பது விரும்பத்தக்கதாயிருக்கும் பிரதேசங்களென்றும், கால் நடைத்தீனியாக உதவும் செடிகள் முதலியவை வளரும் இடங்களாகவோ மேய்ச்சல் பூமியாகவோ விருத்திசெய்யப்படுவதற்கு மிகவும் தகுதியாயிருக்கும் பிரதேசங்களென்றும், சாதாரணமாய்ப் பயிர்செய்வதற்குக் கொடுத்துவிடப்படவேண்டிய பிரதேசங்களென்றும் காட்டுப் பிரதேசங்களை மறுபடியும் பிரிக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிருேம்.

கிராமக் காடுகளைச் சித்திகரமாய் ஏற்படுத்துவதற்கு மிகத் தகுதியான முறை ஒன்று இருக்கிறது. அது என்னவென்ருல், இப்போது காட்டிலாகாவின் மேல்விசாரணைக்குட்பட்டிருக்கும் ஏறக்குறைய மரங்களடர்ந்த சில பிரதேசங்களைக் கிராமத்தாரின் நிர்வாகத்தில் விட்டுவிடுவதேயாகும். தங்களுடைய கிராமங்களுக்கு அருகாமையிலுள்ள காடுகளை ஜனங்களுக்காக ஜனங்களே நிர்வாகம் செய்துவருவதில் விரும்பத்தக்க அம்சங்கள் பல இருக்கின்றன. ஆகவே, அது சித்திகரமாய் நடக்கும்படி பார்த்துக்கொள்வதற்குச் சகல முயற்சிகளும் செய்யவேண்டும். ஆகையால், ஒவ்வொரு மாகாணத்திலும் காட்டிலாகாக்களுக்குள் இரண்டு பிரிவுகளை ஏற்படுத்துவது கவர்ன்மெண்டாரின் நோக்கமாயிருக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிருேம். இவற்றுள் ஒரு பிரிவுலுள்ள உத்தியோகஸ்தர்கள் - சீதோஷ்ண நிலைமை காரணமாகவாவது இயற்கையமைப்பு காரணமாகவாவது எந்தக் காடுகளைப் பாதுகாப்பது விரும்பத்தக்கதாயிருக்கிறதோ அந்தக் காடுகளின் விசாரணையையும், வியாபார ரீதியாய் நிர்வகிக்கப்படவேண்டிய காடுகளின் அதாவது வெட்டு மரத்தையும் இதர காட்டு உற்பத்திப் பொருள்களையும் விற்பதனுல் நேரே லாபம் அடையும் நோக்கத்துடன் நிர்வகிக்கப்படும் காடுகளின் விசாரணையையும் வகிப்பதற்கு உத்தரவாதிகளாயிருக்கவேண்டும். மற்ற பிரிவானது - இப்போது முக்கியமாய் மேய்ச்சலுக்காக உபயோகிக்கப்படுவதும் பெரும்பாலும் தரம் பிரிக்கப்பட்டிராத காடுகளுடன் சேர்க்கப்பட்டிருப்பதுமான சில்லறைக் காடுகள், விறகுக்கு வேண்டிய மரங்கள் வைத்துப் பயிராக்கும் இடங்கள், கிராமக் காட்டுப் பிரதேசங்கள், தரிசு நிலம் ஆகிய இவைகளின் விசாரணை வகிக்கவேண்டும், இந்த இரண்டாவது பிரிவைச் சேர்ந்த உத்தியோகஸ்

தர்கள் மேலேகண்ட பிரதேசங்களின் இயற்கையான மூலாதாரங்களைப் பாதுகாப்பதுடன்கூட, அவைகளை விருத்தி செய்யும் பொறுப்பையும் அவர்களுக்கு நிஷ்கரிஷையாய் ஏற்படுத்தவேண்டும். மேலும், காட்டு மரங்களைப் பயிராக்கும் விஷயத்திலும் மேய்ச்சல் பிரதேசங்களை விருத்தி செய்யும் விஷயத்திலும் பரீட்சைகள் செய்துபார்க்கும்படி அவர்களைத் தூண்டவேண்டும். சில்லறைக் காடுகளடங்கிய பிரிவானது காட்டிலாகாவின் கீழேயே இன்னும் இருந்துவரவேண்டுமா அல்லது அதை ரெவினியு டிபார்ட்மென்டின்கீழ்க் கொண்டுவரவேண்டுமா என்பது அவ்வவ்விடத்திய நிலைமைகளுக்கேற்றபடி முடிவு செய்யப்படவேண்டிய விஷயமாகும். இரண்டாவதாகச் சொன்ன முறையை அனுசரிக்கிற பட்சத்திலே, காடுகளை நிர்வாகம் செய்வதைப்பற்றிய சாஸ்திரத்தில், அதிலும் முக்கியமாகக் காட்டு மரங்களைப் பயிராக்கும் விஷயத்தில், ஞானமுள்ளவர்களாயிருக்கும் உத்தியோகஸ்தர்களின் ஆலோசனையும் உதவியும் ரெவினியு டிபார்ட்மென்டுக்குக் கிடைக்கவேண்டும்.

காட்டு இலாகாவுக்கும் விவசாய இலாகாவுக்கும் நெருங்கிய சம்பந்தத்தை வளர்ப்பதற்கு, நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான உத்தியோகஸ்தர்களின் விஷயத்தில் செய்வதைப் போலவே, புதிதாய் அமர்த்திக்கொள்ளப்படும் காட்டிலாகாவைச் சேர்ந்த சகல உத்தியோகஸ்தர்களுக்காகவும் விவசாயக் கலாசாலைகளில் பாடக்கிரமங்களை ஏற்படுத்தி அங்கே அவர்களைச் சிறிது காலம் பயிற்சி செய்விப்பது பிரயோசனகரமாயிருக்கும். மேலும், யாதொரு காட்டிலாகா உத்தியோகஸ்தரைப் புதிய சில்லறைக் காடுகளின் பிரிவில் வேலை பார்க்கும்படி நியமிப்பதற்குமுன், அவரை மாகாண விவசாய இலாகாக்களின் தலைமை ஸ்தாபனங்களில் மூன்று மாதங்களுக்குக் குறையாமல் இருந்து வேலை செய்யும்படி செய்வது அவசியமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தப்படி செய்வதன் நோக்கம் என்னவென்றால், அவர் நிர்வாகம் செய்யப்போகும் காடுகளுக்குச் சமீபத்திலும் பொதுவாகப் பிரஸ்தாப மாகாணத்திலுமுள்ள விவசாயிகளின் தேவைகளைப்பற்றி விவசாய இலாகாவின் அபிப்பிராயம் இன்னதென்பதை அவர் நன்றாய்த் தெரிந்துகொள்ளும்படி செய்வதேயாகும்.

### 7. கால்நடைகளுக்குக் காணும் வியாதிகளும் அவைகளைப் பரவவொட்டாமல் தடுப்பதும்.

பிரதான ரிபோர்ட்டின் 9-ம் அத்தியாயம்.

விவசாயி வேலை செய்வதற்கு வேண்டிய மூலதனமானது பெரும்பாலும் அவருடைய கால்நடைகளேயாகும். ஆகவே, அவருடைய கால்நடைகள் வியாதி கண்டு செத்துப்போகிற பட்சத்திலே அவருக்கு மிகுந்த கஷ்டம் உண்டாகிறது. இவ்விஷயமாய்ப் பதிவு செய்யப்பட்டிருக்கும் கணக்குகள் அறைகுறையானவையென்பது யாவராலும் ஒப்புக்கொள்ளப்பட்ட விஷயமே. ஆயினும், அந்தக் கணக்குகளைப் பார்த்தால் வருஷவாரியில் கால்நடைகள் மிகவும் அதிகமாய்ச் செத்துப்போகின்றனவென்றும், மற்ற எல்லா வியாதிகளைக் காட்டிலும் வெக்கை நோய் கண்டு செத்துப்போகும் கால்நடைகள் அதிகமென்றும் தெரியவருகிறது. இந்தப்படி கால்

நடைகள் செத்துப்போவதனால் ஏற்படும் நஷ்டம் ஒருபுறமிருக்க, அனேக கால்நடைகள் வியாதி கண்டு சிறிது காலத்துக்கு வேலை செய்யச் சக்தியற்றவைகளாய்ப் போய்விடுகின்றன இவ்வகையில் நேராகவல்லாமல் மற்றப்படி நேரிடும் நஷ்டமும் அதிகமாக இருக்கிறது. வெக்கை, தொண்டை அடைப்பான், கோமாரி என்னும் வியாதிகளே இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணும் மிகவும் அபாயகரமான வியாதிகளாகும். இந்த வியாதிகள் எங்கும் பரவியிருப்பதே கால்நடைகளின் அபிவிருத்தி விஷயமாய் ஏற்பட்டிருக்கும் மிகப் பிரமாதமான தடைகளில் ஒன்றாயிருக்கக்கூடும்.

ஆகவே, ஸிவில் வெடெரினரி டிபார்ட்மென்ட் என்னும் கால்நடை வைத்திய இலாகாக்கள் கவனிக்கவேண்டிய முக்கியமான விஷயமானது தொத்து வியாதிகளைப் பரவவொட்டாமல் தடுப்பதேயாகும். ஷெ இலாகாக்களை ஒழுங்குபடுத்துவது விஷயமாகவும் அவைகளிலுள்ள சிப்பந்திகளைப் பயிற்சி செய்விப்பது விஷயமாகவும் அவை நடத்தவேண்டிய ஆராய்ச்சி வேலை விஷயமாகவும் நாங்கள் செய்யும் பிரேரேபணைகள் இதைப் பொறுத்தவைகளாகும். எனவே, வியாதிகளைத் தடுப்பது விஷயமாய் அனுசரிக்கவேண்டிய ஏற்பாடுகளைக் குறித்து நாங்கள் ஆராய்ச்சி செய்வோமானால், ஷெ பிரேரேபணைகளை வெகு சுலபமாய்த் தெரிந்துகொள்ளக்கூடும் வெக்கை நோயானது இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணும் வியாதிகள் எல்லாவற்றிலும் மிகவும் பயங்கரமான வியாதியாயிருப்பதனாலும் அதைப் பரவவொட்டாமல் தடுப்பதற்காக அனுசரிக்கவேண்டிய முறைகள் இதர தொத்து வியாதிகளைத் தடுப்பதற்காக அனுசரிக்கப்படும் முறைகளைப் போலவே இருப்பதாலும், நாங்கள் அந்த வியாதியைப்பற்றி விவரமாய் ஆராய்ச்சி செய்திருக்கிறோம்.

முற்காலத்தில் வெக்கை நோயானது மேல் நாடுகளில் கால்நடைகளைப் பீடித்துவந்த சகல வியாதிகளிலும் மிகவும் பயங்கரமானதாய்க் கருதப்பட்டு வந்தது. அது இப்போது அங்கே காணுவதில்லை. இந்தியாவில் கால்நடை வைத்திய சம்பந்தமான சிப்பந்தி போதிய அளவுக்கு இராமல் குறைவாயிருப்பதுமல்லாமல், கால்நடைகளுக்காகக் கொடுக்கவேண்டிய பிரதிபலன் தொகையும் அதிகமாயிருக்கிறது. இதனுடன்கூட, வியாதியின் தொத்து சம்பந்தத்துக்குட்பட்ட பிராணிகளோடு சம்பந்தப்பட்டிருக்கும் சுகமாயுள்ள பிராணிகளைக் கொல்லக்கூடாதென்று பலமான அபிப்பிராயம் ஏற்பட்டிருக்கிறது. இக்காரணங்களினால், மேனாட்டு முறைகளை இந்தியாவில் அனுசரிப்பது சாத்தியப்படாமலிருக்கிறது. மேலும், வியாதியால் நிரந்தரமாய்ப் பீடிக்கப்பட்டிருக்கும் பிரதேசங்களுக்கும் வியாதியைத் தடுப்பதற்கான முறைகளைத் தீவிரமாய் அனுசரித்து அதை அடியோடு ஒழித்துவிட்டிருக்கும் பிரதேசங்களுக்கும் இடையில் தேசத்தில் பாதுகாப்பு ஏற்படுத்தியிருக்கும் பிரதேசங்களை அமைத்து, இந்தியாவின் பாகங்களைப் பிரத்தியேகப்படுத்திக் காப்பாற்றுவது சாத்தியமாயில்லை. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், வியாதியின் தொத்து சம்பந்தத்துக்கு மூலகாரணத்தை அடியோடு ஒழித்துவிடுவதையே நோக்கமாகக் கொண்ட முறைகளை அனுசரிப்

பதைவிட தனித்தனியாய் ஒவ்வொரு பிராணியையும் காப்பாற்று வதற்காக உத்தேசிக்கப்பட்ட முறைகளை அனுசரித்து வெக்கை முதலிய தொத்து வியாதிகளை ஒழிக்க இப்போது முயற்சி செய்ய வேண்டும்.

வீரம் என்னும் நிணநீரை மாத்திரம் குத்துவதென்னும் முறையே வெக்கையை ஒழிப்பதற்குத் தற்காலத்தில் சாதாரணமாய் அனுசரிக்கப்பட்டுவரும் முறையாகும். வியாதி கண்டு குணமடைந்திருக்கும் ஒரு பிராணியின் இரத்தத்திலிருந்து எடுத்த நிணநீரானது அந்த வியாதி காணுதபடி காப்பாற்ற விரும்பும் கால்நடைகளின் உடலில் குத்தப்படுகிறது அந்தக் கால்நடைகளின் உடலின் பளுவுக்கும் அவைகளின் இனத்துக்கும் ஏற்றபடி இது குத்தப்படுகிறது. இந்தப்படி குத்துவதனுல் ஏற்படும் பாதுகாப்பு சிறிது காலம் மாத்திரமே நீடித்திருக்கிறது. சாதாரணமாய்க் குத்தப்படும் மருந்தின் அளவைக் கவனித்தால், ஒன்பதுநாள் முதல் பதினைந்துநாள் வரையில்தான் ஒரு பிராணிக்கு இந்த வியாதி காணுமலிருப்பதாகத் தெரியவருகிறது. நிணநீரைக் குத்திப் பாதுகாக்கப்பட்ட பிராணிகள் இந்த வியாதியின் தொத்து சம்பந்தத்துக்குட்பட்ட பிராணிகளுடன் தாராளமாய்க் கலந்திருக்க விடப்படுகின்றன. இந்தப் பிராணிகளுக்கு வெக்கை நோய் இலேசாய்க் கண்டு பிறகு அவைகளுக்கு நிரந்தரமாய் அந்த வியாதி காணவே காணுதென்னும் நம்பிக்கையினுல், அந்தப்படி கலந்திருக்க விடப்படுகின்றன. ஏனென்ருல், ஒரு பிராணிக்கு ஒரு முறை இந்த வியாதி கண்டு குணப்பட்டுவிட்ட பிறகு அதற்கு மறுபடியும் அந்த வியாதி காணுவதில்லை. நிணநீரை மாத்திரம் குத்தும் இந்த முறையையே வெக்கை நோய் காணுதபடி தடுப்பதற்காக இந்தியாவில் மிகவும் விஸ்தாரமாகவும் சித்திகரமாகவும் இப்போது அனுசரித்து வருகிறுர்கள்.

ஆயினும், நிணநீரை மாத்திரம் குத்தும் ஷை முறையில் மிகப் பிரமாதமான குறை ஒன்றிருக்கிறது. அதாவது, இந்த முறையினுல் இரண்டு வாரங்களுக்குக் குறைவாகவே பூரணமான பாதுகாப்பு ஏற்படுகிறது. ஆனுல், வியாதியின் தொத்துசம்பந்தமோ இதைவிட மிகவும் நீண்ட காலத்துக்கு ஒரு கிராமத்தில் இருந்துவரக்கூடும். ஆகவே, பிராணிகளுக்கு மறுபடியும் ஷை நிணநீரைக் குத்தினுலொழிய அவைகளுக்கு இந்த நோய் காணக்கூடும். அந்தப்படி இந்த நோய் காணுகிறபட்சத்திலே, அவைகளின் சொந்தக்காரர்களுக்கு இந்த முறையினிடத்தில் நம்பிக்கை இராமற்போகிறது. மேலும், மறுபடியும் ஷை நிணநீரைக் குத்துவதற்குச் செலவு அதிகமாய்ப் பிடிப்பது மாத்திரமேயல்லாமல், இந்த நோய் ஊரெங்கும் பரவியிருக்கும்போது அந்தப்படி குத்துவது அனேகமாய் அசாத்தியமாகவும் இருக்கிறது.

ஷை மருந்து குத்திப் பாதுகாக்கப்பட்டிருக்கும் பிராணிகளைத் தொத்து வியாதி சம்பந்தத்துக்கு உட்படும்படி விட்டுவைக்கும் முறை நல்ல மூறைதான். ஆயினும், வியாதி சரியான காலத்தில் தான் காணுமென்று சொல்வது சரியல்லவென்று அனுஷ்டானத்தில் தெரியவரும். ஆகவே, தொத்துசம்பந்தம கட்டாயம் ஏற்படும்படி செய்வதற்காக பிராணிகளுக்குப் பாதுகாப்பு ஏற்படுவதற்

க்ான மற்றொரு முறை கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. அதற்கு நிணநீரை ஏககாலத்தில் அல்லது தீவிரமாய்க் குத்தும் முறையென்று பெயர். இந்த முறைப்படி, நோய் கண்டிருக்கும் பிராணியின் உடலி லிருந்து எடுக்கப்பட்ட தீவிரமான இரத்தத்தில் (அரை க்யூபிக் ஸெ ன்டிமீட்டரிலிருந்து ஒரு க்யூபிக் ஸெண்டிமீட்டர் வரையிலுள்ள) ஒரு சிறு அளவு இரத்தத்தை நிணநீரைக் குத்தும் காலத்திலேயே அந் தப் பிராணியின் உடலுக்குள் குத்துகிறார்கள். அதன் பிறகு வெக்கை நோய் இலேசாய் அந்தப் பிராணிக்குக் காணுகிறது. அந்தப் பிரா ணியின் உடலிலுள்ள ஜவ்வில் இந்த வியாதிக்கு எதிரிடையான மாற்றுக்கிருமிகள் உற்பத்தியாகி, அந்தப் பிராணிக்கு இந்த வியாதி காணுதபடி ஒரு பாதுகாப்பு ஏற்படுகிறது. இந்தப் பாது காப்பானது சில பிராணிகளின் விஷயத்தில் நிரந்தரமாகவும் வேறு சில பி ாணிகளின் விஷயத்தில் சுமார் மூன்று வருஷகாலமும் இருப் பதாகவும் தெரியவந்திருக்கிறது. இந்த முறை சித்திகரமாயிருப்ப தாக ருஷியா, தென்னுப்பிரிக்கா, பிலிப்பைன்ஸ் ஆகிய இவைகளைப் போன்ற தூர தேசங்களில் எண்பிக்கப்பட்டிருக்கிறது. மேலும், ஈஜிப்ட் தேசத்தில் இம்முறை சித்தியடைந்திருப்பது இந்தியாவிலி ருப்பவர்கள் முக்கியமாய் சிரத்தையுடன் கவனிக்கவேண்டிய விஷய மாகும். இந்தியாவில் மைசூர் சமஸ்தானத்திலே இதுவரையில் தீவிரமான திட்டத்தின்படி. இது விஷயமாய் ஒரே ஒரு பரீட்சை தான் செய்து பார்க்கப்பட்டது. அவ்விடத்தில் ஏற்பட்ட அனுப வத்தைப் பார்த்தால், ஏககாலத்தில் நிணநீரைக் குத்தும் முறையி ஞல் அபாயம் எதுவும் ஏற்படாதென்றும், அந்த முறை பலிதமாய் இருக்கிறதென்றும், அதைப் பயிரிடுபவர்கள் ஆட்சேபணையின்றி ஒப்புக்கொள்ளுகிறார்களென்றும் தெரிகிறது. இந்தியாவிலும் இதர தேசங்களிலும் நிணநீரை ஏககாலத்தில் குத்தும் முறையை அனு சரிப்பதனுல் ஏற்பட்ட முடிவுகளைக் குறித்துக் கிடைத்த சாட்சி யத்தை நாங்கள் பரிசோதித்துப் பார்த்தோம். அந்தப்படி பரிசோ தித்துப் பார்த்ததில், இந்த முறையை அனுசரிக்கும்படி பலமாய் சிபாரிசு செய்யவேண்டுமென்னும் முடிவுக்கும், வெக்கை நோயி ஞல் ஏற்படும் நாசத்தை இம்முறை ஒன்றினுல்தான் தடுக்கக்கூடு மென்னும் முடிவுக்கும் வந்தோம். இந்த மருந்தைக் குத்துவ தற்கு உபயோகிக்கும் சாமான்களைச் சரியானபடி ஒழுங்குபடுத்தி, குத்தும்போது ஏற்படும் விபத்துகள் ஏற்படாதபடி ஜாக்கிரதை யாய்த் தடுக்கக்கூடியவராயும் அனுபோகசாலியாயுமுள்ள ஒரு கால் நடை ரண வைத்தியரின் மேற்பார்வையின்கீழ் இந்த மருந்தைக் குத்துகிறபட்சத்திலே, இதனுல் உண்டாகக்கூடிய பெருத்த நன்மை களை உத்தேசித்து இதனுல் ஏற்படக்கூடிய சொற்ப அபாயத்தைக் கவனிக்காமலே இதைத் தயக்கமில்லாமல் ஒப்புக்கொள்ளவேண்டிய தாய் ஏற்படும்.

இந்த முறையை அனுசரிக்கும் விஷயத்தில் அனுஷ்டானத் திலே சில கஷ்டங்கள் ஏற்படுமென்பது எங்களுக்குத் தெரியும். அவைகளைக் கவனிக்கும்போது, இம்முறையை அனுசரிப்பதற்குப் பயிரிடுவெபர்கள் சிறிதுமட்டில் ஆட்சேபிக்கக்கூடுமென்று தோற்றுகி றது. இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், ஷெ மருந்து குத்தும் முறை யைக் கட்டாயமாய் அனுசரிக்கவேண்டுமென்று ஏற்படுத்துவது

தற்காலத்தில் உசிதமாயிராதென்று நாங்கள் எண்ணுகிறோம். கட்டாயமான முறைகளை அனுசரிக்கும்படி விவசாயிகளை நிர்ப்பந்திப்பதற்குமுன், மருந்து குத்துவதனால் தங்களுடைய கால்நடைகளுக்கு என்ன நன்மை உண்டாகக்கூடுமென்பதைத் தெரிந்துகொள்ள அவர்களுக்குச் சமயம் வாய்க்கும்படி செய்யவேண்டும். ஆனால், இது விஷயமாய் ஒரு விலக்கு ஏற்படுத்த விரும்புகிறோம். பெரிய நகரங்களில் பால் விற்பவர்கள் வைத்துக்கொண்டிருக்கும் சகல பிராணிகளுக்கும் ஏககாலத்தில் மருந்து குத்தும் முறையை அனுசரித்து மருந்து குத்துவதைக் கட்டாயப்படுத்தவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம்.

பிராணிகளுக்கு வெக்கை நோய் காணும்போது, ஏககாலத்தில் மருந்து குத்தும முறையை பயிரிடுவோர்கள் எல்லோரும் அனுசரிக்கும்படி செய்வதற்குச் சாதகமான சந்தர்ப்பங்கள் வாய்க்கும். மேலும், கால்நடைகளை உற்பத்திசெய்து வளர்ப்பதற்கான கூட்டுறவு சங்கங்களும், பசுக்கள் வைத்து வளர்ப்பதற்கான கூட்டுறவு சங்கங்களும் இம்முறையை அனுசரித்து இது விஷயத்தில் விவசாயிகளுக்கு வழிகாட்டுமென்றும் நம்பலாம்.

மருந்து குத்துவதற்காக கட்டணம் வாஙகப்படுகிற பட்சத்திலே, அந்தக் கட்டணம் எவ்வளவு குறைவாயிருந்தாலும்கூட, வியாதி காணவொட்டாமல் தடுப்பதற்காக மருந்து குத்திக்கொள்ளும் முறையை விஸ்தாரமாய் அனுசரிப்பதற்குப் பெரிதும் தடை ஏற்படுகிறதென்று அனுபவத்தில் தெரிகிறது. ஆகவே, வெக்கை நோய்க்கு மாத்திரமேயல்லாமல் இதர தொத்து வியாதிகளுக்குங்கூட மருந்து குத்துவதற்காக வாங்கும் சகல கட்டணங்களையும் வாங்காமல் நிறுத்திவிடவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

இந்தியாவில் கால்நடைகளுக்குக் காணும் அபாயகரமான தொத்து வியாதிகள் எல்லாவற்றிலும் வெக்கை நோய் மிகவும் முக்கியமானதாயிருந்தபோதிலும், அது அப்படிப்பட்ட வியாதிகளில் ஒன்றேயாகும். இந்த வியாதியை ஒழிப்பதற்காக அனுசரிக்கவேண்டிய ஏற்பாடுகளைக் குறித்து ஆராய்ச்சி செய்தபோது, பெருவாரி வியாதிகளைப் பரவவொட்டாமல் தடுக்கவேண்டுமானால் ஷை வேலைகளை நடத்தும் உத்தியோகஸ்தர்களுக்குத் தொழில் சம்பந்தமான சாமர்த்தியமும் காரியத்தை நிர்வகிக்கும் சக்தியும் விவேகமும் விசேஷமாயிருக்கவேண்டு மென்பதைப்பற்றியும், சாதாரண கால்நடை வைத்திய சம்பந்தமான ஔஷத சாலைகளில் சிகிச்சைக்காக வரும் பிராணிகளின் வியாதிகளுக்கும் காயங்களுக்கும் சிகிச்சை செய்வதற்கு யோக்கியதையுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கவேண்டிய கல்வியினின்றும் வேறான ஒரு வித கல்வி மேலேகண்ட உத்தியோகஸ்தர்களுக்கும் இருக்கவேண்டுமென்பதைப்பற்றியும் போதுமானமட்டில் சொல்லியிருக்கிறோம். மேலும், பெருவாரி வியாதிகளைச் சித்திகரமாய் எதிர்த்து ஒழிக்கவேண்டுமானால், மாகாண கவர்ன்மென்டுகளால் அமர்த்திக்கொள்ளப்படும் உத்தியோகஸ்தர்களின் தொகையைப் பெரிதும் அதிகப்படுத்துவது அவசியமென்பது விளங்கும். ஆனால், வியாதியின் தொத்து சம்பந்தத்தைப் பரவவொட்டாமல் தடுப்பதற்குக் கவர்ன்மென்டாருக்கு அதிகாரம்

இருந்தாலொழிய, சிப்பந்திகள் எவ்வளவு அதிகமாகவும்சாமர்த்தியமுள்ளவர்களாகவும் இருந்தபோதிலும் அவர்களால் பூரண பிரயோசனம் உண்டாகமாட்டாது. ஆகவே, தொத்து வியாதிகளின் விஷயத்தில் பிரவர்த்திக்கையில் எங்கும் ஒரே மாதிரியான நடவடிக்கை முறையை அனுசரிக்கும்படிச் செய்யும் நோக்கத்துடன், பிராணிகளுக்குக் காணும் தொத்து வியாதிகளைக் குறித்த ஆக்ட் என்னும் ஒரு சட்டத்தை ஜாரி செய்யவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். ஷை ஆக்டில் பிரஸ்தாப விஷயத்துக்குரிய சந்தர்ப்பங்களுக்குப் பொருத்தமான நிபந்தனைகளை பரிபாலன சம்பந்தமான உத்தரவு மூலமாய் யாதொரு பிரதேசத்துக்குப் பிரயோகிக்க பிரதேச கவர்ன்மென்டுகளுக்கு அதிகாரம் கொடுக்கப்படவேண்டும்.

இந்தியாவில் இப்போது கால்நடை வைத்தியத்துக்காகச் செய்திருக்கும் ஏற்பாடு போதவே போதாது. பெரிய பட்டணங்களில் சில வைத்தியர்கள் இருக்கிறார்கள். இவர்களைத் தவிர இந்தியாவில் தங்களுடைய சொந்த ஹோதாவில் வைத்தியாப்பியாசம் செய்யும் வெடெரினரி ஸர்ஜன் என்னும் கால்நடை ரண வைத்தியர்கள் எவர்களும் இல்லை. ஸிவில் இலாகாவில் இந்திய வெடெரினரி ஸெர்விஸ் என்னும் ஊழிய வர்க்கத்திலே சுமார் 32 வெடெரினரி ஸர்ஜன்களும் மாகாண ஊழிய வர்க்கங்களில் 52 வெடெரினரி ஸர்ஜன்களும் இருக்கிறார்கள். ஆனால், 1927-ம்வருஷத்தில் சுமார் 1,400 வெடெரினரி இன்ஸ்பெக்டர்களும் வெடெரினரி அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களும் இருந்தார்கள். உயர்தரமான சிப்பந்தியைச் சேர்ந்த பலர் கற்பிக்கும் தொழிலிலும் இதர வேலைகளைச் செய்வதிலும் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிறார்கள். எனவே, வியாதிகளைப் பரவவொட்டாம தடுப்பதற்கும் வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதற்கும் 33 பேர்தான் இருக்கிறார்கள். இந்த சிறு தொகையான உத்தியோகஸ்தர்களுக்குள்ளும் பாதிக்குக் குறைவானவர் களுக்குத்தான், ராயல் காலெஜ் ஆவ் வெடெரினரி ஸர்ஜன்ஸ் என்னும் கலாசாலையில் யோக்கியதா பத்திரம் பெற்றிருப்பது காரணமாகக் கால்நடை வைத்தியம் செய்யவும் கால்நடைகளுக்கு ரண வைத்தியம் செய்யவும் லைஸென்ஸ் கொடுக்கப்பட்டிருக்கிறது.

தொத்து வியாதிகளைப் பரவவொட்டாமல் தடுப்பதற்காகவும் சாதாரண வியாதிகளினாலும் காயங்களினாலும் கஷ்டப்படும் பிராணிகளுக்குச் சிகிச்சை செய்வதற்காகவும் இப்போது செய்துள்ள ஏற்பாடுகள் போதாவென்று மேற்கண்ட இலக்கங்களினால் ஸ்பஷ்டமாகத் தெரியவருகிறது.

நிரந்தரமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஔஷத சாலைகளினாலாவது ஊர் ஊராய்ப் போய்க்கொண்டிருக்கும் வெடெரினரி அஸிஸ்டன்டுகளினாலாவது இவ்விரண்டு வகைகளிலுமாவது இப்போது கால்நடைகளுக்கு வைத்திய உதவி செய்யப்பட்டு வருகிறது. ஒவ்வொரு ஜில்லாவிலும் மத்தியஸ்தானத்தில் கால்நடை ஆஸ்பத்திரி ஒன்று வைக்கும்படி நாங்கள் சிபாரிசு செய்கிறோம். இந்த ஆஸ்பத்திரியில் நோய் கண்டிருக்கும் பிராணிகளை விட்டுவைப்பதற்கு வசதியிடம் இருக்கவேண்டியதுமல்லாமல், அந்த ஜில்லாவைச் சேர்ந்த ஸப்டிவி

டுன்களுக்கு உபயோகப்படும்படியாக பல ஔஷத சாலைகளை அதனுடன் சேர்க்கவும் வேண்டும். ஒரே ஔஷத சாலை தேசத்தின ஒரு பெரிய பகுதிக்கு உபயோகப்படவேண்டுமானால், அதில், பல குறைகள் இருக்குமென்பது பிரத்தியட்சமான விஷயம். இந்தக் குறைகளை நீக்குமபொருட்டு, ஔஷத சாலைகளிலுள்ள சிப்பந்திகளை அதிகப்படுத்தவேண்டுமென்றும், சுற்றுப் பக்கங்களிலுள்ள ஜில்லாக்களில் பிரயாணம்செய்யும்படி இவர்களை அனுப்பவேண்டுமென்றும் நாங்கள் சிபாரிசுசெய்கிறோம். இம்மாதிரி செய்கிறபட்சத்திலே, பெரும்பான்மையான கால்நடை வைத்திய சம்பந்தமான ஔஷத சாலைகளினால் உண்டாகும் பிரயோசனம் இரண்டத்தனைக்கு மேற்படும்.

தொத்து நோய்களைப் பரவவொட்டாமல் தடுக்கும் விஷயம் மாகாண கவர்ன்மென்டைச் சேர்ந்ததாயிருக்கவேண்டுமென்பது எங்களுடைய அபிப்பிராயம். மாகாண கவர்ன்மென்டைச் சேர்ந்த சிப்பந்திகள் சாத்தியமானவரையில் யோக்கியதை பெற்ற கால்நடை வைத்தியர்களாயிருக்கவேண்டும். தொத்து வியாதிகளென்று பட்டியில் சேர்க்கப்பட்டிராத வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதற்காகவும் சாஸ்திர சிகிச்சை செய்வதற்காகவும் காயங்களுக்கு மருந்து போடுவதற்காகவும் அவ்வவ்விடத்தில் கால்நடை வைத்திய ஊழியவர்க்கம் ஒன்றை அமைப்பதற்கு அவசியமான ஏற்பாடுகளைச் செய்யக்கூடுமானால், அந்தப்படி அமைக்கும் வேலையானது பிரதேச அதிகார சபைகளைச் சேர்ந்ததாயிருக்கவேண்டும். இம்மாதிரி வித்தியாசம் செய்வதை அனுசரித்தே, கால்நடை வைத்திய இலாகாக்களை இனி ஒழுங்காய் அமைப்பதற்கு நாங்கள் பிரேரேபணைகள் செய்யத் தொடங்குகிறோம்.

எல்லாத் தரங்களிலுமுள்ள கால்நடை வைத்திய உத்தியோகஸ்தர்களின் தொகையை மிகவும் அதிகமாய்ப் பெருக்குவதே முதலில் செய்யவேண்டிய காரியமாகும். 25,000 கால்நடைகளுக்குக் குறைந்தபட்சம் ஒரு வெடெரினரி அஸிஸ்டன்ட் ஸர்ஜனும் ஒவ்வொரு ஜில்லாவுக்கும் ஒரு யோக்கியதை பெற்ற வெடெரினரி ஸர்ஜனும் ஏற்படுத்துவதே நோக்கமாயிருக்கவேண்டும். டி ஸர்ஜன் விசாரணை வகிக்கும் பிரதேசத்திலுள்ள இதர ஜீவஜந்துக்களுடன்கூட சராசரியில் சுமார் 600,000 கால்நடைகளை அவர் கவனிக்கவேண்டியவராவார். ப்ரிடிஷ் இந்தியாவில் 272 ஜில்லாக்கள் இருக்கின்றன. எனவே, இதை ஆதாரமாகக்கொண்டு கணக்கிட்டால், ரஜாவில் போகிறவர்களுக்குப் பர்த்தியாக இருப்பில் இருக்கவேண்டிய உத்தியோகஸ்தர்கள் உட்பட சற்றேறக்குறைய 300 உத்தியோகஸ்தர்கள் மாகாண ஊழிய வர்க்கத்தில் இருக்கவேண்டுமென்று ஏற்படுகிறது. வெடெரினரி அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களின் தொகை தோராயமாய் நான்கு மடங்கு, அதாவது சுமார் 6,000 உத்தியோகஸ்தர்கள் இருக்கும்படியாக, அதிகப்படுத்தப்படும். இது விஷயத்தில் இந்திய சமஸ்தானங்களின் ஒத்துழைப்பும் உதவியுங்கூட அவசியமாயிருக்கும். இந்திய சமஸ்தானங்களிலும் இதே திட்டப்படி உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்பட்டால், கால்நடை வைத்தியக் கலாசாலைகளின் சிப்பந்திகளும் மேற்பார்வையிடும் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் உத்தியோகஸ்தர்களும் உட்பட கவர்ன்மென்டிலும் இந்திய சமஸ்தானங்களிலும் வேலையாயிருக்கும் யோக்கியதை பெற்ற வெடெ

ரினரி ஸர்ஜன்களின் மொத்த சங்கியையானது 400க்கு மேற்படும். வெடெரினரி அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களின் மொத்த சங்கியையானது சுமார் 7,500 ஆகவும் இருக்கும்.

ஆகவே, நாங்கள் அடியிற்கண்டபடி இந்த ஸ்தாபனத்தை அமைக்கவேண்டுமென்று பிரேரேபிக்க விரும்புகிறோம். அதாவது, ஒவ்வொரு மாகாணத்திலும் ஒரு பிரதான கால்நடை வைத்திய உத்தியோகஸ்தர் இருப்பார். அவருக்கு டைரெக்டர் ஆவ் வெடெரினரி ஸெர்விஸஸ் என்னும் பெயர் கொடுக்கலாம். அவர் பிரஸ்தாப மாகாணத்தில் கால் நடை வைத்திய சம்பந்தமான வேலையின் பரிபாலன விஷயமான மேல்விசாரணையை வகித்துவருவார். மாகாணத்தில் விவசாயக் கலாசாலையின் தலைவருக்கும் விவசாய இலாகா டைரெக்டருக்கும் என்ன சம்பந்தம் இருக்கிறதோ அதே சம்பந்தம் கால்நடை வைத்திய கலாசாலையின் தலைவருக்கும் டைரெக்டர் ஆவ் வெடெரினரி ஸெர்விஸஸ் என்னும் உத்தியோகஸ்தருக்கும் இருக்கவேண்டும். டைரெக்டர் உத்தியோகத்தையும் கலாசாலைத் தலைவர் உத்தியோகத்தையும் கால்நடை வைத்திய சம்பந்தமான மாகாண ஊழிய வர்க்கங்களின் தொகுதியில் சேர்க்காமல் தேர்ந்தெடுத்து நியமிக்கவேண்டிய உத்தியோகங்களாகப் பட்டியில் சேர்க்கவேண்டும். இந்த உத்தியோகங்களை வகிப்பவர்கள் திறமையும் திடமான புருஷத்துவமும் வாய்ந்த உத்தியோகஸ்தர்களாயிருப்பது மிகவும் முக்கியமானது. மேலும், அவசியம் ஏற்படுகிற பட்சத்திலே, தேசத்துக்கு வெளியிலிருந்து ஒருவரை இந்த உத்தியோகத்துக்கு நியமிக்க மாகாண கவர்ன்மெண்டார் தயாராயிருக்கவேண்டும். இவ்விரண்டு உத்தியோகங்களுக்கும் ஏற்படுத்தியிருக்கும் சம்பள விதத்தைப்பற்றி புனராலோசனை செய்யவேண்டும்.

ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள டைரெக்டர் ஆவ் வெடெரினரி ஸெர்விஸஸ் என்னும் உத்தியோகஸ்தரின்கீழ், வட்டங்களின் விசாரணை வகிக்கும் டெப்யுடி டைரெக்டர்கள் இருப்பார்கள். இந்த உத்தியோகஸ்தர்கள் இப்போதுள்ள இந்திய வெடெரினரி ஸெர்விஸ் என்னும் ஊழிய வர்க்கத்தையாவது புதிதாய் ஏற்படுத்தப்போகிற உயர்தரமான மாகாண வெடெரினரி ஸெர்விஸ் என்னும் ஊழிய வர்க்கத்தையாவது சேர்ந்தவர்களாய் இருப்பார்கள். சாதாரணமாக, பிந்திய ஊழிய வர்க்கத்தில் ஏற்படும் காலிஸ்தானங்களானவை கால்நடை வைத்திய சம்பந்தமாக இப்போதுள்ள மாகாண ஊழிய வர்க்கங்களில் இருப்பவர்களை மேலுக்கு உயர்த்தி அவர்களைக் கொண்டு பூர்த்தி செய்யப்படும். டெப்யுடி டைரெக்டர்கள் செய்ய வேண்டிய வேலைகள் உத்தரவாத முள்ளவைகளாயிருக்கும். ஆகவே, அந்த உத்தியோகங்களில் காலி ஸ்தானங்கள் ஏற்படும்போது, அவசியமான யோக்கியதாம்சங்கள் பெற்றுள்ள ஒரு உத்தியோகஸ்தர் இப்போதுள்ள மாகாண ஊழிய வர்க்கத்தில் கிடைக்காத பட்சத்திலே, நேராகவே அந்த உத்தியோகங்களுக்கு நபர்களைத் தேர்ந்தெடுத்து அந்தக் காலி ஸ்தானங்களைப் பூர்த்திசெய்யவேண்டும். இந்திய வெடெரினரி ஸெர்விஸ் என்னும் ஊழிய வர்க்கத்துக்கு இப்போது ஏற்படுத்தியிருக்கும் சம்பள வீதமே புதிதாய் ஏற்படுத்தப்போகும் உயர்தரமான கால்நடை வைத்திய சம்பந்தமான மாகாண ஊழிய வர்க்கத்துக்கும் தகுதியான சம்பள வீதமாயிருக்குமென்று நாங்கள் ஆலோசனை சொல்லுகிறோம். பரிபாலன சம்பந்தமான இந்த உத்தி

யோகஸ்தர்களின் கீழ், கால்நடை வைத்திய சம்பந்தமான மாகாண ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த யோக்கியதை பெற்ற வெடெரினரி ஸா ஜன்கள் இருப்பார்கள். மேலும், ஒவ்வொரு ஜில்லாவுக்கும் யோக்கியதைபெற்ற ஒரு வெடெரினரி ஸர்ஜனை ஏற்படுத்துவதே நோக்கமாயிருக்கவேண்டும். பெருவாரி வியாதிகளைப் பரவ வொட்டாமல் தடுப்பதே இந்த ஊழிய வர்க்கங்களின் பிரதான வேலையாயிருக்கும். ஆனால், ஔஷத சாலைகளையும் சுற்றுப் பிரயாணம் செய்யும் வெடெரினரி அஸிஸ்டன்டுகளின் வேலையையும் மேற்பார்வையிடும் காரியமும் இவர்களிடத்தில் ஒப்புவிக்கப்படும். மாகாணக்கால்நடை வைத்திய ஊழிய வர்க்கங்களுக்கு இப்போது மாதமொன்றுக்கு 250 ரூபாய் முதல் 750 ரூபாய் வரையில் சம்பளம் கொடுக்கப்பட்டு வருகிறது. இந்த சம்பள வீதமே போதுமானதென்று தோற்றுகிறது. இந்த தரத்தின்கீழ், கால்நடை வைத்திய சம்பந்தமான ஔஷத சாலைகளின் விசாரணையையும் அந்த ஔஷத சாலைகள் உபயோகப்படும் விஸ்தீர்ணத்தில் நடக்கும் கால்நடை வைத்திய சம்பந்தமான வேலையின் விசாரணையையும் வகிக்கும் வெடெரினரி அஸிஸ்டன்ட் ஸர்ஜன்கள் அடங்கிய கால்நடை வைத்திய சம்பந்தமான கீழ்த்தர ஊழிய வர்க்கங்கள் இருக்கும். வெடெரினரி இன்ஸ்பெக்டர்களின் தரம் ஏற்பட்டிருக்கும் இடங்களில், பரிசோதனை சம்பந்தமான வேலைகளைச் சரியான யோக்கியதை பெற்றுள்ள வெடெரினரி ஸர்ஜன்கள் ஏற்றுக்கொள்ளக் கூடுமானால், அந்த தரத்தை எடுத்துவிடவேண்டும். கால்நடை வைத்திய இலாகா முழுவதையும் மாகாண ஸ்தாபனமாகவே ஏற்படுத்திவிடும்படி நாங்கள் சிபாரிசு செய்யமாட்டோம். கால்நடை வைத்திய சம்பந்தமான கீழ்த்தர ஊழிய வர்க்கங்களை இப்போது கவர்ன்மென்டார் லோகல் போர்டுகளுக்குக் கொடுத்துதவுவதைப் போலவே இனியும் கொடுத்துதவுவார்கள். கால்நடை வைத்திய சம்பந்தமான விஷயங்களில் பிரதேச அதிகார சபைகளுக்கு முன்னிலும் அதிக உத்தரவாதத்தை மாற்றும் விஷயத்தில் அபிவிருத்தி ஏற்படுவது விரும்பத்தக்கதுதான். ஆயினும், அதை நாளாவர்த்தியில் சிறிது சிறிதாகவே செய்யவேண்டும். பெருவாரி வியாதிகளைப் பரவவொட்டாமல் அடக்குவதற்கும் அவைகளைத் தடுப்பதற்கும் சம்பந்தப்பட்ட மேல்விசாரணையைத் தவிர கால்நடை வைத்திய விஷயமான வேலையை மேல்விசாரணை செய்வதற்கான அதிகாரம் முழுவதையும் பிரதேச அதிகார சபைகளினிடத்தில் ஒப்புவிக்கும்போது, அந்த சபைகளின் கால்நடை வைத்திய சம்பந்தமான வேலைப் பிரிவுக்குப் பிரதேச கவர்ன்மென்டுகள் செய்யும் சகாயமானது திட்டங்களுக்குட்பட்டு சகாயத்தொகை கொடுப்பது ரூபமாயிருக்கவேண்டும். இந்த சகாயத்தொகையை, இன்ன பரிமாணமுள்ள வேலைக்கு இன்ன வீதப்படி சகாயத்தொகை கொடுப்பதென்னும் ஆதாரத்தின்மேல் கொடுத்துவரலாம். இந்த சகாயத்தொகை கொடுக்கும்போது, பிரதேச அதிகார சபைகள் மாகாணக் கால்நடை வைத்திய சம்பந்தமான ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்தவர்களின் ஆலோசனையையும் அவர்களால் தங்களுடைய வேலை பரிசோதிக்கப்படுவதையும் எதிர்பார்க்கவேண்டுமென்றும், சகல உத்தியோகஸ்தர்களையும் நியமிக்கும் விஷயத்தில் டைரெக்டர் ஆவ் வெடெரினரி ஸெர்விஸஸ் என்னும் அதிகாரியுடன்

கலந்தாலோசிக்கவேண்டுமென்றும் திட்டம் ஏற்படுத்தி ஷை சகாயத் தொகை கொடுக்கவேண்டும். இதற்கிடையில், பிரதேச அதிகார சபைகளைச் சேர்ந்த ஔஷத சாலைகளில் வெடெரினரி அஸிஸ்டன்டு களை நியமிக்கும் விஷயத்திலும், அந்த ஔஷத சாலைகளில் வேலையா யிருக்கும் வெடெரினரி அஸிஸ்டன்டுகளை நியமிக்கும் விஷயத்திலும் வேறிடத்துக்கு மாற்றும் விஷயத்திலும் மேல் உத்தியோகத்துக்கு உயர்த்தும் விஷயத்திலும் தண்டிக்கும் விஷயத்திலும் வேலையி லிருந்து நீக்கிவிடும் விஷயத்திலும் பிரதேச அதிகார சபைகளைக் கலந்தாலோசிக்கவேண்டும்.

லோகல் போர்டுகளால் வேலையில் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக் கும் வெடெரினரி அஸிஸ்டன்ட் ஸர்ஜன்களின்மேல் செலுத்தப் படும் முழு அதிகாரமும் அந்த போர்டுகளுக்குப் போய்விடும்போது, தொத்து வியாதிகள் விஷயமாய்ப் பிரவர்த்திப்பதற்காக தேர்ந்தெடுக் கப்பட்ட வெடெரினரி அஸிஸ்டன்டுகள் அடங்கிய வெடெரினரி ரிஸர்வ் (கையிருப்புப்) படையொன்றை ஏற்படுத்துவது அவசியமா கும். அனுபவசாலிகளாயுள்ள வெடெரினரி அஸிஸ்டன்டுகள் எந் தப் பிரதேச அதிகார சபைகளின்கீழ் வேலை செய்கிறார்களோ அந் தப் பிரதேச அதிகார சபைகளுடன் ஏற்பாடு செய்துகொண்டு, அவர்கள் ஷை படையில் சேர்த்துக்கொள்ளப்படுவதற்காகத் தெரிந் தெடுக்கப்படுவார்கள். இந்தப்படி செய்கிற பட்சத்திலே, ஔஷத சாலைகளின் வேலையில் குறுக்கிடாமல் தொத்து வியாதிகளின் விஷ யத்தில் சித்திகரமாய்ப் பிரவர்த்திப்பது சாத்தியமாயிருக்குமென்று நம்பப்படுகிறது.

வெடெரினரி ஸர்ஜன்களை, அதாவது மாகாணக் கால்நடை வைத்திய ஊழிய வர்க்கங்களையும் அஸிஸ்டன்ட் வெடெரினரி ஸர் ஜன்களையும், பயிற்சி செய்விப்பதற்கு முற்றிலும் வேறான இரண்டு பாடக்கிரமங்கள் ஏற்படுத்தவேண்டும். இவைகளுக்கு ஆரம் பத்தில் வெவ்வேறு யோக்கியதாம்சங்களும் சகல தசைகளிலும் வெவ்வேறு வகுப்புகளும் இருக்கவேண்டும். இப்போதுள்ள கால் நடை வைத்தியக் கலாசாலைகளில் பிங்கிய வகுப்பைப் பயிற்சி செய் விப்பதற்குத் தகுதியான பாடமுறை ஒன்றைத் தயாரிக்கும் விஷ யத்தை நிபுணர்கள் அடங்கிய சபையொன்றின் ஆலோசனைக்கு விட்டுவிடவேண்டும். இந்தப் பாடமுறையில் கால்நடைகளின் அங்காதிபாத சாஸ்திரத்துக்கும் கால்நடை வியாதிகளுக்கும் விசேஷ பிராதானியம் கொடுக்கவேண்டும். மாகாணக் கால்நடை வைத்திய ஊழிய வர்க்கங்களுக்கு, அதாவது டிஸ்ட்ரிக்ட் வெடெரினரி ஸர்ஜன் களுக்கு, ஏற்படுத்தவேண்டிய பாடமுறையை சம்பந்தப்பட்ட சர்வகலாசாலையைச் சேர்ந்த அதிகாரிகளும் கால்நடை வைத்திய இலாகா அதிகாரிகளும் கூட்டங்கூடி தீர்மானிக்கவேண்டும். பயிற்சி பெறவேண்டிய கால அளவானது மெட்ரிகுலேஷன் வகுப்பி லிருந்து ஐந்துவருஷ காலம் வரையில் நீடித்துப் பட்டம் பெறுவ தோடு முடியவேண்டும். அகில இந்தியக் கால்நடை வைத்திய கலா சாலை யொன்றை ஏற்படுத்தவேண்டுமென்றாகிலும் முக்தேசரத்திலி ருக்கும் ஆராய்ச்சி சாலையைக் கல்வி சம்பந்தமான மத்திய ஸ்தாபன மாக விருத்திசெய்ய வேண்டுமென்றாகிலும் நாங்கள் சிபாரிசு செய்ய வில்லை. சகல மாகாணங்களிலும் மாகாணக் கால்நடை வைத்திய

ஊழிய வர்க்கங்களில் வேலை பெற விரும்பும் அபேட்சகர்களை இப்போது ஏற்பட்டிருக்கும் கால்நடை வைத்தியக் கலாசாலைகளில் ஒன்றில் பயிற்சி செய்விப்பதே மிகவும் திருப்திகரமான முறையாகுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட கலாசாலையானது கால்நடை வைத்திய விஷயமாய் உயர்தரக் கல்வி கற்பிக்க ஏற்றுக்கொள்ளும்படி அதை அமைப்பதற்காகப் பிடிக்கும் அதிகப்படியான செலவை இந்தியா கவர்ன்மெண்டார் ஏற்றுக் கொள்ளவேண்டும். தேர்ந்தெடுக்கப்பட்ட கலாசாலையில் ஏற்படுத்தப்படும் பயிற்சி முறையிலே முக்தேசாத்தில் சிறிது காலம் பயிற்சி பெறுவதையும் சேர்க்கவேண்டும். மாகாண ஊழிய வர்க்கத்துக்காக ஏற்படுத்தப்படும் பயிற்சி முறையானது இந்தியா கவர்ன்மெண்டாலோ மாகாண கவர்ன்மெண்டுகளாலோ இந்திய சமஸ்தானங்களாலோ நியமிக்கப்படும் அபேட்சகர்களுக்கு மாத்திரமே இப்போது பிரயோகப்படவேண்டுமென்றும், அந்த அபேட்சகர்கள் பயிற்சி யடையும் காலத்திலே அவர்களை நியமித்தனுப்பும் அதிகாரிகளிடமிருந்து அவர்கள் தகுதியான ஸ்டைபெண்ட் என்னும் சகாய வர்த்தனை பெறவேண்டுமென்றும் நாங்கள் சிபாரிசு செய்கிறோம். கால்நடை வைத்தியக் கலாசாலைகளில் பாடம் கற்பிக்கும் சிப்பந்தியைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ஆராய்ச்சி வேலை நடத்தும்படி எதிர்பார்க்கவேண்டியது மாத்திரமே யல்லாமல், அப்படிப்பட்ட வேலை செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்தவும் வேண்டும். எங்களுடைய பிரேரேபணைகளில் கண்டபடி செய்வதானால், வெடெரினரி ஸர்ஜன்கள், அஸிஸ்டன்ட் ஸர்ஜன்கள் ஆகிய இவ்விருவகையான உத்தியோகஸ்தர்களிலும் பெருந்தொகையாரைப் பயிற்சி செய்வது அவசியமாய் ஏற்படும். இந்தப் பயிற்சியைச் சித்திகரமாய்ச் செய்விக்கும்பொருட்டு ஷை கலாசாலைகளின் தலைவர்களும் சிப்பந்திகளும் விசேஷ திறமை காரணமாகத் தேர்ந்தெடுக்கப்பட்டவர்களா யிருப்பது மிகவும் அவசியமாகும். ஷை சிப்பந்திகள் புதிதாய் ஏற்படுத்தப்போகும் உயர்தர மாகாணக் கால்நடை வைத்திய ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்தவர்களா யிருக்கவேண்டும். சாதாரணமாக, இதற்கென்றே உத்தியோகஸ்தர்களைப் பிரத்தியேகமாய்த் தேர்ந்தெடுப்பது அவசியமாகும். ஆனால், இந்தியக் கால்நடை வைத்திய ஊழிய வர்க்கத்தில் சாதாரண வரிசைக் கிரமத்திலிருக்கும் உத்தியோகஸ்தர்களும் புதிதாய் ஏற்படுத்தப்போகும் உயர்தர மாகாணக் கால்நடை வைத்திய ஊழியவர்க்கங்களிலுள்ள உத்தியோகஸ்தர்களும் மேலேகண்ட உத்தியோகங்களுக்கு நியமிக்கப்பட அர்ஹதை உடையவர்களாயிருக்கவேண்டும். இருக்கவேண்டிய யோக்கியதாம்சங்கள் பெற்றுள்ள உத்தியோகஸ்தர்கள் கிடைக்கவேண்டுமானால், ஒவ்வொரு உத்தியோகஸ்தருக்கும் பிரத்தியேகமாய்ப் பொருத்தமாகவும் அவருடைய யோக்கியதாம்சங்களையும் அனுபவத்தையும் அனுசரித்தும் விசேஷ சம்பளம் கொடுப்பது அவசியமாயிருக்கலாம்.

தற்காலத்தில் கால்நடை வைத்திய சம்பந்தமான ஆராய்ச்சி வேலையானது முக்தேசாத்திலிருக்கும் இம்பீரியல் வெடெரினரி ரீஸர்ச் இன்ஸ்டிட்யூட் என்னும் ஸ்தாபனத்திலே பெரும்பாலும் ஒருமிக்க நடத்தப்பட்டுவருகிறது. கால்நடை வைத்திய சம்பந்

மான ஆராய்ச்சி விஷயமாய் ஏற்படும் பொதுவான பிரசினைகள் சம்பந்தமாய்ப் பிரவர்த்திப்பதற்கு இந்த ஸ்தாபனமானது வேண்டிய அளவுக்குப் போதியதாயிருக்கிறதென்றும், அடுத்தாற்போல் இனி மத்திய ஆராய்ச்சி வேலையை எவ்வகையிலாகிலும் விருத்திசெய்ய வேண்டுமானால், செய்ய உத்தேசிக்கும் வேலையின் தன்மைக்கேற்றபடி முக்தேசரத்திலுள்ள சிப்பந்திகளையும் முஸ்திபுகளையும் அதிகப்படுத்தவேண்டுமென்றும் நாங்கள் எண்ணுகிறோம். சாஸதிர சம்பந்தமான யோக்கியதாம்சங்களை அனுசரித்து அந்த ஸ்தாபனத்தின் டைரெக்டரைத் தெரிந்தெடுக்கவேண்டும். மேலும், அவர் அந்தத் தொழிலில் உன்னதமான ஸ்தானம் வகிப்பவராயிருக்கவும் வேண்டும். முக்தேசரத்தில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் உயர்தர உத்தியோகங்களின் தொகை மிகவும் குறைவாயிருக்கிறபடியால், ஸென்ட்ரல் வெடெரினரி ஸெர்விஸ் என்னும் ஒரு ஊழிய வர்க்கத்தைப் புதிதாய் ஏற்படுத்துவதனால் எவ்வித அநுகூலமும் உண்டாகமாட்டாதென்று நாங்கள் எண்ணுகிறோம். டைரெக்டர் உத்தியோகம் உட்பட எந்த உத்தியோகமாகிலும் காலியானால், அந்த உத்தியோகம் பார்க்கும்படி நியமிக்கப்படும் உத்தியோகஸ்தருக்கு, அவருடைய விசேஷ யோக்கியதாம்சங்களுக்கும் அநுபவத்துக்கும் ஏற்ற ஒரு திட்டப்படி சம்பளம் கொடுக்கவேண்டும். ஆயினும், பற்பலவகையான நிணநீரையும் அம்மைப்பாலையும் தயார்செய்வது விஷயமாய் ஏற்படும் மிகவும் கஷ்டமான பரிபாலன சம்பந்தமான வேலையை உத்தேசித்து, பரிபாலன சம்பந்தமான விவராம்சங்களைக் கூடியமட்டில் டைரெக்டர் கவனிக்கவேண்டியிராமற்படி பரிபாலன சம்பந்தமான அனுபவம் வாய்ந்த ஒரு உத்தியோகஸ்தரை நியமித்து அவருடன் சேர்க்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேலும், முக்தேசரத்தில் இருப்பதைப் போன்ற ஒரு ஸ்தாபனத்தில் ஆபிஸ் சம்பந்தமான வேலையை நடத்துவதற்காகவும் பூஸ்திதிகளை நிர்வகிப்பதற்காகவும் முற்றிலும் திறமையான ஒரு சிப்பந்தி ஏற்படுத்தப்பட்டிருப்பது முக்கியமாகும். முக்தேசரத்தில் ஆராய்ச்சி வேலைக்காகப் பிடிக்கும் செலவை, நிணநீர் முதலியவைகளைத் தயார்செய்யும் வேலைக்காகப் பிடிக்கும் செலவிலிருந்து கூடுமான மட்டில் பிரித்துவிடவேண்டும். மேலும், நிணநீர் வகைகளையும் அம்மைப்பால் வகைகளையும் தயார்செய்வதனால் லாபம் ஏதாகிலும் கிடைத்தால், அதை மாகாணங்களும் சமஸ்தானங்களும் அந்த வஸ்துக்களை வாங்கும் அளவுக்குத் தக்கபடி பங்கிட்டுகொள்ள வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். முக்தேசரத்திலிருக்கும் ஆராய்ச்சிச் சாலையின் பரிபாலன சம்பந்தமான மேல்விசாரணையானது இப்போது இந்தியா கவர்ன்மென்டைச் சேர்ந்த அக்ரிகல்சுரல் அட்வைஸர் என்னும் விவசாய விஷயமாய் ஆலோசனை சொல்லும் அதிகாரியினிடத்தில் இருக்கிறது. இந்த அதிகாரமானது ஷை ஆராய்ச்சிசாலையின் டைரெக்டருக்குப் போக வேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். ஒரு புறத்தில் முக்தேசரத்திலுள்ள ஆராய்ச்சிச் சாலைக்கும் ஷை டைரெக்டருக்கும், மற்றொரு புறத்தில் விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி வேலைச்சபைக்கும் டைரெக்டருக்கும் உள்ள சம்பந்தமானது பூஸாவிலுள்ள டைரெக்டருக்கும் அவருடைய சொந்த ஸ்தாபனத்துக்கும் ஷை சபைக்கும் ஏற்பட்டுள்ள சம்பந்தத்தைப் போலவே இருக்கும்.

விவசாய சம்பந்தமான ஆராய்ச்சிவேலைச் சபைக்கு, கால்நடை வைத்திய சம்பந்தமான விஷயங்களில் விவகரிப்பதற்காக ஒரு சிறிய ஸ்டாண்டிங் கம்மிட்டி என்னும் நிலையான கம்மிட்டி இருக்கவேண்டும். குறித்த விஷயங்களுக்காக மெம்பர்களைத் தெரிந்தெடுத்துச் சேர்த்துக்கொள்வதற்கும் விசேஷ கம்மிட்டிகளை ஏற்படுத்துவதற்கும் ஷை கம்மிட்டிக்கு அதிகாரம் இருக்கவேண்டும். இப்படிப் பட்ட சந்தர்ப்பங்களில், ஸிவில் வெடெரினரி டிபார்ட்டுமென்டைச் சேர்ந்த இன்ஸ்பெக்டர் ஜெனரலின் உத்தியோகத்தை மறுபடியும் ஏற்படுத்துவதோ, இந்தியா கவர்ன்மென்டுக்குக் கால்நடை வைத்திய விஷயமாய் ஆலோசனை சொல்லும் வெடெரினரி அட்வைஸர் என்னும் உத்தியோகஸ்தர் ஒருவரைப் புதிதாய் ஏற்படுத்துவதோ அவசியமென்று எங்களுக்குத் தோற்றவில்லை.

## 8. நீர்ப்பாய்ச்சல்.

பிரதான ரிபோர்ட்டின் 10-ம் அத்தியாயம்.

1903-ம்ஷு த்தில் ஏற்படுத்தப்பட்ட நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கம்மிட்டியாரின் ரிபோர்ட் மிகவும் விஸ்தாரமாகவும் அவர்கள் செய்த சிபாரிசுகள் வெகு பூர்த்தியாகவும் இருந்தபடியால், அம்மாதிரியான விசாரணையொன்றைப் பின்னும் நடத்துவது அவசியமென்று கருதப்படவில்லை. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கொள்கையும் அபிவிருத்தியும் பெரும்பாலும் ஷை. கம்மிட்டியாரால் நிர்ணயிக்கப்பட்ட வழிகளிலேயே ஏற்பட்டு வந்திருக்கின்றன. ஆகவே, விவசாய விஷயத்துக்குச் சம்பந்தப்பட்டமட்டில்தான் நாங்கள் நீர்ப்பாய்ச்சல் விஷயத்தைப்பற்றி கவனித்திருக்கிறோம்.

பற்பல மாகாணங்களின் கிராமப் பொருளாதார விஷயமாய் நீர்ப் பாசனத்தினால் ஏற்படும் பலனானது மாகாணத்துக்கு மாகாணம் பெரிதும் வித்தியாசப்படுகிறது. ஆனால், அது ஸிந்து, பஞ்சாப், வடமேற்கு எல்லைப்புற மாகாணம், சென்னை, ஐக்கிய மாகாணம், பீஹார்-ஒரிஸ்ஸா என்னும் மாகாணங்களில் முக்கியமாய்க் கவனிக்க வேண்டிய விஷயமாக இருக்கிறது. 1921-22-ம்ஷு முதல் 1925-26-ம்ஷு வரையிலுள்ள ஐந்து வருஷங்களிலே, கவர்ன்மென்டைச் சேர்ந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளிலிருந்தும் தனிநபர்களைச் சேர்ந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளிலிருந்தும் சராசரியில் சுமார் 500 லட்ச ஏகரா பூமிக்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. இதிலிருந்து கணக்கெடுத்தால், விதை விதைக்கப்பட்ட விஸ்தீர்ணத்தில் 100க்கு 19·4 வீதமுள்ள பூமிக்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டதாக ஏற்படுகிறது. தண்ணீர் பாய்ச்சப்படும் மொத்த விஸ்தீர்ணத்தில் அனேகமாய் பாதி பாகத்துக்குக் கால்வாய்களிலிருந்தும், மற்ற பாகத்துக்குக் குளங்கள் அல்லது ஏரிகள், கிணறுகள் முதலிய ஜலாதாரங்களிலிருந்தும் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது.

இந்தியாவில் இப்போது இருக்கும் கால்வாய்ப் பாசன ஏற்பாடுகளைப்பற்றி நாங்கள் விவரமாய்ச் சொல்லவில்லை. ஆனால், இப்போது வேலை நடத்தப்பட்டுவரும் அல்லது இனி ஏற்படுத்த உத்தேசிக்கும் முக்கியமான பாசன ஏற்பாடுகளுள் சிலவற்றைக் குறிப்

பிடுகிறோம். கீழே நாங்கள் மிகவும் சுருக்கமாய் விவரித்திருப்ப தைக்கொண்டு, குறித்த எந்த ஏற்பாட்டையாகிலும் நாங்கள் சிலாக்கியமாய்க் கொள்வதாக எவ்விதத்திலும் நினைக்கக்கூடாது.

பஞ்சாபில் கவர்ன்மென்டைச் சேர்ந்த கட்டுவேலைகளிலிருந்து 1887-88-ம் ஹூத்தில் 23 லட்ச ஏகரா பூமிக்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. ஆனால், 1921-22-ம்ஹூ முதல் 1925-26-ம்ஹூ வரையிலுள்ள ஐந்து வருஷங்களிலே சராசரியில் 104 லட்ச ஏகரா பூமிக்குத் தண்ணீர் பாய்ச்சப்பட்டது. தண்ணீர் பாய்ச்சப்படும் விஸ்தீர்ணம் இந்தப்படி கிதானமாய் அதிகரித்துக்கொண்டே வந்திருக்கும் பஞ்சாபில் ஷை விஸ்தீர்ணத்தை இன்னும் எவ்வளவோ அதிகப்படுத்துவதற்கு இடமிருக்கிறது. இப்போது பஞ்சாபில் வேலை நடந்துவரும் ஓரே பெரிய பாசன ஏற்பாடாகிய ஸட்லெஜ் கணவாய்ப் பாசன ஏற்பாடானது 1933-34-ம்ஹூத்தில் முடிவடையும் போது, அதிலிருந்து 20 லட்ச ஏகரா பூமிக்கு சாசுவதமாய்த் தண்ணீர் பாய்ச்சுவது சாத்தியமாகும். ஆனால், இதர பெரிய பாசன ஏற்பாடுகள் விஷயமாகவும் இப்போது ஆலோசனை செய்யப்பட்டு வருகிறது. தால் பாசன ஏற்பாட்டிலிருந்து அதன் திருத்தப்பட்ட உருவத்திலுங்கூட சுமார் 15 லட்ச ஏகரா பூமிக்குப் பாய்ச்சுவதற்கு வேண்டிய தண்ணீர் கிடைக்கும். ஹவேலி பாசன ஏற்பாடு மூலமாக சுமார் ஏழு லட்ச ஏகரா விஸ்தீர்ணமுள்ள பூமிக்கு சாசுவதமாய்ப் பாய்ச்சுவதற்குத் தண்ணீர் கிடைகும். ஸட்லெஜ் அணைப்பாசன ஏற்பாடு பூர்த்தியானல், ஸட்லெஜ் நதிக்கும் யமுனை நதிக்கும் இடையில் வசந்தகாலப்பயிர்கள் சாகுபடி செய்வதற்காக 20 லட்ச ஏகரா பூமிக்குப் புதிதாய்த் தண்ணீர் கிடைக்கும்.

தற்காலத்தில், ஸிந்துவிலிருக்கும் கால்வாய்களில் அனேகமாய் எல்லாக் கால்வாய்களும் வெள்ளத்தினல் தண்ணீர் பெறும் காலவாய்களாகவே இருக்கின்றன. ஸிந்து நதியில் வெள்ளம் வரும்போது தான் அவைகளுக்கு சுமார் ஐந்து மாத தண்ணீர் வருகிறது. இந்தப்படி கிடைக்கும் தண்ணீரின் அளவும் ஓரே மாதிரியாயிராமல் அவ்வப்போது மாறிக்கொண்டிருக்கிறது. ஸிந்து நதிக்குக் குறுக்கே ஸுக்கூருக்குச் சற்று கீழாகக் கட்டப்பட்டுவரும் ஸுக்கூர் அணைக்கட்டு பூர்த்தியாய்விட்டால், இந்த நிலைமை முற்றிலும் மாறிவிடும். உலகத்திலேயே இதைப் போன்ற அணைக்கட்டுகளில் இதுவே மிகவும் பெரிய அணைக்கட்டாக இருக்கும். ஐம்பது லட்ச ஏகரா பூமிக்கு மேற்பட்டு இதிலிருந்து தண்ணீர் பாயுமென்று எதிர்பார்க்கப்படுகிறது. அந்த ஐம்பது லட்ச ஏகரா பூமியில் இருபது லட்ச ஏகரா பூமிக்கு இப்போது ஷை வெள்ளக்கால்வாய்களிலிருந்து மிகவும் அதிருப்திகரமாக தண்ணீர் பாய்ச்சப்பட்டு வருகிறது.

ஐக்கிய மாகாணத்தில் இப்போது கட்டப்பட்டுவரும் சாரதா கால்வாயொன்றுதான் முக்கியமான பாசன ஏற்பாடாகும். இதிலிருந்து வருஷவாரியில் சுமார் 17 லட்ச ஏகரா விஸ்தீர்ணமுள்ள பூமிக்குத் தண்ணீர் பாயுமென்று மதிப்பிடப்படுகிறது. அது சம்பந்தமான வேலை பூர்த்தியானவுடன், ஐக்கிய மாகாணத்தில் நிரந்தரமான நீர்ப்பாசனத்துக்குக் கிடைக்கக்கூடிய முக்கியமான ஜலாதாரங்களையெல்லாம் உபயோகித்துவிட்டதாகக் கருதவேண்டும்.

சென்னை ராஜதானியிலுள்ள பெரிய பாசன ஏற்பாடுகளாகிய கோதாவரி, கிருஷ்ணா, காவேரி என்பவைகளின் லட்சணமானது மேலே விவரித்துச் சொல்லியிருக்கும் பாசன ஏற்பாடுகளின் லட்சணத்தினின்றும் முற்றிலும் வித்தியாசப்படுகிறது. ஜல சர்ப்பராவைப் புதிய விஸ்தீர்ணங்களுக்குக் கிடைக்கும்படி செய்வதற்குப் பர்த்தியாக அதை ஒழுங்குபடுத்திவிடுவதே இங்கே கவனிக்கவேண்டிய பிரசினையாயிருக்கிறது. டெல்டா பிரதேசங்களிலுள்ள நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சுவதற்காக போதுமான மட்டத்தில் தண்ணீர் கிடைக்கும்படிச் செய்யும்பொருட்டு அணைக்கட்டுகள் கட்டுவதும், ஷை நிலங்களின்மேல் தண்ணீரைக் கொண்டுபோவதற்காக மதகுகளையும் ரெகுலேட்டர் என்னும் தண்ணீர் சர்ப்பராவை ஒழுங்குபடுத்தி விடுவதற்கான சாதனங்களையும் அமைப்பதுமே இங்கே செய்யப்படும் வேலைகளாகும். இப்போது கிடைக்கும் ஜலசர்ப்பராவை அதிகப்படுத்தும் நோக்கத்துடன், இந்த மாகாணத்திலுள்ள பெரிய நதிகளிலும் அவைகளைச் சேர்ந்த கிளை நதிகளிலும் இதர ஓடைகளிலும் இருக்கும் தண்ணீரை அடைத்துச் சேர்த்துவைப்பதற்கான நீர்நிலைகளே இப்போது கட்டப்பட்டுவரும் அல்லது இனி கட்ட ஆலோசனையிலிருந்துவரும் புதிய கட்டுவேலைகளாகும். இப்போது கட்டப்பட்டுவரும் காவேரி - மேட்டூர் பாசன ஏற்பாட்டினால், ஏற்கனவே தண்ணீர் பாய்ச்சப்பட்டு வந்திருக்கும் பத்து லட்ச ஏகரா விஸ்தீர்ணமுள்ள பூமிக்கு அதிகமான ஜல சர்ப்பரா கிடைக்குமென்றும், முதல் போகம் பயிர்செய்யக்கூடிய 2,21,000 ஏகரா விஸ்தீர்ணமுள்ள நிலத்துக்கும் இரண்டாம் போகம் பயிர்செய்யக்கூடிய 90, 000 ஏகரா விஸ்தீர்ணமுள்ள நிலத்துக்கும் புதிதாய்த் தண்ணீர் பாய்ச்சல் கிடைக்குமென்றும் மதிப்பிடப்படுகிறது. மேலும், இப்போது போதுமானமட்டில் தண்ணீர் பாய்ச்சப்பட்டு வராத 80,000 ஏகரா விஸ்தீர்ணமுள்ள பழைய நஞ்சை பூமிக்கும் ஷை ஏற்பாட்டினால் தண்ணீர் சர்ப்பரா அதிகமாகக் கிடைக்கும். கிருஷ்ணா, துங்கபத்திரை என்னும் இரண்டு பாசன ஏற்பாடுகளைக்குறித்து வெகுகாலமாக யோசனை செய்யப்பட்டுவருகிறது. பல்லாரி ஜில்லாவில் திம்மலாபுரத்தண்டை ஒரு நீர்நிலையைக் கட்டி துங்கபத்திரை நதியின் தண்ணீரைத் தேக்கிவைப்பதற்கான திருத்தமான பாசன ஏற்பாட்டின் விஷயமாய் இப்போது விசேஷகவனம் செலுத்தப்பட்டு வருகிறது இவ்வேலை பூர்த்தியாகிறபட்சத்திலே, க்ஷாமம் ஏற்படுவதற்கு விசேஷமாய் உட்பட்டிருக்கும் பிரதேசங்களில் விஸ்தாரமாய்ப் பாய்ச்சுவதற்குத் தண்ணீர் கிடைக்கும். திரவிய சம்பந்தமாகவோ சாஸ்திர சம்பந்தமாகவோ கவனிக்கும்போது இவ்விரண்டு பாசன ஏற்பாடுகளில் எதுவும் சாத்தியப்படுமா சாத்தியப்படாதா என்பதைக் குறித்து நாங்கள் எவ்வித அபிப்பிராயமும் தெரிவிக்கும்படியான நிலைமையில் இல்லை.

ஸிந்தில் நடப்பதுபோலல்லாமல், பம்பாய் ராஜதானியில் தட்சணத்துக்கும் (மிகக்குறைவான திட்டத்தில்) குஜராத்துக்கும் மாத்திரமே கால்வாய்கள் மூலமாகத் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. பம்பாயைச் சேர்ந்ததாய் அதைச் சுற்றிலுமுள்ள பிரதேசத்தைக் குறித்து நாங்கள் இங்கே சொல்லவில்லை. தண்ணீரைத் தேக்கிவைப்பதற்கா

கக் கட்டியிருக்கும் நீர்நிலைகளே பம்பாய் ராஜதானியில் மிகவும் முக்கியமான கட்டுவேலைகளாகும். பூனாவுக்கு வடக்கே பத்து மைல் தூரத்தில் மூதா நதிக்குக் குறுக்காகக் கட்டப்பட்டிருக்கும் காடக் வாஸ்லா டாம் என்னும் அணைக்கட்டு 1879-ம்வருஷத்தில் கட்டி முடிக்கப்பட்டது. இதுவே இந்தியாவில் கட்டப்பட்டிருக்கும் அணைக்கட்டுகள் எல்லாவற்றிலும் முதலில் கட்டப்பட்டதாகும். பம்பாய் ராஜதானியில் செய்திருக்கும் பாசன ஏற்பாட்டின் முக்கிய நோக்கம் என்னவென்றால், பஞ்சம் நேரிடாதபடி பாதுகாப்பதேயாகும். கவர்ன்மெண்டைச் சேர்ந்த நீர்ப்பாய்ச்சல் கட்டுவேலைகளிலிருந்து சுமார் 4,50,000 ஏகரா விஸ்தீர்ணமுள்ள பூமிக்குத்தான் தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. வெகு சில இடங்களில் தவிர மற்ற இடங்களிலே, இந்தக் கட்டுவேலைகளைக்கொண்டு வேலை செய்வதனால் வருஷந்தோறும் ஏராளமான நஷ்டம் நேரிடுகிறது. மேற்குத் தொடர்ச்சி மலைகளில் பெய்யும் மழையே இந்தக் கட்டுவேலைகளுக்கு உபயோகப்படுவதையும், அந்த மழை தவறாமல் பெய்வதையும் நோக்கும்போது, இது மிகவும் தௌர்ப்பாக்கியமான நிலைமையேயாகும். விசேஷமாய்ப் பஞ்சத்துக்குள்ளாகும் ஷோலாபூர் ஜில்லாவின் ஒரு பாகத்தைப் பாதுகாப்பதற்காகவும் இப்போதுள்ள நீர்ப்பாய்ச்சல் வசதியை அதிகப்படுத்துவதற்காகவும் உத்தேசித்து பட்கார் என்னுமிடத்தில் கட்டப்பட்டிருக்கும் லாய்ட் டாம் என்னும் அணைக்கட்டுதான் இந்த ராஜதானியில் புதிதாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலைகள் எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானதாகும்.

கால்வாய்களுக்கு அடுத்தபடி கிணறுகளே மற்ற எல்லாப் பாய்ச்சலாதாரங்களைக் காட்டிலும் மிகவும் முக்கியமானவை. மேலும், 1925–26-ம்வருஷத்தோடு முடிவான ஐந்து வருஷ காலத்தில் கிணறுகளிலிருந்து வருஷந்தோறும் சராசரியில் 110 லட்ச ஏகராவுக்கு மேற்பட்டுத் தண்ணீர் பாய்ச்சப்பட்டிருக்கிறது. இந்தக் கிணறுகள் பலவேறு வகைப்பட்டவை. பூமியில் வெறும் துவாரங்கள் ரூபமாக இருக்கும் கிணறுகள் முதல், விசேஷ அகலமும் மிகுந்த ஆழமும் உள்ளவைகளாய் விஸ்தாரமாய்க் கல்கட்டிடமாகக் கட்டப்பட்டிருக்கும் கிணறுகள் அல்லது சிறு துவாரமுள்ள குழாய்கள் வைத்த கிணறுகள் வரையில் இருக்கின்றன. கடைசியாய்ச் சொன்ன இந்தக் கிணறுகளிலிருந்து சக்தியைக்கொண்டு தண்ணீரைப் பம்ப் செய்கிறபட்சத்திலே, ஏராளமாகவும் தொடர்ச்சியாகவும் தண்ணீர் சர்ப்பரா பெறக்கூடும். ஐக்கிய மாகாணத்தில் கிணறுகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சும் முறை மிகவும் அதிகமாய் விருத்தியடைந்திருக்கிறது. அங்கே, 45 லட்சஏகராவுக்கு மேற்பட்ட பூமிக்குக் கிணறுகளிலிருந்து தண்ணீர் பாய்ச்சப்படுகிறது. மூன்றாவதாக, குளங்களே பெரிய பாய்ச்சலாதாரமாகும் இவை தண்ணீரைச் சேர்த்துவைப்பதற்கான பெரிய நீர்நிலைகளிலிருந்து சிறிய பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலைகள் வரையில் இருக்கின்றன. மேற்படி நீர்நிலைகளிலிருந்து தண்ணீர் பாய்வதற்கான வாய்க்கால்கள் பிரிந்து பல்லாயிரக்கணக்கான ஏகரா பூமிக்குத் தண்ணீர் பாய்கிறது. மேலேகண்ட சிறிய கட்டுவேலைகளிலிருந்தோ சில ஏகரா விஸ்தீர்ணமுள்ள பூமிக்கே தண்ணீர்

பாய்கிறது. சென்னை ராஜதானி சம்பந்தப்பட்டமட்டில் அவை விசேஷமாய்க் கவனிக்கவேண்டிய அளவுக்கு முக்கியமானவைகளாக இருக்கின்றன.

சீர்திருத்தங்கள் ஏற்பட்ட பிறகு, பிரதேச கவர்ன்மென்டுகள் தங்களுடைய நடைமுதல் வருமானத்திலிருந்தாவது தாங்கள் பரா மரித்துவரக் கட்டுப்பட்டிருக்கும் க்ஷாம நிவாரண நிதியிலிருந்தாவது பாதுகாப்புக்குரிய பாசன ஏற்பாடுகளை அமைப்பதற்கு வேண்டிய பணத்தைக் கொடுக்கமுடியாதவர்களாயிருந்தால், அப்படிப்பட்ட ஏற்பாடுகளுக்கு வேண்டியிருக்கும் பணத்தைக் கடன்கள் மூலமாய்ச் சேகரிக்கக்கூடிய நிலைமையில் இருக்கின்றன. திரவிய சம்பந்த மான நிலைமை இடம் கொடுக்கக்கூடியமட்டில், பாதுகாப்புக்குரிய நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கட்டுவேலைகளைப் பின்னும் ஏற்படுத்து வதற்கு இதனால் தூண்டுதல் ஏற்படுமென்று நாங்கள் நம்புகிறோம்.

பாய்ச்சும் தண்ணீரைச் சேதப்படுத்துவதைத் தடுப்பதற்கும், விவசாயிக்குக் கிடைக்கும் ஜல சர்ப்பரா அவருக்குத் தவறாமல் கிடைக்கும்படி முன்னிலும் அதிக நிஷ்கரிஷையாய் ஏற்பாடு செய்வ தற்கும், அவருடைய பூமிக்குப் பாயும் தண்ணீரின் அளவை எழுதி வைக்கும் சிப்பந்திகளால் அவருக்கு எவ்வித தொந்தரவும் ஏற்ப டாதபடியும் அவர்கள் அவ்ர் விஷயத்தில் எவ்விதத்திலும் பிரவேசிக் காதபடியும் செய்வதற்குச் சம்பந்தப்பட்ட பிரசினையைப்பற்றி இந்தியாவிலுள்ள நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான நிபுணர்கள் வெகு காலமாக கவனம் செலுத்திவந்திருக்கிறார்கள். விவசாயிகள் வடி கால்களிலிருந்தே தங்களுக்கு வேண்டிய ஜல சர்ப்பராவைப் பெறும் படியும், தண்ணீரைத் தங்களுக்குள்ளாகவே பங்கீடு செய்துகொள்வ தைப்பற்றிய சகல விவரங்களைக் குறித்தும் தாங்களே ஏற்பாடு செய்துகொள்ளும்படியும், இது விஷயமாய்ப் பின்னும் ஏற்படும் சகல உத்தரவாதங்களும் பாய்ச்சல் சம்பந்தமான விவரங்களை எழு திவைப்பதற்காகவும் பாய்ச்சப்பட்ட தண்ணீரின் அளவை முடி வாய்க் கணக்கெடுத்து அதற்கு வரியை மதிப்பிடுவதற்காகவும் பிடிக் கும் விசேஷ செலவும் கால்வாய் சம்பந்தமான பரிபாலன உத்தி யோகஸ்தர்களுக்கு இராதபடி செய்யும்படியும் விவசாயிகளைத் தூண்டக்கூடுமானால், அதனால் கவர்ன்மென்டார், விவசாயிகள் ஆகிய இருதிறத்தாருக்கும் மிகுந்த நன்மை ஏற்படுமென்று இந்து தேசத்து நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கம்மிட்டியார் அபிப்பிராயப் பட்டார்கள். ஆயினும், பிரமாணத்தை அனுசரித்துத் தண்ணீரைப் பங்கீடு செய்வது விஷயமாய் எவ்வகையான முறையை அனுசரிக்க உத்தேசிக்கக்கூடுமோ அந்த முறையானது உத்தேசிக்கப்பட்ட விஷயம் இன்னதென்று ஜனங்கள் தெரிந்துகொள்வதற்குப் போது மான காலம்வரையில் அனுசரிக்கப்பட்டிருந்தாலொழிய, அளவுக் குத் தக்கபடி தண்ணீர் வரி விதிக்கும் முறையை இந்தியாவில் நிர்ப் பயமாய் அமுலுக்குக் கொண்டுவரமுடியாதென்று அவர்கள் முடி வில அபிப்பிராயப்பட்டார்கள். அப்போதுங்கூட, வரி விதிக்கும் முறையில் ஏற்படுத்தும் மாறுதலை நிர்ப்பந்தமாய் அமுலுக்குக் கொண்டுவராமல், ஜனங்கள் அதனால் ஏற்படும் நன்மைகளைத் தெரி நதுகொள்ள ஆரம்பித்தபிறகு சிறிதுசிறிதாக அமுலுக்குக் கொண்டு

வரவேண்டுமென்று அவர்கள் அபிப்பிராயப்பட்டார்கள். மேலும், இந்த லட்சியம் நிறைவேறும்படி முயற்சி செய்யவேண்டுமென்றும், அளவுக்குத் தக்கபடி வரி விதிப்பது சம்பந்தமான யாதொரு ஏற்பாடு சீக்கிரமாய் அனுசரிக்கப்படவேண்டுமானால் எவ்வளவு ஒழுங்காகவும் நிஷ்கரிஷையாகவும் தண்ணீரைப் பங்கீடு செய்வது சம்பந்தமான வேலையை நடத்தவேண்டுமோ அவ்வளவு ஒழுங்காகவும் நிஷ்கரிஷையாகவும் அந்த வேலை நடத்தப்படுகிறவரையில் அனுஷ்டானத்தில் காணப்படக்கூடிய நிலைமைகளுக்குப் பொருத்தமாயிருக்கும் பிரமாணங்களைக் கண்டுபிடித்து பரீட்சை செய்துபார்க்கும்படி நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான உத்தியோகஸ்தர்களைத் தூண்டவேண்டுமென்றும் அவர்கள் எழுதியிருந்தார்கள். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான கம்மிட்டியார் செய்த இந்த சிபாரிசுகள் காரணமாக, தண்ணீரை அதிக சாஸ்திர ரீதியாகவும் தருமரீதியாகவும் பங்கீடு செய்வது சாத்தியமா என்னும் விஷயத்தைக் குறித்து ஆராய்ச்சி செய்ய ஆரம்பிக்கப்பட்டது. தண்ணீரைப் பங்கீடு செய்யும் முறையை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் சென்ற சில வருஷங்களாக விசேஷ முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. பஞ்சாபிலுள்ள ஒவ்வொரு பங்கீட்டு வாய்க்காலிலும் மீட்டர் என்னும் அளவுகருவி வைக்கப்பட்டிருக்கிறது அல்லது வைக்கப்பட்டுவருகிறது. இதனால், அந்த வாய்க்காலுக்குள் எவ்வளவு தண்ணீர் செல்லுகிறதென்பதைச் சரியாய்த் தெரிந்துகொள்ளலாம். இந்தப்படி செய்ததனால், தண்ணீர் சர்ப்பரா விஷயத்தில் விசேஷ சிக்கனம் செய்யப்பட்டிருக்கிறது. இது காரணமாக, முன்பு தண்ணீர் கிடைக்காத பிரதேசங்களுக்கும் தண்ணீர் பாய்ச்சுவது சாத்தியமாயிற்று. மேலும், கீழ்த்தர சிப்பந்திகள் விவசாயிகளுக்குத் தொந்தரவு கொடுப்பதற்கும் அவர்கள் விஷயத்தில் தலையிடுவதற்கும் ஏற்பட்டிருந்த அவகாசங்கள் பெரிதும் குறைந்துபோயிருக்கின்றன. ஆனால், தண்ணீரை அளந்து விற்பனை செய்வது சாத்தியப்படுமோ என்பதைப்பற்றி நீர்ப்பாசன என்ஜினீர்கள் சிறிதுமட்டில் சந்தேகப்படுகிறார்கள். எங்களிடத்தில் இந்த முறைக்கு விரோதமாக அனேக நியாயங்கள் எடுத்துக்காட்டப்பட்டன. ஆயினும், தண்ணீரை அளந்து விற்பனை செய்வதற்கு விரோதமாக முடிவான தீர்மானத்துக்கு வருவதற்கு முன்னே, இவ்விஷயத்தைப்பற்றி பின்னும் ஆராய்ச்சி செய்வதும் பரீட்சை செய்து பார்ப்பதும் மிகவும் உசிதமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

விஸ்தீர்ணக் கணக்கின்படி தண்ணீர் பாய்ச்சும் முறையிலுங் கூட, சில விவசாயிகள் தங்களுக்கு விடப்படும் தண்ணீரை மற்றவர்களைவிட அதிக தூரத்துக்குக் கொண்டுபோய்ப் பாயவிடுகிறார்கள். ஒருவர் தண்ணீரைச் சிக்கனமாய் உபயோகித்திருப்பது காரணமாகவே அவருக்குச் சர்ப்பரா செய்யும் தண்ணீரின் அளவைக் குறைக்கக்கூடாது.

தண்ணீரைப் பங்கீடு செய்யும் வேலையை நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான இலாகாவிலிருந்து விவசாய இலாகாவுக்கு மாற்றிவிடுவது நல்லதென்று பல சாட்சிகள் எங்களிடத்தில் தெரிவித்தார்கள்

இம்மாதிரி செய்வதனால் எவ்வித நன்மையும் ஏற்படுமென்று எங்களுக்குத் தோற்றவில்லை. வயல்களுக்குப் பாயும் வாய்க்கால்கள் வரையில் தண்ணீரைப் பங்கிடு செய்வது விஷயமாய் கவர்ன்மென்டார் அனுசரித்துவரும் மேல்விசாரணை முறைக்குப் பர்த்தியாக அனுசரிப்பதற்குத் தற்காலத்தில் அனுஷ்டானத்திலே வேறே எவ்விதமான முறையும் இல்லையென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆயினும், தண்ணீரை அளந்து விற்பனை செய்யும் முறையைப் பொதுவாய் அனுசரிக்கிறபட்சத்திலே, சிறு பங்கீட்டு வாய்க்கால்கள் விஷயமாய் உத்தியோகஸ்தர்கள் நிர்வாகம் செய்வதற்குப் பர்த்தியாக தனிநபர்கள் நிர்வாகம் செய்வதற்கு மிகுந்த சௌகரியம் ஏற்படுமென்பதில் சிறிதும் சந்தேகமில்லை. பயிரிடுபவர்கள் கூட்டாய் நடவடிக்கை நடத்தும்படி செய்வதற்கும் அவர்கள் பட்சபாதமின்றி நடந்துகொள்ளும்படி செய்வதற்கும், புலங்களுக்குத் தண்ணீரைப் பிரித்துக்கொண்டுபோகும் வாய்க்கால்களை நிர்வாகம் செய்வதற்காக நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான பஞ்சாயத்துகள் தகுதியான ஸ்தாபனங்களாயிருக்குமென்று தோற்றுகிறது. தற்காலத்தில் தண்ணீரைப் பங்கிடு செய்யும் பொறுப்பைத் தனிநபர்கள் மூலமாய் நடத்தும்படி விடுவதற்கு விவசாயியின் மனப்பான்மையே முக்கியமான தடங்கலாயிருக்கிறது. தண்ணீரானது விவசாயிக்கு மிகவும் முக்கியமான ஒரு பொருளாயிருப்பதால், இவ்விஷயத்தில் அவருக்குள்ள சிரத்தையை அவருடைய சகாக்களால் தீர்மானிக்கும்படிவிட அவர் இன்னும் தயாராயில்லை. பஞ்சாயத்து முறையினால் ஏற்படும் ஐக்கிய உணர்ச்சி காரணமாக இந்தக் கஷ்டங்கள் நீங்குவதுடன், பெரிய பங்கீட்டு வாய்க்கால்களைச் சித்திகரமாய் நிர்வாகம் செய்வதற்கு அவசியமான பரஸ்பர நம்பிக்கையும் விருத்தியாகும்.

பெரிய நீர்ப்பாசன ஏற்பாடுகளைத் தவிர, தண்ணீர் தேக்கி வைப்பதற்கான சிறு கட்டுவேலைகளும் சில்லறைப் பாய்ச்சலாதாரங்களும் சில பிரதேசங்களில் விவசாயிகளுக்கு மிகவும் முக்கியமானவைகளாயிருக்கின்றன. பம்பாயில் சிறிது காலத்துக்குமுன் இவ்விஷயத்தைப்பற்றி விசேஷ கவனம் செலுத்தப்பட்டது. மேலும், நிலங்களைப் பஞ்சத்தினின்றும் காப்பாற்றும்பொருட்டு இயற்கையான பாய்ச்சலாதாரங்களைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் வேலையைக் கவனிக்கும்படியாக 1925-ம் வருஷத்தில் ஒரு ஸூபரின்டெண்டிங் என்ஜினீர் பிரத்தியேகமாய் ஏற்படுத்தப்பட்டார். பம்பாய் கவர்ன்மென்டார் செய்த மாதிரி மற்ற மாகாணங்களிலும் செய்கிற பட்சத்திலே, சில்லறைக் கட்டுவேலைகளின் அபிவிருத்தியை அதிகப்படுத்தும் விஷயமாய் எவ்வளவோ செய்யக்கூடுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேலும், பம்பாயில் செயயப்பட்ட மாதிரியான வேலைகளை மழை பெய்யுமென்ற நிச்சயமிராத பிரதேசங்களுக்கு வெளியேயுள்ள ஜில்லாக்களிலும் செய்யவேண்டுமென்றும் நாங்கள் ஆலோசனை சொல்ல விரும்புகிறோம். ஜலசர்ப்பரா பெறுவதற்கான இயற்கையான ஆதாரங்களைப் பயன்படுத்திக்கொண்டு தங்களுடைய நிலத்தை விருத்தி செய்ய விரும்பும் விவசாயிகள் சாஸ்திரீய யோசனையும் சகாயமும் பெறும்பொருட்டு ஒரு பிரதிநிதித்துவ ஸ்தாபனத்தை அமைக்கவேண்டும். இதுவே இப்போது

செய்யவேண்டிய காரியமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த ஸ்தாபனத்தார் விவசாயிகள் தங்களிடம் வந்து ஆலோசனை கேட்கும் வரையில் காத்திருக்கக்கூடாது; ஆனால், அவர்கள் - விவசாயினிடம் போய், அவருக்குக் கிடைக்கக்கூடிய ஜலசர்ப்பராவைப் பூர்த்தியான அளவுக்குப் பிரயோசனகரமாய் உபயோகித்துக்கொள்வதற்கு அனுகுணமாயிருக்கும் சிறந்த ஏற்பாட்டை அனுசரிக்கும்படி அவரைத் தூண்டவேண்டும். ஷை ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்கள் வெறும் ஆலோசனை மாத்திரமே சொல்லுவதல்லாமல் இது விஷயமாய் விவசாயிகளுக்குப் போதிப்பது தங்களுடைய வேலையாகுமென்று கருதவேண்டும். ஆகவே, நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான சில்லறைக் கட்டுவேலைகளை அமைக்கும் விஷயத்தையும் பாமரித்து வரும் விஷயத்தையும் ஒரு பிரத்தியேகமான ஸ்தாபனத்தினிடத்தில் ஒப்புவிக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

குழாய்க்கிணறுகளைக்கொண்டு தண்ணீர் பாய்ச்சும் வழக்கம் சிறிது காலமாகத்தான் இந்தியாவில் அபிவிருத்தியடைந்து வந்திருக்கிறது. அனேகமாய் அவைகளெல்லாம் தனி நபர்களுக்கே சொந்தமாயிருப்பதுமல்லாமல், தனி நபர்களின் திரவிய சகாயத்தைக் கொண்டே அவைகள் ஏற்படுத்தப்படுகின்றன. ஆனால், ஐக்கிய மாகாணத்தில் ஷை கிணறுகள் கட்டுவதற்காக பெருத்த தொகைகள் சகாயத் தொகைகளாய்க் கொடுக்கப்படுகின்றன. குழாய்க் கிணறுகள் எடுக்கும் காரியத்துக்காக நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த ஆக்டின்படி கடன்கள் கொடுக்கப்படுகின்றனவென்பது வாஸ்தவமே. இது சம்பந்தப்பட்ட கவர்ன்மென்ட் இலாகாதாரர் இலவசமாய் சாஸ்திரீய சம்பந்தமான ஆலோசனை சொல்வதுடன் உதவியும் செய்கிறார்கள். மேலும், வாஸ்தவத்தில் அந்த இலாகாதாரர் செய்யும் ஊழியத்துக்காக மிதமான கட்டணம் செலுத்தப்படுவதைப் பெற்றுக்கொண்டு, அவர்கள் ஷை கிணற்றைச் சாதாரணமாய்த் தோண்டிக்கொடுக்கிறார்கள். ஐக்கிய மாகாணத்தில் இது விஷயமாய் திரவியசகாயம் செய்து கொடுப்பதற்கான விரிவான முறையொன்று அமுலில் இருந்துவருகிறது. அதனால், அது சம்பந்தமாய்ப் பிடிக்கும் செலவில் கிட்டத்தட்ட பாதி செலவைக் கவர்ன்மென்டார் ஏற்றுக்கொள்ளுகிறார்கள். இவ்விதமாக செய்துகொடுக்கப்படும் சகாயத்துடன்கூட, கவர்ன்மென்டாருக்காக விதைகளை விருத்தி செய்துகொடுக்கவோ விவசாய முறைகளைச் செய்துகாட்டும் காரியத்துக்காக கவர்ன்மென்டாருக்கு நிலத்தைக் குத்தகைக்கு விடவோ ஏற்றுக்கொள்ளும் ஜமீன்தார்கள் சில விசேஷ சந்தர்ப்பங்களில் 3,000 ரூபாய் வரையில் சகாயத்தொகைகள் பெற்றுக்கொள்ளலாம். அனுஷ்டானத்தில் உச்ச வீதப்படியே அப்படிப்பட்ட சகாயத்தொகைகள் கொடுக்கும்படி எப்போதும் விண்ணப்பங்கள் செய்துகொள்ளப்படுகின்றனவென்றும், அந்தப்படியே சகாயத்தொகைகள் கொடுக்கப்படுகின்றனவென்றும் நாங்கள் கேள்விப்படுகிறோம். சகாயத்தொகை கொடுப்பது விஷயமாய் ஐக்கிய மாகாணத்தில் அனுசரிக்கப்பட்டுவரும் முறையை அனுசரித்துவருவதற்கு நியாயம் ஏதுவும் இருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை. ஆகவே, அதை நிறுத்திவிடவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

பம்ப் அடிப்பதற்கும் தொளை செய்வதற்கும் சம்பந்தப்பட்ட வேலைகள் சம்பந்தமான மேல்விசாரணை ஒப்புவிக்கப் பெற்றிருக்கும் இலாகாதாரர் குழாய்க் கிணற்றைக்கொண்டு தண்ணீர் பாய்ச்சுவது லாபகரமாய் இருக்குமா என்னும் விஷயத்தை விவரமாய் ஆராய்ச்சி செய்து பார்க்கவேண்டுமென்றும், பூமிக்கு அடியிலுள்ள தண்ணீர் சர்ப்பராவை ஒழுங்காய்ப் பரீட்சித்துப் பார்க்கவேண்டுமென்றுங் கூட நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அப்படிப்பட்ட பாய்ச்சல் வசதியை விருத்திசெய்வதற்காகக் கவர்ன்மெண்டார் உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளுகிற பட்சத்திலே, பொருளாதார சம்பந்தமான விஷயங்களைச் சவதரித்துக் கொடுப்பதற்கும் நிபுணத்துவ ஆலோசனை சொல்லுவதற்கும் திரவியசகாயம் வேண்டியிருக்கும் இடங்களில் தக்காவிக் கடன் ஏற்பாட்டின்படி திரவியசகாயம் செய்வதற்கும் மாத்திரமே அவர்கள் உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளவேண்டும். குழாய்க் கிணறுகள் எடுப்பதற்குச் சௌகரியம் குறைவாயிருக்கிற பிரதேசங்களிலாகிலும் அவை ஜனங்களுக்கு இன்னும் நூதனமான விஷயமாகவே இருந்துவருகிற பிரதேசங்களிலாகிலும் நியாயமான ஒரு கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு தொளை செய்வதற்கான முஸ்திகளையும் திறமைவாய்ந்த தொழிலாளிகளையும் நிலத்துக்குடையவர் வசத்தில் விட்டும் கவர்ன்மெண்டார் உதவி செய்யலாம். ஆனால், இப்படிப்பட்ட விஷயங்களில் பொதுவாய்த் தனிநபர்கள் ஊக்கமாய்ச் செய்துவரும் முயற்சிகளைக் கவர்ன்மெண்டார் போட்டி போட்டுக் குறைத்து விடக்கூடாது. பம்ப் அடிக்கும் வேலையையும் தொளை போடும் வேலையையும் விவசாய இலாகாதாரரிடம் ஒப்புவித்துவிடவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

ப்ரிடிஷ் இந்தியாவில் சாதாரணக் கிணறுகளைக்கொண்டு தண்ணீர் பாய்ச்சப்படும் விஸ்தீர்ணமானது அனேகமாய் ஒரே நிலையில் இருந்துவருகிறது. மேலேகண்ட கிணறுகளைக் கட்டும் விஷயமானது முக்கியமாய்த் தனிநபர்கள் முயற்சி செய்து நடத்தவேண்டிய காரியமாகும். ஆயினும், விவசாய இலாகாவும் நீர்ப்பாசன இலாகாவும் இது சம்பந்தமாக நிலத்துக்குடையவருக்கு அனேக விதங்களில் உதவி செய்யலாம். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான சில்லறைக் கட்டு வேலைகள் விஷயமாய் ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்திருக்கும் ஸ்தாபனத்தைச் சேர்ந்தவர்களும் விவசாய இலாகாவைச் சேர்ந்த என்ஜினீரிங் பிரிவைச் சேர்ந்தவர்களும் சாஸ்திரீய சம்பந்தமான உதவி விசேஷமாய்ச் செய்யக்கூடியவர்களாயிருக்க வேண்டும். கைப்பற்று நிலங்கள் மிகச் சிறியவைகளாகவும் ஒரு கிணற்றைக் கட்டுவது தனிநபரின் சக்திக்கு மீறியதாகவும் இருக்கும் பிரதேசங்களில், கூட்டுறவு முறையில் கிணறுகள் எடுத்து வேலை செய்யும்படி ஜனங்களைத் தூண்டும் விஷயத்தில் சர்வ முயற்சிகளும் செய்யவேண்டும். இந்தியாவின் சில பாகங்களிலே உபயோகமின்றி விடப்பட்டிருக்கும் கிணறுகள் அதிகமாயிருக்கின்றன. இந்தப்படி இருக்கும் இடங்களில், அந்தக் கிணறுகள் உபயோகத்திலிராமல் போய்விட்டதன் காரணங்களைப்பற்றி ரெவினியு இலாகாதாரர் பிரத்தியேகமாய் விசாரணை நடத்தவேண்டுமென்று நாங்கள் ஆலோசனை சொல்ல விரும்புகிறோம்.

கால்வாய்கள், கிணறுகள், குளங்கள் அல்லது ஏரிகள் மூலமாகத் தண்ணீர் பாய்ச்சுவதுடன்கூட, மழைத் தண்ணீரைத் தேக்கி வைப்பதற்காக ஒவ்வொரு பருவத்திலும் கணக்கற்ற கரைகளை அங்காமியாய்க் கட்டி நதிகளிலிருந்தும் ஓடைகளிலிருந்தும் ஏற்றம் போட்டுத் தண்ணீர் இறைக்கப்படுகிறது. மொத்தத்தில் தண்ணீர் பாய்ச்சப்படும் விஸ்தீர்ணத்திலே நூற்றுக்குப் பத்து வீதத்துக்கு மேற்பட்ட பாகத்துக்குச் சகாயகரமாய் ஏற்பட்டுள்ள பலவகையான இந்தப் பாய்ச்சலாதாரங்கள் மூலமாக தண்ணீர் கிடைக்கிறபடியால், அவை மொத்தத்தில் முக்கியமாகும். பம்ப் அடிக்கும் வேலைகள் நடத்துவதற்கு உத்தரவாதியாயிருக்கும் விவசாய சம்பந்தமான என்ஜினீரிங் இலாகாவைச் சேர்ந்த பிரிவிலுள்ளவர்கள் விலை சரசமாகவும் சித்திகரமாய் வேலை செய்யக்கூடியவைகளாயுமுள்ள பம்புகளைக் கண்டுபிடித்து அவைகளை சர்க்காரைச் சேராத தனிநபர்கள் விருத்தி செய்யும் விஷயத்தை ஏற்றுக்கொள்ளும்படியும் அவைகளுக்கு மராமத்து செய்யும் வேலைக்காக ஏற்பாடு செய்யும்படியும் முயற்சி செய்யும்படி தனி நபர்களைத் தூண்டுவதற்கும் இது சம்பந்தமாய் ஷை பிரிவாருக்கு நல்ல சமயம் வாய்த்திருக்கிறதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

விவசாய இலாகாவும் நீர்ப்பாசன இலாகாவும் நிலவிருத்தி சம்பந்தமான பிரசினைகளில் நெருக்கமாய்ச் சம்பந்தப்பட்டிருப்பதால், இந்த இரண்டு இலாகாக்களும் மிகவும் நெருங்கி வேலை செய்துவர வேண்டுமென்று ஸ்பஷ்டமாய் ஏற்படுகிறது. நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான சகல புதிய ஏற்பாடுகளின் விவசாய அம்சத்தைக் குறித்து ஆரம்ப தசையிலேயே விவசாய இலாகா டைரெக்டரவர்களின் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொள்ளவேண்டுமென்றும், விவசாய இலாகா தலைவரும் நீர்ப்பாசன இலாகா தலைவரும் விஷயங்களைப் பற்றி அடிக்கடி கலந்து ஆலோசனைகள் செய்யவேண்டுமென்றும், அவர்களுடைய அபிப்பிராயங்களைக் கிரமாசாரமாய் எழுதிவைக்க வேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேலும், ஒரு இலாகாவின் உத்தியோகஸ்தர்கள் மற்றொரு இலாகாவின் பிரசினைகளைக் குறித்துச் சிறிதுமட்டில் தெரிந்துகொள்ளும்பொருட்டு, விவசாய விஷயமாய் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான உத்தியோகஸ்தர்களுக்கும் நீர்ப்பாய்ச்சல் விஷயமாய் விவசாய சம்பந்தமான உத்தியோகஸ்தர்களுக்கும் சொற்ப காலம் போதனை செய்வதற்காக பாடக்கிரமங்கள் ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

விவசாயிகளின் நன்மையை அபிவிருத்தி செய்வதற்காகவே நீர்ப்பாசன இலாகா ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, அவர்கள் அந்த இலாகாவில் உத்தரவாதம் வகிக்கும் உத்தியோகஸ்தர்களுடனும் கவர்ன்மெண்டாருடனும் நேரான முறையில் முன்னிலும் அதிக சம்பந்தம் வைத்துக்கொள்வது நல்லது. அப்படிப்பட்ட சம்பந்தம் ஏற்படும்பொருட்டு, எந்த மாகாணங்களில் நீர்ப்பாய்ச்சல் விஷயம் முக்கியமானதாயிருக்கிறதோ அந்த மாகாணங்களில் பிரதேச ரெயில்வே ஆலோசனைக் கம்மிட்டிகளை ஏற்படுத்தியிருக்கிற மாதிரி ஒரு ஸ்தாபனத்தை அமைக்கும்படி நாங்கள் ஆலோசனை சொல்லுவோம்.

அந்த ஸ்தாபனத்தில் நீர்ப்பாசன இலாகா, ரெவினியு இலாகா, விவசாய இலாகா ஆகிய இந்த மூன்று இலாகாக்களின் பிரதிநிதிகள் இருப்பதுடன்கூட, உத்தியோகப்பற்றில்லாத மெம்பர்கள் பெரும்பான்மையோராய் இருக்கவும் வேண்டும். கூடுமானால் இந்த மெம்பர்கள் விவசாயிகளாகவே இருக்கவேண்டும். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான விஷயங்களைக் குறித்து விவசாயிகளோ விவசாயிகளின் சங்கங்களோ செய்துகொள்ளும் முறையீடுகளை விசாரித்து நடவடிக்கை நடத்துவதே இந்த ஆலோசனைக் கம்மிட்டியின் பிரதான வேலையாகும்.

இந்தியா கவர்ன்மென்டார் சிறிது காலத்துக்குமுன் ஸென்ட்ரல் இரிகேஷன் போர்ட் என்னும் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான மத்திய சபையொன்றை ஏற்படுத்தினார்கள். இந்த சபையில் இந்தியா கவர்ன்மென்டைச் சேர்ந்த கன்ஸல்டிங் என்ஜினீரும் மாகாணங்களில் நீர்ப்பாய்ச்சல் விஷயமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் எல்லா சீவ் என்ஜினீர்களும் மெம்பர்களாயிருக்கிறார்கள். ஆராய்ச்சி செய்யப்படப்போகும் கட்டுவேலைகளைப் போன்ற கட்டுவேலைகள் விஷயமாய் சமீப காலத்தில் அனுபவம் பெற்றிருக்கும் என்ஜினீர்களைக்கொண்ட ஸப் கம்மிட்டிகள் மூலமாய் ஷை சபை வேலை செய்துவரும். புதிதாய் யாதொரு பாசன ஏற்பாட்டை ஜாரி செய்யப்போவதாயிருந்தாலும், சாஸ்திர சம்பந்தமான எந்த விஷயத்திலாகிலும் இன்னபடி பிரவர்த்திக்க வேண்டுமென்பதைப்பற்றி எந்த மாகாணத்துக்காவது கஷ்டம் ஏற்பட்டாலும், சம்பந்தப்பட்ட பிரதேச கவர்ன்மென்டார் கேட்டுக்கொள்வதன்மேல் இந்தியா கவர்ன்மென்டார் இந்த ஸப் கம்மிட்டிகளைக் கூட்டுவார்கள். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான இந்த மத்திய சபையுடன்கூட, நீர்ப்பாய்ச்சல் விஷயமான சங்கதிகளைத் தெரிவிக்கும் மத்திய ஸ்தாபனம் ஒன்றையும் ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் பிரேரேபிக்கிறோம். இந்த ஸ்தாபனத்தை இந்தியா கவர்ன்மென்டைச் சேர்ந்த கன்ஸல்டிங் என்ஜினீரின் விசாரணையில் வைப்பதும் அதன் தலைமை ஸ்தானத்தை டெல்லியில் ஏற்படுத்துவதும் தகுதியாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான பிரசுரங்கள் அடங்கிய ஒரு பெரிய புத்தகசாலையை ஏற்படுத்திப் பராமரித்து வருவதும், மாகாண உத்தியோகஸ்தர்களுக்கு வேண்டிய சமாசாரங்களை அவ்வப்போது தெரிவித்துக்கொண்டு வருவதும் ஷை ஸ்தாபனத்தின் முக்கியமான வேலைகளாகும். மேலும், அது இந்தியாவிலும் வெளி நாடுகளிலும் நீர்ப்பாய்ச்சல் விஷயமாய் ஏற்படும் அபிவிருத்திகளை விவசாய சம்பந்தமான உத்தியோகஸ்தர்களும் பொதுஜனங்களும் சாதாரணமாய்த் தெரிந்துகொள்ளும்படிச் செய்ய முயற்சி பண்ணவேண்டும். அன்றியும், பற்பல மாகாணங்களிலும் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான என்ஜினீருக்கு விசேஷசிரத்தை ஏற்படும்படியான அம்சங்கள் பொருந்தியுள்ள பிரதேசங்களிலும் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான என்ஜினீர்களின் கூட்டங்களை முறைப்பிரகாரம் வருஷத்துக்கொரு தரமோ இரண்டு வருஷத்துக்கொரு தரமோ நடத்த வேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். நீர்ப்பாய்ச்சல் விஷயம் முக்கியமானதாகக் கருதப்படும் சகல மாகாணங்களிலும்

நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான பிரசினைகளைப்பற்றி ஆராய்ச்சி நடத்துவதற்காக ஏற்பாடு செய்யப்படவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தப்படி ஆராய்ச்சி செய்யும் விஷயங்களில், பயிர்களுக்கு வேண்டிய தண்ணீரைப் பகிர்ந்து கொடுப்பதும் உபயோகிப்பதும், தண்ணீர்த் தேக்கப் பிரசினையும், தண்ணீரை வடியச் செய்வதும், கால்வாய்களை ஒழுங்குபடுத்தி அமைப்பதும் அடங்கும். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான எந்தப் பிரசினைகளைப் பைசல் செய்வதற்கு பூகர்ப்ப சாஸ்திர சம்பந்தமான அல்லது ரசாயன சாஸ்திர சம்பந்தமான அல்லது யந்திர சம்பந்தமான ஞானம் வேண்டியிருக்கிறதோ அந்தப் பிரசினைகளைப் பைசல் செய்யும் விஷயத்தில் இந்திய சர்வகலாசாலைகளில் சாஸ்திர போதனை சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் சிப்பந்திகள் உதவி புரியலாம். நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான ஆராய்ச்சி வேலை நடத்துவதற்கு ஒரு மத்திய ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதற்கு அனுகூலமாக ஆதாரம் காட்டப்பட்டிருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை. ஆயினும், அப்படிப் பட்ட ஆராய்ச்சி வேலையில் ஈடுபட்டிருக்கும் மாகாண ஸ்தாபனங்களின் வேலையை, நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான மத்திய சபையுடனும் விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி வேலைச்சபையுடனும் கலந்து ஆலோசித்துப் பிரதேச கவர்ன்மெண்டாரால் நியமிக்கப்படும் கம்மிட்டியைக்கொண்டு அப்போதைக்கப்போது விமரிசை செய்துவர வேண்டும்.

தண்ணீர்த் தேக்கிவைக்கும் விஷயமாகவும் களர் நிலங்கள் ஏற்படுவது விஷயமாகவும் இந்தியாவில் நீர் பாய்ச்சப்படும் பிரதேசங்களில் நேரிடும் கஷ்டங்களில் அனேகம், பிரஸ்தாப பிரதேசத்தில் இயற்கையாய்த் தண்ணீர் வடியும் விஷயத்தை ஒரு புதிய நீர்ப்பாசன ஏற்பாட்டுடன் தகுந்தபடி சம்பந்தப்படுத்தத் தவறிப்போனது காரணமாகவே ஏற்பட்டிருக்கின்றன. ஆகவே, அவசியமான அளவுக்கு விவசாய சம்பந்தமான விஷயங்களில் தேர்ச்சி பெற்றிருக்கும் திறமையான என்ஜினீர்களைக்கொண்டு வடிகால்களின் படங்கள் தயார்செய்யப்பட வேண்டுமென்று "நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஒருமுறை இந்த உருவப்படங்களைத் தயார்செய்துவிட்டால், ரஸ்தாக்கள் - இருப்புப்பாதைகள் - கால்வாய்கள் - கரைகள் ஆகிய இவைகளைப்போன்ற சாதனங்களை அமைக்கும் விஷயத்தில் திட்டம் செய்வதும், மாகூல் உற்பத்தியில் எதுவும் குறுக்கிடாமல் பார்த்துக்கொள்வதும் சுலபமாக இருக்கும்.

ஸக்கூர் அணைக்கட்டு கட்டுவதனால் ஸிந்தில் நீர்ப்பாய்ச்சல் வசதி விசேஷமாய் அதிகப்படுகிறது. இது காரணமாக ஏற்படும் பிரசினைகளைக் குறித்துப் பிரதான ரிபோர்ட்டில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. அம்மாதிரியாகவே, வடமேற்கு எல்லைப்புற மாகாணத்தையும் பலூசிஸ்தானத்தையும் விசேஷமாய் பாதிக்கக்கூடிய பிரசினைகளைப்பற்றியும் அந்த ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இந்தப் பிரசினைகள் முக்கியமானவைகளாயிருந்தபோதிலும் அவை சம்பந்தப்பட்ட இடங்களில் இருப்பவர்களே அவைகள் விஷயமாய் சிரத்தை பாராட்டக்கூடுமாகையால், அவைகளைக் குறித்து இங்கே சொல்லவேண்டிய அவசியமில்லை. இதே காரண

த்தை முன்னிட்டு, வங்காளத்துக்கு மாத்திரமே சம்பந்தப்பட்டவைகளாயுள்ள பிரசினைகளைக் குறித்தும் நாங்கள் இங்கே சொல்லவில்லை. அவைகளைப்பற்றியும் பிரதான ரிபோர்ட்டில் சொல்லப்பட்டிருக்கிறது. இவ்விஷயங்கள் மிகவும் சிக்கலாயிருக்கிறபடியாலும், அவைகளைப் பைசல் செய்வது வங்காளம் சம்பந்தப்பட்டமட்டில் மிகவும் முக்கியமாயிருக்கிறபடியாலும், அவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்ய நிபுணர்கள் அடங்கிய கம்மிட்டியொன்று ஏற்படுத்தப்படவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம்.

ஹைட்ரோ எலெக்ட்ரிக் அபிவிருத்தியைக் குறித்து யோசிக்கும்போது, தண்ணீரினால் ஏற்படும் சக்தியை உற்பத்தி செய்வதற்கேற்ற இயற்கையான ஜலாதாரங்கள் இந்தியாவின் சில பாகங்களில் விசேஷமாய்க் கிடைக்கக்கூடியவைகளாக இருக்கின்றனவென்பதைக் கவனிக்கவேண்டும். இப்போதைய நிலைமைகளில் விவசாய சம்பந்தமான காரியங்களுக்குள் தண்ணீரைப் பம்ப் அடித்து மேலே கொண்டுவரக்கூடிய ஏற்பாடுகள் விஷயமாக மாத்திரமே மின்சார சக்தியை உடனே உபயோகித்துக்கொள்வது சாத்தியமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஹைட்ரோ எலெக்ட்ரிக் அபிவிருத்தி சம்பந்தமாய்த் தெரிந்துகொள்ள வேண்டியிருக்கும் விஷயங்களை, நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான சமாசாரங்களைத் தெரிவிக்கும் மத்திய ஸ்தாபனத்தார் தெரிவிக்கவேண்டும். இந்த விஷயமானது விசேஷ சாஸ்திர ரீதியானதாய் இருப்பதால், குறித்த யாதொரு வகையைச் சேர்ந்த அபிவிருத்தி சம்பந்தமான ஏற்பாட்டைப்பற்றி நிபுணர்களின் ஆலோசனை பெறவேண்டுமானால், ஆலோசனை சொல்லும் என்ஜினீர்கள் சேர்ந்த ஒரு கம்பெனியாரிடமிருந்து அப்படிப்பட்ட ஆலோசனை பெறவேண்டும்.

### 9. போக்குவரவு சாதனங்களும் சரக்குகளை விற்பனை செய்வதும்.

பிரதான ரிபோர்ட்டின் 11-ம் அத்தியாயம்.

பயிரிடுபவருக்கு நல்ல போக்குவரவு சாதனங்கள் மிகவும் முக்கியமானவை. ஏனென்றால், அவர் தம்முடைய மாகூலை லாபகரமாய் விற்பனை செய்யும் விஷயம் ஷை சாதனங்களையே பெரும்பாலும் பொறுத்ததாயிருக்கிறது. போக்குவரவு சாதனங்களில் ஏற்பட்ட அபிவிருத்தி காரணமாகவே சென்ற நூற்றாண்டின் மத்தியிலிருந்து விவசாயிகள் போஜனத்துக்கு வேண்டிய பயிர்களைச் சாகுபடி செய்வதைவிட்டு, பருத்தி, சணல், வேர்க்கடலை ஆகிய இவைகளைப் போன்ற உடனே ரொக்கம் கிடைக்கக்கூடிய பயிர்களைச் சாகுபடி செய்ய ஆரம்பித்திருக்கிறார்களேயொழிய வேறே எந்தக் காரணத்தினாலுமல்ல. ஆனால், நல்ல போக்குவரவு சாதனங்களினால் விவசாயியின் வாழ்க்கை நிலையைச் சேர்ந்த ஒவ்வொரு அம்சத்திலும் மாறுதல் ஏற்படுகிறது. ஏனென்றால், இந்த சாதனங்கள் காரணமாக கிராமங்களுக்கும் பட்டணங்களுக்கும் முன்னிலும் அதிக நெருக்கமான சம்பந்தம் ஏற்பட்டு, பொதுவாய் வாழ்க்கை நிலை உயர்வதற்கேற்றபடி கல்வியிலும் முன்னிலும் உயர்ந்த நிலைமையைப் பெற மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய்ப் பின்னடைந்துள்ள கிராம ஜனங்களுக்

கும் விருப்பம் உண்டாகிறது. மேலும், ஷை சாதனங்கள் காரணமாக ஜனங்கள் தங்களுடைய கருத்துக்களை ஒருவருக்கொருவர் தெரிவித்துக்கொள்வதற்கு இடம் ஏற்படுகிறபடியால், விவசாயிகளின் வாழ்க்கை லட்சியமே விரிவடைகிறது. இந்தியாவில் போட்டிருக்கும் ரெயில் பாதைகள், ரஸ்தாக்கள் ஆகிய இவைகளின் நீளம் மைல் கணக்கில் விரைவாக அதிகரித்து வருகிறது. ராணுவ சம்பந்தமான காரியங்களுக்கு முக்கியமானவைகளாயிருக்கும் ரஸ்தாக்களைத் தவிர மற்ற சகல ரஸ்தாக்களும் பெரிய மாகாணங்களில் மாற்றப்பட்ட இலாகாக்களின் விசாரணையில் இருந்துவருகின்றன. வங்காளத்தில் ஏறக்குறைய எல்லா ரஸ்தாக்களும் டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் விசாரணையில் இருக்கின்றன. ஷை போர்டுகள் ரஸ்தாக்களுக்காகவும் பொதுக் கட்டுவேலைகளுக்காகவும் வசூலிக்கும் ஸெஸ் என்னும் வரித் தொகையிலிருந்து ஷை ரஸ்தாக்களைப் புதிதாய்ப் போடுவதற்காகவும் அவைகளை மரமத்து செய்வதற்காகவும் பிடிக்கும் செலவு முழுவதையும் செய்துவருகின்றன. சென்னை ராஜதானியிலுங்கூட சில ரஸ்தாக்கள் தவிர மற்ற ரஸ்தாக்களெல்லாம் பிரதேச அதிகார சபைகளின் விசாரணையின்கீழ் இருக்கின்றன. ஆனால், மாகாண வருமானத்திலிருந்து இவைகளுக்கு விசேஷமாய்ப் பொருளுதவி செய்யப்படுகிறது. பஞ்சாபைத் தவிர மற்ற மாகாணங்களில், ரஸ்தாக்கள் இரண்டு வகுப்புகளாய்ப் பிரிக்கப்படுகின்றன. அதாவது, மாகாண காரியங்கள் சம்பந்தப்பட்டமட்டில் முக்கியமான ரஸ்தாக்களென்றும் பிரதேச ரஸ்தாக்களென்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. முந்திய வகையைச் சேர்ந்த ரஸ்தாக்களைப் பப்ளிக் வொர்க்ஸ் இலாகாதாரும், பிந்திய வகையைச் சேர்ந்த ரஸ்தாக்களைப் பிரதேச அதிகார சபைகளும் பராமரித்து வருகின்றன. பஞ்சாபிலுள்ள ரஸ்தாக்கள் மிகவும் ஒழுங்காய்த் தரம் பிரிக்கப்பட்டிருக்கின்றன. 1-வது வகுப்பைச் சேர்ந்த ரஸ்தாக்கள் ரஸ்தா ஏற்பாட்டைச் சேர்ந்த முக்கியமான அங்கங்களாயிருக்கின்றன. அவைகளைப் பப்ளிக் வொர்க்ஸ் இலாகாதார் பராமரித்து வருகிறார்கள். பல ஜில்லாக்கள் மூலமாகவோ அல்லது முக்கியமான இடங்களைச் சேர்த்துக் கொண்டோ போகிற ரஸ்தாக்கள் 2-வது வகுப்பைச் சேர்ந்த ரஸதாக்களாகும். இவை டிஸ்ட்ரிக்ட் போர்டுகளின் விசாரணையின்கீழ் இருக்கின்றன. ஆனால், அவைகளுக்குப் பிடிக்கும் செலவின் ஒரு பாகத்தைக் கவர்ன்மென்டாரும் மற்ற பாகத்தை லோகல் பண்டாரும் செய்துவருகிறார்கள். இதர ரஸ்தாக்கள் 3-வது வகுப்பைச் சேர்ந்தவை. எல்லா மாகாணங்களிலும், கிராம பாட்டைகளை அதாவது யாதொரு நேர்ப்பாட்டையில் இராத கிராமங்களைப் பிரஸ்தாப ஜில்லாவில் உள்ள ரஸ்தா ஏற்பாட்டுடன் சம்பந்தப்படுத்தும் பாட்டைகளை அனேகமாய்க் கிராமத்தாரே முற்றிலும் கவனித்து வருகிறார்கள். இந்த பாட்டைகள் பெரும்பாலும் வெய்யிற் காலத்தில் உபயோகிக்கக்கூடிய வெறும் பாதைகள் என்றே சொல்ல வேண்டும்.

சென்ற சில வருஷங்களாக இந்தியாவிலுள்ள ரஸ்தாக்களின் நிலைமை சீர்கெட்டுப் போயிருக்கிறதென்றும், ரஸ்தாக்களில் மோடார் வண்டிப்பிரயாணம் விரைவாய் அதிகரித்திருப்பது காரணமாக

ரஸ்தாக்களைப் புதிதாய் ஏற்படுத்துவது விஷயமாகவும் பராமரித்து வருவது விஷயமாகவும் முற்றிலும் புதிய பிரசினைகள் பல ஏற்பட்டிருக்கின்றனவென்றும் எங்களுக்குக் கிடைத்திருக்கும் சாட்சியத்திலிருந்து தெரியவருகிறது. புதிதாய் ஏற்பட்ட இந்த காரணத்தினால் ரோட் டெவெலப்மென்ட் கம்மிட்டி என்னும் ரஸ்தா அபிவிருத்தி சம்பந்தமான கம்மிட்டியொன்றைச் சிறிதுகாலத்துக்குமுன் இந்தியா கவர்ன்மென்டார் நியமிக்கவேண்டியதாயிற்று. இந்தக் கம்மிட்டியில் மத்திய சட்டசபைகளைச் சேர்ந்த பதினான்கு மெம்பர்கள் இருக்கிறார்கள். இந்தியாவில் ரஸ்தா அபிவிருத்தி சம்பந்தமான விஷயம் முழுவதையும் இந்தக் கம்மிட்டியார் இப்போது ஆராய்ச்சி செய்து வருகிறார்கள். பிரதான ரஸ்தாக்களின் அபிவிருத்தியைப் பற்றியே இந்தக் கம்மிட்டியார் முக்கியமாகக் கவனித்து வருகிறார்கள். ஆனால், விவசாயிகளுக்கு அந்த ரஸ்தாக்களைக்காட்டிலும் அதிக முக்கியமாயுள்ள சகாயகரமான போக்குவரவு சாதனங்களின் முக்கியதையைக் குறித்து நாங்கள் வற்புறுத்திச் சொல்ல விரும்புகிறோம். நல்ல போக்குவரவு சாதனங்களினால் ஏற்படும் அனுகூலத்தை விவசாயி அடையவேண்டுமானால், அவருடைய கிராமத்தைப் பெரிய பிரதான ரஸ்தாக்களுடன் சம்பந்தப்படுத்தவேண்டும்.

சில மாகாணங்களில் ரோட் போர்ட் என்னும் ரஸ்தாக்களின் விஷயத்தைக் கவனிக்கும் சபைகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. அவைகளின் கடமை பெரும்பாலும் ஆலோசனை சொல்வதேயாகும். பஞ்சாபிலும் பர்மாவிலுந்தான் அவைகளுக்கு இன்னும் விரிவான கடமைகள் ஏற்பட்டிருக்கின்றன. ரஸ்தா அபிவிருத்தி சம்பந்தமாய் ஒழுங்கான முறையில் தயார்செய்யப்பட்ட ஒரு திட்டப்படி அவை வேலை செய்ய ஆரம்பித்துவிட்டன. பஞ்சாபிலும் பர்மாவிலும் உள்ள ரோட் போர்டுகளுக்குக் கொடுக்கப்பட்டிருக்கும் அதிகாரங்களைப் போன்ற அதிகாரங்களுடன் அப்படிப்பட்ட சபைகளை எல்லா மாகாணங்களிலும் ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

ரஸ்தா சம்பந்தமாய்த் தாங்கள் அனுசரித்து வரும் முறைப்படி காரியம் நடத்திக்கொண்டுபோகையில், பணக்குறைவு காரணமாக லோகல் போர்டுகளுக்கு மிகவும் விசேஷமாய்த் தடங்கல் ஏற்படுகிறது. ஆகவே, நன்றாய் ஆலோசித்து ரஸ்தா சம்பந்தமான ஏற்பாட்டைத் தொடங்கியிருக்கும் இடங்களில் பிரதேச கவர்ன்மென்டுகள் தாராளமாய்ப் பொருளுதவி செய்யவேண்டுமென்று நாங்கள் நினைக்கிறோம். இந்த விஷயம் மிகவும் முக்கியமாயிருக்கிறபடியால், இதற்காகப் பிடிக்கும் செலவை நடைமுதல் வருமானத்திலிருந்து செய்வதற்குப் பர்த்தியாய் இதுகாரியத்துக்காக கடன் பத்திரங்கள் வெளியிட்டுக் கடன் வாங்குவது நல்லதென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். மற்ற ரஸ்தாக்களைவிட பிரதான ரஸ்தாக்களுக்குச் செலுத்தவேண்டிய அளவைக்காட்டிலும் அதிகமாகக் கவனம் செலுத்தப்படுவது சகஜமாயிருக்கிறது. இது துரதிர்ஷ்டவசமேயாகும். கிராம ரஸ்தாக்களின் அபிவிருத்தியானது பெரும்பாலும் கிராமத்தாரின் முயற்சியினாலேயே ஏற்படவேண்டும். ஆயினும்,

அப்படிப்பட்ட ரஸ்தாக்களைப் புதிதாய்ப் போடுவதற்காகவும் அவைகளை அபிவிருத்தி செய்வதற்காகவும் மாகாண வருமானத்திலிருந்து தாராளமாய் திரவியசகாயம் செய்யவேண்டும். கிராம ரஸ்தாக்களைக் கிராமத்தார் அபிவிருத்தி செய்யும்பொருட்டு அவர்கள் கூட்டுறவு முறையில் வேலை செய்யும்படி அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். எல்லா டிஸ்ட்ரிக்ட் போர்டுகளும் சரியான யோக்கியதை பெற்றுள்ள என்ஜினீர் ஒருவரை வேலையில் வைத்திருக்கவேண்டும்.

பொதுவாய்ப் போக்குவரவு சாதனங்களை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில், இருப்புப்பாதைகளையும் ரஸ்தாக்களையும் பரஸ்பரம் உபயோககரமாயுள்ள சாதனங்களாகக் கருதுவது விரும்பத்தக்கதாகும். ரஸ்தாக்களை இருப்புப்பாதைகளுக்குச் சகாயமாயுள்ள சாதனங்களாய்க் கருதவேண்டுமேயொழிய, போக்குவரவு விஷயத்தில் இருப்புப்பாதைகளுடன் போட்டிபோடும் சாதனங்களாகக் கருதக் கூடாது. விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து சரக்குகளுக்காக ரெயில்வேயில் வாங்கப்படும் கட்டண விதங்களைப்பற்றி அடிக்கடி தோஷம் கூறப்படுகிறது. ஷை விதங்கள் சாதாரணமாக மட்டுக்கு மிஞ்சி இருப்பதாய்ச் சொல்லப்படுவதை நாங்கள் ஒப்புக்கொள்ள முடியாது. ஆயினும், வெவ்வேறு வகையைச் சேர்ந்த மாகூல்களுக்குத் தக்கபடி கட்டண விதங்களை ஒழுங்குபடுத்தும்பொருட்டு அவைகளை நிஷ்கரிஷையான காலத்துக்கொருமுறை திருத்துவது நல்லதென்று நாங்கள் சொல்லுவோம். ஒவ்வொரு மாகாணத்திலும் உள்ள விவசாய இலாகா டைரெக்டரையாவது சரக்குகளின் விற்பனை விஷயமாய் அதிகாரம் செலுத்திவரும் உத்தியோகஸ்தரையாவது அந்த மாகாணத்தின் ரெயில்வேக்கள் சம்பந்தமான ஆலோசனை சபையில் மெம்பராக நியமித்து ரெயில்வே இலாகாவும் விவசாய இலாகாவும் முன்னிலும் அதிகமாய் ஒத்துழைக்கும்படிச் செய்வது விரும்பத்தக்கதாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

கால்வாய்கள் சம்பந்தமாய் ஒரேயொரு விஷயம் எங்களுடைய கவனத்துக்கு முக்கியமாய்க் கொண்டுவரப்பட்டது. அது என்னவென்றால், ஆஸ்ஸாம், வங்காளம், பர்மா ஆகிய இந்த மாகாணங்களில் தண்ணீரில் உற்பத்தியாகும் நீலநிறமுள்ள ஒருவகை புஷ்பச் செடிகள் கால்வாய்களில் விசேஷமாய்ப் படர்ந்து அவைகளை உபயோகிக்கவொட்டாமல் தடுத்துவருகின்றனவென்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டது. இந்த உபத்திரவத்தை ஒழிப்பதற்காகப் பல விதமான முயற்சிகள் செய்யப்பட்டன. ஆனால், சரியான பலன் உண்டாகவில்லை. ஆகவே, இதுவிஷயத்தில் சீக்கிரத்திலேயே பின்னும் ஆராய்ச்சி செய்வது அவசியமாயிருக்கிறது. மேலும், பல மாகாணங்களில் இக்கஷ்டம் உண்டாயிருக்கிறபடியால், பாதிக்கப்பட்ட எல்லா மாகாணங்களிலும் கலந்து ஆலோசித்து ஏககாலத்தில் நடவடிக்கை நடத்தக்கூடியபடி 'விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி சபையார் இதுசம்பந்தமாய் வேலை செய்வதற்கான திட்டமொன்றைத் தயாரிக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

## சரக்குகளை விற்பனை செய்வது.

விவசாயிக்குக் கிடைக்கும் மாசூலின் லட்சணத்தை விருத்தி செய்வதற்கும் அதன் அளவை அதிகப்படுத்துவதற்கும் இந்தியாவில் விவசாய இலாகாக்கள் எவ்வளவோ செய்திருக்கின்றன. ஆயினும், அந்தப்படி விவசாயிக்குக் கிடைக்கும் மாசூலின் லட்சணமும் அளவும் அபிவிருத்தி அடைந்திருப்பதற்கேற்றபடி, அவருக்குக் கூடிய மட்டில் அதிகமாக திரவிய லாபம் கிடைக்கும்படிச் செய்யும் விஷயத்தில் அவருக்கு ஷை இலாகாக்கள் விசேஷ உதவி செய்யக்கூடியவைகளாயிருந்திருக்கின்றனவென்று சொல்லமுடியாது. சீர்திருத்தமான விதையை உபயோகிக்கும்படி விவசாயியைத் தூண்டுவதற்கு இது ஒன்றே மார்க்கமாகும். மேலும், லட்சணத்திலும் அளவிலும் அதிகமாய்த் தமக்குக் கிடைத்திருக்கும் மாசூலுக்கு முன்னிலும் நல்ல விலை தமக்குக் கிடைக்காதென்று விவசாயிக்குத் தெரியவந்தால், அவர் இதுவிஷயமாய் அதிக சிரமம் எடுத்துக்கொள்ளாமற் போகக்கூடும். மற்ற விஷயங்களைக்காட்டிலும் மாசூலின் லட்சணத்தை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் விவசாயிகள் அசிரத்தையாயிருப்பதற்கு மத்தியிலிருந்து வியாபாரத்தை முடிக்கும் தரகிரியே கிறிதுமட்டில் காரணமென்று சொல்லலாம். ஏனென்றால், மாசூலின் லட்சணத்தைக்காட்டிலும் அளவைப் பெரிதாக மதித்து அவர் சரக்கைக் கிரயத்துக்கு வாங்க விரும்புகிறார். ஆகவே, ஒன்றுகூட்டி ஒரு பெருத்த விஸ்தீர்ணத்தில் சீர்திருத்தமான வகையைச் சேர்ந்த தானியத்தைச் சாகுபடி செய்தால் மாத்திரமே நல்ல ரகமுள்ள தானியம் கிடைக்குமென்னும் பெயர் ஏற்பட்டு, விவசாயிகளுக்கு விலையும் அதிகமாய்க் கிடைக்கக்கூடும். இந்தியாவில் சரக்கை விற்பனைசெய்வது சம்பந்தமான நிலைமைகளைக்குறித்த சங்கதிகள் கிறிதுகூடத் தெரிவதில்லை. எல்லா மாகாணங்களிலும் மார்க்கெட்டுகள் (சரக்கு விற்பனையாகும் இடங்கள்) அவைகளின் லட்சணத்தையும் முக்கியத்தையும் பொறுத்து ஒன்றுக்கொன்று பெரிதும் வேறுபடுகின்றன. சில மார்க்கெட்டுகள் தனிநபர்களுக்குச் சொந்தமானவை. சில மார்க்கெட்டுகள் டிஸ்ட்ரிக்ட் போர்ட் அல்லது மியுனிஸிபாலிடியின் நேரான மேல்விசாரணையின்கீழ் இருக்கின்றன. பேரார் மாகாணம் ஒன்றில்தான் விசேஷ சட்ட நிரூபணத்தைக்கொண்டு மார்க்கெட்டுகளை அமைப்பதைக்குறித்து ஒழுங்கேற்படுத்தப்படுகிறதுமல்லாமல், அந்த மார்க்கெட்டுகளின் நிர்வாகமும் தெரிந்தெடுக்கப்பட்ட கம்மிட்டிகளின் வசத்தில் இருக்கிறது. சிறிது காலத்துக்குமுன்னே பஞ்சு மார்க்கெட்டுகளைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக பம்பாய் ராஜதானியில் ஒரு ஆக்ட் ஜாரி செய்யப்பட்டது. ஆனால், அது இன்னும் செலாவணியாகத் தொடங்கவில்லை.

இப்போது அமைக்கப்பட்டபடியுள்ள மார்க்கெட்டுகளில் விவசாயி தன்னுடைய மாசூலை இன்னின்ன காரணங்களினால் சரியாய் விற்பனை செய்யமுடியாமல் கஷ்டப்படுகிறாரென்று சகல மாகாணங்களிலும் எங்களிடம் புகார்கள் செய்யப்பட்டன. இந்த நிலைமைக்கு மத்தியிலிருக்கும் தரகிரியே முற்றிலும் காரணமென்று சொல்வது நியாயமாயிராது. தரகிரி வியாபார சம்பந்தமாய் முக்கியமான காரி

யங்களை நிறைவேற்றிவைக்கிறாரென்பதையும், அவரில்லாமல் வியாபாரம் செய்யமுடியாதென்பதையும் ஒப்புக்கொள்ளவேண்டும். ஆயினும், இதுசம்பந்தமாய் சிலர் தகாதபடி நடந்துகொள்ளுகிறார்களென்பது வாஸ்தவமே. இந்த தகாத காரியங்களில் சிலவற்றைப் பரிகரிக்கக்கூடும் அல்லது நிவர்த்திசெய்யக்கூடுமென்பதும் வாஸ்தவமே.

விவசாயியின் மாகூலை விற்பனைசெய்யும் விஷயத்தில் ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்தி செய்வதற்கு மிகவும் சிறந்த மார்க்கம் ஒன்று இருப்பதாகத் தோற்றுகிறது. அதாவது, போக்குவரவு சாதனங்களை அபிவிருத்தி செய்கிறபட்சத்திலும் மார்க்கெட்டுகளை ஒழுங்குபடுத்தி அமைக்கிறபட்சத்திலும் மேற்படி கஷ்டங்களை நிவர்த்தி செய்துகொள்ளக்கூடுமென்று தோற்றுகிறது. ஆகவே, பேராரில் அனுசரிக்கப்படும் ஏற்பாட்டைப் பம்பாயில் செய்யப்பட்ட சட்டத்தைக்கொண்டு திருத்தி, அந்த ஏற்பாட்டின்படி மார்க்கெட்டுகளை ஒழுங்குபடுத்தி அமைக்கும் விஷயத்தைப்பற்றி இதர மாகாணங்களும் ஆலோசனை பண்ணவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். இந்த தேசத்தில் விவசாய அபிவிருத்தி சம்பந்தமாக ஒழுங்காய்ச் செய்யப்படும் எந்த ஏற்பாட்டிலும் மார்க்கெட்டுகளை ஒழுங்குபடுத்தி அமைக்கும் விஷயமும் முக்கியமாய்ச் சேரவேண்டுமென்பதில் சந்தேகமில்லை. ஆயினும், பம்பாயில் ஜாரி செய்யப்பட்ட ஆக்டானது ஸ்பஷ்டமாய்ப் பஞ்சு மார்க்கெட்டுகளுக்கு மாத்திரமே பிரயோகப்படக்கூடியதாயிருக்கிறது. மேலும், பேராரில் இருக்கும் மார்க்கெட்டுகளில் நடக்கும வியாபாரத்தில் பெரும்பாகமும் பருத்தி விஷயமாகவே நடக்கிறது. ஷை ஏற்பாட்டை இதர வகையான மாகூல்களுக்கும் சௌகரியமாய்ப் பிரயோகப்படும்படி செய்யக்கூடுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இதுவிஷயமாய்க் கஷ்டங்கள் ஏற்படாதபடி தடுப்பதற்காக, ஒழுங்குபடுத்தி அமைக்கப்படும் மார்க்கெட்டுகள் விஷயமாய் மாகாணங்களில் சட்ட நிருபணம் செய்து அந்த சட்டத்தை அனுசரித்தே ஷை மார்க்கெட்டுகளை ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் சொல்லுவோம். மேலும், பிரதேச கவர்ன்மெண்டுகள் இதுவிஷயமாய் ஆரம்பத்தில் செய்யவேண்டிய முயற்சிகளைச் செய்து, சில முக்கியமான இடங்களில் உடனே அப்படிப்பட்ட மார்க்கெட்டுகளை ஏற்படுத்தவேண்டும். இப்படி செய்தால்மாத்திரமே இம்மாதிரியான மார்க்கெட்டுகளினால் ஏற்படும் அனுகூலங்களைப் பொதுஜனங்கள் தெரிந்துகொள்ளும்படி செய்வதற்கு இடம் ஏற்படுவதுமல்லாமல், அப்படிப்பட்ட மார்க்கெட்டுகள் தங்களுக்குத் தேவையென்று பொதுஜனங்கள் கேட்கவும் ஆரம்பிப்பார்கள். இதுசம்பந்தமான சட்டத்தைத் தயார்செய்யும்போது, ஒழுங்குபடுத்தி அமைக்கப்படும் யாதொரு மார்க்கெட்டுக்கும் அந்த மார்க்கெட் ஏற்படுத்தப்படுகிற விஸ்தீர்ணத்திலுள்ள யாதொரு மியுனிஸிபல் கௌன்ஸில் அல்லது லோகல் போர்டுக்கும் இன்ன சம்பந்தம் இருக்கவேண்டுமென்பதைப்பற்றி ஜாக்கிரதையாய் ஆலோசனை செய்வது அவசியமாகும்.

இந்த மார்க்கெட்டுகளின் நிர்வாகப் பொறுப்பை ஒரு மார்க்கெட் கம்மிட்டியினிடத்தில் விடவேண்டுமென்று நாங்கள் அபிப்

பிராயப்படுகிறோம். அந்த மார்க்கெட் எந்த பிரதேசங்களுக்கு உபயோகப்படுகிறதோ அந்த பிரதேசங்களில் வாஸ்தவமாய்ப் பயிரிடும் விவசாயிகளுக்கு இந்தக் கம்மிட்டியில் போதுமான பிரதிநிதிகள் இருக்கவேண்டும். மேலும், அந்த விவசாயிகளின் நன்மைகளுக்குப் போதுமானமட்டில் பாதுகாப்பு ஏற்பட்டிராதபட்சத்திலே, அவைகளைப் பாதுகாப்பதற்காக அந்தக் கம்மிட்டிக்கு விவசாய இலாகாவைச் சேர்ந்த உத்தியோகஸ்தர் ஒருவரை நேமகம் செய்வது நல்லது. லைஸென்ஸ் கொடுக்கப்பெற்ற எந்தத் தரகிரியும் விவசாயிகளுக்குப் பிரதிநிதியாக அந்தக் கம்மிட்டிக்குத் தெரிந்தெடுக்கப்படுவதற்குத் தகுதியுடையவராயிருப்பது விரும்பத்தக்கதல்ல. பிரஸ்தாப மார்க்கெட்டானது எந்தப் பிரதேசத்துக்கு உபயோகப்படுகிறதோ அந்தப் பிரதேசத்திலுள்ள கூட்டுறவு சங்கங்களுக்கு ஷை கம்மிட்டியில் பிரதிநிதிகளை நியமிப்பதற்காக ஏற்பாடு செய்யவேண்டும். அந்தக் கம்மிட்டியில் நேமகம் செய்யப்பட்ட மெம்பர்களைச் சேர்ப்பதனால், வாஸ்தவத்தில் வியாபாரம் செய்பவர்களுடைய பிரதிநிதிகளின் சங்கியையானது குறித்த ஒரு அளவைக்காட்டிலும் குறைந்து போகாதபடி பார்த்துக்கொள்ளவேண்டும். அந்தக் கம்மிட்டியானது தன்னுடைய அக்கிராசனாதிபதியைத் தானே தெரிந்தெடுத்துக்கொள்ளவேண்டும். இந்தக் கம்மிட்டியில் வேலை நடத்துவதைக் குறித்த விவரங்களை அவ்வவ்விடத்திலுள்ளவர்கள் தீர்மானித்துக்கொள்ளும்படி விட்டுவிடவேண்டும். ஆனால், சரக்கை மோசடியாக எடை போடுவதைத் தடுக்கும் பொருட்டு, ஷை கம்மிட்டியார் மார்க்கெட்டில் வே ப்ரிட்ஜ் என்னும் எடை போடுவதற்கான யந்திரம் ஒன்றை அதை உபயோகிப்பதற்குத் தகுதியான ஏற்பாடுகளுடன் அமைக்கவேண்டுமென்றும், அங்கே உண்டாகக்கூடிய சச்சரவுகளைத் தீர்ப்பதற்காக சாதனங்கள் ஏற்படுத்தவேண்டுமென்றும் நாங்கள் சொல்ல விரும்புகிறோம். இது காரியத்துக்காக மூன்று மெம்பர்களடங்கிய ஒரு மத்தியஸ்த சபையை அமைப்பது மிகவும் திருப்திகரமான ஏற்பாடாயிருக்குமென்று தோற்றுகிறது. இந்த மூன்று மெம்பர்களில் ஒருவரை சரக்கைக் கிரயத்துக்கு வாங்குபவரும், ஒருவரை சரக்கை விற்பனை செய்பவரும் நியமிக்கவேண்டியது மல்லாமல், மூன்றாவது மெம்பரை இருதிறத்தாரும் மார்க்கெட் கம்மிட்டியிலிருந்து தேர்ந்தெடுக்கவும் வேண்டும். ஷை மூன்றாவது நபர் அந்த சபைக்கு அக்கிராசனாதிபதியாயிருப்பார். பிரஸ்தாப மார்க்கெட்டில் விற்பனை செய்யப்படும் விளைபொருள்கள் அந்தப் பிரதேசத்திலுள்ள முக்கியமான மார்க்கெட்டுகளிலும் ரேவுகளிலும் விற்கும் விலைகளை எழுதி ஒட்டுவதை மார்க்கெட் கம்மிட்டிகள் தங்களுடைய கடமையாக ஏற்றுக்கொள்ளவேண்டும. தரகிரிகள் விஷயமாய் மேல்விசாரணை புரிவதற்காக, முக்கியமாய் சரக்கைக் கிரயத்துக்கு வாங்குபவர் விற்பவர் ஆகிய இவ்விருவருக்காகவும் அவர்கள் பிரவர்த்திக்க முடியாதபடி தடுப்பதற்காக ஷை கம்மிட்டிகள் விதிகள் ஏற்படுத்தும். மேலும், அவை மார்க்கெட்டுகளில் சரக்குகளைச் சேர்த்து வைப்பதற்காகச் சிறிதுமட்டில் இட வசதியும் ஏற்படுத்திக் கொடுக்கலாம்.

எடைகள் விஷயமாகவும் படி முதலிய அளக்கும் கருவிகள் விஷயமாகவும் நிர்ணயமான பரிமாணம் ஏற்படுத்தும் விஷயம் வெகுகால

மாகக் கவனிக்கப்பட்டு வந்திருக்கிறது. இந்த தேச முழுவதும் இவை ஒன்றுக்கொன்று மிகவும் அதிகமாய் வித்தியாசப்படுகின்றன. சில மாகாணங்களில் இவை கிராமத்துக்குக் கிராமமும் வித்தியாசப் படுகின்றன. இவ்விஷயத்தைப்பற்றி ஆராய்ச்சி செய்யும்படி இந்தியா கவர்ன்மெண்டார் 1913-ம்ஹூ்த்தில் ஒரு கம்மிட்டியை நியமித்த போதிலும், அக்கம்மிட்டியார் செய்த சிபாரிசுகளின்மேல் நாளது வரையில் எவ்வித நடவடிக்கையும் நடத்தப்படவில்லை. இந்த விஷயம் மிகவும் முக்கியமாயிருப்பதாக நாங்கள் எண்ணுகிறபடியால், இந்தியா முழுவதிலும் எடை போடும் கருவிகளையும் அளக்கும் கருவிகளையும் நிர்ணயமான பரிமாணத்துக்கு அமைப்பது சாத்தியப்படுமா என்னும் விஷயத்தைக்குறித்து இந்தியா கவர்ன்மெண்டார் மறுபடியும் ஆராய்ச்சி செய்யத் தொடங்கி, சில பொதுவான கோட்பாடுகளை நிர்ணயிக்கவேண்டுமென்றும், அவ்வவ்விடத்திய வியாபார வழக்கத்தை அமிதமாய்ப் பாதிக்காமல் சாத்தியப்பட்டமட்டிலே ஷை கோட்பாடுகளை மாகாணக் கவர்ன்மெண்டுகள் அனுசரித்து நடக்கவேண்டுமென்றும் நாங்கள் சிபாரிசு செய்ய விரும்புகிறோம். பர்மாவில் உபயோகிப்பதற்காக எடை போடும் கருவிகளுக்கும் அளக்கும் கருவிகளுக்கும் பரிமாணங்கள் ஏற்படுத்துவதற்கான மசோதா ஆக்ட் ஒன்று அந்த மாகாணத்தின் சட்டநிரூபண சபையில் கொண்டுவரப்பட்டிருக்கிறது. பரிமாண எடைபோடும் கருவிகளையும் அளக்கும் கருவிகளையும் கிராமக் கம்மிட்டிகளுக்கு ஏற்படுத்திக் கொடுப்பதற்காகப் பிடிக்கும் செலவை நிலத்தீர்வை விதிக்கப்படும் நிலங்களுக்கு ஒரு வரியையோ அல்லது ஸெஸ் என்னும் இறையையோ விதித்து கிராமத்தார்களிடமிருந்து வசூல் செய்வதற்காக அதிகாரம் அடையப்பட்டிருக்கிறது. இதுவே அந்த மசோதா ஆக்டின் விசேஷ அம்சமாகும். இந்தபடி ஏற்படுத்தியிருப்பதற்குக் காரணம் அடியிற்கண்டபடி விவரமாய்ச் சொல்லப்படுகிறது. அதாவது, ஷை கருவிகளைக் கவர்ன்மெண்டாருடைய செலவில் கிராமக் கம்மிட்டிகளுக்கு இலவசமாய்ச் சவதரிப்பதற்கு மொத்தத்தில் பிடிக்கும் செலவு அதிகமாயிருக்குமென்றும், அந்த செலவைச் சகல கிராமங்களுக்கும் பங்கீடு செய்கிறபட்சத்திலே ஒவ்வொரு கிராமமும் செலுத்தவேண்டியதாய் ஏற்படும் தொகை மிகவும் குறைவாயிருக்குமென்றும், அதை வசூலிப்பதனால் மற்றெல்லா விஷயங்களையும்விட எடைபோடுவதற்கும் அளப்பதற்குமுரிய பரிமாணக் கருவிகள் ஏற்படுத்தி வைக்கப்பட்டிருக்கின்றனவென்னும் விஷயத்தைச் சகல ஜனங்களும் நன்றாய்த் தெரிந்துகொள்வதற்கு இடம் ஏற்படுமென்றும் சொல்லப்படுகிறது.

வெளிதேசத்து மார்க்கெட்டுகளுக்கு ஏற்றுமதியாகும் இந்திய விளைபொருள்களில் பெரும்பாகம் திருப்தியற்ற நிலைமையில் விற்பனையாவதாகத் தெரியவருகிறது. ஆயினும், சென்ற சில வருஷங்களுக்குள் இது சம்பந்தமாய் விசேஷ அபிவிருத்தி ஏற்பட்டிருக்கிறது. பஞ்சு கேவலமாய்க் கலப்பிடஞ் செய்யப்பட்டிருக்கிறதென்றும், சணல் கேவலமாய் நனைத்து மிருதுவாக்கி தரம் பிரிக்கப்பட்டிருக்கிறதென்றும், மிதமிஞ்சி ஈரமாயிருப்பதனால் அதன் மதிப்பு கெட்டுப்போகிறதென்றும், இந்திய மரவின் ரகம் ஒரே மாதிரியாயிராமல் அடிக்

கடி வேறுபடுகிறதென்றும், அது கேவலமாய்க் கலப்பிடஞ் செய்யப்பட்டிருக்கிறதென்றும், அதில் அபரிமிதமாக தூசும் அழுக்கும் கலந்திருக்கின்றனவென்றும் எங்களுக்கு இங்கிலாந்தில் தெரிவிக்கப்பட்டது. ஆனல், மிதமிஞ்சி ஈரமாயிருப்பது காரணமாக அடிக்கடி மதிப்பு கெட்டுப்போகிற வேர்க்கடலையைத் தவிர மற்ற இந்திய எண்ணெய் விதைகளைப்பற்றி தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயம் திருப்திகரமாக இருந்தது. இந்தியாவில் சாகுபடியாகும் கோதுமையின் லட்சணத்தைப்பற்றி தெரிவிக்கப்பட்ட அபிப்பிராயம் ஒரே மாதிரியாயிராமல் வேறுபட்டிருந்தது. ஸக்கூர் பாரேஜ் என்னும் அணைக்கட்டையும் ஸட்லெஜ் வாலி ப்ராஜெக்ட் என்னும் பாசன ஏற்பாட்டையும் ஏற்படுத்துவது காரணமாக ஸிந்திலும் பஞ்சாப்பிலும் சாகுபடி அதிகரிக்கக்கூடியதை உத்தேசித்து, உயர்தரமான வலிவுள்ள கோதுமை வகைகளில் ஏற்றுமதி வியாபாரம் விருத்தியாகக் கூடியதை ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். விலையை அதிகப்படுத்தியோ அல்லது குறைத்தோ இன்ன ரகத்துக்கு இன்ன விலை கொடுக்கலாமென்று சரக்கைக் கிரயத்துக்கு வாங்குபவரே முடிவாய்த் தீர்மானிக்க வேண்டியவராவார். சீர்திருத்தமான வகையைச் சேர்ந்த விளைபொருள்களை அடையவேண்டுமானல், சரக்கை முடிவாய்க் கிரயத்துக்கு வாங்குபவர்கள் தங்களுக்குள் கட்டுப்பாடு செய்துகொள்வது சில சந்தர்ப்பங்களில் பிரயோசனகரமாயிருக்கும். ஆயினும், கோதுமையைப் போன்ற மாகூலின் விஷயத்தில் தவிர மற்ற விஷயங்களிலே இந்தப்படி செய்வது கஷ்டமாயிருக்கிறது. ஏனென்றல், இந்தியாவிலிருந்து ஏற்றுமதியாகும் கோதுமையில் பெரும்பாகம் ஒரே தேசத்துக்குத்தான் போகிறது. ஆகவே, சீர்திருத்தமான வகையைச்சேர்ந்த விளைபொருள்களை அடைவதற்குச் சித்திகரமான முறைகளை விவசாய இலாகாதாரும் கூட்டுறவு இலாகாதாரும் பெரும்பாலும் அனுசரிக்க வேண்டும். இவ்விரண்டு இலாகாதார்களும் வியாபார சம்பந்தமாய்த் தேவையாயிருக்கும் பொருள்கள் இன்னவையென்று நன்றய்த் தெரிந்துவைத்திருக்கவேண்டும். அந்தப்படி செய்கிறபட்சத்திலே, நல்ல முறைப்படி சாகுபடி செய்வதனுலும் முன்னிலும் நல்ல முறைகளை அனுசரித்துத் தயார்செய்வதனுலும் விவசாயி லாபமடையக்கூடும். இன்னின்ன தரங்களும் பரிமாணங்களும் இருக்கவேண்டுமென்று நிர்ணயிக்கக்கூடிய ஸ்திதியிலிருக்கும் கிழக்கிந்திய பருத்திச் சங்கத்தைப் போன்ற ஒழுங்காய் அமைக்கப்பட்டுள்ள வியாபார சங்கங்கள் இவ்விஷயத்தில் விசேஷ உதவி செய்யக்கூடும். கூட்டுறவு முறையில் சரக்குகளை விற்பனை செய்வதற்கான சங்கங்களானவை விவசாயிகள் உயர்தரமான விளைபொருள்களுக்குப் போதுமானமட்டில் நல்ல விலை பெறுவதற்குச் சிறந்த சாதனங்களாயிருக்கிறபடியால், அப்படிப்பட்ட சங்கங்களை விருத்தி செய்வதை ஆதரிக்கவேண்டும். விவசாய இலாகாவானது கூட்டுறவு விற்பனை சங்கங்களின் விளைபொருள்களை தரம் பிரித்து அந்த சங்கங்களுக்கு முக்கியாம்சத்தில் உதவி செய்யக்கூடும். விவசாய இலாகாவின் மேற்பார்வையின்கீழ் சாகுபடி செய்யப்படும் புதிய வகையைச் சேர்ந்த உயர்தரமான ரகத்துக்கு ஆரம்ப தசைகளில் விவசாயிகளுக்குப் போதுமானமட்டில் அதிக விலை கிடைக்கும்படி செய்வதற்கு அந்த இலாகாதார

எலமூலமாய் விளைபொருள்களை விற்பனை செய்வது உபயோககரமாயிருக்கும். ஆயினும், கூட்டுறவு சங்கங்களாகிலும் தனிநபர்கள் சேர்ந்த தகுதியான ஸ்தாபனங்களாகிலும் டிை எலங்கள் நடத்தும் வேலையை எடுத்துக்கொள்ளும் காலம்வரையில்தான் விவசாய இலாகாதார் அவைகளை நடத்திவரவேண்டும்.

தானிய வகைகளை உயரத்தூக்கி சேர்த்துவைப்பதற்கான க்ரெயின் எலிவேடர் என்னும் சாதனங்களை உபயோகிப்பது சாத்தியமா என்னும் விஷயத்தைக் குறித்துப் பின்னும் ஆராய்ச்சி செய்யவேண்டிய அவசியம் ஏற்பட்டிருப்பதாக நாங்கள் எண்ணவில்லை. இம்மாதிரியான சாதனத்தை அமைத்து வேலை நடத்துவதற்கான ஏற்பாட்டுக்குக் கவர்ன்மென்டார் பொருளுதவி செய்யவேண்டியிருக்கும். அதனால், விவசாயிகளுக்கு ஏற்படும் நன்மைகளைக் கவனிக்கும்போது, அந்த ஏற்பாட்டை அனுசரிப்பது நியாயமாயிருக்குமா என்பது முற்றிலும் சந்தேகத்துக்கு இடம் தரக்கூடியதாயிருப்பதாகத் தோற்றுகிறது.

தன்னுடைய மாகூலை விற்பனை செய்யும் விஷயம் விவசாயிக்கு முக்கியமான விஷயமாகும். ஆகவே, பெரிய மாகாணங்களில் எல்லாம் விவசாய இலாகாக்களின் சிப்பந்தியுடன்கூட நிபுணரான விற்பனை செய்யும் உத்தியோகஸ்தர் ஒருவரை நியமிக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மார்க்கெட் சம்பந்தமாய்ச் செய்ய வேண்டிய பரிசோதனைகளை ஒழுங்குபடுத்தி நடத்துவதே அவர் முதலில் செய்யவேண்டியஅலுவல்களில் ஒன்றாகும். இது விஷயமாய்க் கிடைத்திருக்கும் சரியான விவரங்கள் மிகவும் குறைவாயிருக்கின்றன. விவசாயிகளின் மாகூலை விற்பனை செய்யும் விஷயத்தில் அவர்களுக்கு உதவி செய்ய கவர்ன்மென்டார் ஒரு ஏற்பாட்டை அமைத்து வேலை செய்வதற்கு முன்னே இந்த விவரங்களைத் தெரிந்துகொண்டு அவைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யவேண்டும்.

விற்பனை செய்யும் உத்தியோகஸ்தருக்குக் குறிப்பாய்ச் சில அலுவல்கள் ஏற்படுத்தப்படும். ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட மார்க்கெட்டுகளில் எவ்விதமாய் வேலை நடக்கிறதென்பதைப பரிசோதித்துப் பார்ப்பதும், அவைகளைச் சீர்திருத்துவது அவசியமாயிருக்கும் இடங்களில் அந்தப்படி சீர்திருத்துவதற்காகச் சிபாரிசுகள் செய்வதும் மேலேகண்ட அலுவல்களில் ஒன்றாகும். அவர் தம்முடைய அபிப்பிராயத்துக்கு அனுப்பப்படும் எந்த விஷயங்களைக்குறித்தும் மார்க்கெட் கம்மிட்டிகளுக்கு ஆலோசனை சொல்லுவார்.

இந்திய விவசாய பொருள்களுக்கு ஐரோப்பாவில் ஏற்பட்டிருக்கும் முக்கியதையானது அதிகரித்துக்கொண்டே வருகிறது. இதை உத்தேசித்து, லண்டனிலுள்ள இந்திய வியாபாரக் கம்மிஷனருக்கு இந்தியாவில் அனுசரிக்கப்பட்டுவரும் விவசாய முறையிலும் கூட்டுறவு முறையிலும் அனுபவம் வாய்ந்த உத்தியோகஸ்தர் ஒருவரை உதவி செய்யும்படி ஏற்படுத்தவேண்டும். ஐரோப்பாவில் இந்திய விவசாயப் பொருள்களின் வியாபார சம்பந்தமாய் ஏற்படும் சகல

விஷயங்களையும் ஐரோப்பாவில் கூட்டுறவு முயற்சியில் ஏற்படும் சகல அபிவிருத்திகளையும் நன்றாய்த் தெரிந்துகொண்டிருப்பது ஷை உத்தியோகஸ்தரின் பிரதான அலுவலாகும். அதே மாதிரியான அந்தஸ்தில் இருப்பவராயும் அனுபவம் பெற்றவராயுமுள்ள ஒரு உத்தியோகஸ்தரை நியமித்து கல்கத்தாவிலிருக்கும் கமெர்ஷியல் இன்டெலிஜென்ஸ் டைரெக்டர் ஜெனரலவர்களின் சிப்பந்தியுடன் சேர்க்கவேண்டும். ஷை உத்தியோகஸ்தர் ஐரோப்பாவிலுள்ள தம்மைப்போன்ற உத்தியோகஸ்தரிடத்திலிருந்து தமக்குக் கிடைக்கும் விவரங்களைச் சம்பந்தப்பட்ட இலாகாக்கள் மிகப் பிரயோசனகரமாய் உபயோகித்துக்கொள்ளும் முறையில் அந்த இலாகாக்களுக்குத் தெரிவிப்பார். முடிவில் இந்திய வியாபாரம் விருத்தியடையும்போது இதர தேசங்களில் பிரத்தியேகமான வியாபார கம்மிஷனர்களை நியமிப்பது அவசியமாயிருக்கலாம்.

## 10. விவசாயத்துக்குப் பொருளுதவி செய்வது

பிரதான ரிபோர்ட்டின் 12-ம் அத்தியாயம்

மற்ற ஒவ்வொரு தேசத்திலும் இருப்பதைப் போலவே இந்தியாவிலும் விவசாயிகளுக்கு நிலையான அபிவிருத்திகள் செய்வதற்கோ அதிக விலையுள்ள கருவிகளை வாங்குவதற்கோ அல்லது அவ்வப்போது ஏற்படும் தேவைகளுக்கோ அப்போதைக்கப்போது மூலதனம் கிடைக்கக்கூடிய ஒருவகையான ஆதாரம் வேண்டியிருக்கிறது. இந்தக் காரியங்களுக்காக வேண்டியிருக்கும் பணத்தில் பெரும்பாகம் அவ்வவ்விடத்தில் லேவாதேவி வியாபாரம் செய்பவர்களிடத்திலிருந்து கிடைக்கிறது. ஆயினும், இந்த லேவாதேவிக்காரர்கள் - யாதொரு கைத்தொழிலுக்குத் திரவிய சகாயம் செய்வதற்காக வேண்டியிருக்கும் மூலதனம் இன்னதென்றும் சாதாரண வீட்டுக்காரியங்களுக்காகப் பிடிக்கும் செலவுக்கு வேண்டியிருக்கும் பணம் இன்னதென்றும் வித்தியாசப்படுத்துவதில்லை. கவர்ன்மென்டார் 1883-ம் வருஷத்து நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக்குறித்த ஆக்டின்படியும் 1884-ம்வருஷத்து விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைப் பற்றிய ஆக்டின்படியும் விவசாய சம்பந்தமான காரியங்களுக்காக கடன் கொடுக்கிறார்கள். ஆயினும், இந்தக் காரியங்களுக்காக தனி நபர்கள் கடன்கள் கொடுப்பதைப்பற்றி நிர்ப்பந்தம் ஏற்படுத்தும் கொள்கையைக் கவர்ன்மென்டார் ஒருபோதும் அனுசரித்தது கிடையாது. இப்போது விதிக்கப்பட்டிருக்கும் நிர்ப்பந்தங்களெல்லாம் விவசாயிகள் கடன்பட்டுப்போவதைத் தடுப்பதற்காகவும் அதீத வட்டிக்குப் பணம் கொடுக்கும் லேவாதேவிக்காரர்களின் முயற்சியைத் தடுப்பதற்காகவும் உத்தேசிக்கப்பட்டவை.

பயிரிடும் பூமியை அடைமானம் வைப்பதே நீண்டகாலக் கடன் பெறுவதற்காக மிகவும் சாதாரணமாய் அனுசரிக்கப்படும் முறையாகும். இவ்வகையான ஈட்டின்மேல் கடனுகக் கொடுத்திருக்கும் மொத்த தொகை இப்போது மிகவும் அதிகமாயிருக்குமென்பதில் சந்தேகமில்லை. பயிரிடும் பூமியில் சீர்திருத்தங்கள் செய்வதற்கு அடைமானம் வைத்துக் கடன் வாங்கும் வழக்கம் இப்போது அபூர்வமாக அனுசரிக்கப்படுகிறது. ஈடு வைக்காமல் வாங்கும் கடன்

தொகையானது கடன் கொடுத்தவர் ஈடு வாங்காமல் கடன் கொடுப்பது கஷ்டத்தில் முடியுமென்று எண்ணுகிற அளவுக்கு அதிகமாய்ப் போகிற பட்சத்திலும், துன்பம் நேரிடுகிற காலங்களில் சாதாரண விவசாய சம்பந்தமான ஆவசியகங்களுக்கும் இம்மாதிரி கடன் வாங்கப்படுகிறது. சில விஷயங்களில் குறித்த கால அளவுக்குள் திருப்பிச் செலுத்தப்படாமலிருக்கும் கடன்கள் தாமாகவே செலுத்தவேண்டியவையல்லாதவைகளாய்ப் போய்விடவேண்டுமென்று வற்புறுத்தி சில மாகாணங்களில் சட்டம் செய்யப்பட்டிருக்கிறது. பயிரிடும் பூமியை பந்தக போக்கியம் வைப்பதாயிருந்தால் அக் கடனை நிஷ்கரிஷையாய் இத்தனை வருஷங்களுக்குள் செலுத்தி நிலம் தானுகவே மீண்டு போகும்படி ஏற்பாடு செய்யப்பட்டாலொழிய அப்படிப்பட்ட அடைமானம் வைப்பதற்குச் சட்டப்படி அனுமதி கொடுக்கக்கூடாதென்றும், அந்தக் கால அளவு இருபது வருஷத்துக்கு மேற்படக்கூடாதென்றும் எங்களுக்கு முன் சாட்சியம் கொடுக்கப்பட்டது. இந்தக் கருத்து சரியானதென்று நாங்களும் அபிப்பிராயப்படுகிறோம். இந்தப்படி கடன் வாங்குவதனுல் திருட்டுத்தனமாய் சதியாலோசனை பண்ணி அந்தக் கடன் தீரவொட்டாதபடி ஏற்பாடு செய்வதற்கு இடமுண்டாகிறதென்பதை ஒப்புக்கொள்ளவேண்டும். ஆனுல், கல்வியபிவிருத்தியும் ஒழுக்கத்தில் ஏற்படும் முன்னேற்றமுமே, கடன் கொடுப்பவர் கபடமாய் நடந்துகொள்ளாதபடி தடுப்பதற்கும் கடன் வாங்குபவர் முன் யோசனையின்றி கடன் வாங்குவதைத் தடுப்பதற்கும் சிறந்த பரிகாரங்களாகும். கொதுவைகள் சம்பந்தமாய்க் கவனிக்கவேண்டிய மற்றொரு விஷயம் என்னவென்றுல், சொத்தை மீட்டுக்கொள்ளும் விஷயத்தில் கொதுவை வைத்துக்கொண்டவர்கள் விருப்பமற்றவர்களாயிருப்பதேயாகும். கொதுவை வைத்தவர் கொதுவைச் சொத்தை மீட்டுக்கொள்வதற்காக வியாஜ்ஜியம் தொடரும்போது, அவர் அநியாய வட்டிக்குக் கொடுக்கப்படும் கடன்களைப்பற்றிய ஆக்டில் கண்ட நிபந்தனைகளினுல் பிரயோசனமடைவது சாத்தியமாயிருக்கும்படியாக 1926-ம் வருஷத்தில் அந்த ஆக்ட் திருத்தப்பட்டது. இந்தப் பிரசினை விஷயமாய் விவகரிப்பதற்கு நிலத்தைப் பராதீனம் செய்வதைக்குறித்த 1900-ம் வருஷத்துப் பஞ்சாப் ஆக்டினுலும் கொதுவைகளை மீட்டுக்கொள்வதைக்குறித்த 1913-ம் வருஷத்து பஞ்சாப் ஆக்டினுலும் சில அதிகாரங்கள் ஏற்படுகின்றன. பிந்திய ஆக்டானது - எந்தக் கொதுவைகளின்படி வாங்கப்பட்ட அசல் தொகையானது ரூ. 1,000க்கு மேற்படாமல் இருக்கிறதோ அந்தக் கொதுவைகளுக்கு அல்லது முப்பது ஏகரா விஸ்தீர்ணத்துக்கு மேற்படாத நிலஅடமானங்களுக்கு மாத்திரமே பிரயோகப்படுகிறது. இந்த நிர்ப்பந்தங்களை நீக்கிவிட்டாலும் நீக்கிவிடலாம். கொதுவைச் சொத்துக்களை மீட்பது விஷயமாய் பஞ்சாப் ஆக்டுகளில் கண்டபடி சட்ட நிரூபணம் செய்யும் விஷயத்தைப் பற்றி யோசிப்பது நல்லதென்று நாங்கள் பிரதேச கவர்ன்மென்டுகளுக்குச் சிபாரிசு செய்கிறோம்.

பயிரிடும் பூமியை விவசாயிகளல்லாத மற்றவர்களுக்கு விற்பனை மூலமாகவோ கொதுவை மூலமாகவோ ட்ரான்ஸ்பர் செய்யும் விஷயத்தைக்குறித்து விவகரிப்பதற்காகப் பற்பல பிரதேச கவர்ன்மென்

டுகளால் வெவ்வேறு சட்டதிட்டங்கள் அப்போதைக்கப்போது செய்யப்பட்டிருக்கின்றன. இவைகளெல்லாவற்றிலும் நமக்கு மிகவும் நன்றாய்த் தெரிந்தவை நிலத்தைப் பராதீனம் செய்வதைக்குறித்த பஞ்சாப் ஆக்டும் நிலத்தைப் பராதீனம் செய்வதைக்குறித்த பண்டில்கண்ட் ஆக்டுமாகும். இதே மாதிரியான நோக்கத்துடன் நிலத்தீர்வை சம்பந்தமான பம்பாய் கோட் என்னும் சட்ட புத்தகத்தில் விதிகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. நிலத்தைப் பராதீனம் செய்வது விஷயமாய் சட்ட மூலமாக நிர்ப்பந்தம் ஏற்படுத்தும் முறையை, இப்போது அது செலாவணியாய்க்கொண்டிருக்கும் ஜில்லாக்கள் அல்லது மாகாணங்களைத் தவிர இதர ஜில்லாக்கள் அல்லது மாகாணங்களின் விஷயத்திலும் ஏற்படுத்துவது உசிதமாயிருக்குமா என்பதை அவ்வவ்விடத்திய நிலைமைகளை அனுசரித்தே நிர்ணயிக்கக்கூடுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இது சம்பந்தமாய், விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் கொதுவைக்கடன் இன்ன நிலைமையில் இருக்கிறதென்பதையும், நிலமானது இன்ன அளவுக்கு விவசாய சம்பந்தமான வகுப்பார்களிடமிருந்து விவசாயிகளல்லாத மற்ற வகுப்பார்களுக்கு வாஸ்தவத்தில் மாறிக்கொண்டிருக்கிறதென்பதையும், விவசாய சம்பந்தமான எந்த ஜாதியாரின் அல்லது வகுப்பாரின் நன்மையைப் பாதுகாக்க விரும்பப்படுகிறதோ அந்த ஜாதியார் அல்லது வகுப்பார் இன்னாரென்று நியாயமான அளவுக்குச் சரியாய் வரையறுத்துக் கூறுவது சாத்தியப்படுமா என்னும் விஷயத்தையும் கவனிக்கவேண்டும்.

பயிரிடும் பூமியை ஈடாக வைத்துக்கொண்டு கடன் கொடுப்பது சம்பந்தப்பட்டமட்டில், பெருத்த நிலத்துக்குடையவர்களுக்கும் தோட்டப்பயிர் வைத்திருப்பவர்களுக்கும் சுலபமாய் விற்பனை செய்யத்தக்க பிரத்தியட்சமான ஈட்டுப்பொருள் வைத்திருக்கும் மற்றவர்களுக்கும் மாத்திரமே சாதாரணமாய் ஜாயின்ட் ஸ்டாக் பாங்கிகள் கடன் கொடுத்து வருகின்றன. இவர்களைத் தவிர வெளியார்களுக்கு இந்த பாங்கிகள் விவசாய சம்பந்தமான காரியங்களுக்காக செய்து வரும் உதவி அதிகமென்று சொல்ல முடியாது. கவர்ன்மென்டாரின் பணத்தைக்கொண்டு ஸர்க்கார் சம்பந்தமில்லாத பாங்கிகள் கடனை ஒரே மொத்தமாய் மீட்பது சம்பந்தமான ஏற்பாடுகள் அப்போதைக்கப்போது ஆலோசனைக்குக் கொண்டுவரப்பட்டன. ஆயினும், குறைந்த வட்டிக்கு ஏராளமாய்க் கடன் கிடைக்கும்படியாக ஏற்பாடு செய்கிற பட்சத்திலே, கிராமக் குடிகளின் கடன் சம்பந்தமான கஷ்டங்கள் நிவாரணையாகிவிடுமென்று அபிப்பிராயம் கொள்பவர்களுக்கு ஈஜிப்ட் தேசத்திலுள்ள விவசாய பாங்கியின் சரித்திரம் ஒரு நல்ல எச்சரிக்கையாகும். தாம் வாங்கும் கடனைத் திருப்பிக்கொடுக்கத் தமக்கு இருக்கும் சக்திக்கு மேற்படாமல் வாங்கும்படியும், வாங்கின கடன் தொகையில் பெரும்பாகத்தை நல்ல பலன் தரக்கூடிய காரியங்களுக்கு உபயோகிக்கும்படியும் தூண்டுவதற்கு வேண்டிய அறிவும் நல்ல யோக்கியதையும் சராசரி விவசாயிக்கு இருந்தால் மாத்திரமே கிராமக் குடி ஜனங்களுக்குக் குறைந்த வட்டிக்குக் கடன் கிடைப்பது வாஸ்தவத்தில் ஒரு பாக்கியமென்று சொல்லலாம்.

சாதாரணமாய்ப் பெரிய நிலச்சுவான்தாரர்கள் தங்களுடைய பூஸ்திதிகளை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் எதிர் பார்க்கக்கூடிய அளவுக்கு சிரத்தை எடுத்துக்கொள்வதில்லையென்று சொல்லலாம். சில இடங்களில் காணியாட்சி சம்பந்தமாகவோ பாயக்காரி பாத்தியதை சம்பந்தமாகவோ ஏற்பட்டிருக்கும் சட்டங்கள் இவ்விதமாய்ச் சிரத்தை எடுத்துக்கொள்வதற்குத் தடங்கலாயிருக்கின்றன. தங்களுடைய நிலத்தை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் பணத்தைச் செலவிட விருப்பமுள்ள நிலச்சுவான்தாரர்களை அவ்வாறு செய்ய முடியாதபடி தடுக்கும் விதமாக காணியாட்சி சம்பந்தமாகவோ பாயக்காரி பாத்தியதை சம்மந்தமாகவோ ஏற்கனவே ஏற்பட்டுள்ள சட்டங்கள் பிரயோகப்படுகிற இடங்களிலே, இவ்வித கஷ்டங்களை நிவர்த்திக்கக்கூடிய திருத்தங்களைச் சட்டமூலமாய் ஏற்படுத்தும் உத்தேசத்துடன் இதுவிஷயத்தைப்பற்றி ஜாக்கிரதையாய் ஆலோசனை பண்ணவேண்டும். "சொந்த பண்ணைகளை" ஏற்படுத்தி அவைகளைப் பலர் பின்பற்றக்கூடிய முறையில் நடத்துவது பிரயோசனகரமாயிருக்குமென்று சிபாரிசு செய்யப்படுகிறது. மேலும், காணியாட்சி சம்பந்தமான கஷ்டங்கள் ஏற்படுகிற இடங்களிலே அப்படிப்பட்ட பண்ணைகளை ஸ்தாபிப்பதற்கு அனுமதி கொடுக்கும் விதமாக நடவடிக்கை நடத்துவது மிகவும் அவசியமாகத் தோற்றுகிறது.

நில விருத்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த ஆக்டினால் மொத்தத்தில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. ஆனால், அதன் நிபந்தனைகளைப் பொது ஜனங்கள் யாவரும் தெரிந்துகொள்ளவேண்டிய அளவுக்குத் தெரிந்துகொண்டிருக்கிறார்களாவென்பது சந்தேகமாயிருக்கிறது. ஷை கடன்களுக்காகச் செய்துகொள்ளப்படும் விண்ணப்பங்கள் சம்பந்தமாக விவகரிக்கும் விஷயத்தில் காலதாமதம் ஏற்படுவதாக அனேக புகார்கள் செய்யப்படுகின்றன. ஆயினும், சிறிது யோசித்துப் பார்த்தால் பெரும்பான்மையான விஷயங்களில் கடன் கொடுப்பதற்கு முன்னால் செய்யவேண்டிய விசாரணைகளை ஜாக்கிரதையாய்ச் செய்யவேண்டுமானால் சிறிதுமட்டில் காலதாமதம் ஏற்படாமலிருக்க முடியாதென்று தெரியவரும். இந்த விதிகளை இன்னும் கண்டிதக் குறைவாயிருக்கும்படி செய்கிறபட்சத்திலே, விவசாயிகள் அவிவேகமாய்க் கடன் வாங்குவதற்கு அதிக தூண்டுதல் ஏற்படக்கூடும். மேலும், ஈடாக கொடுப்பதாய்ச் சொல்லப்படும் சொத்தை ஜாக்கிரதையாய்ப் பரிசோதனை செய்வதும், எந்த சீர்திருத்தம் செய்வதற்காக கடன் கொடுக்கப்படுகிறதோ அந்த சீர்திருத்தம் செய்வதற்காகவே கடன் தொகை வாஸ்தவத்தில் செலவழிக்கப்படுகிறதா என்று பார்க்கும்பொருட்டு மேற்பார்வையிடுவதும், கடன் தொகையைக் கிரமமாய் வசூலிக்கும்படி நிர்ப்பந்திப்பதும் ஆகிய இந்தக் காரியங்களெல்லாம் கடன் வாங்குபவரின் நன்மையை உத்தேசித்தே அவசியம் செய்யப்படவேண்டிய காரியங்களாகும். நில அடைமான பாங்கிகள் உறுதியாய் ஏற்படுத்தப்பட்டுவிட்டால், இந்த ஆக்டின்படி கடன் கொடுப்பதற்காக ஏற்படுத்தி வைத்திருக்கும் தொகைகளில் ஒரு பாகத்தை அந்த பாங்கிகளின் வசம் கொடுத்து வைக்கலாம். ஆனால் அந்தப்படி செய்யும்போது இந்த ஆக்டின் வியாபகத்துக்குட்பட்ட காரியங்களுக்கு மாத்திரமே ஷை

தொகை உபயோகிக்கப்படும்படி பார்த்துக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த ஆக்டின் விஷயமாய்ப் பிரஸ்தாபிக்கப்பட்ட நிர்ப்பந்தங்கள் ஒருபுறமிருக்க, விவசாயக்காரர்களுக்குக் கடன் கொடுப்பதைப்பற்றிய ஆக்டினாலும் மொத்தத்தில் நல்ல பலன் கிடைத்திருக்கிறது. பயிரிடக்கூடிய நிலத்தின் சொந்தக்காரர்களுக்கும் அனுபோகதாரர்களுக்கும் மாத்திரமே கடன் கொடுக்கப்படுகிறது. மேலும், மேற்படி ஆக்டின்படி துன்ப நிவர்த்தி சம்பந்தமான காரியத்துக்காகவும், விதை அல்லது கால்நடைகள் வாங்கும் காரியத்துக்காகவும், நிலவிருத்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த ஆக்டில் குறிப்பிட்டிராவிட்டபோதிலும் விவசாய காரியங்களுக்குச் சம்பந்தப்பட்ட வேறே யாதொரு காரியத்துக்காகவும் மாத்திரமே கடன் கொடுக்கப்படுகிறது. இந்த ஆக்ட் அமுலுக்கு வந்தபிறகு, அநாவிருஷ்டியினாலாவது வெள்ளத்தினாலாவது பெருவாரி வியாதிகளினாலாவது பூகம்பங்களினாலாவது துன்பம் நேரிட்ட காலங்களில இதனால் விசேஷ பிரயோசனம ஏற்பட்டது. யாதொரு அவசரமான சம்பவம் திடீரென்று ஏற்பட்டு, தற்கால ஆவசியகங்களுக்காக உடனே மூலதனம் உதவவேண்டியிருக்கிறபட்சத்திலே, அப்படிப்பட்ட சம்பவ விஷயமாய் எந்தப் பிரதேச கவர்ன்மென்டாராகிலும் நடவடிக்கை நடத்தவேண்டியவர்களாயிருந்தால், இந்த ஆக்டானது அவர்களுக்கு ஒரு பலமான சாதனமாயிருக்கும். இதில் கண்ட விதிகள் அடிக்கடி புனராலோசனை செய்து திருத்தப்பட்டிருக்கின்றன. மேலும், கடன் வாங்குபவர் கடன் கொடுப்பவர் ஆகிய இருவருடைய நன்மையையும் உத்தேசித்து இந்த விதிகளை எவ்வளவு கண்டிதக் குறைவாயிருக்கும்படி செய்வது சாத்தியமோ அவ்வளவு கண்டிதக் குறைவாயிருக்கும்படி இப்போது செய்திருக்கிறது. சிக்கன வாழ்க்கையாவது கூட்டுறவு முறையில் கடன் வாங்கும் வழக்கமாவது இவ்விரண்டுமாவது பரவி இந்த ஆக்ட் அனாவசியமென்று ஏற்படுகிறவரையில் அது சட்டப் புத்தகத்தில் இருக்கத்தான்வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

பிரஸ்தாப விஷயத்தை அடிக்கடி பரிசீலனை செய்துவந்தபடியால், கிராம ஜனங்கள் கடன்பட்டிருப்பதைப்பற்றியும் அதன் காரணங்களைப்பற்றியும் பொது ஜனங்கள் நாளாவர்த்தியில் அதிகமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஒருபக்கத்தில், நிலத்துக்குடையவருக்கு நாணயத்தின்பேரில் கடன் கொடுப்பது போதவாய் அதிகரித்து வருவது காரணமாகவும், அவர் கல்வியறிவற்றவராயிருப்பது காரணமாகவும், தமக்கு இனிமேல் கிடைக்கக்கூடிய வரும்படியையும் தம்முடைய மூலதனத்தையுங்கூட கொதுவை வைத்து தற்கால தேவைகளைப் பூர்த்திசெய்துகொள்ள அவருக்கு ஏற்படும் தூண்டுதல் காரணமாகவும், அவருடைய கடன் அதிகரித்து வந்திருக்கிறது. மற்றொரு பக்கத்தில், வியாபாரமும் வர்த்தகமும் விரைவில் அபிவிருத்தி அடைந்துவருவது காரணமாகவும் ஸ்திரதரமான சட்டமும் சாஸ்வதமான ஸிவில் கோர்ட்டுகளும ஏற்பட்டிருப்பது காரணமாகவும் காண்ட்ராக்ட் ஆக்டைப் போன்ற சட்டங்கள் செய்யப்பட்டிருப்பது காரணமாகவும் கடன் கொடுப்பவரின்

நிலைமை வலுவடைந்திருக்கிறது. கூட்டுறவைப்பற்றி வருஷவாரியில் வெளிவிடப்படும் ரிபோர்ட்டுகளிலிருந்து கிராம ஜனங்கள் கடன் பட்டிருப்பது விஷயமாக உபயோககரமான சங்கதிகள் விசேஷமாய்த் தெரியவந்திருக்கின்றன. மேலும், பற்பல மாகாணங்களில் நடத் தப்பட்ட கிராம ஸர்வேக்கள் மூலமாய் இது சம்பந்தமான விவரங் களைப்பற்றி விளக்கமாய்த் தெரிந்துகொள்வதற்கு இடமேற்பட்டி ருக்கிறது. அன்றியும், "பஞ்சாப் விவசாயியின் வாழ்வும் கடனும்" என்பது விஷயமாய் மிஸ்டர் டார்லிங் என்பவர் எழுதிய புத்தகமா னது இவ்விஷய சம்பந்தமாய்ப் படிக்கக்கூடிய முக்கியமான புத்தகமா கும். இந்த புத்தகத்தில் இவ்விஷயமாக முடிவாய்த் தெரிவித்தி ருக்கும் அபிப்பிராயங்கள் ஒரு தனி மாகாணத்தின் எல்லைகளுக் கப்பாலுள்ள விஸ்தீர்ணத்துக்கும் பிரயோகப்படக்கூடியவைகளாயி ருக்கின்றன.

.கடன்பட்டிருக்கும் விஷயத்தைக்குறித்து விவகரிப்பதற்காக உத்தேசித்து சட்டநிருபண சபையாரால் செய்யப்பட்டிருக்கும் சட் டங்கள் மற்ற சட்டங்களைப்போல் அவ்வளவு சித்திகரமாயிராமல் பலிதமற்றவைகளாகவே இருப்பதாக தெரியவந்திருக்கிறது. விவ சாயிகளைச் சேர்ந்த கால்நடைகளையும் விவசாயக் கருவிகளையும் மாசூலையும் விற்பனை செய்யக்கூடாதென்று நிவாரணை பண்ணி ஸிவில் ப்ரொஸீஜர் கோடில் கண்டிருக்கும் நிபந்தனைகளை விட்டு விடலாமென்று ஒரு மாகாணத்தில் சாட்சியம் சொல்லப்பட்டது. பீஹாரிலும் ஒரிஸ்ஸாவிலும் வழங்கும் கமியாடி (விவசாயத் தொழி லாளிகள் சம்பந்தமான) உடன்படிக்கைகளைக் குறித்த ஆக்ட் பிர யோசனமற்றதாயிருப்பதாகக் கண்டறியப்பட்டிருக்கிறது. தக்கா ணத்து விவசாயிகளுக்குப் பரிகாரம் செய்துகொடுப்பதைக் குறித்த ஆக்டில் கண்ட நிபந்தனைகளை சம்பந்தப்பட்ட நபர்கள் அனுசரிக்காமல் அவைகளினின்றும் தப்பித்துக்கொள்ள முயற்சி செய்கிறார்கள். மேலும், இந்தியாவிலுள்ள ஒவ்வொரு மாகாணத்திலும் அநியாய வட்டிக்குக் கொடுக்கப்படும் கடன்களைக் குறித்த ஆக்டானது அனுஷ்டானத்தில் பிரயோசனப்படாமல் வெறும் ஏட்டில் மாத்திரம் இருக்கிறது. கடைசியாக சொன்ன ஆக்டை உபயோகித்துக்கொள்ளத் தவறிப்போவதற்குரிய காரணங் களைக் குறித்து சகல மாகாணங்களிலும் விசாரணை செய்யப்பட வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அந்த ஆக்டில் கண்ட நிபந்தனைகள் பூர்த்தியாய் உபயோகித்துக்கொள்ளப்பட்டால், எவ்வித நிர்ப்பந்தமுமின்றி அநியாய வட்டி வாங்குவதனால் ஏற்ப டும் கொடுமையான தீமைகள் பெரிதும் நிவர்த்தியாய்விடும். லேவா தேவிக்காரர்களைக் குறித்த பஞ்சாப மசோதா ஆக்டும் 1927-ம் வருஷத்திய ப்ரிடடன் தேசத்து லேவாதேவிக்காரர்களைக் குறித்த ஆக் டும் இது சம்பந்தமாய்ப் பிரதேச கவர்ன்மென்டுகள் ஆலோசனை செய்வதற்குத் தகுதியான இதர ஆக்டுகளாகும். மேலும், கடன் தீர்க்கச் சக்தியற்றவர்களாய்விட்டிருக்கும் கிராம ஜனங்களைக்குறித் துச் சுலபமான ஆக்ட் ஒன்றை ஏற்படுத்துவது அவசியமா என்னும் விஷயத்தைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யவேண்டும்.

கிராமத்தார்களுக்குச் சரியான முறையில் கல்வி கற்பித்து அவர் களுக்குள்ளாகவே ஒழுக்கமான பயிற்சி ஏற்படும்படி செய்து அவை

களை ஆதாரமாகக்கொண்டு பழுதின்றியும் சரியான அமைப்புடனும் கூட்டுறவு முறையானது விருத்தியடைந்து பரவினால்தான், கிராமப் பொது ஜனங்களை நசுக்கிக்கொண்டிருக்கும் கடன் -சுமையிலிருந்து அவர்கள் விடுதலை பெறுவதற்குச் சிறந்த மார்க்கம் ஏற்படுமென்று நாங்கள் நம்புகிறோம். அதை இவ்விடத்தில் எழுதிவைக்கத் தயங்க மாட்டோம். கடன் கஷ்டத்திலிருந்து நிவாரணையாவது ஒருபுற மிருக்க, விவசாயிகளுக்குச் சரியான முறையில் திரவிய சகாயம் கிடைக்கும்படி செய்வதற்குக் கூட்டுறவு முறைப்படி கடன் கிடைக்கும்படி செய்வதுதான் திருப்திகரமான வழியாயிருக்கிறது. நியாயமான சகல வழிகளிலும் சிக்கனத்தை அனுசரிக்கும்படி விவசாயிகளைத் தூண்டவேண்டும். ஏனென்றால், அவர்கள் சிக்கனமாய் செலவு செய்வது காரணமாக அவர்களிடத்தில் மீதி நிற்கும் தொகைதான் அவர்களுக்கு வேண்டிய மூலதனத்துக்குச் சிறந்த ஆதாரமாயிருக்கிறது. கிராமக் குடிஜனங்கள் சந்துஷ்டியுள்ளவர்களாகவும் திருப்தியுள்ளவர்களாகவும் க்ஷேமமாகவும் வாழவேண்டுமானால், பிரதேச கவர்ன்மெண்டுகள் கூட்டுறவு இயக்கத்தைத் தங்களாலானவரையில் ஆதரிக்கத் தகுந்த ஓர் இயக்கமாகக் கருத வேண்டும்.

## 11 கூட்டுறவு.

பிரதான ரிபோர்ட்டின் 13-ம் அத்தியாயம்.

விவசாயத்தோடு சம்பந்தப்பட்ட பல விஷயங்களில் கூட்டுறவைப்போல் வேறெந்த விஷயத்தைப்பற்றியும் நாங்கள் எங்களுடைய ரிபோர்ட்டில் அடிக்கடி குறிப்பிடவில்லை. நீர்ப்பாய்ச்சல் விஷயத்தைப்போலவே இந்த விஷயத்தைப் பற்றியும் ஒரு பிரத்தியேக கம்மிட்டியார் ஆராய்ச்சி செய்து, 1915-ம் வருஷத்தில் ரிபோர்ட் அனுப்பியிருக்கிறார்கள். ஸர் எட்வர்ட் மெக்லாகன் என்பவர் இந்தக் கம்மிட்டியில் அக்கிராசனம் வகித்தார். அந்தக் கம்மிட்டியார் அனுப்பிய ரிபோர்ட்டில் பிரமாண ரூபமாக அனேக சிபாரிசுகள் செய்யப்பட்டிருந்தன. இவ்வியக்கத்தை நடத்திக்கொண்டுபோகும் விஷயத்தில் மாகாணங்களில் இன்ன கொள்கையை அனுசரிக்கவேண்டுமென்று நிர்ணயிப்பதற்கு ஷை சிபாரிசுகள் உதவியாயிருந்தன. கூட்டுறவு இயக்கத்தில பிரதான வேலைப் பிரிவாய் இப்போதும் கருதப்படும் நாணய சங்கங்களைக் குறித்தே இந்த கம்மிட்டியார் முக்கியமாய் விவகரித்தார்கள்.

சரித்திர பூர்வகமாக பார்க்கும்போது, கூட்டுறவு இயக்கமானது 1901-ம்வருஷத்தில் ஏற்படுத்தப்பட்ட இந்துதேசத்துப் பஞ்ச விசாரணைக் கம்மிட்டியாரின் சிபாரிசுகளிலிருந்து உற்பத்தியாயிருப்பதாக சொல்லலாம். அந்த தேதிக்கு முன்பு ஸர் ப்ரெடரிக் நிகல்ஸன் என்பவர் சென்னை கவர்ன்மெண்டின் சார்பாக இது விஷயமாய்ப் பூர்த்தியாக ஆராய்ச்சி செய்தார். அவருடைய ரிபோர்ட்டுகள் 1895–97-ம்வருஷங்களில் பிரசுரிக்கப்பட்டன. அக்காலத்தில், சாதாரண கம்பெனிச் சட்டத்தின்படியே ரெஜிஸ்டர் செய்யப்படக்கூடியவைகளாயிருந்த சில சங்கங்கள் ஐக்கிய மாகாணத்திலும் பஞ்சாபிலும் ஏற்படுத்தப்பட்டன. ஆயினும் 1904-ம் வருஷத்து கூட்டுறவு சங்கங்களைக் குறித்த முதலாவது ஆக்ட் ஜாரி

செய்யப்பட்ட பிறகுதான் இந்த இயக்கம் உண்மையில் வேலை செய்ய ஆரம்பித்தது. கடன் கொடுக்கும் விஷயத்துக்கு மாத்திரமே இந்த ஆக்ட் பிரயோகப்படவேண்டுமென்று கண்டிதமாய் வரையறை ஏற்படுத்தப்பட்டது. ஜனங்கள் கேட்டுக்கொண்டது காரணமாக இந்த ஆக்ட் ஜாரி செய்யப்படவில்லை. ஆனால், ஜனங்களின் நிலைமையை உயர்த்தும் விஷயத்தில் ஏற்பட்ட ஆவல் காரணமாகவே முக்கியமாய் இந்த ஆக்ட் கவர்ன்மெண்டாரால் ஜாரி செய்யப்பட்டது. மேலும், இந்த ஆக்டை அமுலுக்குக் கொண்டுவரும் பொருட்டு ஒரு கவர்ன்மென்ட் இலாகாவை ஏற்படுத்தவேண்டியதாயிற்று. 1912-ம் வருஷத்தில் இது விஷயமாய் இரண்டாவது ஆக்ட் ஒன்று ஜாரி செய்யப்பட்டது. அந்த ஆக்டானது (இதுவிஷயமாய் சொந்தத்தில் ஆக்டுகளை ஏற்படுத்திக்கொண்டிருக்கும் பம்பாயிலும் பர்மாவிலும் தவிர) இந்தியாவிலுள்ள மற்ற பாகங்களிலெல்லாம் இன்னும் செலாவணியாய்க்கொண்டிருக்கிறது. இந்த ஆக்டின்படி, கடன் கொடுப்பது சம்பந்தமான காரியங்களல்லாத இதர காரியங்களுக்கும் இந்த இயக்கத்தைப் பிரயோகிப்பது சாத்தியமாயிருந்தது. ஆனால், கிராமக் குடிஜனங்கள் கடன்பட்டிருப்பது சர்வ சாதாரணமாயிருப்பதால் கடன் கொடுக்கும் சங்கங்களே இன்னும் பிரதானமா யிருந்துவருகின்றன. இந்தப்படி யிருப்பது சகஜமே. மேலும், அப்படிப்பட்ட சங்கங்களினால் இன்னொரு முக்கியமான அனுகூலமும் ஏற்படுகிறது. அதாவது, கடன் கொடுக்கும் சங்கமொன்று நன்றாய் வேலை செய்தால், அது பொது ஜனங்களுக்கு விஷயங்களைக் கற்பிப்பதற்குச் சிறந்த சாதனமாயிருப்பதுமல்லாமல், மேலான நிலைமையை அடையும் விருப்பத்துடன் இதர ஏற்பாடுகளைத் தொடங்குவதற்குச் சிறந்த அஸ்திவாரமாகவும் இருக்கிறது. கிராம நாணய சங்கந்தான் வாஸ்தவத்தில் இந்த இயக்கம் முழுவதுக்கும் மூலதாரமாகும்.

1926–27-ம் வருஷத்தில் பிரிடிஷ் இந்தியாவிலே $22\frac{1}{2}$ லட்சத்துக்கு மேற்பட்ட அங்கத்தினர்களும், வேலை செய்வதற்காக மொத்தத்தில் சுமார் 25 கோடி ரூபாய் மூலதனமும் உள்ள விவசாய சம்பந்தமான பிரதம சங்கங்கள் சுமார் 67,000 வரையில் இருந்தன. இதைக்கொண்டே இந்த இயக்கம் எவ்வளவுமட்டில் அபிவிருத்தி அடைந்திருக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளலாம். நியாயமான வட்டிக்கு மூலதனத்தொகை ஏராளமாய்க் கிடைப்பதும், கிராம ஜனங்களுக்குக் கடன் கொடுப்பதற்கான முறையொன்று ஒழுங்காய் ஏற்பட்டிருப்பதுமே இதுவரையில் இந்த இயக்கத்தினால் அடைந்த முக்கியமான பலன்களென்று சொல்லலாம். மேற்படி முறையை ஜாக்கிரதையாக விருத்தி செய்துவந்தால் அநியாய வட்டி வாங்குவது காரணமாக விவசாயிக்கு ஏற்படும் கஷ்டமும் நிவர்த்தியாகும்.

ஆயினும், இந்த இயக்கம் சித்திகரமாய் இருப்பதாக புள்ளி விவரங்களைக்கொண்டே நிர்ணயிக்கமுடியாது. மேலும், இது சம்பந்தமாய் நாங்கள் விசாரணைகள் செய்ததில் அபிவிருத்தியானது சகல மாகாணங்களிலும் ஒரே மாதிரியாய் ஏற்பட்டில்லையென்றும், சங்கங்களின் சங்கியை அதிகரித்ததற்கேற்றபடி அவைகள் நடத்தும் வேலையின் லட்சணமும் எல்லாக் காலங்களிலும் விருத்தியாகவில்லை

யென்றும் தெரியவந்திருக்கிறது. சங்கங்கள் தாராளமாய் ரெஜிஸ்டர் செய்யப்பட்டிருக்கின்றன. ஆனால், தகுந்த மேற்பார்வையின் கீழ் தங்களுடைய வேலையைத் திறமையுடன் செய்யக்கூடிய உபாத்தியாயர்கள் இந்த சங்கங்களிலுள்ள மெம்பர்களுக்கு கூட்டுறவு சம்பந்தமான முறைகளைப்பற்றியும் அதன் கருத்தைப்பற்றியும் சாவதானமாகவும் இடைவிடாமலும் கற்பித்து வரவில்லை. இதுதான் மேலேகண்ட நிலைமைக்குக் காரணமாயிருக்குமென்று தோற்றுகிறது. மேலும், மேற்பார்வையிடும் வேலையும் சரியான வழிகாட்டி சங்கங்களின் காரியங்களை நடத்தும் வேலையும் வெகு சீக்கிரத்திலேயே நிறுத்திவிடப்பட்டதாக சாட்சியத்தின் மூலமாய் ஏற்படுகிறது. இது சரியல்ல. கூட்டுறவு ஸ்தாபனங்களின் மெம்பர்கள் தங்களிடம் ஒப்புவிக்கப்பட்டிருக்கும் பொறுப்புகளை ஏற்றுக்கொள்வதற்குப் போதுமானபடி பயிற்சி செய்விக்கப்படவில்லை. இதனால், இந்த சங்கங்களைச் சேர்ந்தவர்கள் மேல்விசாரணைக்கு உட்படவேண்டியிருப்பதைப் பொறுக்க முடியாமல் அதிகாரிகள் மட்டுக்கு மிஞ்சி சங்கங்களின் விவகாரங்களில் தலையிடுவதாக சகஜமாய் பாவித்துத் தங்களுடைய கோபத்தையும் வெளிப்படுத்தியிருக்கிறார்கள். மேலும், மேற்படி சங்கங்கள் சில விவகாரங்களையும் நடத்தி அவை ஹானிகரமாகவும் முடிந்திருக்கின்றன.

சென்ற சில வருஷங்களாக கூட்டுறவு இயக்க சம்பந்தமாய் கௌரவார்த்தமாக வேலைசெய்ய அநேகர் முற்பட்டு இது விஷயத்தில் சிரத்தை எடுத்துக்கொண்டிருக்கிறார்கள். இந்த இயக்கம் சித்திபெற்றிருப்பதற்கு அவர்கள் விசேஷமாய் உதவி செய்திருக்கிறார்கள். ஆனால், இவர்களுள் பெரும்பான்மையோர் இதர தொழில்களில் அல்லது சொந்த காரியங்களில் ஈடுபட்டிருப்பதால், சங்கங்களுக்கு வேண்டிய விஷயங்களை விவரமாய்ப் போதிப்பதற்கோ சங்கங்களின் வேலையை மேற்பார்வையிடுவதற்கோ அவசியமான காலத்தைச் செலுத்த முடியாதவர்களாயிருக்கிறார்கள். இது நியாயமே. இந்தப்படி கௌரவார்த்தமாய் வேலை செய்பவர்களைப் பயன்படுத்திக்கொள்ளும் முறையிலேயே இருக்கும் வரையறைகளைத் தெரிந்துகொள்ளத் தவறிப்போனதனால்தான், இந்த இயக்கத்தில் இப்போது ஏற்பட்டிருப்பதாக எங்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கும் மிகப் பிரமாதமான குறைகள் பெரும்பாலும் ஏற்பட்டிருக்கின்றனவென்று சொல்லவேண்டும். கௌரவார்த்தமாய் வேலை செய்பவர்கள், உத்தியோக ஹோதாவில் வேலை செய்யும் சிப்பந்திகள் ஆகிய இருவகையாரும் இவ்வியக்க சம்பந்தமாக வேலை செய்வதற்கு விசேஷ இடமிருக்கிறதென்றும், உத்தியோக சிப்பந்திகளை நீக்கிவிடுவதற்கோ அல்லது குறைப்பதற்கோ கூட இன்னும் சரியான காலம் வரவில்லையென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆகவே, மிகத் திறமையாகவும் நன்றாய்ப் பயிற்சி செய்விக்கப்பட்டுமுள்ள உத்தியோக சிப்பந்திகளை எல்லா மாகாணங்களிலும் ஏற்படுத்துவதற்கு சர்வ முயற்சிகளும் செய்யவேண்டுமென்று நாங்கள் பலமாய் சிபாரிசு செய்கிறோம். உத்தியோக சிப்பந்திகள் செய்யும் வேலைகளைத் தாங்களே செய்ய ஏற்றுக்கொள்ளவும் அதன்மேல் அவர்களுடைய உதவி வேண்டாமென்று தள்ளிவிடவும் தங்களுக்குத் திறமை ஏற்படுகிற வரையில் மெம்பர்களுக்கு விஷயங்களைக் கற்பிப்பது அவர்க

ளுடைய கடமையாகும். மிக்வும் கஷ்டமான பிரசினைகள் ஏற்படும் போது சாமர்த்தியமாக ஆலோசனை சொல்லியும் சரியான வழி காட்டியும் கௌரவார்த்தமாய் வேலை செய்பவர்களுக்குப் பக்கபலமா யிருப்பதும், இந்த இயக்கத்தை நிர்வகித்து மேல் விசாரணை செய்து வரும் யூனியன்களின் வேலையையும் பெடரேஷன் என்னும் ஐக்கிய சபைகளின் வேலையையும் மேற்பார்வையிடுவதும் அவர்களுடைய கடமையாகும் மேலும், அவர்கள் - இதர இலாகாக்களின் வேலை யைச் சுலபப்படுத்துவதற்கும், இது விஷயமாய் அவை விசேஷ பிர சாரம் நடத்துவதற்கு வேண்டிய காரியங்களை முன்னதாய்ச் செய்து கொள்வதற்கும், நிபுணர்கள் சொல்லும் ஆலோசனையை ஜனங்கள் கேட்டு அதன்படி நடக்கும்படி அவர்களை ஒழுங்குபடுத்துவதற்கும் சாதகமான புதிய ஏற்பாடுகளை நிர்மாணிக்கவும் வேண்டும்.

ரெஜிஸ்ட்ராரானவர் இந்த இயக்கத்துக்கு உத்தியோக ஹோதா வில் தலைவராயிருக்கிறபடியால், அவா புருஷத்துவம் உடையவரா யிருப்பது மிகவும முக்கியமான விஷயமாகும். இந்த வேலைக்கு விசேஷ யோக்கியதாம்சங்கள் வேண்டியிருப்பதால், கிடைக்கக்கூடிய வர்களில் மிகவும் சிறந்த ஒருவரைப் பிரதேச கவர்ன்மென்டார் இந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்வோம். பரிபாலன சம்பந்தமான அனுபவமும் ஜனங்களைப் பற்றியும் அவர்களுடைய பொருளாதார நிலைமையைப்பற்றியும் தெரிந்திருப்பதும் கௌரவார்த்தமாய் வேலை செய்பவர்களின் கூட்டு றவைப் பெறுவதற்கான சக்தியும் இந்த வேலைக்கு முக்கியமான யோக்கியதாம்சங்களாகும். ரெஜிஸ்ட்ராரை அடிக்கடி மாற்றிக் கொண்டிராமல் அந்த வேலையிலேயே வைத்திருப்பது மிகவும் முக்கி யமானது. ரெஜிஸ்ட்ரார் இந்த உத்தியோகத்தை வகிக்கும் கால அளவு ஐந்து வருஷத்துக்குக் குறையாமலும் பத்து வருஷத்துக்கு மேற்படாமலும் இருக்கவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். ரெஜிஸ்ட்ரார் பதவிக்கு நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு உத்தியோகஸ் தர் அவருடைய ஊழிய வர்க்கத்தில் கிரமமாய் மேல் உத்தியோ த்துக்கு உயர்த்தப்படுவது இதனால் பாதிக்கப்படக்கூடாது. மேலும், அவர் மேல் உத்தியோகத்துக்கு உயர்த்தப்படவேண்டிய ஸ்திதிக்கு வந்திருக்கிறபட்சத்திலே, ஊழிய வர்க்கத்தில் அந்த உயர்ந்த பதவிக் குக் கொடுக்கும் சம்பளத்தைக் கொடுத்து அவரை ரெஜிஸ்ட்ரார் உத்தியோகத்திலேயே வைத்திருக்கவேண்டுமென்று நாங்கள் அபிப் பிராயப்படுகிறோம். அன்றியும், தாம் ரஜாவின்மேல் போகும்போது தமக்குப் பதிலாக வேலை பார்ப்பதற்கும் கடைசியாய்த் தமக்குப்பின் அந்த உத்தியோகத்தை வகிப்பதற்கும் ஒரு உத்தியோகஸ்தரையோ அல்லது பல உத்தியோகஸ்தர்களையோ பயிற்சி பெறும்படியாக தமக்குக் கீழ் எப்போதும் வைத்திருப்பது மிகவும் முக்கியமா னது. ஐரோப்பாவிலாகிலும் இதர இடங்களிலாகிலும் கூட்டுறவு இயக்கத்தைப்பற்றிய விஷயங்களைத் தெரிந்துகொள்வதற்கு ரெஜிஸ் ட்ரார்களுக்கும் இந்த இலாகாவைச் சேர்ந்த இதர உத்தியோகஸ்தா களுக்கும் சமயம் வாய்க்கும்படி செய்யவேண்டும்.

கவர்ன்மென்ட் சிப்பந்தியைச் சேர்ந்தவர்களைப் பயிற்சி செய் வதைப்பற்றிக் கவனிப்போம்; பஞ்சாபில் இந்த வேலையானது

வித்தியா இலாகாவைச் சேர்ந்த மூன்று இன்ஸ்பெக்டர்களிடத்தில் ஒப்புவிக்கப்பட்டிருக்கிறது. அவர்கள் கூட்டுறவு இலாகாவில் இன்ஸ்பெக்டர் பதவிக்காக அங்கீகரிக்கப்பட்டிருக்கும் அபேட்சகர்களைக் கிராமப் பொருளாதார விஷயங்களில் தீவிரமான பயிற்சி செய்விப்பதுமல்லாமல், ஸப் இன்ஸ்பெக்டர்களைப் பயிற்சி செய்விப்பதற்காக வகுப்புகளையும் வைத்து நடத்திவருகிறார்கள். பம்பாயில், கவர்ன்மெண்ட் அகௌன்டன்ஸி டிப்ளொமா போர்ட் என்னும் சபையாரால் கூட்டுறவு கணித முறையில் நடத்தப்படும் ஒரு பரீட்சையில் ஆடிட்டர்கள் தேறவேண்டியிருக்கிறது சிப்பந்திகளைப் பயிற்சி செய்விக்கும் விஷயத்தை எல்லா மாகாணங்களிலும் பிரமாதமாய் ஆலோசனைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேலும், பஞ்சாபிலும் பம்பாயிலும் அனுசரிக்கப்படும் நடவடிக்கை முறையைப்பற்றி ஆலோசனை செய்யவேண்டுமென்றும் நாங்கள் சிபாரிசு செய்ய விரும்புகிறோம்.

மேற்பார்வையிடும் ஸ்தாபனங்களைக் குறித்துக் கவனிப்போம். சில மாகாணங்களில் ப்ரொவின்ஷியல் யூனியன் என்னும் மாகாண சங்கங்கள் மேற்பார்வையிடும் வேலையைப் பெரும்பாலும் ஏற்றுக்கொள்கின்றன. இந்த யூனியன்கள் சம்பளம் பெறும் சிப்பந்திகளை வைத்துக்கொண்டிருக்கின்றன. இந்த சிப்பந்திகளுக்கு விஷயங்களைக் கற்பிப்பதற்கும் அவர்களைப் பயிற்சி செய்விப்பதற்கும் அவர்கள் திறமையாய் வேலை செய்வதற்கும் இந்த யூனியன்கள் உத்தரவாதம் ஏற்றுக்கொள்கின்றன. பிரதம சங்கங்களை ஐக்கியப்படுத்தி மேற்பார்வையிடும் வேலையை ஒழுங்குபடுத்தும் விசேஷ யூனியன்களாக அமைக்கும் முறையைச் சில மாகாணங்களில் அனுசரித்துப் பார்த்ததில், அது சித்திகரமாய் இருந்தபோதிலும் பலன் மாகாணத்துக்கு மாகாணம் வித்தியாசப்பட்டது. பிரசார சம்பந்தமான வேலையையும் சங்கங்களை ஒழுங்குபடுத்தி அமைக்கும் வேலையையுங்கூட மாகாண யூனியன்கள் அல்லது ஸ்தாபனங்கள் ஏற்றுக்கொள்கின்றன. மேலும், இதர வழிகளிலும் அவை இந்த இயக்கத்தைப் பலப்படுத்தி அதை உற்சாகப்படுத்தி வருகின்றன. அப்படிப்பட்ட யூனியன்கள் அல்லது ஸ்தாபனங்களை ஒழுங்குபடுத்தி அமைக்கும் விஷயத்திலும், அவைகளை விருத்திக்குக் கொண்டுவரும் விஷயத்திலும் செய்யப்படும் முயற்சிகள் சகல வழிகளிலும் ஆதரிக்கத் தகுந்தவை. அப்படிப்பட்ட யூனியன்களோ அல்லது ஸ்தாபனங்களோ தங்களுடைய வருமான ஆதாரத்தை க்ரான்ட் இன் எய்ட் என்னும் திரவிய சகாயத்தைக்கொண்டு அதிகப்படுத்திக் கொள்ள நியாயமாய்க் கவர்ன்மெண்டாரை எதிர்பார்க்கலாம். இன்ஸ்பெக்டர்களின் அலுவல்கள் இன்னின்னவை யென்று ஸ்பஷ்டமாய் நிஷ்கரிஷை செய்து அந்த அலுவல்களை மாத்திரமே அவர்கள் கவனிக்க ஏற்பாடு செய்கிற பட்சத்திலே, சங்கங்களில் வேலை நடப்பதைப் பரிசோதித்துப் பார்ப்பதற்காக மாகாண பாங்கிகளிலிருந்தாவது ஸெண்ட்ரல் பாங்கிகளிலிருந்தாவது இன்ஸ்பெக்டர்களை நியமித்தனுப்புவதற்கு ஆட்சேபனை எதுவும் இல்லை. ஆயினும், பொதுவாய் ஸெண்ட்ரல் பாங்கிகள் சங்கங்களின் வேலையை மேற்பார்வையிடும் விஷயத்தை ஏற்றுக்கொள்ளக் கூடாதென்பதே எங்களுடைய அபிப்பிராயம்.

இந்த இயக்கத்தின் ஆரம்ப தசைகளில் கவர்ன்மெண்டார் பெருந்த பணத் தொகைகளை மூலதனமாகக் கொடுத்து உதவினார்கள். இப்போது இந்த வழக்கம் அனேகமாய் முற்றிலும் நின்றுபோய் விட்டது. ஆயினும், அடியிற்கண்ட வழிகளில் கவர்ன்மெண்டார் உதவி செய்யலாமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம் :—

(a) கௌரவார்த்தமாய் வேலை பார்ப்பவர்கள் பயிற்சி அடைந்துகொண்டிருக்கும்போதும், வெளியே போய் வேலை செய்துகொண்டிருக்கும்போதும் அவர்கள் தங்கள் சொந்த பணத்திலிருந்து செய்யும் செலவுகளுக்காக பொருளுதவி செய்வது ;

(b) கல்வி பரவச் செய்வதையும் பலவகையான காரியங்களுக்குக் கூட்டுறவு முறைகளைப் பிரயோகிக்கும்படி செய்வதையும் நோக்கமாகக் கொண்ட ஸ்தாபனங்களுக்கு உதவி செய்வதும், மேற்பார்வையிடும் வேலையில் யூனியன்களுக்கு உதவி புரிவதும் ;

(c) கைப்பற்று நிலங்களை ஒன்றாய்ச் சேர்ப்பது, வயதுவந்தவர்களுக்குக் கல்வி கற்பிப்பது, நிலத்துக்குத் தண்ணீர் பாய்ச்சுவது முதலிய காரியங்களைப்போன்ற விசேஷ வகையான கூட்டுறவு முயற்சியைச் சுலபப்படுத்தும்பொருட்டு கூட்டுறவு முறைப்படி ஏற்படுத்தப்படும் ஸ்தாபனங்கள் அதிகரிக்கும்படி செய்வது ;

(d) பின்னடைந்துள்ள பிரதேசங்களில் இந்த இயக்கத்தைப் பரவச்செய்வது.

சாதாரணமாய் கணக்குகளைத் தணிக்கைசெய்யும் விஷயத்தில் செலவழிப்பதைக் காட்டிலும் பயிற்சி விஷயமாய்க் கவர்ன்மெண்டார் பணத்தைச் செலவிடவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். சரியான நிலைமையிலுள்ள சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்காக பொதுப்பணத்திலிருந்து செலவிடுவது நியாயமல்ல.

வருமான வரியையும் முத்திரைத் தீர்வையையும் ரெஜிஸ்ட்ரேஷன் கட்டணங்களையும் நிவாரணை செய்திருப்பது, ரெமிட்டன்ஸ் ட்ரான்ஸ்பர் ரசீதுகள் மூலமாய பணத்தை அந்தப்படியே ட்ரான்ஸ்பர் செய்வதற்கான சௌகரியங்கள் ஏற்படுத்திக் கொடுத்திருப்பது போன்ற பலவகையான சகாயங்களை மாகாண கவர்ன்மெண்டுகள் கூட்டுறவு சங்கங்களுக்குச் செய்துகொடுத்திருக்கின்றன. இந்த சகாயங்கள் இன்னவையென்று பிரதான ரிபோர்ட்டில் விவரமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது. மேலும், சாத்தியப்பட்ட இடங்களில் இங்கே குறிப்பிட்டிருக்கும் சகாயங்களையெல்லாம் மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய விஸ்தீர்ணத்துக்குள் இருக்கும் சங்கங்களுக்குச் செய்துகொடுக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். முக்கியமாக, விவசாயத்துக்குத் திரவிய சகாயம் கிடைக்கும்படிச் செய்யும்பொருட்டு ஜில்லா கஜானாக்களிலும் கீழ்க் கஜானாக்களிலும் செய்துகொடுக்கப்படும் சௌகரியங்களைக் கூட்டுறவு சங்கங்கள் பூர்த்தியாய்ப் பயன்படுத்திக் கொள்ளும்படி செய்யவேண்டும். சங்கங்கள் ஒன்றிலிருந்து மற்றொன்றுக்குத் தபால் மணியார்டர் மூலமாய்ப் பணம் அனுப்பினால், அந்த மணியார்டர்களுக்கு வாங்கும் கம்மிஷனில் முக்கால் பாகத்தை அவைகளுக்கு வாபஸ்

செய்துவிடவேண்டும். மேலும், சங்கத்திலிருந்து கடன் வாங்கும் மெம்பர்கள் அந்த கடன்தொகையைக் கொண்டு சொத்தைக் கிரயத்துக்கு வாங்கியிருந்தாலும், அப்படிப்பட்ட கடன் தொகையைக் கொண்டு விதை வாங்கி மாசூல் சாகுபடி செய்திருந்தாலும், அந்த சொத்தின்மேல் இந்த சங்கங்களுக்கு மற்ற கடன்காரர்களைக் காட்டிலும் சிலாக்கியமாய் "முதல் பொறுப்பு" ஏற்படவேண்டும்.

சென்ற சில வருஷங்களுக்குள் நில அடைமான பாங்கிகளைப் பற்றிய பிரசினையானது முக்கியமானதாக ஏற்பட்டிருக்கிறது. நீண்ட காலக் கடன்கள் கொடுப்பதற்குக் கிராம நாணய சங்கங்கள் தகுதியான ஸ்தாபனங்கள் அல்லவென்றும், இந்த வகையைச் சேர்ந்த வேலையையும் கிராம சங்கம் கொடுத்துவரவேண்டிய குறுகிய காலக் கடன் கொடுப்பதையும் கலந்துவிடக்கூடாதென்றும் ஸ்பஷ்டமாய் ஏற்பட்டிருக்கிறது. 1926-ம் ஜனவரி மாதத்திலே பம்பாயில் கூடிய ரெஜிஸ்ட்ரார்களின் மகாநாட்டில் இவ்விஷயத்தைப் பற்றி ஆலோசித்து, இப்போதுள்ள கூட்டுறவு சம்பந்தமான ஆக்டுகளில் கண்ட நிபந்தனைகளின்படி நில அடைமான பாங்கிகளை ஏற்படுத்தக்கூடுமென்றும் அந்தப்படியே ஏற்படுத்தவேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. மேற்படி மகாநாட்டில் இது விஷயமாய்ச் செய்யப்பட்ட தீர்மானத்தை நாங்கள் ஆதரிக்கிறோம். நில அடைமானத்தின்மேல் கடன் கொடுப்பதற்காக ஏற்கனவே மேற்படி ஆக்டுகளில் நிபந்தனை கண்டிருக்கிறது. ஆகவே, நில அடைமான பாங்கிகளை ஏற்படுத்துவதற்காக அவைகளை இப்போது உபயோகித்துக் கொள்ளவேண்டுமென்றும், அப்படிப்பட்ட பாங்கிகளை ஏற்படுத்தும்பொருட்டு விசேஷ சட்டநிரூபணம் செய்வது அவசியமல்லவென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். நில அடைமான பாங்கிகளுக்குக் கவர்ன்மென்டார் செய்யவேண்டிய உதவியைப்பற்றி கவனிப்போம். கவர்ன்மென்டார் டிபென்சர் என்னும் கடன் பத்திரங்களுக்குப் பணம் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்யவில்லை. ஆனால், மேற்படி பத்திரங்களுக்கு வட்டி கொடுப்பது விஷயமாய்க் கவர்ன்மென்டார் உத்தரவாதம் செய்கிற பட்சத்திலே, அது தகுதியான முறையில் சகாயம் செய்வதாகுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேலும், நில அடைமான பாங்கிகள் டிபென்சர்கள் வெளியிடும் வேலையை ஒரு மத்திய ஸ்தாபனத்தாரின் மேல்விசாரணையின்கீழ் நடத்தவேண்டுமென்றும், அந்தப்படி செய்யாத பட்சத்திலே, அனேக சிறிய ஸ்தாபனங்கள் போட்டி போட்டுக்கொண்டு டிபென்சர்களை விசேஷமாய் வெளியிட்டு மார்க்கெட்டில் விற்பனைக்குக் கொண்டுவரும்படியான நிலைமை ஏற்படுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். நில விருத்தி சம்பந்தமான கடன்களைக் குறித்த ஆக்டின்படி கடன்களை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்கு நில அடைமான பாங்கிகள் தகுதியான ஸ்தாபனங்களாக இருக்கும். மேலும், அந்த பாங்கிகளால் வெளியிடப்படும் டிபென்சர்களை ட்ரஸ்ட் பணத்தைப் போட்டு வைக்கக்கூடிய ஈடுகளின் ஜாபிதாவில் சேர்க்கவேண்டும். ஒரு நில அடைமான பாங்கைப் புதிதாய் ஏற்படுத்துவதற்குமுன் அது விஷயமாய் மிகவும் ஜாக்கிரதையாக பிரதம விசாரணை நடத்துவது அவசிய.

மென்பதை நாங்கள் வற்புறுத்திக் கூற விரும்புகிறோம். மேலும், அந்த பாங்கைத் திறமையாக நிர்வாகம் செய்துவருவதும் அவசியமென்று நாங்கள் அழுத்தமாய்ச் சொல்லுவோம். அந்த பாங்கிகளின் அமைப்பு சிக்கலாயிராமல் எவ்வளவுக்கெவ்வளவு சுலபமாயிருக்கிறதோ அவ்வளவுக்கவ்வளவு அவை நன்றாய் வேலை செய்யக்கூடும்.

கடன் கொடுக்கும் சங்கங்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்போது, கடன் கொடுக்கும் சங்கங்களல்லாத இதர சங்கங்களில் இது வரையில் அபிவிருத்தி ஒன்றும் ஏற்படவில்லையென்றே சொல்லலாம். இந்தப்படி இருப்பது சகஜமே. ஏனென்றால், கிராமத்தில் விவசாயிகளுக்கு ஏற்பட்டிருக்கும் கடன் சுமையானது அவர்களைப் பாதிக்காதபடி நிஷ்கரிஷையாக நிவர்த்திக்கப்படுகிற வரையில், இதர வழிகளில் முன்னேற்றம் அடைவது சாத்தியமல்ல. சரக்குகளைக் கிரயத்துக்கு வாங்குவதற்கும் விற்பனை செய்வதற்குமான சங்கங்களையும், விதைகள் சம்பந்தமாய்ப் பிரவர்த்திப்பதற்கான சங்கங்களையும், கால்நடை இன்ஷூரன்ஸ் சங்கங்களையும் ஏற்படுத்தியும், கடன் கொடுப்பது சம்பந்தமான வேலையல்லாத இதர வகையான வேலைகளைச் செய்துபார்த்தும் அவைகளினால் ஏற்பட்ட பலன் எங்கும் ஒரே மாதிரியாய் இல்லை. ஆனால், இந்த வழிகளில் எதிலும் பொதுவாய் விசேஷ முன்னேற்றம் அடைந்திருப்பதாக சொல்லிக்கொள்ளமுடியாது. அப்படிப்பட்ட சங்கங்கள் சித்திகரமாய் வேலை செய்யவேண்டுமானால், வியாபார ரீதியாய் அவைகளை நிர்வாகம் செய்துவருவது அவசியமாகும். மேலும், இந்தப்படி செய்வதற்கு வேண்டிய சாமர்த்தியத்தை அவைகளின் மெம்பர்களிடம் காண்பது சுலபமல்ல. ஒரே காரியத்தை உத்தேசித்துச் சங்கத்தை ஏற்படுத்துவதே முன்னேற்றமடைவதற்குச் சிறந்த மார்க்கமாக தோற்றுகிறது. இதுவே அனுசரிக்கவேண்டிய முறையாகும். "ஒரு காலத்தில் ஒரு காரியத்தையே செய்யவேண்டும்" என்னும் முறையையே அனுசரிக்கவேண்டும்.

இதர வேலைகள் சம்பந்தமாகவும், முக்கியமாய் விவசாய அபிவிருத்தி, கல்வி, நீர்ப்பாய்ச்சல், உண்மையில் விவசாயிகளைப் பாதிக்கும்படியான வேறே யாதொரு விஷயம் ஆகிய இவைகள் சம்பந்தப்பட்டமட்டிலும் கூட்டுறவு சங்கங்களின் முக்கியதையைப்பற்றி நாங்கள் எங்களுடைய ரிபோர்ட் முழுவதிலும் பிரஸ்தாபித்திருக்கிறோம். கடன் கிடைப்பதற்காக ஏற்பாடு செய்வதைத் தவிர கவர்ன்மென்டைச் சேர்ந்த பற்பல இலாகாக்களில் கவர்ன்மென்டாரால் அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கும் வெவ்வேறு நிபுணர்கள் சொல்லும் ஆலோசனையை ஏற்றுக்கொள்ளும்படி கிராம ஜனங்களைத் தயார்செய்வதும் கூட்டுறவு இலாகாவின் வேலையாகும். சகஜமாகவே, இந்த இலாகாக்கள் தனித்தனியான நபர்கள் மூலமாய் வேலை செய்வதைக்காட்டிலும் கூட்டுறவு முறையில் ஒழுங்காய் அமைக்கப்பட்டுள்ள விவசாயிகளின் சங்கங்கள் மூலமாக மிகவும் நன்றாய் வேலை செய்யக்கூடும். கிராம ஜனங்களின் க்ஷேமத்தில் சிரத்தையுள்ள கவர்ன்மென்டைச் சேர்ந்த பற்பல இலாகாக்கள் தங்களுடைய வேலைகளைக் கூட்டுறவு சங்கமூலமாகவே நடத்தவேண்

டும். கடன் கொடுப்பது சம்பந்தமான சங்கங்களல்லாத இதர சங்கங்களைச் சித்திகரமாய் ஒழுங்காக அமைத்து வேலை நடத்துவதற்குத் திருஷ்டாந்தங்களாக, பஞ்சாபிலுள்ள சீர்திருத்தமான முறையில் பயிரிடுவதைப்பற்றிய சங்கங்களையும், பம்பாயிலும் பஞ்சாபிலும் உள்ள விற்பனைச் சங்கங்களையும், வங்காளத்திலுள்ள நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமான சங்கங்களையும் கூறலாம். விவசாய இலாகா டெப்யுடி டைரெக்டரின் அந்தஸ்திலுள்ள ஒருவரை ரெஜிஸ்ட்ராரின்கீழ் விசேஷ உத்தியோகஸ்தராக நியமிப்பது விரும்பத்தக்கதாயிருக்குமா என்பதைப்பற்றி எல்லா மாகாணங்களிலும் ஆராய்ச்சி செய்வது யுக்தமாயிருக்கும். சாஸ்திரப் பயிற்சி சம்பந்தமான இதர இலாகாக்களிலிருந்து நிபுணர்களாயிருக்கும் உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயமானது - கூட்டுறவு இயக்கம் அபிவிருத்தி அடைந்திருக்கும் தசையையும் விருத்திசெய்ய விரும்பப்படுகிற கூட்டுறவு முயற்சியின் குறிப்பான வகையையும் விசேஷமாய்ப் பொறுத்ததாகும்.

## 12. கிராமம்.

பிரதான ரிபோர்ட்டின் 14-ம் அத்தியாயம்.

இந்தியாவில் பொருளாதார சம்பந்தமான மாறுதல்கள் விரைவாய் ஏற்பட்டு வருகின்றன. போக்குவரவு சாதனங்களில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்தி காரணமாகவும் அதன் மூலமாய் விரைவாகவும் அதிக செலவில்லாமலும் பிரயாணம் செய்வதற்கான சௌகரியங்கள் ஏற்பட்டிருப்பது காரணமாகவும் கிராமங்களுக்கும் நகர்ப்புறங்களிலுள்ள முக்கியமான இடங்களுக்கும் முன்னிலும் அதிக நெருக்கமான சம்பந்தம் ஏற்பட்டு வருகிறது. இதனால், கிராமங்கள் தனிமையாயிருந்துகொண்டு அவ்வவற்றில் ஏற்பட்டிருக்கும் பொருளாதாரங்களே அவ்வவற்றிற்குப் போதுமானதென்னும் உணர்ச்சியானது நீங்கிவருவதற்கு இடமேற்படுகிறது. கிராமங்கள் பட்டணங்களுடன் சம்பந்தப்படுவதனால் கிராமங்களில் உள்ளவர்களுக்கு நூதன கருத்துகள் ஏற்படுவது மாத்திரமேயல்லாமல், முன்னிலும் நல்ல நிலைமையில் வாழவேண்டுமென்னும் விருப்பமும் உண்டாகிறது.

விவசாயத்துக்கும் பொதுஜன ஆரோக்கியத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டிருக்கும் விஷயம் பிரத்தியட்சமானதே. இவைகளில் ஒன்றினால் மற்றொன்று விசேஷமாய் பாதிக்கப்படுகிறது. வைத்திய சம்பந்தமான சௌகரியங்களையும் பொதுஜன ஆரோக்கியத்துக்கு அனுகுணமான வசதிகளையும் ஏற்படுத்திக் கொடுக்கும் விஷயத்தைப்போல் வேறே எந்த விஷயத்திலும் கிராமப் பொதுஜனங்களுக்கு அதிகமான உதவி வேண்டியிருக்கவில்லை. வியாதி காரணமாக ஏற்படும் பொருளாதார நஷ்டத்தைக் குறித்து எவ்வளவு சொன்னாலும் அது மிகையாயிராது. மலேரியா ஜுரத்தினால் ஆயிரக்கணக்கான ஜனங்கள் மடிந்து போவதுமல்லாமல், லட்சக்கணக்கான ஜனங்களின் பொருளாதார சக்தி குன்றியும் போகிறது. ப்ளேக் என்னும் மஹாமாரி வியாதியாலும் வாந்திபேதியாலும் நாட்டில் ஜனங்கள் அடிக்கடி விசேஷமாய் இறந்துபோகிறார்கள். கொக்கிப்புழு வியாதியினாலும் காலஅஜார் என்னும் ஒருவித கொடிய

ஜுரத்தினாலும் ஆகாரக்குறைவினால் ஏற்படும் வியாதிகளினாலும் பயிரிடும் வகுப்பார்களின் உழைக்கும் சக்தி அவர்களுக்குத் தெரியாமலே குறைந்துபோகிறது. ஆகவே, விவசாயத்தின் பொதுவான நிலைமையைப்பற்றியும் விவசாயியின் ஸ்திதியைப்பற்றியும் செய்யப்படும் எந்த விசாரணையிலும், அவருடைய வாழ்க்கையின் பொதுவான ஆரோக்கிய அம்சத்தைப்பற்றியும், அவருக்குக் கிடைக்கும் ஆகாரம் தகுதியானதா என்பதைப்பற்றியும், அவர் வசித்து வருகிற சுகாதார நிலைமைகளைப்பற்றியும், கிராமத்தில் பொதுவாய் அவரைச் சுற்றிலும் ஏற்பட்டுள்ள விஷயங்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யத்தான் வேண்டும். எங்களுடைய பிரேரேபணைகள் காரணமாக சீர்திருத்தமான முறையில் பயிரிடுவதற்கு இடம் ஏற்படுமென்று நாங்கள் நம்புகிறோம். அந்தப்படி ஏற்படுகிற பட்சத்திலே, அது காரணமாக விவசாயி முன்னிலும் நல்ல நிலைமையில் வாழ்க்கையை நடத்துவது சாத்தியமாயிருக்கக்கூடும். அந்தப்படி இருக்கும்பொழுது இப்போது ஏற்பட்டுள்ள நிலைமைகளைக் கண்டறிந்து, அவைகளை விருத்தி செய்வதற்கு என்ன நடவடிக்கைகள் நடத்தவேண்டுமோ அவைகளைப்பற்றி ஆலோசிப்பது அவசியமாகும். கிராமப் பிரதேசங்களில் இந்த நிலைமைகள் சீர்கேடடைந்திருக்கின்றனவென்பதில் சந்தேகமில்லை. சுகாதாரம் என்னும் வார்த்தைக்கு அங்கீகரிக்கப்பட்டிருக்கும் எந்த அர்த்தத்திலும் அது அனேகமாய் கிராமப் பிரதேசங்களில் இல்லையென்றே சொல்லிவிடலாம். கிராம ஜனங்கள் ஆற்றோரத்தையே அல்லது குளக்கரையையே பெரும்பாலும் பொதுக் கக்கூஸாக உபயோகித்து வருகிறார்கள். இதனால், கொக்கிப்புழு காரணமாய் ஏற்படும் தொல்லைகளும் அசுத்தமான தண்ணீரைச் சாப்பிடுவதனால் உண்டாகும் சகல வியாதிகளும் உண்டாவதற்கு இடம் ஏற்படுகிறது. திறந்த வெளியாயுள்ள வயல்களைக் கக்கூஸாக, உபயோகிப்பது எல்லா சந்தர்ப்பங்களிலும் ஆட்சேபகரமாயிராவிட்டபோதிலும், அந்தப்படி உபயோகிக்கும்போது ஏரிகளிலும் ஓடைகளிலும் நீர்ப்பிடிப்பு சம்பந்தமான பாகங்களை அசுத்தப்படுத்தாமல் பாதுகாக்கவேண்டும். அசுத்தங்களினின்றும் பாதுகாக்கப்படாமலிருக்கும் கிணறுகள் குளங்கள், குப்பை எடுத்து சுத்தி செய்யப்படாமலிருக்கும் கிராமத் தெருக்கள், சிறிதும் காற்று வருவதற்கு இடமிராதபடி நன்றாய் மூடியிருக்கும் ஜன்னல்கள் ஆகிய இப்படிப்பட்ட நிலைமைகளில் ஒரு சராசரி கிராமக்குடி வசிக்கிறார். ஆயினும், அவர் தேக சுத்தத்தையும் ஒழுங்கையும் மிகவும் அதிகமாய் கவனித்து வருகிறார். கிராம ஜனங்கள் ஒற்றுமையுடன் வேலை செய்கிற பட்சத்திலே, இந்தக் கெடுதிகளை மிகவும் சுலபமாய் நிவர்த்தி செய்துவிடக்கூடுமென்பதை நோக்கும்போது மேலேகண்ட நிலைமை ஏற்பட்டிருப்பது விசனிக்கத்தக்கதாகும். கிணறுகளைப் பாதுகாக்கும் விஷயத்திலும் கிராமங்களைச் சுத்தமாய் வைத்திருக்கும் விஷயத்திலும் நதிகளைக் கூடுமானமட்டில் அசுத்தப்படுத்தாமல் வைத்திருக்கும் விஷயத்திலும் கிராம ஜனங்களுக்குள் பொதுவான தீர்மானம் ஏற்படுகிற பட்சத்திலே, பொதுஜன ஆரோக்கியம் விசேஷமாய் விருத்தியடையுமென்பதில் சந்தேகமில்லை.

இப்படிப்பட்ட நிலைமையில் சித்திகரமாய்ப் பிரவர்த்திக்க வேண்டுமானால், கவர்ன்மெண்டாரும் ஜனங்களும் சேர்ந்து வேலை செய்யக்

கடமைப்பட்டிருக்கிறார்கள். வைத்திய சம்பந்தமாயுள்ள அடிப்படையான பிரசினைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்து, பொதுஜன ஆரோக்கிய பரிபாலன சம்பந்தமாய் நல்ல கோட்பாடுகளை நிர்ணயித்து அவைகளை ஜனங்கள் அனுசரிக்கும்படி செய்வது கவர்ன்மென்டாரின் கடமையாகும். இப்படிப்பட்ட சிபாரிசுகளை அமுலுக்குக் கொண்டுவரும் விஷயத்தில் ஒத்துழைப்பதும் பொதுவாய் கிராமங்களின் நிலைமையைச் சீர்திருத்தும் விஷயத்தில் உதவி செய்வதும் ஜனங்களின் கடமையாகும். இது விஷயமாய்க் கவர்ன்மென்டும் கவர்ன்மென்டைச் சேராத தனி ஸ்தாபனங்களும் எவ்வளவோ செய்து வருகின்றன. மேலும், பொருளாதார சம்பந்தமாய் விஷயங்களின் போக்கை நோக்கும்போது, வெகு சீக்கிரத்திலேயே கிராமங்களின் நிலைமையில் துரிதமாய் அபிவிருத்தி ஏற்படுவதற்கு அது சாதகமாக இருப்பது மாத்திரமேயல்லாமல் அந்தப்படி அபிவிருத்தி ஏற்படுவது சாத்தியமென்றும் தெரியவருகிறது. ஆயினும், இந்த விஷயமானது பெரும்பாலும் ஜனங்களையே பொறுத்ததாயிருக்கிறது.

கவர்ன்மென்டார் தங்களுடைய கடமைகளைத் தங்களுடைய பொதுஜன ஆரோக்கிய இலாகா மூலமாகவும் வைத்திய இலாகா மூலமாகவும் செய்துவருகிறார்கள். வியாதி காணுவதையோ பரவுவதையோ தடுப்பதற்கு ஏதுவான முன் எச்சரிக்கையான நிலைமைகளை ஒவ்வொரு மாகாணத்திலும் ஏற்படுத்தும் விஷயத்திலேயே மாகாணப் பொதுஜன ஆரோக்கிய இலாகா சிரத்தை காட்டிவருகிறது. சென்ற சில வருஷங்களாக இந்த வழியில் ஒரு பெரிய முற்போக்கான இயக்கம் ஏற்பட்டிருக்கிறது. மேலும், நல்ல ஜல சர்ப்பரா கிடைக்கும்படி செய்வதற்கான பிரசினைகளும், சுகாதார சம்பந்தமாகவும் ஊரிலுள்ள குப்பை முதலியவைகளை அப்புறப்படுத்தி ஊரைச் சுத்தமாய் வைத்திருப்பது சம்பந்தமாகவும் செய்யவேண்டிய ஏற்பாடுகளைப்பற்றிய பிரசினைகளும் நாளுக்கு நாள் அதிகமாய்க் கவனிக்கப்பட்டு வந்திருக்கின்றன. சென்னை ராஜதானியிலுள்ள இலாகாவானது மற்ற சகல மாகாணங்களிலும் இருக்கும் இலாகாக்களைக்காட்டிலும் மிகவும் அதிகமாய் அபிவிருத்தி அடைந்திருக்கிறது. சென்னை ராஜதானியில் ஜில்லா ஆரோக்கிய சம்பந்தமான திட்டம் ஒன்றை ஏற்படுத்தி 26 ஹெல்த் ஆபிஸர்களையும் 261 ஹெல்த் இன்ஸ்பெக்டர்களையும் வைத்துக்கொண்டு இது விஷயமாய் வேலை நடத்தப்பட்டுவருகிறது.

வைத்திய சம்பந்தமாய்ப் பார்க்கும்போது, மத்திய கவர்ன்மென்டாரால் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கும் ஆராய்ச்சி வேலையில் பெரும்பாகத்தை இந்திய ரீஸர்ச் பண்ட் அஸோஸியேஷன் என்னும் சங்கத்தின்கீழ் வேலைசெய்யும் உத்தியோகஸ்தர்கள் செய்துவருகிறார்கள். ஆராய்ச்சி வேலையை விருத்திசெய்வதும் அதுவிஷயமாய் உதவி புரிவதும், அறிவை ஜனங்களுக்குள் பரவச்செய்வதும், வியாதிகள் - முக்கியமாய் தொத்திக்கொள்ளத்தக்க வியாதிகள் - உண்டாவதற்கான காரணம், அவை பரவும் விதம், அவைகளைத் தடுக்கும் முறை ஆகிய இவைகள் சம்பந்தமாக பரிசோதனார்த்தமான ஏற்பாடுகளைப் பொதுவாய்ச் செய்வதுமே இந்த சங்கத்தின் நோக்கங்களாகும். வாந்திபேதி, ப்ளேக் என்னும் மஹாமாரி,

மலேரியா ஜுரம், காலஹஸார் ஜுரம் ஆகிய இவைகளைப் போன்ற வியாதிகள் சம்பந்தமாகவும் ஆகாரக்குறைவு சம்பந்தமான பிரசினை களைப் பரிசோதிக்கும் விஷயமாகவும் இந்த சங்கத்தின் ஆதரவில் ஆராய்ச்சி வேலை விசேஷமாக செய்யப்பட்டிருக்கிறது.

பம்பாய் ராஜதானியில் கிராம வைத்திய உதவி சம்பந்தமான ஏற்பாடு ஒன்று செய்யப்பட்டிருக்கிறது. அந்த ஏற்பாட்டின்படி, சில்லறை வியாதிகளுக்கு வைத்தியம் செய்வதற்கும் ஆபத்து நேரிடும் காலத்தில் பிரதம சிகிச்சை செய்வதற்கும் கிராமப் பாடசாலை உபாத்தியாயர்கள் பழக்கப்படுகிறார்கள். சில மாகாணங்களில் ஸர்க் காரைச் சேராமல் தனித்தனியாயுள்ள வைத்தியாப்பியாசிகள் கிரா மாந்தரங்களில் வசிக்கும்படி அவர்களைத் தூண்டுவதற்காக அவர் களுக்குச் சகாயத்தொகைகள் கொடுப்பதற்கான ஏற்பாடுகள் அனுஷ்டிக்கப்பட்டுவருகின்றன. கிராம மருத்துவச்சிகளையும் தாதி களையும் பயிற்சி செய்விப்பதற்காகவும் பற்பல ஏற்பாடுகள் அமு லுக்குக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. இவ்வகையான ஏற்பாடு களினால் விசேஷ நன்மை உண்டாவதற்கு இடமிருக்கிறபடியால், அவைகளைக் கூடியமட்டில் சகல வகைகளிலும் ஆதரிக்கவேண்டும். குடிப்பதற்கான தண்ணீர் சர்ப்பராவை சீர்திருத்துவதற்காக ஏற்கனவே சில பிரதேச கவர்ன்மென்டுகள் பிரதேச அதிகார சபை களுக்கு வருஷாவருஷம் க்ரான்ட் என்னும் சகாயத்தொகைகள் கொடுத்துவருகின்றன. தண்ணீர் சர்ப்பராவை இந்தப்படி சீர் கப்படுத்துவது மிகவும் முக்கியமான விஷயமென்று நாங்கள் அபிப் பிராயப்படுகிறோம். மேலும், தண்ணீர் சர்ப்பராமூலமாய்க் காணும் பெருவாரி வியாதிகளினால் ஏற்படும் பெருத்த சேதத்தைக் கவனிக்கும்போது, இதுவிஷயமாய்ச் செலவு செய்வதை நஷ்ட விமோசன விஷயமாய் அனுசரிக்கவேண்டிய சிறந்த முறையாக சகல கவர்ன்மென்டுகளும் பாவிப்பது நல்லதென்று குறிப்பிட விரும்புகிறோம்.

கிராம ஜனங்களின் ஆரோக்கிய விஷயத்திலும் க்ஷேமத்திலும் உத்தியோகப்பற்றில்லாதவர்கள் பெரிதும் சிரத்தை பாராட்டிவரு வதை நாங்கள் சுற்றுப்பிரயாணம் செய்துவரும்போது விசேஷ மாய்க் கவனித்தோம். பொதுஜனங்கள் இதுவிஷயத்தில் காட்டி வரும் சிரத்தையைக் கவனிக்கும்போது எங்களுக்கு விசேஷ உற்சா கமும் நம்பிக்கையும் ஏற்படுகின்றன. இம்மாதிரி சிரத்தை குறித்த ஒரு மாகாணத்தில்தான் எடுத்துக்கொள்ளப்படுகிறதென்பதில்லா மல் பொதுவாய் நாடெங்கும் எடுத்துக்கொள்ளப்படுகிறது. இம் மாதிரியான முயற்சிகளுக்குச் சிறந்த திருஷ்டாந்தங்களாக, பூனா விலுள்ள சேவாசாதன சங்கத்தையும், வங்காளத்திலுள்ள மலே ரியா ஜுரத்தை ஒழிப்பதற்கான கூட்டுறவு சங்கத்தையும், தென்னிந் தியாவில் யங் மென்ஸ் க்றிஸ்டியன் அஸோஸியேஷன் என்னும் சங்கத்தார் செய்துவரும் கிராமப் புனருத்தாரண வேலையையும் குறிப்பிட விரும்புகிறோம்.

இந்தியாவில் காணும் வியாதிகள் எல்லாவற்றிலும் மலேரியா ஜுரம் மிகவும் அதிகமாய்ப் பரவியிருக்கிறது. மேலும், அந்த

ஜுரம் கண்ட பிறகு கிராமக் குடிஜனங்களின் திறமைக்கு விசேஷ் தீங்கு நேரிடுகிறது. இந்த வியாதிக்குச் சிகிச்சை செய்கையில் அதை வரவொட்டாமல் தடுப்பதற்காக கொய்னாவும் ஸின்கோனாவி லிருந்து தயார்செய்த ஜுரத்தைத் தணிப்பதற்கான மருந்துகளும் முக்கியமாய்க் கொடுக்கப்படுகின்றன. ஆகவே, மலேரியா ஜுரத் தைப் பரவவொட்டாமல் தடுப்பதற்காக கவர்ன்மென்டார் ஏற்றுக் கொள்ளும் உத்தரவாதத்தில் பெரும்பாகமானது இந்த மருந்து சரக்கைத் தயார்செய்யும் விஷயமாய் அவர்கள் அனுசரித்துவரும் கொள்கைக்குச் சம்பந்தப்பட்டதாயிருக்கிறது. தற்காலத்தில், ஒரு ஸின்கோனா தோட்டம் தவிர மற்ற சகல ஸின்கோனா தோட்டங் களும் கொய்னா தயார்செய்யப்படும் சகல தொழிற்சாலைகளும் வங் காள மாகாண கவர்ன்மென்டுக்கும் சென்னை மாகாண கவர்ன்மென் டுக்கும் சொந்தமானவை. மலேரியா ஜுரத்தை ஒழிப்பதற்கான வழிவகைகளை மனப்பூர்த்தியாய்த் தேடவேண்டுமானால், ஸின் கோனா செடி பயிராவதற்குத் தகுதியான விஸ்தீர்ணங்களுள்ள சகல மாகாணங்களிலும் ஸின்கோனா வைத்துப் பயிரிடுவதை விருத்தி செய்யும் வேலையையும், கொய்னா தயார்செய்யும் வேலையையும், இந் தியாவுக்குள் அது விற்பனையாகும் விலை சம்பந்தப்பட்டமட்டில் அதை ஜனங்களுக்குக் கொடுக்கும் விஷயமாய் மேல்விசாரணை செய் யும் வேலையையும் இந்தியா கவர்ன்மென்டார் ஏற்றுக்கொள்ள வேண்டுமென்று நாங்கள் பலமாய் அபிப்பிராயப்படுகிறோம். இந்த விஷயம் இந்தியா முழுவதுக்கும் சம்பந்தப்பட்ட முக்கியமான விஷ யமாயிருப்பதால் இதுவிஷயமாய்த் தங்களுடைய கடமைகளைப் பிர தேச கவர்ன்மென்டுகள் இதுவரையில் எவ்வளவு திறமையுடன் செய்திருந்தபோதிலும், இது அந்த கவர்ன்மென்டுகளின் பொறுப் பில் விட்டுவிடக்கூடிய விஷயமல்ல. ஸின்கோனா பயிரை விருத்தி செய்து கொய்னாவை சரசமாய் விற்பது மிகவும் முக்கியமான விஷயமாகும். இதை உத்தேசித்து, இதுவிஷயமாய் இதுவரை யில், செய்துவந்த ஆராய்ச்சியைக்காட்டிலும் மிக விசேஷமாய் சாஸ் திர ரீதியாக ஆராய்ச்சி செய்வது அவசியமென்று எங்களுக்குத் தோற்றுகிறது.

பொதுஜன ஆரோக்கிய விஷயமாய் எங்களுடைய அபிப்பிராயக் குறிப்புகளை முடிவாகச் சொல்லும்போது, கிராமங்களில் வைத்திய சம்பந்தமாகவும் பொதுஜன ஆரோக்கிய சம்பந்தமாகவும் செய்யும் உதவிகளை எவ்வளவுமட்டில் சாத்தியமோ அவ்வளவுமட்டிலும் எவ் வளவு விரைவாகச் செய்யக்கூடுமோ அவ்வளவு விரைவாகவும் விருத்திசெய்வதன் அவசியத்தைக்குறித்து வற்புறுத்த நாங்கள் விரும்புகிறோம்.

மனிதர்களின் போஷணை சம்பந்தமான பிரசினைகள் சிறிதுகால மாகத்தான் முக்கியமானவைகளாக கருதப்பட்டு வருகின்றன. கூனூரில் ரீஸர்ச் பண்ட் அஸோஸியேஷன் என்னும் சங்கத்தின் கீழ் வேலை செய்துவரும் கர்னல் மெக்காரிஸன் என்பவர் இவை களைப்பற்றி ஆராய்ச்சி செய்துவருகிறார். போஷணைக் குறைவைப் பற்றிய பிரசினையை விவசாய ஆராய்ச்சியில் ஈடுபட்டிருப்பவர்கள் கவனிப்பது அவசியமென்று அவர் வற்புறுத்திச் சொல்லுகிறார்.

கர்னல் மெக்காரிஸன் செய்துவரும் விசாரணைகளில் அவர் விவசாய இலாகாக்களின் உதவியை நாடுகிறார். மனிதர்களின் போஷணையைப்பற்றிய பிரசினைகளும் பிராணிகளின் போஷணையைப்பற்றிய பிரசினைகளும் மிகவும் முக்கியமானவைகளாக ஏற்படக்கூடியவைகளாயிருக்கின்றன. ஆகவே, மனிதர்களின் போஷணை சம்பந்தமான வேலையையும் பண்ணையில் வேலை செய்யும் பிராணிகளின் போஷணை சம்பந்தமான வேலையையும் மிகவும் நெருக்கமாய் ஒற்றுமைப்படுத்தி நடத்துவது உசிதமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அதாவது, போஷணையைக்குறித்த சாஸ்திரத்தின் வெவ்வேறு பிரிவுகளைப்பற்றிய விஷயங்களை நன்றாய்த் தெரிந்திருப்பவர்கள் கூட்டம் கூட்டமாய்ச் சேர்ந்து வேலை செய்யவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேலும், இக்காரியத்தைத் தொடர்ச்சியாய் நடத்திக்கொண்டுபோவதும் அவசியமாகும். போஷணையைப்பற்றிய பிரசினைகள் சம்பந்தமாய் வேலை செய்துவரும் பற்பல நபர்களையும் சேர்த்து போஷணையைப்பற்றிய கம்மிட்டியாக ஏற்படுத்தவேண்டும். இந்த கம்மிட்டியானது பொதுவான பிரசினைகளைக்குறித்து ஆராய்ச்சி செய்வதற்காக நிஷ்கரிஷையான காலம் விட்டுவிட்டு சபை கூடும். இந்தப்படி செய்கிறபட்சத்திலே, இவ்விஷயத்தைச் சேர்ந்த பற்பல பிரிவுகளிலும் வேலை செய்பவர்களுக்குள் நெருங்கிய சம்பந்தம் அவசியமான அளவுக்குக் கட்டாயம் ஏற்படும். இந்த விஷயம் முக்கியமானதாயிருப்பதை உத்தேசித்து, மனிதர்களின் போஷணையைக்குறித்த மத்திய ஸ்தாபனம் ஒன்றை ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். போஷணை சம்பந்தமான வேலையைச் சேர்ந்த இரண்டு பிரிவுகளையும், அதாவது மனிதர்களின் போஷணை சம்பந்தமான வேலையையும் பிராணிகளின் போஷணை சம்பந்தமான வேலையையும், ஒரே கட்டிடத்தில் செய்யவேண்டுமென்னும் அவசியமில்லை. ஆயினும், இந்த இரண்டு பிரிவுகளிலும் ஆராய்ச்சி வேலை நடத்துபவர்களுக்குள் எவ்வளவு நெருக்கமான சம்பந்தத்தை ஏற்படுத்துவது சாத்தியமோ அவ்வளவு நெருக்கமான சம்பந்தம் ஏற்படும்பொருட்டு, இவ்விரண்டு ஸ்தாபனங்களும் சாத்தியப்பட்டால் ஒன்றுக்கொன்று வெகு தூரத்தில் இராதிருப்பது விரும்பத்தக்கதாகும்.

ஆகாரத்தைப்பற்றி யோசிக்கும்போது, இந்தியாவில் மீன் சம்பந்தமான கைத்தொழில் பலவழிகளில் அபிவிருத்தியடைவது சாத்தியமாயிருக்கிறதென்னும் விஷயத்தை நாங்கள் நன்றாய்க் கவனித்தோம். ஆகவே, இவ்விஷயத்தைப்பற்றி பிரதேச கவர்ன்மெண்டுகள் கவனம் செலுத்தவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்ய விரும்புகிறோம்.

விவசாயிகளின் வாழ்க்கை சம்பந்தமான ஆரோக்கியத்தைப் பற்றிய அம்சங்களென்று சொல்லப்படக்கூடிய விஷயங்களைக் குறித்து நாங்கள் இதுவரையில் பெரும்பாலும் சொல்லியிருக்கிறோம். மாறிக்கொண்டுவரும் நிலைமைகளுக்கேற்றபடி கிராமக் குடிகள் தங்களைச் சரிப்படுத்திக்கொள்வதற்கும், தாங்கள் இப்போது நாளுக்குநாள் அதிகமாக சம்பந்தப்பட்டுவரும் சாஸ்திர ரீதியாய்ச் செய்யப்பட்டுவரும் பற்பல வகையான ஊழியங்களிலிருந்தும் பூர்த்தி

யான பலனை அடைவதற்கும் சாதகமாக அவர்களுக்கு என்ன உதவி செய்யக்கூடுமென்னும் விஷயத்தைக் குறித்து நாங்கள் இப்போது ஆலோசிக்க உத்தேசிக்கிறோம்.

வெறும் பொருளாதார அபிவிருத்தியினாலேயே விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் ஜனங்களுக்கு நிரந்தரமான நன்மை ஏற்படாதென்னும் எண்ணம் நாங்கள் ஆராய்ச்சி நடத்தியபோதெல்லாம் எங்களுக்கு அடிக்கடி தோன்றிற்று. நல்ல விதையை உபயோகித்து நல்ல சாகுபடி முறைகளை அனுசரிப்பதனால் மாசூல் அதிகமாய்க் காணுவது, நீர்ப்பாய்ச்சல் வசதி அதிகப்படுவதனால் மாசூல் தவறாமல் கிடைக்குமென்னும் உறுதி ஏற்படுவது, பூச்சிகள் முதலிய உபத்திரவங்களினால் நஷ்டம் ஏற்படாமல் பாதுகாப்பு செய்வது, போக்குவரவு சாதனங்களும் மாசூலை விற்பனைக்குக் கொண்டு வருவதற்கான நிலைமைகளும் விருத்தியாவதனால் விளைபொருள்களுக்கு முன்னிலும் அதிக விலை கிடைப்பது, சுருக்கமாய்ச் சொல்லுவோமானால் ஜனங்களின் பொருளாதார அபிவிருத்தி விஷயமாய் அனுசரிக்கவேண்டுமென்று நாங்கள் சொல்லியிருக்கும் ஒவ்வொரு உபாயத்தினாலும் பூமியில் ஜனத்தொகை விருத்தியாகி அதனால் ஏற்படும் கஷ்டம் அதிகமாகிக்கொண்டு வருவதனால் உண்டாகக்கூடிய பலாபலன்களைச் சிறிது காலத்துக்கு மாத்திரமே தள்ளிவைப்பது சாத்தியமாகும். விவசாயிகள் சரக்கைக் கிரயத்துக்கு வாங்கும் சக்தி அதிகரித்துக்கொண்டே போவதற்கேற்றபடி ஜனத்தொகையும் அதிகப்படவேண்டுமானால், இம்முறைகளைக் கையாளுவதனால் பெருத்த கூட்டமாயிருக்கும் ஜனங்களின் வாழ்க்கை நிலைமையில் நீடித்த அபிவிருத்தி எதுவும் ஏற்படுவது சாத்தியமல்ல.

இந்த ரிபோர்ட்டில் ஆரம்பக்கல்வி, வயதுவந்தவர்களின் கல்வி, இன்னும் விசேஷ வகையில் அன்றாட வாழ்க்கைக்குச் சம்பந்தப்பட்ட பொருளாதார விஷயத்தில் ஜனங்களுக்குக் கற்பிப்பது ஆகிய இவைகளின் முக்கியத்தையைப்பற்றி அவ்வவற்றிற்குரிய இடங்களில் வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். இப்படிப்பட்ட கல்வியைப் புகட்ட சில மாகாணங்களில் கூட்டுறவு சிப்பந்திகள் மூலமாய் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. முன்னிலும் நல்ல முறையில் ஜனங்கள் வாழ்வதற்கேற்ற விருப்பத்தை அவர்களுக்கு உண்டாக்கக்கூடிய இதர வழிவகைகளைக்குறித்து நாம் இப்போது கவனிக்கவேண்டும். இந்த விஷயத்தில் இப்போது செய்யப்படும் உதவியைத் தர்மார்த்தமாய்ச் செய்யப்படும் உதவியென்றுதான் சொல்லவேண்டுமேயொழிய வேறே விதமாய்ச் சொல்வதற்கில்லை. எவ்வகையிலாகிலும் இப்படிப்பட்ட உதவியைச் செய்வதைவிட ஜனங்களை நல்ல வழியில் திருப்பி அவர்களை நல்ல முறைகளை அனுசரிக்கும்படி தூண்டுவது மெத்தவும் அவசியமென்று நாங்கள் உறுதியாய் அபிப்பிராயப்படுகிறோம். விரும்பத்தக்க வழிகளில் கிராமக் குடிகளின் தேவைகளை அதிகப்படுத்தி அவைகளைத் தங்களுடைய சொந்த முயற்சியினாலேயே அவர்கள் எவ்விதம் சாதித்துக்கொள்ளக்கூடுமென்பதைக் காட்டுவதே இப்போது நாம் செய்யவேண்டிய வேலையாகும். கிராமத்தார் தங்களுக்கு வழிகாட்ட யாரை எதிர்பார்க்கிறார்களோ அவர்கள் தங்களுடைய ஓய்வு நேரத்தை கிராம வசதிகளை எவ்விதம் விருத்தி செய்யக்கூடுமென்பது விஷயமாய் ஆலோசனைகள் சொல்லுவதிலே

யே கழிப்பார்களென்று நாங்கள் நம்புகிறோம். பரஸ்பர நன்மைக்காக ஒன்றுகூடி வேலை செய்வதென்னும் சம்பிரதாயம் ஒன்று அதிர்ஷ்டவசமாய் ஏற்பட்டிருக்கிறது. அந்த சம்பிரதாயத்தை அனுசரிக்கவேண்டுமென்று அவர்களைக் கேட்டுக்கொள்ளவேண்டும். முற்காலத்தில் இந்தப்படி செய்துதான் குளங்கள் வெட்டப்பட்டன அல்லது சுத்தம் செய்யப்பட்டன, கிணறுகள் தோண்டப்பட்டன, ரஸ்தாக்கள் புதிதாக போடப்பட்டன அல்லது மரமத்து செய்யப்பட்டன. இப்போது இந்த நல்ல வழக்கம் பெரும்பாலும் கைவிடப்பட்டபோதிலும், அதனால் ஏற்படும் நன்மைகளைக் கிராமவாசிகள் நன்றாய் உணரும்படி செய்கிறபட்சத்திலே, மேலே சொன்ன காரியங்களுக்காகவும் நல்ல குடிதண்ணீர் வசதி ஏற்படுத்துவது, ஜல தாரைகள் சம்பந்தமாகவும் தெருக்கள் சம்பந்தமாகவும் சீர்திருத்தம் செய்வது ஆகிய இவைகளைப் போன்ற இதர காரியங்களுக்காகவும் மேலேகண்ட வழக்கத்தைக் கிராமத்தார் சுயேச்சையாய் மறுபடியும் கையாளும்படி செய்வது சாத்திமப்படுமென்று நாங்கள் எண்ணுகிறோம். இந்தப்படி செய்வது சாத்தியப்படாதபட்சத்திலே, கிராம வசதிகளை அடியோடு விருத்தி செய்வதைப்பற்றிய ஆசையை விட்டுவிடவேண்டும். வேலை செய்யும் கூலியாள்களுக்குக் கூலி கொடுக்க விவசாயிகளே போதுமானமட்டில் பணமுடையவர்களாயில்லை. மேலும், பிரதேச அதிகார சபைகளாவது மாகாண கவர்ன்மென்டுகளாவது இப்படிப்பட்ட வேலைகளைச் செய்து முடிப்பதற்கு வேண்டிய ஆள்களை அமர்த்திக் கொடுப்பதோ திரவிய சகாயம் செய்வதோ சாத்தியமல்லவென்பது நிச்சயம்.

ஆயினும், பயிரிடுகிறவர் பிறருடைய சகாயமில்லாமல் கூடி வேலை செய்யும் இந்த புராதன வழக்கத்தை மறுபடியும் அனுசரிக்க ஆரம்பித்து கிராமத்தையும் அதன் சுற்றுப்பக்கங்களையும் அபிவிருத்தி செய்வதற்கு அதைப் பயன்படுத்திக்கொள்ளுவாரென்று நியாயமாய் எதிர்பார்க்க முடியாது. அவருக்குத் தலைமை வகித்து நடத்தும் சக்தி குறைவு. அவருக்கு இன்னார் தலைவராயிருக்கலாமென்று ஆலோசனை சொல்லும் விஷயத்தில் கஷ்டம் ஏற்படுகிறது. கிராமத்தில் வசதிகள் ஏற்பட்டிராதபோதிலும் சமூக ஊழியம் செய்வதையே லட்சியமாகக் கொண்ட சிலரைத் தவிர, பொதுவாய்க் கல்வியறிவுள்ளவர்கள் கிராமத்தில் போய் தங்களுடைய வாழ்க்கையை நடத்த இஷ்டப்படுவதில்லை. பஞ்சாபைச் சேர்ந்த குர்கேயான் ஜில்லாவில் மிஸ்டர் ப்ரெயின், ஐ.ஸி.எஸ்., என்பவர் ஏற்படுத்தியிருக்கும் கிராம வழிகாட்டிகள் சம்பந்தமான ஏற்பாடானது கவனிக்கத்தக்கதாகத் தோற்றுகிறது. இந்த முறைப்படி சிறுவர்களுக்கு விசேஷ வகையில் பயிற்சி செய்விக்கப்படுகிறது. இந்த பயிற்சி முறையினால் பரஸ்பர நன்மையை உத்தேசித்து ஒன்றுகூடி வேலை செய்வதன் பெருமையை அவர்கள் உணரும்படி செய்வதுடன்கூட, சுகாதாரம், மூலாதாரமான வைத்திய உதவி, கூட்டுறவு, விவசாய சம்பந்தமான சீர்திருத்தம் ஆகிய இவைகளின் தத்துவங்களில் அவர்களைப் பழக்கவேண்டுமென்றும், சுலபமான வீட்டுக் கைத்தொழில்களை அவர்களுக்குச் சிறிதுமட்டில் கற்பிக்கவேண்டுமென்றும் உத்தேசிக்கப்படுகிறது. இந்தப்படி செய்கிறபட்சத்திலே, அவர்களில் ஒவ்

வொருவரும் தம்முடைய பயிற்சி முடிவான பிறகு எந்த கிராமத் தொகுதிக்கு அனுப்பப்படுகிறாரோ அந்த கிராமத் தொகுதியிலுள்ளவர்களுக்கு வழிகாட்டியாகவும் நற்போதனை செய்யக்கூடியவராகவும் நண்பராகவும் இருக்கக்கூடும். சாஸ்திர சம்பந்தமான விஷயங்களில் கிராமத்தார்களுக்குத் தாமே ஆலோசனை சொல்வதைக்காட்டிலும் இன்னாரிடத்தில் போய் ஆலோசனை பெறலாமென்று வழிகாட்டுவதற்கு அவர் தம்முடைய அறிவைப் பயன்படுத்திக்கொள்ளவேண்டுமென்பது உத்தேசம். கிராம வழிகாட்டிகள் சம்பந்தமான இந்த ஏற்பாடானது கிராமக் குடிஜனங்களின் பொதுவான முன்னேற்றத்தையே தனது நோக்கமாகக் கொண்டு குர்கேயான் ஜில்லாவில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபனத்தால் அனுசரிக்கப்படும் பல முறைகளில் ஒன்றாகும். கிராமப் பிரதேசங்களில் வேலை செய்து வரும் ஒவ்வொரு ஸர்க்கார் இலாகாவின் வேலையும் இந்த ஏற்பாட்டில் அடங்கியிருக்கிறது. நன்றாய் ஆலோசித்துத் தயாரிக்கப்பட்ட ஒரு முறைப்படி பிரசார வேலை செய்து நிபுணர்களின் ஆலோசனையைக் கிராமத்தார் அனுசரிக்கும்படிச் செய்யும் விஷயத்தில் அது உதவி செய்ய முயல்கிறது. அது சித்திகரமாய் வேலை செய்வது - உத்தியோகஸ்தராகவோ உத்தியோகப்பற்று இல்லாதவராகவோ இது விஷயமாய் உதவி செய்ய விருப்பமுள்ளவராகவும் சக்தியுள்ளவராகவும் இருக்கும் ஒவ்வொருவரும், அதிலும் முக்கியமாய் யாருடைய க்ஷேமம் நிஷ்கரிஷையற்ற நிலைமையில் இருக்கிறதோ அப்படிப்பட்ட ஜனங்களும் இந்த காரியத்தில் ஈடுபடுவதைப் பொறுத்தாயிருக்கிறது. ஜனங்கள் தங்களுடைய விரும்பத்தகாத நிலைமைக்குத் தாங்களே பெரும்பாலும் காரணமாயிருக்கிறார்களென்னும் விஷயத்தை அவர்கள் தெரிந்துகொள்ளும்படி செய்ய உபந்நியாசங்களும் பாட்டுகளும் நாடகங்களும் மாஜிக் லான்டெர்ன் என்னும் விளக்குக் காட்சிகளும் ஸினிமா படக்காட்சிகளும் ஒருவர் பேசுவதை உரத்த தொனியில் தெரிவிக்கக்கூடிய லௌட் ஸ்பீகர் என்னும் சாதனங்களுங்கூட சாத்தியப்பட்டமட்டில் உபயோகித்துக்கொள்ளப்படுகின்றன. இவ்விதமாக கிராமத்தார் விஷயங்களைக் கவனிக்கும்படி செய்யப்படுகிறது. இப்படிப்பட்ட பிரசார வேலை செய்வதுடன் கூட, மேலேகண்டபடி சொல்லப்படும் ஆலோசனையை அனுபவத்தில் அனுசரித்து நடக்க விருப்பமுள்ளவர்களுக்குச் சௌகரியங்களும் செய்து கொடுக்கப்படுகின்றன. நல்ல விதைகள், பொறுக்கியெடுக்கப்பட்ட எருதுகள், கலப்பைகள், கிணறுகளில் உபயோகிக்கும் உபகரணங்கள், கொய்லு மருந்து, மருந்து குத்திக்கொள்வதற்கு வசதிகள் முதலியவைகளெல்லாம் அவர்களுக்குச் சுலபமாய்க் கிடைக்கக்கூடியவைகளாயிருக்கின்றன. கூட்டுறவு சங்கங்களும், வயதுவந்தவர்களுக்குப் பாடசாலைகளும், குடும்பப் பொருளாதார விஷயமாய்ப் போதிக்கும் வகுப்புகளும், பிறருக்கு ஊழியம் செய்யும் உணர்ச்சியையும் தனக்குத் தானே உதவி செய்துகொள்ளும் உணர்ச்சியையும் விருத்தி செய்வதற்கு அனுகுணமான வேறே ஒவ்வொரு வகையான உபாயமும் உடனே கிடைக்கக்கூடியவைகளாயிருக்கின்றன. உபயோகமுள்ள ஒவ்வொரு வஸ்துவும் அதை வேண்டுபவர்களுக்குச் சுலபமாய்க் கிடைக்கக்கூடியபடி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. கிராம அபிவிருத்தியில் சிரத்தையுள்ள ஒவ்வொருவரும் அது விஷய

மாய் நாலாவழிகளிலும் முயற்சி செய்வதனல் ஏற்படக்கூடிய பெருத்த நன்மை இன்னதென்பதைத் திருஷ்டாந்தப்படுத்திக் காட்டுவதற்கு இந்த ஏற்பாடு உபயோகமாயிருக்கிறது. இதுவே இந்த ஏற்பாட்டினால் உண்டாகும்-முக்கியமான பிரயோசனமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

ஆலோசனை பெறுவதற்காக இன்னாரிடம் போகவேண்டுமென்பதைக் குறித்தும், தங்களுடைய ஓய்வு நேரத்தில் கிராம வசதிகளை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் தங்களுடைய சொந்த சாமர்த்தியத்தையும் ஆதாரங்களையும் இன்ன விதமாய் உபயோகித்தால் மிகப் பிரயோசனகரமாய் இருக்குமென்பதைக் குறித்தும் கிராமத்தார்களுக்கு ஆலோசனை சொல்வதற்கு கிராமத்திலேயே வசிக்கும் யாதொரு நபரைப் பொறுப்பாளியாக்கவேண்டுமென்பதைப்பற்றி சொன்னோம். இதற்கு அடுத்தபடியாக, பட்டணத்தின் சமூக வாழ்க்கையுடன் கிராமங்களைச் சம்பந்தப்படுத்துவது மிகவும் முக்கியமென்று நாங்கள் கருதுகிறோம். பூனாவிலுள்ள சேவாசாதன சங்கத்தைப் போன்ற சங்கங்களாகச் சேர்ந்து ஒழுங்காய் வேலை செய்துவரும் சமூக ஊழியர்களால் இந்தக் காரியம் மிகச்சிறப்பாய் நிறைவேறுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அந்தப்படி ஒழுங்காய் அமைந்து வேலை செய்துவருகிறபட்சத்திலே, ஒரு முறையைத் தொடர்ச்சியாய் அனுசரித்து வருவதற்கும் நீண்ட கால அளவுக்கு ஒரே நிதானமான பலன் உண்டாவதற்கும் சௌகரியம் ஏற்படுகிறது. சாசுவதமான பலன் உண்டாகவேண்டுமானல், இவ்விரண்டு லட்சியங்களும் அவசியம் நிறைவேறவேண்டும் கிராம அபிவிருத்தி வேலையில் பொருளாதார சம்பந்தமாகவும் வித்தியா சம்பந்தமாகவும் உதவி புரிய சர்வகலாசாலைகளுக்கும் ஒரு கடமை ஏற்பட்டிருப்பது மாத்திரமேயல்லாமல், விசேஷ சந்தர்ப்பமும் வாய்த்திருக்கிறது. முக்கியமாய், அவை பொருளாதார சம்பந்தமான பரிசீலனைகளைச் செய்ய ஆரம்பித்து ஒழுங்குபெற நடத்தலாம். பஞ்சாபில் பொருளாதார சம்பந்தமான விசாரணை நடத்துவதற்கான சபை ஒன்று இருக்கிறது. இது உத்தியோகப்பற்றற்ற ஒரு ஸ்தாபனமாகும். இதில் பொருளாதார சம்பந்தமான ஆராய்ச்சிகள் நடத்துவதில் சிரத்தையுள்ளவர்களாயிருக்கும் உத்தியோகஸ்தர்களும் உத்தியோகஸ்தரல்லாதவர்களும் சேர்ந்திருக்கிறார்கள். இதர மாகாணங்களிலும் இப்படிப்பட்ட சபை ஒன்றை ஏற்படுத்துகிற பட்சத்திலே, பொருளதார சாஸ்திரத்தைக் கற்றுவரும் சர்வகலாசாலை மாணவர்களுக்குத் திறமையான மேற்பார்வையின்கீழ் சமுதாயப் பொருளாதார சம்பந்தமான விசாரணைகள் நடத்துவதற்கு விசேஷ சந்தர்ப்பங்கள் வாய்க்கும்.

பஞ்சாப் ஸென்ட்ரல் ரூரல் கம்யூனிட்டி போர்ட் என்னும் பஞ்சாப் மாகாணத்தில் கிராமக் குடிஜனங்கள் சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் மத்திய சபையைப்பற்றியும் இங்கே குறிப்பிட விரும்புகிறோம். பெரும்பாலும் உத்தியோகஸ்தர்களே இந்த சபையில் மெம்பர்களாயிருக்கிறார்கள். ஆனல், அது - அந்த மாகாணத்திலுள்ள ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்படுத்தப்பட்டு பெரும்பாலும் உத்தியோகஸ்தரல்லாதவர்களே சேர்ந்திருக்கும் கிராமக் குடிஜனங்

களைக் கொண்ட ஒரு ஆலோசனை சபையுடன் சம்பந்தப்படுத்தப் பட்டிருக்கிறது. வித்தியா இலாகா, விவசாய இலகா, கால்நடை வைத்திய இலாகா, கூட்டுறவு இலாகா ஆகிய கிராம அபிவிருத்திக் குச் சம்பந்தப்பட்ட பற்பல இலாகாக்களின் பிரதிநிதிகள் ஒவ்வொரு ஆலோசனை சபைக்கும் வந்திருந்து அதன் வேலையைச் செய்வதற்கு உதவி செய்கிறார்கள். குடிஜனங்கள் சம்பந்தமாய் ஒவ்வொரு ஜில்லாவிலும் ஏற்பட்டிருக்கும் ஆலோசனை சபையானது இப்படிப் பட்ட சகல அபிவிருத்தி இலாகாக்களாலும் செய்யப்படும் பிரசார வேலையுடன் கலந்து அதை ஒழுங்கு பெற நடத்தவேண்டுமென்பதே இதன் உத்தேசமாகும்.

இந்த ஆலோசனை சபைகள் அனுஷ்டானத்தில் திறமையாய் வேலை செய்துவருகின்றனவா என்பதைப்பற்றி அபிப்பிராயம்கூறப் போதுமான அனுபவம் இன்னும் அடையவில்லை. ஆகவே, இந்த ஸ்தாபனமானது இதர மாகாணங்களின் தேவைகளுக்கு எவ்வளவு மட்டில் தகுதியாயிருக்குமென்று சொல்லும்படியான நிலைமையில் நாங்கள் இல்லை. உத்தியோகஸ்தர்கள் சேர்ந்து அமைக்கப்பட்ட ஸ்தாபனம், தனிநபர்கள் சேர்ந்து அமைக்கப்பட்ட ஸ்தாபனம் ஆகிய இவ்விரண்டினாலும் ஏற்படக்கூடிய நன்மைகள் இந்த ஏற் பாட்டினால் சேர்ந்தாற்போல் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை. ஆகவே, இதர மாகாணங்களில் இது விஷயமாய் வேலை செய்துவருப வர்கள் இந்த பரிசோதனையை ஊன்றிக் கவனித்து அதைப்பற்றி ஆலோசிப்பது நல்லது. இந்த இயக்கம் நடத்திவரும் வேலைகளில் ஸ்திரீகள் சம்பந்தமான ஒரு பகுதியையும் ஏற்படுத்தி அதை விருத்திசெய்து வருகிறபட்சத்திலே, இந்த இயக்கத்தினால் நன்மை ஏற்படுவதற்கு விசேஷமாய் இடமேற்படுமென்று நாங்கள் அபிப் பிராயப்படுகிறோம். ஒரு கிராமத்தில் பெண்கள் சேர்ந்து வேலை செய்யக்கூடிய ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்தினால், வித்தியா சம்பந்த மாகவும் கூட்டுறவு சம்பந்தமாகவும் நடத்தப்படும் வேலைகளுக்கும் தாய்மார், குழந்தைகள் ஆகிய இவர்களின் க்ஷேமத்தை உத்தேசித்து நடத்தப்படும் வேலைக்கும் அது ஒரு முக்கியமான ஸ்தாபனமாயிருக் கும். மேலும், இந்தப்படி செய்கிறபட்சத்திலே, கிராமப் பாட சாலைகளில் பெண்களை உபாத்தியாயர்களாக அமர்த்திக்கொள் வது விஷயமாய் இப்போது ஏற்படும் தடைகளும் நீங்கிப்போகக் கூடும்.

மேலும், முன்னிலும் நல்ல வாழ்க்கையை நடத்துவதற்குச் சம் பந்தப்பட்ட சங்கங்களைக் கூட்டுறவு முறையில் நடத்துவதனால், சில குறிப்பிட்ட ஏற்பாடுகளுக்கு அனுகூலமாக அவ்வவ்விடத்திலுள்ள பொது ஜனங்களின் அபிப்பிராயத்தை ஒழுங்காய்த் திரட்டலாம். கூட்டுறவு முறையில் ஒழுங்காய் அமைக்கப்படும் பிரதேச மத்தியஸ்த சபையைக்கொண்டு கிராமத்தில் ஏற்படும் சச்சரவுகளைப் பைசல் செய்துகொள்வது எவ்வளவுமட்டில் சாத்தியமாகு மென்பதையும் ஜாக்கிரதையாய் ஆலோசிப்பது அவசியமாயிருக்கிறது. தாழ்த்தப் பட்ட வகுப்பார்களின் விஷயத்தில் பொதுஜனங்களுக்குள் ஒரு வித மான சிரத்தை எங்கும் இப்போது ஏற்பட்டிருக்கிறது. அந்த வகுப் பார்களின் நிலைமையில் எவ்வித அபிவிருத்தியாகிலும் ஏற்படும்படி

செய்யவேண்டுமானால், அவர்களுக்குக் கல்வி கற்பிப்பதும் அது காரணமாக அவர்களுக்குள் சுயமரியாதை, தன் காரியத்தைத்தானே செய்துகொள்வது என்னும் உணர்ச்சி ஆகிய இவைகள் ஏற்படும் படிச் செய்வதுமே மிகச் சிறந்த மார்க்கமாகுமென்று நாங்கள் அபிப் பிராயப்படுகிறோம். கிராம வேலை சம்பந்தமான வேறு எந்தப் பிரிவிலும் தனிநபர்கள் சேர்ந்த ஸ்தாபனங்களினால் ஜனங்களுக்கு உபயோககரமான வேலைசெய்வதற்கு இதைக்காட்டிலும் விசேஷ சந்தர்ப்பம் வாய்க்காது.

## 13. கல்வி:

பிரதான ரிபோர்ட்டின் 15-ம் அத்தியாயம்.

இப்போது அமுலிலிருந்துவரும் கல்வி முறைகள், கிராம நிலைமைகளுக்கு அவை இவ்வளவுமட்டில் பொருத்தமாயிருக்கின்றன, அவைகளினால் இன்ன பலன் ஏற்படக்கூடுமென்னும் விஷயங்களைக்குறித்து ஜாக்கிரதையாக பரிசீலனை செய்தாலொழிய, கிராமக் குடிஜனங்களின் நன்மையையும் க்ஷேமத்தையும் விருத்தி செய்யும் நோக்கத்துடன் இந்தியக் கிராமப் பொருளாதார விஷயமாய் நடத்தப்படும் எந்த விசாரணையும் பூர்த்தியானதாகாது.

கல்வியானது மாற்றப்பட்ட இலாகாவில் விவகரிக்கப்படும் விஷயமாகும். பரிபாலன சம்பந்தமான காரியங்களுக்காக, வித்தியா ஸ்தாபனங்கள் வித்தியா இலாகாவினால் அங்கீகரிக்கப்பட்ட ஸ்தாபனங்களென்றும், அந்தப்படி அங்கீகரிக்கப்படாமலும் அது காரணமாக கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்களால் பரிசோதனை செய்யப் படாமலும் இருக்கும் ஸ்தாபனங்களென்றும் இரண்டு வகுப்புகளாகப் பிரிக்கப்படுகின்றன. ப்ரிடிஷ் இந்தியா முழுவதுக்கும் அங்கீகரிக்கப்பட்டிருக்கும் ஸ்தாபனங்கள் அங்கீகரிக்கப்படாமலிருக்கும் ஸ்தாபனங்களைக்காட்டிலும் ஆறு மடங்கு அதிகமாயிருக்கின்றன. அங்கீகரிக்கப்பட்டிருக்கும் இந்த ஸ்தாபனங்களுக்குள் நூற்றுக்கு 65 வீதமுள்ள ஸ்தாபனங்கள் கவர்ன்மென்டாரால் பரிசோதிக்கப் படுவதற்கு உட்பட்டவைகளாயிருந்தபோதிலும் அவை ஸர்க்காரைச் சேராத தனி நபர்களால் நிருவகிக்கப்பட்டுவருகின்றன. மீதியுள்ள ஸ்தாபனங்களில் நூற்றுக்கு 33 வீதமுள்ள ஸ்தாபனங்கள் ஜில்லா போர்டுகளாலும் மியுனிஸிபல் கௌன்ஸில்களாலும் நிருவகிக்கப்பட்டும், நூற்றுக்கு இரண்டுவீதமுள்ள ஸ்தாபனங்கள் நேரில் கவர்ன்மென்டாரின் நிர்வாகத்தின் கீழும் இருந்துவருகின்றன. கவர்ன்மென்டாருடைய நிருவாகத்தின் கீழ் இருந்துவரும் ஸ்தாபனங்களின் முக்கியத்தையானது அவைகளின் தொகையைக்காட்டிலும் எவ்வளவோ மடங்கு அதிகமாயிருக்கிறது. பற்பல மாகாணங்களில் பிரதேச அதிகார சபைகளின் வித்தியா சம்பந்தமான கடமைகளைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்காக ஏற்பட்டிருக்கும் சட்டங்களைப்பற்றி இங்கே விவரமாய்ச் சொல்லுவது அனுவசியமாகும். இபபடிப்பட்ட சட்டங்களுடன் சமீபகாலத்தில் சேர்க்கப்பட்ட மிகவும் முக்கியமான ஆக்டுகள் ஆரம்பக்கல்வியைக் குறித்த ஆக்டுகள்தானென்று சொன்னால் போதும். தெரிந்தெடுக்கப்பட்ட விஸ்தீர்ணங்களில் ஆரம்பக்கல்வியைக் கட்டாயமுறையில் ஏற்படுத்த

பிரதேச அதிகார சபைகளுக்கு அதிகாரம் கொடுப்பதே மேற்படி ஆக்டுகளின் முக்கியமான நோக்கங்களில் ஒன்றாகும்.

பொதுவாய் விவசாயத்தில் ஈடுபட்டிருக்கும் ஜனங்கள் சம்பந்தப்பட்டமட்டில், ஆரம்பக்கல்வியும் எழுதப்படிக்கத் தெரிந்துகொள்ளும் நிலைமையை அடைவதும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களாகும். இதுசம்பந்தமாய் அடியிற்கண்ட விவரக்கணக்குகளைக் கவனிப்பது பிரயோசனகரமாயிருக்கும். 1921–22–ம் * ஷூத்திலே, அங்கீகாரமான பாடசாலைகள், அங்கீகரிக்கப்படாமலிருக்கும் பாடசாலைகள் ஆகிய இவ்விருவகையான பாடசாலைகளிலும் ஆரம்ப தசையில் கல்வி கற்பிக்கப்பட்டுவந்த மாணவர்களை ப்ரிடிஷ் இந்தியா முழுவதுக்கும் பாடசாலைக்குப் போகக்கூடிய வயதுள்ளவர்களின் மொத்த ஜனத்தொகையுடன் (அதாவது, மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு 15 வீதம் உள்ளவர்களுடன்) ஒப்பிட்டுப் பார்க்கும்போது, சங்கியா பரிமாணமானது புருஷர்களின் விஷயத்திலே நூற்றுக்கு 32·2 வீதமாகவும், ஸ்திரீகளின் விஷயத்திலே நூற்றுக்கு 7·6 வீதமாகவும் இருந்தது. 1925-26-ம்ஷூத்தில் அங்கீகாரமான பாடசாலைகளில் ஆரம்பக்கல்வி பெறும் தசையில் நூற்றுக்கு 87·1 வீதமும் மத்தியதரக்கல்வி பெறும் தசையில் நூற்றுக்கு 8·8 வீதமும், விசேஷ பாடசாலைகளில் † நூற்றுக்கு 3·2 வீதமும சர்வகலாசாலைகளில் நூற்றுக்கு 0·9 வீதமும் ஆண்பிள்ளைகள் படித்துக்கொண்டிருந்தார்கள். (அங்கீகாரமாகாத பாடசாலைகள் விஷயமாய்க் கணக்கு விவரம் எதுவும் கிடைக்கவில்லை.) பெண்பிள்ளைகள் விஷயத்தில், மேலேகண்ட சங்கியா பரிமாணமானது நூற்றுக்கு 95·2 வீதமாகவும் 3·6 வீதமாகவும் 1·1வீதமாகவும் 0·1 வீதமாகவும் இருந்தது. 1921-ம் ஷூத்திய கானிஷமாரி கணக்கின்படி 20 வயதும் அதற்கு மேற்பட்ட வயதுமானவர்களுக்குள் புருஷர்களில் நூற்றுக்கு 18·3 வீதமும் ஸ்திரீகளில் 1·9 வீதமும் உள்ளவர்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருந்தார்கள். எழுதப்படிக்கத் தெரிந்த புருஷர்களின் சங்கியையானது பர்மாவில் நூற்றுக்கு 62 வீதமாக இருந்து ஐக்கிய மாகாணத்தில் நூற்றுக்கு 8·9 வீதமாகக் குறைந்துகொண்டுவந்தது. அம்மாதிரியே, ஸ்திரீகளின் சங்கியையும் பர்மாவில் நூற்றுக்கு 11·8 வீதத்திலிருந்து ஐக்கியமாகாணத்திலும் பீஹார் - ஒரிஸ்ஸாவிலும் நூற்றுக்கு 0·7 வீதமாகக் குறைந்துகொண்டேவந்தது.

பாடசாலைக்குப் போகத்தக்க வயதுள்ள சிறுவர்களுள் ஆரம்பப் பாடசாலைக்குப் போகிறவர்களின் சங்கியையானது இன்னும் குறைவாகவே இருக்கிறது. இது ஏமாற்றத்தைக் கொடுக்கக்கூடியதாகும்.

* 1921–22-ம் ஷூத்துக்குப் பிந்திய யாதொரு வருஷத்துக்கு இம்மாதிரியான விவரத்தைக் கொடுப்பதற்கு அனுகூலமாக விவரக்கணக்குகள் கிடைக்கவில்லை.

† விசேஷ பாடசாலைகள் என்பதில், சாஸ்திர சம்பந்தமாகவும் கைத்தொழில் சம்பந்தமாகவும் போதிக்கப்படும் பாடசாலைகள் என்பதும், உபாத்தியாயர்களுக்குப் போதனுசக்தியும் பயிற்சியும் கொடுப்பதற்கான பாடசாலைகள் என்பதும், வியாபார சம்பந்தமாகவும் வைத்திய சம்பந்தமாகவும் குற்றவாளிகளைச் சீர்திருத்துவது சம்பந்தமாகவும் ஏற்பட்டிருக்கும் பாடசாலைகள் என்பதும், வயது வந்தவர்களுக்காக ஏற்பட்டிருக்கும் பாடசாலைகள் என்பதும், அங்கப்பழுதுள்ளவர்கள் முதலியவர்களுக்காக ஏற்பட்டிருக்கும் பாடசாலைகள் என்பதும் அடங்கும்.

ஆயினும், இது சிறிது விரைவாகவே அதிகரித்துவருகிறது. ஆனால், இந்த பாடசாலைகளில் படிக்கும் மாணவர்களில் பெருந் தொகையார் அதமபட்சமாகவாகிலும் எழுதப்படிக்கத் தெரிந்து கொள்ளும்படியான நிலைமையை அடைவதற்குப் போதுமான காலம்வரையில் அந்த பாடசாலைகளில் இருந்து வாசித்துவருவ தில்லை. மேலும், மேற்படி நிலைமையை அடைந்தவர்களுக்குள் எத்தனை பேர் எழுதப்படிக்கத் தெரிந்துகொண்டதை மறந்துவிட்டு முன்போலவே அஞ்ஞான நிலையில் இருக்கிறார்களென்பதைப்பற்றி திட்டமான விவரங்கள் கிடைக்கவில்லை. ஆரம்பக்கல்வியில் இன்னும் விரைவான அபிவிருத்தி அடைய இந்தப்படி தவறிப்போனதற்குப் பற்பல காரணங்கள் சொல்லப்படுகின்றன. ஆகவே, எந்த வழிகளில் வேலை செய்தால் இதுவிஷயமாய் அபிவிருத்தி அடைவது சாத்தியமாயிருக்குமோ அந்த வழிகளை இங்கே குறிப்பிடுகிறோம்.

ஸ்திரீகள் அதிகமாய் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருப்பது இந்தியாவில் கிராம அபிவிருத்திக்கு மிகவும் முக்கியமென்று நாங்கள் எங்களுடைய விசாரணைகள்மூலமாக திடமாய்த் தெரிந்து கொண்டோம். இதுவிஷயத்தில் ஜனங்கள் விழிப்படைந்து சிரத்தை கொள்வதற்கான குறிகள் காணப்படுகின்றன. ஆயினும், இதன் சம்பந்தமாய் ஏற்படும் அபிவிருத்தி தாமதமாய் ஏற்படுகிறது. ஆகவே, ஜனசமூகத்துக்கு அதிலுள்ள ஸ்திரீகள் படித்திருப்பது எவ்வளவு முக்கியமென்பதை, அதிலும் முக்கியமாய் ஸ்திரீகள் படித்திருப்பதனால் சிறுவர்கள் நிரந்தரமாய் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாவது சாத்தியப்படும் என்பதை, நன்றாய்ப் புலப்படும் விதமாக எண்பித்துக்காட்டுவது உசிதமாயிருக்குமென்று நாங்கள் சொல்ல விரும்புகிறோம். இந்த நோக்கம் பூர்த்தியாய் நிறைவேறுவதற்கு அடியிற்கண்டபடி செய்யலாம். மாதிரியாய் எடுத்துக் காட்டக்கூடிய பயிரிடும் குடும்பங்களில் தாய் எழுதப்படிக்கத் தெரிந்தவளாயிருந்து அந்த குடும்பங்களில் பிறந்த சிறுவர்களின் வித்தியா சம்பந்தமான சரித்திரத்தையும் பின்னால் அவர்கள் விருத்தியடைந்த விஷயத்தையும் பதிவு செய்யவேண்டும். அம்மாதிரியே, அதே பிரதேசத்திலும் அதே வாழ்க்கை நிலைமையிலுமுள்ள எழுதப்படிக்கத் தெரியாத குடும்பங்களைப்பற்றிய விவரங்களை அட்டவணைப் படுத்தி, பின்சொன்ன குடும்பங்களிலுள்ள பிள்ளைகளைக்காட்டிலும் பாக்கியசாலிகளான முன்சொன்ன குடும்பங்களைச் சேர்ந்த பிள்ளைகளோடு ஒப்பிட்டுக் காட்டலாம். ஆயினும், இந்தப்படி ஒப்பிட்டுக் காட்டுவதற்காக எடுத்துக்கொண்ட குடும்பங்கள் நகர வாழ்க்கையை அனுசரிக்கும் குடும்பங்களாக இராமல் சகல அம்சங்களிலும் கிராம வாழ்க்கையையே அனுசரித்துவரும் குடும்பங்களாக இருப்பது முக்கியமாகும். பயிரிடும் வகுப்பார்களுக்குள் எழுதப்படிக்கத் தெரிந்த குடும்பங்கள் எவையும் கிடைக்காவிட்டால், மிகவும் தகுதியான நிலைமைகள் ஏற்பட்டிருந்து இம்மாதிரியான பரிசோதனை இதற்குமுன் செய்யப்பட்டிராத இடங்களில் இளவயதுள்ள சில தாய்மார்களைத் தேர்ந்தெடுத்து அவர்களுக்கு எழுதப்படிக்கக் கற்றுக்கொடுக்க திட்டமான முயற்சி செய்யப்படவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். இந்தப்படி ஒப்பிட்டுக் காட்டுகிறபட்சத்

திலே, எழுதப்படிக்கத் தெரிந்த பெற்றோர் தங்களுடைய குழந்தைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கும், எழுதப்படிக்கத் தெரிந்து கொள்வது பிரயோசனகரமாயிருக்குமென்று தாய் அபிப்பிராயப்படுகிற அளவுக்குக் குழந்தைகளுக்கு நன்றாய் எழுதப்படிக்கத் தெரியும் வரையில் பாடசாலையில் வைத்திருப்பதற்கும் விசேஷமாய் அதிகமாக விருப்பம் கொள்வார்களென்பதில் எங்களுக்குச் சிறிதும் சந்தேகமில்லை.

இதுவிஷயமாய் அவசியமான ஆதாரங்களைச் சேகரிப்பதற்காக ஏற்பட்ட சிரமம் காரணமாகவும் செலவு காரணமாகவும், பெண்கள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களாயிருப்பதற்கும் பொதுஜனங்களுக்குள் எழுதப்படிக்கத் தெரிந்தவர்களின் சங்கியை அதிகரிப்பதற்கும் உள்ள சரியான சம்பந்தத்தை யாவரும் அறிந்துகொள்ளும் விதமாக எண்பித்துக் காட்டுவதற்கு உபயோகப்படக்கூடிய பிரசாரவேலையைச் செய்வது சாத்தியப்படுமென்று நாங்கள் எதிர்பார்க்கிறோம். அந்தப்படியே சாத்தியப்படுகிறபட்சத்தில், ஷை சிரமத்துக்கும் செலவுக்கும் விசேஷமாய்ப் பிரதிபலன் கிடைத்ததாகுமென்று நாங்கள் எண்ணுகிறோம்.

திறமையாய்க் கல்வி கற்பிக்கவேண்டுமானால், உபாத்தியாயரைப் பயிற்சி செய்விக்கும் முறையைச் சீர்திருத்தவேண்டுமென்றும், பயிற்சி செய்விக்கப்பட்ட உபாத்தியாயர்களின் சங்கியை அதிகப்படவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். சாத்தியப்பட்டால் சிறு பிள்ளைகளுக்குப் போதிப்பதற்காக பெண் உபாத்தியாயர்களையே ஏற்படுத்தவேண்டும். ஏனென்றால், அந்த வேலையைச் செய்வதற்கு அவர்களே மிகச்சிறந்த யோக்கியதையுள்ளவர்களென்பது சகல தேசங்களிலும் அடைந்திருக்கும் அனுபவமாகும். சிறிய ஆரம்ப பாடசாலையில் இரண்டாவது உபாத்தியாயரை ஏற்படுத்துவது பணக்கஷ்டம் காரணமாக சாத்தியப்படாமற் போகக்கூடுமென்பது எங்களுக்குத் தெரியும். ஆயினும், குறைந்தபட்சம் இரண்டு உபாத்தியாயர்களையாகிலும் ஏற்படுத்துவதையே லட்சியமாக வைத்துக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். சாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் கிராம வாழ்க்கையைப்பற்றி தெரிந்திருப்பவர்களிலிருந்தே ஆரம்பப் பாடசாலைகளுக்கு உபாத்தியாயர்களை ஏற்படுத்தவேண்டும். மேலும், அந்தப் பாடசாலைகளில் வைக்கும் பாடபுத்தகங்களில் மாணுக்கர்களுக்குத் தினசரி வாழ்க்கையில் தெரிந்திருக்கும் விஷயங்களைப்பற்றியே எழுதியிருக்கவேண்டியதுமல்லாமல், அந்தப் பாடங்கள் சாதாரணமாய்க் கிராம வாழ்க்கைக்கேற்ற ரீதியாகவும் இருக்கவேண்டும். அன்றியும், அக்கம்பக்கத்திலுள்ள பயிரிடும் புலங்கள் வழியாய் அந்தப் பாடசாலையில் படிப்பவர்களைக் காலாகாலங்களில் நடத்திக் கொண்டுபோய், அவர்கள் விஷயங்களைக் கவனிக்கும் சக்தியையும் விருத்திசெய்யவேண்டும். உபாத்தியாயர் தோட்டவேலையைக் கூர்மையாகக் கவனித்தவராகவும் அதைப்பற்றிய விஷயங்களை நன்றாய்த் தெரிந்திருப்பவராகவும் இருந்தாலும், இயற்கைப்பொருள் பாடங்களைச் சரியானமுறையில் கற்பிக்கும் யோக்கியதை அவருக்கு இருந்தாலும், அவருடைய மாணுக்கர்களில் இவ்விஷயங்களைக்

கற்றுக்கொள்ள விருப்பமுள்ளவர்களுக்கு அவைகளைத் தமக்குத் தெரிந்தமட்டில் கற்பிக்கும்படி அவரைத் தூண்டவேண்டும். அந்த உபாத்தியாயரின் சம்பளத்தோடுகூட சிறிது தொகை சேர்த்துக் கொடுத்து அவருக்கு இதுவிஷயத்தில் உற்சாகம் ஏற்படும்படி செய்யலாம். ஆனால், ஐந்து வயது முதல் பத்து வயது வரையிலுள்ள பிள்ளைகளுக்கு இயற்கைப்பொருள் பாடங்களை சித்தாந்த ரூபமாகக் கற்பிப்பது மூலமாகவோ பாடசாலையைச் சேர்ந்த தோட்டங்களில் அனுபவ ரீதியாய்க் கற்பிப்பது மூலமாகவோ விவசாய சம்பந்தமான முறைகளைப் போதிப்பதாய் நடிப்பதை ஒழிக்கவேண்டும்.

பெற்றோர் தங்களுடைய பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்புவதற்கும் அவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரிகிறவரையில் அவர்களை அங்கேயே வைத்திருப்பதற்கும் விருப்பமில்லாதிருப்பதை ஒழிப்பதற்குக் கட்டாயக் கல்விமுறையை நாளுக்குநாள் அதிகமாய் அனுஷ்டானத்துக்குக் கொண்டுவருவதுதான் வழியென்று நாங்கள் உறுதியாய் நம்புகிறோம். பிள்ளைகளைப் பாடசாலைகளுக்குக் கட்டாயமாய் வரும்படி நிர்ப்பந்திப்பதற்குமுன், பயிற்சி பெற்றிருக்கும் உபாத்தியாயர்களையும் தகுந்த முஸ்திபுகள் அமைக்கப்பட்டுள்ள கட்டிடங்களையும் போதுமானமட்டில் ஏற்படுத்தியாகவேண்டும். பணக் கஷ்டத்தினாலும் இதுவிஷயமாய் தாராளமாக நடவடிக்கை நடத்துவதற்கு இடமில்லாதிருக்கிறது. ஆகவே, எங்கும் ஒரே மாதிரியான முன்னேற்றம் ஏற்படுமென்று எதிர்பார்க்கமுடியாது. ஆனால், பிரதேச அதிகார சபைகளுக்கு யுக்தமாகத் தோற்றுகிற பட்சத்திலே, கிராமப் பிரதேசங்களில் கட்டாயக் கல்விமுறையை அமுலுக்குக் கொண்டுவருவதற்கு சகல மாகாணங்களிலும் சட்டமூலமாய் அனுமதி கொடுக்கப்பட்டிருக்கிறது (வங்காளத்தில் மாத்திரம் அப்படிப்பட்ட அனுமதியில்லை; அந்த மாகாணத்திலே ஆரம்பக் கல்வியைக்குறித்த மசோதா ஆக்ட் ஒன்று இப்போது ஆலோசனையில் இருந்துவருகிறது). இதுவிஷயமாய் சகல மாகாணங்களிலும் ஜாரி செய்யப்பட்டிருக்கும் சட்டங்களில், கட்டாயக் கல்விமுறையை அனுசரிக்கும் விஸ்தீர்ணத்தை நிர்ணயிக்கவேண்டுமென்று பிரேரேபனை செய்யும் பொறுப்பு ஆரம்பக்கல்வி விஷயத்துக்குச் சம்பந்தப்பட்ட பிரதேச அதிகார சபைக்கு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. ஆகவே, ஆரம்பக்கல்வியைப் பரவச் செய்யவேண்டுமானால், கட்டாயக் கல்விமுறையை அமுலுக்குக் கொண்டுவந்தால் மாத்திரமே திறமை ஏற்படக்கூடுமென்பதைப் பொதுஜனங்கள் தெரிந்துகொள்ளும்படி செய்வது முதலில் செய்யவேண்டிய காரியமாகும். பஞ்சாப் மாகாணம் ஒன்றில்தான் கட்டாயக் கல்விமுறையை அமுலுக்குக் கொண்டுவந்ததனால் எந்த அளவுக்காவது நன்மை ஏற்பட்டிருக்கிறதென்று சொல்லக்கூடும். அந்த மாகாணத்தில் கூட்டுறவு இயக்கத்தைக்கொண்டு இந்தப் பிரசினை விஷயமாய் நடவடிக்கை நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. 7,000 பெற்றோர்கள் மெம்பர்களாய்ச் சேர்ந்திருக்கும் நூற்றைம்பத்தெட்டு சங்கங்களில் மேற்படி பெற்றோர்கள் தங்களுடைய பிள்ளைகளைத் தொடர்ச்சியாய் நான்கு வருஷகாலம் வரையிலாவது நான்காவது

ஸ்டாண்டர்ட் படித்துமுடிகிறவரையிலாவது பள்ளிக்கூடத்தில் வைத்திருப்பதாகவும் அந்தப்படி வைத்திருக்கத் தவறிப்போனால் தண்டனைக்குட்படுவதாகவும் பிணைப்பட்டிருக்கிறார்கள்.

சென்ற சில வருஷங்களுக்குள் வயது வந்தவர்களுக்குக் கல்வி கற்பிப்பதைப்பற்றிய விஷயமானது முக்கியமாய் பஞ்சாபிலும் வங்காளத்திலும் அதைவிட சற்று குறைவாய் பம்பாயிலும் சிறிது மட்டில் பிரதானமான விஷயமாக கருதப்பட்டுவந்திருக்கிறது. பஞ்சாபில் இந்த இயக்கத்துக்குப் பெரும்பாலும் கூட்டுறவு இலாகாவிலிருந்து தூண்டுதல் ஏற்பட்டிருக்கிறது. இவ்விஷயமாய்க் கவனிக்கத்தக்க அளவுக்கு முன்னேற்றம் ஏதாகிலும் ஏற்படவேண்டுமானால், நேரில் கவர்ன்மெண்ட் ஸ்தாபனங்களின் உதவியை எதிர்பார்ப்பதைவிட கிராம அபிவிருத்தியில் சிரத்தையுள்ளவர்களாய் பொதுக்காரியங்களில் ஊக்கத்துடன் வேலை செய்துவரும் தனிநபர்கள் சேர்ந்த சங்கங்களின் உதவியையும் கூட்டுறவு சங்கங்களின் உதவியையுமே நாம் எதிர்பார்க்கவேண்டும். ஆயினும், யாதொரு கூட்டுறவு சங்கமானது சொந்த முயற்சியினால் சேகரிக்கக்கூடியதாயிருந்திருக்கும் பணத்துடன் மாகாண வருமானத்திலிருந்து வீதாசாரப்படி சகாயத்தொகை கொடுத்து கூட்டுறவு சங்கங்களுக்குக் கவர்ன்மெண்டார் உதவி புரிவது நியாயமாய் இருக்கக்கூடுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

ஆரம்பப் பாடசாலைக்கு அடுத்து மேலாக, சுதேச பாஷையில் கற்பிக்கப்படும் நடுத்தர பாடசாலைகளென்றும் இங்கிலிஷிலும் சுதேச பாஷையிலும் கற்பிக்கப்படும் பாடசாலைகளென்றும் சொல்லப்படும் மத்தியதர பாடசாலைகள் இருக்கின்றன. சாதாரணமாய் பத்து வயது முதல் பதினான்கு வயது வரையிலுள்ள பிள்ளைகள் இந்த பாடசாலைகளுக்கு வந்து படிக்கிறார்கள். அதற்கு அடுத்த படியாக உயர்தரப் பாடசாலைகள் இருக்கின்றன. இவைகளிலிருந்துதான் பிள்ளைகள் இன்டர்மீடியேட் வகுப்பு வரையிலுள்ள கலாசாலைகளுக்கும் சர்வகலாசாலைகளுக்கும் போகவேண்டும். இந்த பாடசாலைகளில் பதின்மூன்று வயது முதல் பதினேழு வயது வரையிலுள்ள பிள்ளைகள் சேர்ந்து படிக்கிறார்கள். 1925–26-ம் ௵த்தில் 9,867 மத்தியதர பாடசாலைகளும் உயர்தர பாடசாலைகளும் இருந்தன. அவைகளில் 15,83,000 மாணாக்கர்கள் வாசித்து வந்தார்கள். ஆயினும், (1922-ம்௵த்தில்) கடைசியாய் எடுக்கப்பட்ட மதிப்புக் கணக்கின்படி, மத்தியதர பாடசாலைகளுடன் சேர்க்கப்பட்டிருக்கும் ஆரம்பக் கல்வி வகுப்புகளில் படித்துக்கொண்டிருக்கும் சுமார் ஐந்து லட்சம் பிள்ளைகளை மேற்படி இலக்கத்திலிருந்து கழித்துவிடவேண்டும். அந்தப்படி கழித்தால்தான், மத்தியதரக் கல்வி கற்பிக்கப்பட்டு வரும் பிள்ளைகளின் சரியான தொகை ஏற்படும். மத்தியதர பாடசாலைகளில் விவசாய சம்பந்தமான கல்வியை எவ்வளவு மட்டிலும் எவ்விதமாகவும் மிகச் சிறப்பாக கற்பிக்கக் கூடுமென்பது சம்பந்தப்பட்டமட்டில்தான், நாங்கள் மத்தியதரக் கல்வியைப் பற்றி சொல்லியிருக்கிறோம். இது சம்பந்தமாய் விசேஷ ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கிறது. இது விஷயமாய் ஏற்பட்ட அபிப்பிராயபேதங்கள் காரணமாக தொழிற்கல்வி போதிக்கும்

பாடசாலையென்றும், விவசாய சம்பந்தமான மூலாதார விஷயங்களை போதிப்பதைப் பாடமுறையில் சேர்த்திருக்கும் சாதாரண கிராம மத்தியதரப் பாடசாலையென்றும் முற்றிலும் வெவ்வேறான இரண்டு வகைப் பாடசாலைகள் ஏற்பட்டிருக்கின்றன. முதல் சொன்ன மாதிரியைச் சேர்ந்த பாடசாலைகள் பம்பாயில் விசேஷமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மற்றொரு வகையைச் சேர்ந்த பாடசாலையை ஏற்படுத்தும் விஷயத்தில் பஞ்சாப் முதன்மையாய் இருந்திருக்கிறது.

பூனாவுக்குச் சமீபத்தில் லோனி என்னும் இடத்திலே ஏற்படுத்தப்பட்டிருக்கும் மராத்தி அக்கிரிகல்சுரல் ஸ்கூல் என்னும் விவசாய பாடசாலையானது தொழிற்கல்வி போதிக்கும் வகையைச் சேர்ந்த பாடசாலையாகும். இந்தப் பாடசாலையில் ஐம்பது பிள்ளைகள் மாத்திரமே சேரக்கூடும். மேலும், அதில் யாதொரு பிள்ளை சேர விரும்பினால், அவன் பயிரிடும் வகுப்பையோ நிலத்துக்குடையவர்களின் வகுப்பையோ சேர்ந்தவனாயிருக்கவேண்டுமென்றும், அவன் நான்காவது மராத்தி வகுப்பு வரையில் படித்து தன்னுடைய கல்வியைப் பூர்த்திசெய்திருக்க வேண்டுமென்றும், அவன் பதினான்கு வயதுக்கு மேற்பட்டவனாகவும் பதினேழு வயதுக்குட்பட்டவனாகவும் இருக்கவேண்டுமென்றும், யாதொரு கவர்ன்மெண்ட் இலாகாவில் வேலை செய்யும் நோக்கமில்லாமல் தன்னுடைய சொந்த நிலத்திலேயே வேலை செய்யத் தன்னைப் பழக்கிக்கொள்ளும் நோக்கத்துடன் அந்தப் பாடசாலையில் அவன் சேரவேண்டுமென்றும் யோக்கியதாம்சங்கள் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. மேற்படி பாடசாலையில் இரண்டு வருஷகாலம் போதனை செய்யப்படுகிறது. மேலும், சித்தாந்த ரீதியாகவும் அனுஷ்டான ரீதியாகவும் அங்கே சுதேச பாஷையில் போதனை செய்யப்படுகிறது. அந்த பாடசாலையைச் சேர்ந்தாற்போல் ஏற்படுத்தியிருக்கும் இருபத்திரண்டு ஏகரா விஸ்தீர்ணமுள்ள பண்ணையில் தினந்தோறும் அனுஷ்டான ரீதியாய் மூன்று மணிநேரம் வேலை செய்யப்படுகிறது. மேலும், மேற்படி விஸ்தீர்ணம் முழுவதிலும் அந்த பாடசாலையைச் சேர்ந்த பிள்ளைகளைக்கொண்டே வேலை நடத்தப்படுகிறது. ஒவ்வொரு பிள்ளையும் அந்த பாடசாலையில் சேர்ந்த இரண்டாவது வருஷத்தில் சுமார் கால் ஏகரா விஸ்தீர்ணமுள்ள பூமியில் சாகுபடி செய்வதற்கும் மாசூல் அறுவடை செய்வதற்கும் உத்தரவாதியாக்கப்படுகிறான். மேலும், அவன் அன்றாடம் செய்துவரும் வேலையைப்பற்றி தினசரி குறிப்புப் புத்தகத்தில் எழுதிவரவேண்டியவனாகவும், சாகுபடி வரவு செலவுக் கணக்கைக் குறித்துவைக்கவேண்டியவனாகவும் இருக்கிறான். வருஷத்தில் புஞ்சைப் பயிர் ஒன்றும் தோட்டக்கால் பயிர் ஒன்றுமாக இரண்டு போகங்கள் சாகுபடி செய்யப்படுகின்றன. கறவை மாடுகளையும் பண்ணையில் வேலை செய்யும் எருதுகளையும் பார்த்துக்கொள்ளும் பொறுப்பு மேற்படி பிள்ளைகளிடத்திலேயே விடப்பட்டிருக்கிறது. அந்த பாடசாலையில் ஒரு தொழிற்சாலையும் ஒரு ஆய்ல் என்ஜினும் சக்தியைக்கொண்டு இயக்கப்படும் பண்ணை சம்பந்தமான இயந்திரங்களும் இருக்கின்றன. மேற்படி தொழிற்சாலையில் பிள்ளைகள் கம்மிய வேலையும் தச்சு வேலையும் கற்றுக்கொள்

ளுகிறார்கள். மேலும், ஷ்டீ ஆய்ல் என்ஜினைக்கொண்டும் யந்திரங்களைக் கொண்டும் பிள்ளைகளே வேலை நடத்திவருகிறார்கள். அக்கம் பக்கத்தில் சாகுபடியாயிருக்கும் வயல்களை வாரத்துக்கொருமுறை பிள்ளைகள் போய்ப் பார்க்கிறார்கள். மேலும், அவர்கள் பாடசாலையில் சேர்ந்த இரண்டாவது வருஷத்தில் ராஜதானி முழுவதும் விஸ்தாரமாய்ப் பிரயாணம் செய்யும்படி அவர்களை அழைத்துக்கொண்டு போகிறார்கள். இதில், ஒரு விஷயத்தை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். போதனை பெறும் கால முழுவதும் மாணாக்கன் பாடசாலையில் இருந்தால், அவனிடத்தில் எவ்வித கட்டணமும் வாங்காமல் இலவசமாய் இந்த கல்வி கற்பிக்கப்படுகிறது. ஆனால், அவ்வப்போது நேரிடும் செலவுகளுக்காக அவன் ஒரு சிறு தொகையை மாத்திரம் கட்டவேண்டியிருக்கிறது. இப்போது பம்பாய் ராஜதானியில் இம்மாதிரியாய் ஆறு பாடசாலைகள் இருக்கின்றன. ஆனால், இதர மாகாணங்களில் இந்த முறை நாளது வரையில் எவ்வித அபிவிருத்தியும் அடையவேயில்லை.

பஞ்சாபில் ஏற்படுத்தியிருக்கும் மாதிரியைச் சேர்ந்த பாடசாலைகளில், விவசாய சம்பந்தமான மூலாதார விஷயங்களைக் கற்பிப்பது சாதாரண சுதேச பாஷை மத்தியதர பாடசாலைகளின் பாடக்கிரமத்தில் பிள்ளைகள் இஷ்டப்பட்டால் படிக்கக்கூடிய பாடமாக சேர்க்கப்பட்டிருக்கிறது. 1923-ம்வருஷத்தில் வெளியிடப்பட்ட ஒரு சுற்றுத்தரவில் அடியிற்கண்டபடி எழுதப்பட்டிருக்கிறது: "கிராமப் பிரதேசங்களிலுள்ள மத்தியதர பாடசாலைகளின் பாடக்கிரமத்தில் பிள்ளைகளுக்கு விவசாய சம்பந்தமான பயிற்சி கொடுப்பதையும் சேர்த்து அதை விரிவாக்கி, பிள்ளைகளைச் சுற்றியிருக்கும் நிலைமைகளுக்கு அதிக பொருத்தமாயிருக்கும்படி செய்வதே லட்சியமாகும். மேலும், விவசாயத்தைப் பிள்ளைகளின் மனத்தை ஒழுங்குபடுத்தி பயிற்சி செயவிப்பதற்குரிய சாதனமாகவும், இந்த பாடசாலைகளில் பொதுவாய்க் கற்பிக்கப்படும் பாடங்களுக்கு முக்கியமான துணைக்கருவியாகவும் உபயோகிப்பதே இதன் நோக்கம்."

இந்த ஏற்பாட்டின்படி வகுப்புகள் கூடும் அறையில் போதிக்கப்படும் விஷயத்தை வயல்களில் சகல விவசாய முறைகளிலும் அனுஷ்டான ரீதியாய் வேலை செய்து காட்டி விளக்குவதுடன் கூட, அதிலுள்ள குறைவும் பூர்த்திசெய்யப்படுகிறது. நூதன முறையை முதலில் அமுலுக்குக் கொண்டுவந்த பாடசாலைகளுடன் இது காரியத்துக்காக சுமார் மூன்று ஏகரா விஸ்தீர்ணமுள்ள பண்ணைகள் சேர்க்கப்பட்டன. ஆனால், திரவிய சம்பந்தமாய் ஏற்பட்ட கஷ்டம் காரணமாக அப்படிப்பட்ட பண்ணைகளுக்குப் பதிலாய் அரை ஏகரா விஸ்தீர்ணம் முதல் ஒரு ஏகரா விஸ்தீர்ணம் வரையிலுள்ள பாடசாலைத் தோட்டங்கள் ஏற்படுத்தும் முறை 1923-ம்வருஷத்தில் அனுசரிக்கப்பட்டது. பஞ்சாபிலுள்ள சுதேச பாஷை மத்தியதர பாடசாலையிலுள்ள நான்கு வகுப்புகளில் ஒவ்வொரு வகுப்பும் வாரத்தில் ஆறு கால அளவுகள் இந்த முறைப்படி போதனை பெற்றுவருகிறது. பண்ணைகளிலிருக்கும் எருதுகளைப் பார்த்துக்கொள்ளும் வேலையைத் தவிர பண்ணைகளிலும் தோட்டங்களிலும் செய்ய வேண்டிய வேலை

யெல்லாம் பிள்ளைகளே செய்துவருகிறார்கள். மேலும், அனேக பண்ணைகளுக்கும் தோட்டங்களுக்கும் பிடிக்கும் செலவை அவைகளி லிருந்து கிடைக்கும் வரும்படியைக் கொண்டே செய்வது சாத்தியமா யிருப்பது மாத்திரமே யல்லாமல், அந்த வரும்படியிலிருந்து வருஷவா ரியில் அவைகளுக்கு மிச்சமாக ஒரு தொகையும் கிற்கிறதென்பதைக் கவனிப்பது ஸ்வாரசியமாயிருக்கும். ஜாக்கிரதையாய்த் தேர்ந்தெடுக் கப்பட்ட பயிற்சி பெற்ற உபாத்தியாயர்களே இந்த பாடசாலை களில் போதனை செய்துவருகிறார்கள். இந்த உபாத்தியாயர்கள் முதலில் சாதாரண உயர்தர சுதேச பாஷைப் பயிற்சி முறையில் தேறினவர்களாகவும், பிறகு லயால்பூர் விவசாயக் கலாசாலையில் விவ சாய சம்பந்தமாய்ப் பிரத்தியேகமான ஒரு முறைப்படி பூர்த்தியாக பயிற்சி பெற்றவர்களாகவும் இருக்கிறார்கள். இந்த வேலைகளைப் பொதுவாய் மேற்பார்வையிடும் விஷயமானது வித்தியா இலாகா வைச் சேர்ந்தவராய் விவசாய சம்பந்தமான பயிற்சி விஷயமாக ஆலோசனை சொல்லும் ஒரு உத்தியோகஸ்தரிடத்தில் ஒப்புவிக்கப் பட்டிருக்கிறது. அதனால், விவசாய இலாகாவுக்கும் வித்தியா இலா காவுக்கும் இன்னொரு சம்பந்தமும் ஏற்பட்டிருக்கிறது. மேற்படி உத்தியோகஸ்தரின் ஆபிஸ் தலைமை ஸ்தானம் லயாலபூர் விவசாயக் கலாசாலையில இருக்கிறது. நாங்கள் பஞ்சாபைப் போய்ப் பார்த் தபோது, அங்கே இம்மாதிரியான 66 பாடசாலைகள் இருந்தன. அவற்றில் 26 பாடசாலைகளுடன் பண்ணைகளும் 40 பாடசாலைக ளுடன் தோட்டங்களும் சேர்க்கப்பட்டிருந்தன. இந்த தொகை யை 1927–28-ம் வருஷத்தில் 121 வரையில் உயர்த்தக்கூடுமென்றும், அவைகளில் 64 பாடசாலைகளுடன் பண்ணைகளையும் மற்றவைகளு டன் தோட்டங்களையும் சேர்க்கக்கூடுமென்றும் எதிர்பார்க்கப்பட் டது. பஞ்சாபில் அனுசரிக்கப்பட்ட மாதிரியானது ஐக்கிய மாகா ணத்தில் மிகவும் நெருக்கமாக பினபற்றப்பட்டது. அந்த மாகாணத் தில் இப்படிபபட்ட பாடசாலைகள் சுமார் இருபது இப்போது இருக் கின்றன அல்லது சீக்கிரத்தில் உண்டாகும். பம்பாயில் இந்த மாதிரியை மிகவும் ஒத்தவைகளாயுள்ள 'அக்ரிகல்சுரல் பயஸ்' ஸ்கூல்ஸ் என்னும் விவசாயத்தில் விருப்பத்தை உண்டாக்கும் பாட சாலைகள் என்று சொல்லப்படும் பாடசாலைகள் நாற்பத்துமூன்று இருக்கின்றன.

கிராமங்களிலுள்ள பிள்ளைகளுக்குக் கல்வி கற்பிப்பதைக் குறித்த எந்த ஏற்பாட்டுக்காக பிடிக்கும் செலவைக் கவர்ன்மென்டார் செய்துவருகிறார்களோ அந்த ஏற்பாட்டில் பம்பாயிலிருக்கும் மாதிரி யான பாடசாலைகள் ஏற்படுத்தப்படக்கூடாதென்று நாங்கள் மிக வும் ஜாக்கிரதையாய் ஆலோசனை செய்த பிறகு முடிவுக்கு வந்தோம். அப்படிப்பட்ட பாடசாலைகள் வேண்டுமென்று ஜனங்கள் விரும்பிக் கேட்கிறார்களென்பதற்குச் சாட்சியம் எதுவும் இல்லை. அவை கல்வி முறையில் செயற்கையாய்ச் சேர்க்கப்பட்டவைகளாக எங்களுக்குத் தோற்றுகிறதேயொழிய எவ்விதத்திலும் அம்முறை யின் அபிவிருத்தி காரணமாக இயற்கையாய் ஏற்பட்டவைகளென்று எங்களுக்குத் தோற்றவில்லை. அவைகளைப் பராமரித்து வருவதற்கு செலவு அதிகமாய்ப் பிடிப்பதுடன், அவைகளினால் எவ்வித பலனும்

உண்டாவதாக தெரியவில்லை. அந்த பாடசாலைகளுக்குப் போகும் பிள்ளைகளுக்கு, உயர்தர கல்விச்சாலையிலும் கலாசாலையிலும் வேண்டியிருக்கும் விஷயங்களில் போதனை செய்யப்படுவதில்லை. முன்னுக்கு வரக்கூடியவனுயிருக்கும் ஒரு பையனுடைய பிற்கால வாழ்க்கை நிலைமை இன்னதாயிருக்கவேண்டுமென்று அவனுக்குப் பதின்மூன்று அல்லது பதினுன்கு வயது ஆவதற்குள்ளாகவே அவனுடைய பெற்ருேர் சில விசேஷ சந்தர்ப்பங்களிலதான் நிர்ணயிக்க இஷ்டப்படுகிருர்கள். பம்பாயிலுள்ள மாதிரியைச் சேர்ந்த பாடசாலைகளை ஏற்படுத்துவதென்ருல், பிற்காலத்தில் நிலத்தில் வேலை செய்ய உத்தேசிக்கப்பட்ட பிள்ளைகளைப் பயிற்சி செய்விப்பதற்கு சாதாரணமாய்ப் பிடிப்பதைவிட அதிக செலவு பிடிக்கக்கூடிய ஒரு ஸ்தாபனத்தை ஏற்படுத்துவதென்றே அர்த்தமாகும்.

ஆனுல், பஞ்சாபிலுள்ள மாதிரியைச் சேர்ந்த பாடசாலைகளை ஏற்படுத்தும்படி சிபாரிசு செய்வதற்கு அனேக காரணங்கள் இருப்பதாக நாங்கள் அபிப்பிராயப்படுகிருேம். கிராமங்களிலுள்ள மத்தியதர பாடசாலைகளில் விவசாய சம்பந்தமான மூலாதார விஷயங்களை போதிக்கும் இந்த முறையானது போதுமான அளவுக்கு நீடித்த காலம் அமுலில் இருந்துவராததால், அதனுல் இன்ன நன்மைகள் ஏற்படுமென்று முடிவு கூறுவது சாத்தியப்படாதென்பது வாஸ்தவமே. இந்த முறைப்படி படித்து வெளியேறும் பிள்ளைகளில் பெரும்பான்மையோர் தங்களுடைய சொந்த நிலத்தில் பயிர் செய்வதைவிட உபாத்தியாயர்களாகவோ கிராமக் கர்ணங்களாகவோ வர இஷ்டப்படக்கூடும். அந்தப்படியே நேரிடுவதாக பம்பாயில் எங்களுக்குச் சொல்லப்பட்டது. ஆனுல், அந்தப்படியே நேரிட்டாலுங்கூட, விவசாய சம்பந்தமாய் அவர்கள் அடைந்திருக்கும் பயிற்சியானது நாட்டுப்புறங்களில் உபயோகப்படாமல் வீண் போகாது. மேலும், மேலேகண்ட உத்தியோகங்களை ஏற்றுக் கொண்டவர்கள் போக எத்தனையோ பேர் விவசாயத்தைத் தங்களுடைய தொழிலாக ஏற்றுக்கொள்ள சித்தமாயிருப்பார்கள். இதற்கிடையில், வகுப்புகள் நாளதுவரையில் சித்திகரமாய் வேலை செய்து வந்திருக்கின்றன என்பதற்கும், தொழில் முறை கற்பிக்கப்படும் மாதிரியைச் சேர்ந்த பாடசாலைகளைவிட இம்மாதிரியான பாடசாலைகளை ஜனங்கள் அதிகமாய் விரும்புகிருர்களென்பதற்கும் சந்தேகமில்லை. இது விஷயமாய் முடிவாக இன்ன காரியம் நடத்தவேண்டுமென்பதைப்பற்றி கிட்டத்தட்ட சொல்ல முடியாதிருந்தபோதிலும், கிராமப் பிரதேசங்களிலுள்ள மத்தியதர பாடசாலைகளில் செய்யப்படும் போதனையை அந்த பிரதேசங்களைச் சுற்றியிருக்கும் நிலைமைகளுக்கேற்றபடி சம்பந்தப்படுத்திக்கொள்ளும் பிரசினையை இந்த வழியில் வேலை செய்துதான் உள்ளபடி தீர்த்துக்கொள்ளக் கூடுமென்று எங்களுக்குத் தோற்றுகிறது. உயர்தர பாடசாலைகளில் விவசாய சம்பந்தமாய்ச் செய்யப்படும் போதனையைக் குறித்தும் மேலேகண்ட மாதிரியாகவே சொல்லவேண்டியிருக்கிறது. இந்த பாடசாலைகளில் கிராமப் பிரதேசங்களிலிருந்து பெருந்தொகையான பிள்ளைகள் வந்துசேர்ந்திருந்து அந்த பாடசாலைகளில் பண்ணையையோ தோட்டத்தையோ ஏற்படுத்துவதற்குச் சௌகரியங்கள்

இருக்கிறபட்சத்திலே, பஞ்சாபிலுள்ள மாதிரியைச் சேர்ந்த மத்திய தர பாடசாலைகளில் இப்போது போதிக்கப்பட்டுவரும் முறைப்படியும் ஆனால் அதைக்காட்டிலும் சிறிது உயர்தரமான ரீதியாகவும் விவசாய சம்பந்தமான மூலாதார விஷயங்களில் அநுஷ்டானத்தை ஒட்டியும் சித்தாந்தத்தை ஒட்டியும் சேர்ந்தாற்போல் போதித்து வருவதற்கான முறையைப் பாடக்கிரமத்துடன் சேர்ப்பதனால் நல்ல பலன் ஏற்படக்கூடுமென்று நாங்கள் நம்புகிறோம்.

கிராமக் கைத்தொழில்களைப்பற்றி நாங்கள் எழுதியிருப்பதில், நவீன முறைகளை அமுலுக்குக் கொண்டுவருவது முக்கியமென்று வற்புறுத்திச் சொல்லியிருக்கிறோம். சாஸ்திரக் கல்வி போதிக்கப்படும் பற்பல ஸ்தாபனங்களிலும் அநுஷ்டானத்தில் பிரயோகப்படத்தக்க உயர்தரமான சாஸ்திரங்களைக் கற்பிப்பதற்கு ஏற்பாடு செய்கிறபட்சத்திலே, மேற்கண்டபடி நவீன முறைகளை அமுலுக்குக் கொண்டுவருவது மிகவும் சுலபமாயிருக்கும்.

விவசாயக் கலாசாலைகள் சர்வகலாசாலைகளுடன் சம்பந்தப்படுகிறமட்டிலும் சர்வகலாசாலைகள் காரணமாக கிராம அபிவிருத்தியில் ஏற்படும் மாறுதலை அநுசரித்தமட்டிலுந்தான் நாங்கள் சர்வகலாசாலைகளைப்பற்றி விவகரித்திருக்கிறோம். சாத்தியப்படுகிற இடங்களிலெல்லாம், விவசாயக் கலாசாலையைச் சர்வகலாசாலையுடன் சேர்க்கும் கொள்கையை நாங்கள் அங்கீகரிக்கிறோம். இனி விவசாயக் கலாசாலைகளுக்கும் சர்வகலாசாலைகளுக்கும் அதிக நெருங்கிய சம்பந்தம் ஏற்படுத்தவேண்டுமென்று நாங்கள் உத்தேசிக்கிறோம். மேலும், இப்படிப்பட்ட சம்பந்தம் ஏற்படுத்துவதற்கு பட்டம் பெறும் காரியத்துக்காக விவசாயக் கலாசாலையை யாதொரு சர்வகலாசாலையுடன் இணைப்பது அவசியமாயிராவிட்டபோதிலும், அந்தப்படி இணைப்பதனால் அப்படிப்பட்ட சம்பந்தம் அதிகமாய் ஏற்படக்கூடுமென்பதற்குச் சந்தேகமில்லை.

விவசாய சம்பந்தமான அபிவிருத்தி விஷயமாய்க் கவனிக்கும்போது, இனிமேல் பரிபாலன கர்த்தர்களாகவும் சிற்ப சாஸ்திர பண்டிதர்களாகவும் ஆராய்ச்சி வேலை செய்பவர்களாகவும் ஏற்படக்கூடியவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் விஷயத்தில் சர்வகலாசாலைகள் செய்யவேண்டிய வேலையின் முக்கியத்தைக் குறித்து நாங்கள் வற்புறுத்திச் சொல்லவேண்டியதில்லை. ஆயினும், தலைமை வகிப்பது சம்பந்தமாகவும் ஊழியம் செய்வது சம்பந்தமாகவுமுள்ள லட்சியங்களைக் குறித்து கிராமக் குடிஜனங்களுக்குப் போதிப்பது அவசரமாகவும் அவசியமாகவும் செய்யவேண்டிய காரியமென்பதைப்பற்றி மாத்திரம் நாங்கள் இங்கே சொல்லவேண்டியிருக்கிறது. இந்த நோக்கம் நிறைவேறுவதற்குச் சிறந்த வகையில் உதவி செய்ய சர்வகலாசாலைகளுக்குச் சக்தி இருக்கிறதென்று நாங்கள் திடமாய் நம்புவதை ஸ்பஷ்டமாய் எடுத்துச்சொல்ல விரும்புகிறோம். தங்களுடன் இருப்பவர்களுடைய க்ஷேமத்துக்காகப் பாடுபடும் பொதுஜன ஊக்கத்தையும் உணர்ச்சியையும் மாணுக்கர்களிடத்தில் விருத்திசெய்வது சர்வகலாசாலைகள் செய்யவேண்டிய காரியங்களில் மிகச் சிறந்த காரியமாகும். இந்த ஊக்கமும் உணர்ச்சியும் மாணுக்கர்களிடத்தில்

ஏற்படுகிற பட்சத்திலே, அவர்கள் உலக வாழ்க்கையில் ஈடுபடும் போது எந்த ஜனசமூகத்தில் கலந்து வாழவேண்டியிருக்கிறதோ அந்த ஜனசமூகத்தின் வாழக்கையை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் பூர்த்தியாகவும் தீவிரமாகவும் முயற்சி எடுத்துக்கொள்ளும்படி அவர்களுக்குத் தூண்டுதல் ஏற்படும். ஆனல், சர்வகலாசாலைகள் சாதாரணமாக ஜனத்தொகை அதிகமாயுள்ள பிரதான ஸ்தலங்களில் தான் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆகவே, சமூக ஊழியம் செய்ய விரும்புகிறவர்கள் முதலில் பட்டணங்களுக்குரிய பிரசினைகள் சம்பந்தமாய் வேலை செய்யவே சகஜமாய் விரும்புகிருர்கள். இந்தியாவிலுள்ள வாலிபர்களில் மிகச் சிறந்தவர்களாயிருக்கும் வாலிபர்கள் தங்களுடைய காலத்தையும் சிரத்தையையும் கிராமப் பிரதேசங்கள் விஷயமாய்ச் செலுத்தவேண்டுமென்று நாங்கள் பலமாக வற்புறுத்த விரும்புகிறோம். ஒரு தேசத்தின் பலமும் அதன் க்ஷேமத்துக்கு அடிப்படையாயுள்ள விஷயங்களும் முடிவாக அந்த தேசத்திலுள்ள விவசாயிகளின் வீட்டையும் வயல்களையுமே பொறுத்தவைகளாயிருக்கின்றன. கிராம சம்பந்தமான சமூகப் பிரசினைகளிலும் பொருளாதாரப் பிரசினைகளிலும் ஈடுபட்டு, கிராமக் குடிஜனங்களின் முன்னேற்றத்துக்காக ஏற்பட்டிருக்கும் இயக்கத்தைத் தலைமை வகித்து நடத்தத் தங்களைத் தகுதியுடையவர்களாகச் செய்துகொள்ளும்படி இந்திய சர்வகலாசாலைகளின் மாஜி அங்கத்தினர்கள், இப்போதைய அங்கத்தினர்கள் ஆகிய இருவகையாரையும் நாங்கள் கேட்டுக்கொள்ளுகிறோம். மிகவும் முக்கியமான அப்படிப்பட்ட விஷயங்களைக் குறித்து ஆராய்ச்சி செய்யும்படி தூண்டும் விஷயத்தில் சர்வகலாசாலைகளைச் சேர்ந்த அதிகாரிகளும் உபாத்தியாயர்களும் தங்களால் கூடியதையெல்லாம் செய்வார்களென்று நம்புகிறோம். அவ்வவ்விடத்திலுள்ள பொதுஜனங்களைத் தலைமை வகித்து நடத்தும் விஷயத்திலும் அவர்களுக்கு ஊழியம் செய்யும் விஷயத்திலும் சுயநலத்தைத் தேடாமல் தேசாபிமானத்துடன் உழைக்க சக்தி வாய்ந்தவர்களுக்கும் விருப்பமுள்ளவர்களுக்கும் இந்தியாவில் அபரிமிதமான சந்தர்ப்பங்கள் ஏற்பட்டிருக்கின்றன. கிராமப் பஞ்சாயத்துகள், லோகல் போர்டுகள் முதலிய சபைகளில் மெம்பர் ஸ்தானம் வகிப்பது, கூட்டுறவு இயக்க சம்பந்தமாகவும் வயதுவந்தவர்களுக்குக் கல்வி கற்பிக்கும் இயக்க சம்பந்தமாகவும் வேலை செய்வது, கிராமக் குடிஜனங்களின் க்ஷேமத்துக்கும் முன்னேற்றத்துக்கும் சம்பந்தப்பட்ட உத்தியோகப் பற்றில்லாத நபர்கள் சேர்ந்திருக்கும் சபைகள் வேலை செய்து வருவது ஆகிய இந்த துறைகளில் புத்திவன்மையுடையவர்களும் விருப்பமுள்ளவர்களும் விசேஷமாய்க் கலந்து வேலை செய்வதற்கு இடமிருக்கிறது. இப்படிப்பட்ட ஊழியமானது அரசாங்கத்துக்கு மிகவும் உபயோககரமாயிருக்கும். ஏனென்றால், குடியானவர்களின் க்ஷேமமும் சுகமும் பிரதேச ஊழியங்கள் குற்றமில்லாமலும் திறமையாகவும் செய்யப்படுவதைப் பெரும்பாலும் பொறுத்திருக்கின்றன. இந்தியாவின் சரித்திரத்தைப்போல் மிகவும் புராதனமான சரித்திரத்தை உடையவர்களாயிருக்கும் ஜனங்களுக்குள்ளும் பழக்கவழக்கங்களென்னும் விலங்குகளால் இறுகப் பிணைக்கப்பட்டிருக்கும் ஒரு சமூகத்திலும், பரந்த நோக்கத்தை உண்டுபண்ணும் கல்விச் செல்வத்தை அடைந்திருப்பவர்கள் விருப்பத்துடன் தன்னலத் தியாகம் செய்வத

னும் உற்சாகத்துடனும் ஊக்கக்குறைவின்றியும் வேலை செய்வதனுலுமே பல நூற்றுண்டுகளாக ஏற்பட்டிருக்கும் சுறுசுறுப்பின்மையானது ஒழிந்து சித்தி பெறக்கூடும்.

பூனு, கோயம்புத்தூர், லயால்பூர், நாகப்பூர், கான்பூர், மாண்டலே என்னும் இடங்களில் ஸ்தாபிக்கப்பட்டிருக்கும் விவசாயக் கலாசாலைகளில் உயர்தரமான விவசாயக் கல்வி கற்பிக்கப்படுகிறது. முதல் நான்கு கலாசாலைகள் ஒரு சர்வகலாசாலையுடன் சேர்க்கப்பட்டிருக்கின்றன. வங்காளத்திலும் பீஹார் - ஒரிஸ்ஸாவிலும் ஆஸ்ஸாமிலும் கலாசாலை இல்லை. இப்போதுள்ள கலாசாலைகளின் மாதிரியைப் பின்பற்றி வங்காளத்துக்காக டாக்கா என்னும் இடத்திலும் பீஹார் - ஒரிஸ்ஸாவிலுங்கூட விவசாயக் கலாசாலைகள் ஸ்தாபிக்க வேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

விவசாய இலாகாவிலும் மற்ற இலாகாக்களிலும் வேலையில் அமர்த்திக்கொள்வதற்காக மாணுக்கர்களைப் பயிற்சி செய்விப்பது அல்லது தங்களுடைய சொந்த நிலத்தையோ மற்றவர்களுடைய நிலத்தையோ நிருவாகம் செய்ய அவர்களுக்கு யோக்கியதை ஏற்படும்படி செய்வதே பொதுவாய் இந்த கலாசாலைகளின் நோக்கமாகும். யோக்கியதை பெற்றிருக்கும் மாணுக்கர்களில் மிகப் பெரும்பான்மையோர் நாளதுவரையில் விவசாய இலாகாக்களில் வேலைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கிறார்கள்.

விவசாயக்கல்வி சம்பந்தமான ஏற்பாடு முழுவதுக்கும் விவசாயக் கலாசாலைகளை உச்ச ஸ்தானத்திலுள்ள அங்கங்களாக நாங்கள் கருதுகிறோம். ஷை கலாசாலைகள் கிராமக் குடிஜனங்களின் கல்வியைக் குறித்த எல்லாப் பிரிவுகளிலும் அவைகளால் ஏற்படும் நன்மையை உணரும்படி செய்யவேண்டும். மேலும், அவைகளில் சேரும் ஒவ்வொரு மாணுக்கரும் தமக்குச் சக்தியும் அதைப் பிரயோகிக்கும் சந்தர்ப்பமும் வாய்க்கிற பட்சத்திலே, பட்டம் பெற்ற பின்பு பயிற்சி பெறுவதற்கும் அதற்குப் பிறகு சாஸ்திர சம்பந்தமாகவும் விவசாய சம்பந்தமாகவுமுள்ள துறைகளில் மிகவும் உயர்ந்த கௌரவம் அடைவதற்கும் இடமேற்படக்கூடிய வழியில் தாம் பிரவர்த்தித்திருப்பதை உணரும்படி அவரை உற்சாகப்படுத்தவேண்டும்.

விவசாயக் கலாசாலைகளில் பயிற்சி பெற்று நன்மை அடைய நல்ல யோக்கியதை பெற்றுள்ள மாணுக்கர்கள் கலாசாலைகளில் சேரும்படிச் செய்யும்பொருட்டு, அந்தந்த மாகாணத்திலுள்ள சர்வகலாசாலையில் சாஸ்திரக் கல்வி விஷயமாய் நடத்தப்படும் இன்டர்மீடியேட் பரீட்சையில் தேறியிருப்பதை ஷை கலாசாலைகளில் சேருவதற்கு வேண்டிய யோக்கியதாம்சமாக நிர்ணயிக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். இந்தப்படி செய்கிற பட்சத்திலே, எலிமென்டரி ஸைன்ஸ் என்னும் மூலாதார சாஸ்திர சம்பந்தமான போதனைக்குரிய பாடக்கிரமங்களை ஏற்படுத்தவேண்டிய அவசியம் ஷை கலாசாலைகளுக்கு இராமற் போய்விடும். கலாசாலைகளில் வந்து சேருவதற்கு முன்னமேயே மாணுக்கர்களுக்கு மேற்படி சாஸ்திர சம்பந்தமான தத்துவங்கள் நன்றாய்த் தெரிந்திருக்கவேண்டும். கலா

சாலைகளில சேர்த்துக்கொள்வதற்கு சாஸ்திர சம்பந்தமாய் இன்டர்மீடியேட் பரீட்சையில் தேறியிருப்பது அவசியமென்று நிர்ணயித்து விட்டால், விவசாயக் கலாசாலையில் மூன்று வருஷ பாடமுறை ஏற்படுத்துவது போதுமானதாகும்.

விவசாயக் கலாசாலைகளில் அனேகமாய் ஒரே மாதிரியாக இருக்கும் பொதுவான வழிகளை அனுசரித்தே பாடமுறைகள் தயார் செய்யப்பட்டிருக்கின்றன. அவை தகுதியாயிருப்பதாக எங்களுக்குத் தோற்றுகிறது. ஆயினும், விவசாய சம்பந்தமான பொருளாதார சாஸ்திரத்தைக் கற்பிப்பது விஷயமாய் அதிக கவனம் செலுத்த வேண்டுமென்றும், இவ்விஷயத்தைக் கற்பிக்கும் உபாத்தியாயர்களை வெகு ஜாக்கிரதையாய்த் தேர்ந்தெடுக்கவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். பூஸ்திதிகளின் நிர்வாகத்தைப்பற்றி கற்பிக்கும் விஷயத்திலும் முன்னிலும் அதிக கவனம் செலுத்தவேண்டும். ஆனால், மேலே சொன்ன மூன்று வருஷ பாடமுறையில கற்பிக்கவேண்டிய பாடங்களுடன் இவ்விஷயத்தையும் ஒன்றாகச் சேர்த்தால், கற்பிக்கவேண்டிய விஷயங்களின் தொகை சமாளிக்க முடியாதபடி அதிகமாய்ப் போகக்கூடும். ஆகவே, கலாசாலைகளில் படித்துத் தேறிய மாணாக்கர்கள் பூஸ்திதி நிர்வாக விஷயத்தில் அனுபவம் பெறுவதற்கான சந்தர்ப்பங்கள் அவர்களுக்கு வாய்க்கும்படி செய்வதற்குத் தங்களால் செய்யப்படக்கூடிய சிறந்த ஏற்பாடுகளை விவசாய இலாகா டைரெக்டர்கள் செய்யவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். தங்களுடைய சொந்த நிலத்திலோ இதரர்களுடைய நிலத்திலோ பயிரிட உத்தேசிக்கும் மாணாக்கர்களுக்கு இவ்வித அனுபவம் முக்கியமாக உபயோகமுள்ளதாயிருக்கும். சில கலாசாலைகளில் கற்பிக்கப்படும் இரண்டு வருஷ பாடமுறையில் விவசாயப் பொருளாதார சாஸ்திர சம்பந்தமாகவும் பூஸ்திதி நிர்வாக சம்பந்தமாகவும் கற்பிக்கும் விஷயத்தில் முன்னிலும் அதிக கவனம் செலுத்தவேண்டும்.

கலாசாலைகளில் போதிக்கப்படும் பலவகைப்பட்ட சுருக்கமான பாடமுறைகளையும் நாங்கள் மிகவும் முக்கியமாக கருதுகிறோம். அப்படிப்பட்ட பாடமுறைகளைக் கற்பிக்க கலாசாலைகளில் ஆரம்பிக்க வேண்டியதுமல்லாமல், அவைகளை ஏற்படுத்தும்படி மாணாக்கர்கள் கேட்கும்படி செய்யும் பொறுப்பைக் கலாசாலைகள் ஏற்றுக்கொள்ளவும் வேண்டும்.

விவசாயக் கலாசாலைகளில் பட்டம் பெற்றவர்கள் அனுஷ்டான ரீதியாய் வேலை செய்வதில் பெரும்பாலும் பலஹீனர்களாயிருக்கிறார்களென்று இகழ்ச்சியாய்ச் சொல்லப்படுகிறது. இதை நீக்கவேண்டுமானால், விவசாயப் பொருளாதார சாஸ்திர சம்பந்தமாகவும் பூஸ்திதி நிர்வாக சம்பந்தமாகவும் இப்போது கற்பிப்பதைக் காட்டிலும் அதிகமாக சில விஷயங்களைக் கற்பிப்பது அவசியமாயிருக்கிறது. பரீட்சையில் தேறிய மாணாக்கர்கள் ஸர்க்கார் ஊழியத்தில் சேர்ந்தாவது தங்களுடைய சொந்த நிலத்திலாவது தீவிரமாய் வேலை செய்ய ஆரம்பிப்பதற்குமுன் அனுஷ்டான ரீதியாய்ப் பின்னும் அனுபவம் பெறுவதற்கேற்ற சௌகரியங்களை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும்.

கலாசாலை சிப்பந்திகள் சம்பந்தப்பட்டமட்டில், ப்ரின்ஸிபால் என்னும் தலைமை உபாத்தியாயர் புருஷத்துவமுள்ளவராயிருப்பது மிகவும் முக்கியமென்று நாங்கள் கருதுகிறோம். ஆராய்ச்சி வேலையையும் போதனை வேலையையும் சேர்ந்தாற்போல் நடத்திவரும் ஒரு ஸ்தாபனத்தின் தலைவருக்குச் சில விசேஷ யோக்கியதாம்சங்கள் இருக்கவேண்டும். அந்த யோக்கியதாம்சங்களுக்குள் சாஸ்திர சம்பந்தமாய் உயர்தரமான ஞானம் எவ்வளவு முக்கியமோ அவ்வளவு பரிபாலன சக்தியும் விரிவான நோக்கமும் முக்கியமானவைகளாகும். கிடைக்கக்கூடியவர்களுக்குள் மிகவும் சிறந்தவரை இந்த வேலைக்குத் தேர்ந்தெடுக்கவேண்டும். ஒரு முறை ஒருவரை இந்த வேலைக்கு நியமித்துவிட்டால், அவரை இந்த வேலையிலேயே வைத்திருக்கவேண்டும். மேலும், விவசாய இலாகா டைரெக்டர் வேலையை அவர் இந்த வேலையிலிருப்பது காரணமாக இழக்கவேண்டி நேரிட்டால், அதற்காக அவருக்குப் பிரதிபலன் கொடுக்கவும் வேண்டும். எல்லா விவசாயக் கலாசாலைகளிலும், தமது முழு காலத்தையும் கலாசாலை வேலை சம்பந்தமாகவே செலுத்தக்கூடிய ப்ரின்ஸிபால் ஒருவர் இருக்கவேண்டும். அந்த கலாசாலைகளில் போதனை செய்யும் சிப்பந்திகளையும் ஜாக்கிர்தையாய்த் தேர்ந்தெடுக்கவேண்டும். விவசாய சம்பந்தமான ஊழிய வர்க்கங்களில் இருப்பவர்களை பரிபாலனப் பிரிவிலிருந்து ஆராய்ச்சி வேலை போதனை வேலை செய்யும் பிரிவுக்கும், ஆராய்ச்சி வேலை போதனை வேலை செய்யும் பிரிவிலிருந்து பரிபாலனப் பிரிவுக்கும் மாற்றுவதை ஊழியத்தில் அமர்த்திக் கொள்ளப்பட்ட ஆரம்ப வருஷங்களில் சாதாரணமாய் மட்டுப்படுத்த வேண்டும். இந்திய சர்வகலாசாலைகளில் சாஸ்திரக் கல்வியில் பிரசித்திபெற்ற பட்டதாரிகளை நியமிப்பதற்கு இடமிருக்கும்படியாக, கலாசாலை சிப்பந்திகளைத் தேர்ந்தெடுக்கும் விஷயத்தை விரிவுபடுத்தலாம். விவசாயக் கலாசாலைகளில் நடத்தப்படும் ஆராய்ச்சி சம்பந்தமான வேலைகளை போதனை செய்யும் வேலையிலிருந்து முற்றிலும் பிரித்துவிடவேண்டுமா என்னும் விஷயத்தைக்குறித்து நாங்கள் ஜாக்கிரதையாய் ஆலோசனை செய்தோம். அந்தப்படி ஆலோசனை செய்ததன் பயனாக, பிரிவுகளின் தலைமை அதிகாரிகள் அவரவர்களுக்குரிய விசேஷ பாடங்களில் போதனை செய்துவரும் முறையை நாங்கள் முற்றிலும் அங்கீகரிக்கிறோம். ஆராய்ச்சி வேலையையும் போதனை வேலையையும் அந்தப்படி ஒன்றாய்ச் சேர்த்து நடத்துவதனால், அவ்விரண்டு பிரிவுகளுக்கும் பரஸ்பரம் நன்மை ஏற்படுவதில் சந்தேகமில்லையென்பது எங்களுடைய அபிப்பிராயம்.

உயர்தர மாகாண ஊழிய வர்க்கங்களுக்கு நபர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு, அவர்கள் யாதொரு விவசாயக் கலாசாலையில் பட்டம் பெற்ற பிறகு பயிற்சி பெறுவதை முக்கியமான யோக்கியதாம்சமாக நிர்ணயிக்கவேண்டும். சாதாரணமாய்ப் பூஸாவில் இப்படிப்பட்ட பயிற்சியைச் சிறந்த முறையில் செய்விக்கலாம். யாதொரு விவசாயக் கலாசாலையைச் சேர்ந்த பட்டதாரிகளில் எவர்களாவது கவர்ன்மென்ட் ஊழியத்தைச் சேர்ந்த இதர பிரிவுகளில் சேர இஷ்டப்படுகிற பட்சத்திலே, விவசாய விஷயமாய்க் கொடுக்கப்பட்ட பட்டத்தையாவது டிப்ளோமா என்னும் யோக்கியதா பத்திரத்தையாவது,

ரெவினியு, நீர்ப்பாசனம், கூட்டுறவு இலாகாக்களைப் போன்ற இலாகாக்களில் உத்தியோகம் வகிப்பதற்கு யோக்கியதாம்சமாக கலைகள் சம்பந்தமாகவாகிலும் சாஸ்திர சம்பந்தமாகவாகிலும் கொடுக்கப் படும் பட்டத்துக்குச் சமானமாகக் கருதவேண்டும்.

## 14. கிராமக் கைத்தொழில்களும் கூலி வேலையும்.

பிரதான ரிபோர்ட்டின் 16-ம் அத்தியாயம்.

கிராமத்தில் உள்ளவர்கள் தங்களுடைய நிலைமையை விருத்தி செய்துகொள்வதற்குத் தங்களுடைய ஓய்வு நேரத்தை எவ்விதம் மிகப் பிரயோசனகரமாய் உபயோகிக்கலாமென்பது சிறிதுமட்டில் முக்கியமான பிரசினையாகும். விவசாயிகளுக்குக் கிடைக்கும் ஓய்வு நேரத்தின் அளவானது அவ்வவ்விடத்திலுள்ள விவசாய நிலைமைகளைப் பெரிதும் பொறுத்திருக்கிறது. ஆயினும், பொதுவாகச் சொல்லுவோமானால், மிகப் பெரும்பான்மையான விவசாயிகளுக்கு வருஷத்தில் குறைந்த பட்சம் இரண்டு மாத முதல் நான்கு மாதம் வரையிலாவது முற்றிலும் ஓய்வு இருப்பதாக வைத்துக்கொள்ளலாம். 1921-ம் வருஷத்தில் எடுத்த கானிஷுமாரி கணக்கின்படி, ப்ரிடிஷ் இந்தியாவிலே வேலை செய்யும் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்கு $10\frac{1}{2}$ வீதமுள்ளவர்கள்தான் தொழிற்சாலைகளில் வேலை செய்வது உட்பட ஏதாவது ஒரு கைத்தொழில் செய்வதில் அமர்ந்திருந்ததாக காட்டப்பட்டது. கைத்தொழில்கள் நடத்தப்படும் பிரதான இடங்களில் ஒன்றுகூட்டி நடத்தப்பட்ட பெரிய கைத்தொழில்களைத் தவிர, அரிசி குத்தும் யந்திரங்கள் - எண்ணெயாடும் யந்திரங்கள் - பஞ்சிலிருந்து கொட்டையைப் பிரித்தெடுக்கும் தொழில் முதலிய சிறிய கைத்தொழில்களில் சுமார் 2,50,000 ஜனங்கள்தான் அமர்ந்திருந்தார்கள். இந்த தொகையானது - விவசாய வேலையில் அமர்ந்திருக்கும் மொத்த ஜனத்தொகையில் நூற்றுக்குச் சற்றேறக்குறைய 0·03 வீதத்துக்குச் சமானமாகும். கிராமப் பிரதேசங்களில் நடக்கும் கைத்தொழில்களுக்குத் தேவையாயிருக்கும் தொழிலாளிகளின் தொகையைக் கவனிக்கும்போது, ஷை கைத்தொழில்கள் தற்காலத்தில் அவ்வளவு முக்கியமானவைகளாயிராத விஷயம் இதிலிருந்து தெரியவரும். ஆனால், ஷை கைத்தொழில்களைப் பொருளாதார விஷயம் இடம் கொடுக்கிறமட்டில் விருத்தி செய்கிற பட்சத்திலே, கிராமப் பிரதேசங்களில் உள்ளவர்களுக்கு ஓய்வு நேரத்தில் வேலை கொடுப்பதற்குச் சம்பந்தப்பட்ட பிரசினையை ஒருவாறு தீர்ப்பது சாத்தியமாகும்.

கிராமக் குடிஜனங்களை முன்னிலும் அதிகமாய் வேலையில் அமர்த்திக்கொள்வதற்கு இடம் இருக்கும்படியாக புதிய கைத்தொழில்களை ஏற்படுத்துவது விஷயமாய் எங்களுக்குப் பற்பல ஆலோசனைகள் தெரிவிக்கப்பட்டன. விவசாயக் கருவிகளை உள்ளூரிலேயே தயார்செய்யும் வேலையை விருத்தி செய்கிறபட்சத்திலே, இது விஷயமாய் விசேஷ பலன் ஏற்படக்கூடுமென்று எங்களுக்குத் தோற்றுகிறது. விவசாய இலாகாக்களைச் சேர்ந்த என்ஜினீரிங் பிரிவார் அப்படிப்பட்ட அபிவிருத்தி ஏற்படுவதற்குச் சிறந்த உதவி செய்யக் கூடும். கருவிகளைத் தயார்செய்யும் வேலையில் பயிற்சி பெற விரும்

பமுள்ள மாணுக்கர்கள் என்ஜினீரிங் பாடசாலைகளுக்காவது ரெயில்வே வொர்க்ஷாப்புகளுக்காவது விவசாய இலாகாக்களைச் சேர்ந்த வொர்க்ஷாப்புகளுக்காவது போய் வேலை கற்றுக்கொள்வது சாத்தியமாயிருக்கும்படியாக, அவர்களுக்கு ஸ்டைபெண்ட் என்னும் சகாய வர்த்தனை கொடுத்து அவர்களை உற்சாகப்படுத்தவேண்டும். விவசாய சம்பந்தமான யந்திரங்களில் ஏற்பட்டிருக்கும் அபிவிருத்திகளைப் பயன்படுத்திக்கொண்டு வேலை செய்ய விரும்பும் கருமார், தச்சர் போன்ற மற்றவர்களைக் காட்டிலும் அதிகமாய் முன்னேற்றம் அடையக்கூடிய கிராம சிற்பர்களைப் பயிற்சி செய்விப்பதற்காக இம் மாதிரியான சௌகரியங்கள் செய்துகொடுக்கவேண்டும். மூங்கிலுள்ள கூழ்போன்ற மிருதுவான வஸ்துவிலிருந்து காகிதம் செய்தல், எண்ணெய் வித்துக்களிலிருந்து எண்ணெய் பிழிந்து எடுக்கும் கைத்தொழில், கைத்தறி நெசவுத்தொழில், மண் பாத்திரங்கள் செய்யும் கைத்தொழில்---கயிறு செய்யும் கைத்தொழில், பட்டுப்பூச்சி வளர்த்தல், அரக்குச்சாயத் தொழில் ஆகிய இந்த கைத்தொழில்கள் எங்களுடைய கவனத்துக்குக் கொண்டுவரப்பட்ட கைத்தொழில்களில் சில கைத்தொழில்களாகும். பட்டுப்பூச்சி வளர்க்கும் தொழிலைக் குறித்து நாங்கள் ஒரு விஷயம் சொல்ல விரும்புகிறோம். விசேஷ போக வஸ்துக்களை உபயோகிப்பவர்களுக்குத் தேவையான அளவுக்கு உயர்தரமான இந்தியப் பட்டு தற்காலத்தில் கிடைத்துவந்தபோதிலும், செயற்கையான பட்டை உபயோகிப்பது அதிகரித்து வருவதனுல் இயற்கையான பட்டுக் கைத்தொழிலுக்குப் பிரமாதமாய் பாதகம் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. அரக்குச் சாயத் தொழிலால் பாதிக்கப்படும் சகல வியாபாரிகளையும் ஒன்றுசேர்ப்பதற்காக அந்தக் கைத்தொழில் விஷயமாய் ஒழுங்கான அமைப்பு ஏற்படுத்துவது அவசியமென்று தோற்றுகிறது. மேலும், நல்ல தரமான அரக்குச் சாயம் கிரமமாய் தவருமல் கிடைக்குமென்னும் உறுதி ஏற்படும்படி இது விஷயமாய்ப் பின்னும் ஆராய்ச்சி செய்வது அவசியமாயிருக்கிறது. அன்றியும், அரக்குச்சாயம் செய்யும் தொழிலினுல் லாபம் ஏற்படுமா என்னும் விஷயத்தைக் குறித்தும் விசாரணை செய்யவேண்டும்.

கோழி முதலிய வீட்டுப் பறவைகளை வளர்க்கும் தொழிலை விருத்தி செய்வதற்கு வசதிகள் இருக்கின்றன. பெரும்பான்மையான மாகாணங்களிலுள்ள விவசாய இலாகாக்கள் இந்தத் தொழில் விஷயமாய் அதிகமாக கவனம் செலுத்திவருவதை நோக்க நாங்கள் சந்தோஷப்படுகிறோம். இது விஷயமாய்ப் பல இடங்களில், முக்கியமாக ஐக்கிய மாகாணத்தில், செய்யப்பட்டுவரும் வேலையைக் கவனிக்கும்போது இந்த கைத்தொழில் விருத்தியடைவது சாத்தியப்படுமென்று தெரியவருகிறது.

கிராமக் கைத்தொழில்களைக் குறித்துப் பொதுவாய்ப் பேசும்போது, கிராமக் குடிஜனங்களுக்குப் புதிய கொள்கைகள் ஏற்படும்படிச் செய்வதும் வியாபார சம்பந்தமாய் அவர்களுக்குப் போதுமான மட்டில் போதனை செய்வதும் ஆலோசனை சொல்வதும் முக்கியமான தேவைகளென்று சொல்லலாம். கிராமக் குடிஜனங்களின்

நிலைமையை அபிவிருத்தி செய்வதற்கு கை கைத்தொழில்கள் மூல மாய் வாய்க்கும் சந்தர்ப்பங்கள் மிகவும் குறைவாயிருக்கின்றன. விவ சாயிகளுக்கு ஏற்படும் கஷ்டங்களை நிவர்த்திக்கவேண்டுமானால், அவர்களுடைய விவசாயத்தைப் பலப்படுத்தி பல வழிகளிலும் விருத்தி அடையும்படிச் செய்வதே முக்கியமான காரியமாகுமென்று ஒரு பொதுவான கோட்பாடு ஏற்படுத்தலாம்.

கிராமக் கைத்தொழில்கள் நாளாவர்த்தியில் அதிகரித்துக்கொண் டேவரும் போட்டியைச் சமாளித்து நிலைக்கவேண்டுமானால், அவைக ளைக் கூட்டுறவு முறைப்படி அபிவிருத்தி செய்வது அவசியமாகும். அப்படிப்பட்ட முறைப்படி அவைகளை ஒழுங்குபடுத்தி அமைக்கும் விஷயத்தைச் சகல மாகாணங்களிலுமுள்ள கூட்டுறவு இலாகாக்க ளும் கைத்தொழில் இலாகாக்களும் கவனிக்கவேண்டும். கவர்ன் மெண்டாரும் கை கைத்தொழில்களுக்கு ஒரு வழியில் உதவி செய்யக் கூடும். அதாவது, சீர்திருத்தமான யந்திரங்களை வாங்குவதற்காக சிற்பர்கள் சேர்ந்திருக்கும் கூட்டுறவு சங்கங்களுக்கு அவர்கள் சில விசேஷ சந்தர்ப்பங்களில் முன்பணம் கொடுத்து உதவலாம். குறிப் பிட்ட சிறு விஸ்தீர்ணங்களின் விளைபொருள்கள் விஷயமாய்ப் பிரவ ர்த்தித்துவரும் சிறிய உள்ளூர்த் தொழிற்சாலைகள் பெருகிக்கொண் டேவந்தால், உள்ளூரில் ஏற்பட்டிருக்கும் இந்த தொழிற்சாலைகளு டன் விவசாயிகளையும் விவசாயிகளின் மாசூலையும் சம்பந்தப்படுத்தும் விஷயத்தில் கூட்டுறவு இயக்கம் முக்கியமான உதவி செய்யக்கூடும். சிறிய கைத்தொழில்கள் தற்காலத்தில் விசேஷமாய் ஏற்பட்டிருக் கும் போட்டியைச் சமாளித்து நிற்கவேண்டுமானால், அவைகளைக் கூட்டுறவு முறைப்படி ஒழுங்குபடுத்தி சாஸ்திர சம்பந்தமான கல்வி பெறுவதற்காக கிராமக் குடிஜனங்களுக்குச் சௌகரியங்கள் ஏற்படுத்திக்கொடுக்கவேண்டும். இந்த வழிகளில்தான் அவைக ளுக்கு முக்கியமாய் உதவி செய்யக்கூடும். இன்னும் வெகுகாலம் வரையில், இந்த கைத்தொழில்களின் அபிவிருத்திக்காக வழிவகை கள் சொல்லவும், அவைகளுக்கு ஆலோசனை சொல்லி உதவி செய்ய வும கவர்ன்மெண்டார் தயாராயிருக்கவேண்டியவர்களாவார்கள். சில இடங்களில் ஒரு முதன்மையான கைத்தொழில் முயற்சியை நடத்துவதற்கு அவர்களே உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளவேண்டி வரும்.

போக்குவரவு சாதனங்கள் விஷயமாகவும் சக்தியை அபிவிருத்தி செய்வது விஷயமாகவும் தாங்கள் அனுசரித்துவரும் கொள்கை மூல மாகவும், சாஸ்திரக் கல்வி கற்பிப்பது மூலமாகவும், சரக்குகளை விற் பனை செய்வது சம்பந்தமான விவரங்களைச் சேகரிப்பது மூலமாகவும் பெரிய கைத்தொழில்களுக்கும் விவசாயத்துக்கும் உள்ள சம்பந் தத்தை பரஸ்பரம் ஒழுங்குபடுத்தும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் விசேஷ உதவி செய்யக்கூடும்.

சென்னை, பம்பாய், வங்காளம், பீஹார் - ஒரிஸ்ஸா பஞ்சாப், ஐக்கிய மாகாணம் ஆகிய இந்த மாகாணங்களில் கைத்தொழில் இலா காக்கள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. கிராமக் கைத்தொழில்களை மேற்பார்வையிடுவதும் அந்த இலாகாக்கள் செய்துவரவேண்டிய

வேலைகளில் ஒன்றாகும். சென்னையிலும் பீஹார்—ஒரிஸ்ஸா மாகாணத்திலும் கைத்தொழில்களுக்கு ராஜாங்க உதவி செய்வதைக் குறித்த ஆக்டுகளும், பஞ்சாபில் கைத்தொழில் சம்பந்தமாய்க் கடன் கொடுப்பதைக் குறித்த ஆக்டும் ஜாரி செய்யப்பட்டிருக்கின்றன. தனிநபர்கள் புதிய கைத்தொழில்கள் ஆரம்பிப்பதற்காக முயற்சி செய்கிறபட்சத்திலே, அவர்களுக்குச் சில நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி ஆக்டுகளின்படி மாகாண வருமானத்திலிருந்து உதவி செய்யக்கூடும். பொதுவாய்க் கைத்தொழில்களின் அபிவிருத்திக்கு உதவி செய்வதே இந்த ஆக்டுகளின் உத்தேசமாகும். மற்ற விஷயங்கள் சமமாயிருக்கிறபட்சத்திலே, விவசாயக் கைத்தொழில்களை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் முக்கியமாய்க் கவனம் செலுத்தப்படுமென்று நாங்கள் நம்புகிறோம். சில மாகாணங்களில், சிற்பர்களைப் பயிற்சி செய்விப்பதற்காக சாஸ்திரக் கல்வி போதிக்கும் ஸ்தாபனங்கள் ஏற்பட்டிருக்கின்றன. பொதுவாகவோ குறித்த ஒரு விஷயத்தைப்பற்றியோ இந்தப்படி கல்வி போதிப்பதைத்தான் நாங்கள் மிகவும் அதிகமாய் வற்புறுத்துகிறோம்.

கைத்தொழில் இலாகாக்கள் சித்திகரமாய் வேலை செய்யவேண்டுமானால், கைத்தொழில் இலாகா டைரெக்டரானவர் அனுபவம் வாய்ந்த பரிபாலன கர்த்தராயிருப்பது அவசியமாகும்.

"விவசாயத்தைத் தவிர வேறே யாதொரு வேலையிலும் அமர்ந்திராதவர்களின் சங்கியையானது நிலத்தை நன்றாய்ப் பயிரிடுவதற்கு வாஸ்தவத்தில் வேண்டியிருக்கும் நபர்களின் சங்கியையைக் காட்டிலும் மிகவும் அதிகமாயிருக்கிறது" என்று 1880-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட பஞ்ச விசாரணைக் கம்மிட்டியார் எழுதியிருக்கிறார்கள். விவசாய சம்பந்தமாய்ப் பார்க்கும்போது தொழிலாளிகளைப்பற்றிய பிரசினையானது-தங்களுடைய ஜீவனத்துக்காக நிலத்தையே நம்பியிருப்பவர்களின் தொகையைக் குறைக்கவேண்டுமென்று பஞ்ச விசாரணைக் கம்மிட்டியார் எழுதியபோது இருந்தபடியே இப்போதும் இருக்கிறது. இந்தியாவுக்குள்ளேயே ஜனங்கள் நிரந்தரமாய் இடம் விட்டு இடம் குடியேறுகிறபட்சத்தில், இந்த கஷ்டம் குறையக்கூடும். ஆனால், சில பருவங்களில் மட்டும் தொழிலாளிகள் விசேஷமாய் இதர இடங்களில் குடியேறுகிறார்களேயொழிய, எதிர்பார்க்கக்கூடிய அளவுக்கு அவர்கள் நிரந்தரமாய்க் குடியேறுவதில்லை. கூலிவேலை செய்பவர்கள் தாராளமாய் இடம் விட்டு இடம் போவதற்கு ராஜாங்கத்தார் உதவி புரியவேண்டுமென்றும், அது விஷயமாய் நிர்ப்பந்தங்கள் எவையேனும் ஏற்பட்டிருந்தால் அவைகளைக் கூடிய சீக்கிரத்தில் குறைத்துவிடவாவது ஒழித்துவிடவாவது வேண்டுமென்றும் நாங்கள் நினைக்கிறோம். சில பிரதேசங்களில் மலேரியா ஜுரம் காணுவது காரணமாகவாவது தண்ணீர் சப்ளை குறைவாயிருப்பது காரணமாகவாவது மேலேகண்டபடி குடியேறுவது தடைப்படுகிறது. அப்படிப்பட்ட நிலைமைகளைக் குறித்து ஆராய்ச்சி செய்து அவைகளைச் சீர்திருத்தவேண்டும். மேலும் குடியேறுவது சம்பந்தமாய் திட்டமான ஏற்பாடுகளை அமுலுக்குக் கொண்டுவரவேண்டும். இது சம்பந்தமாய் பர்மாவில் நடந்திருக்கும் விஷயத்தை இங்கே உதாரணமாய் எடுத்துக்காட்ட நாங்

கள் விரும்புகிறோம். அங்கே, ஜன நெருக்கமாயுள்ள பிரதேசங்களில் இருக்கும் பாமியர்கள் காடு நீக்கப்பட்ட நிலங்களிலாகிலும் முதல் தடவை தண்ணீர் பாய்ச்சப்பட்டுவரும் தரிசு நிலங்களிலாகிலும் குடியேறும்படி ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறது. குடியேறுவதற்காக ஏற்படுத்தப்பட்ட இந்த இடங்கள் கூட்டுறவு முறையை ஆதாரமாகக் கொண்டு ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. மேலும், இவைகளுக்குக் கவர்ன்மென்டாரால் கொடுக்கப்படும் சாதாரண தக்காவிக் கடன்களைக்கொண்டு அவைகளிலுள்ள சங்கங்கள் மூலமாய்ப் பண உதவி செய்யப்படுகிறது.

கடைசியாக, ஜனங்கள் வெளி தேசங்களுக்குப் போய்க் குடியேறுவதனால் நிலத்தின்மேலுள்ள ஜன நெருக்கத்தைக் குறைப்பதற்கான பிரசினையைக் குறித்து ஆலோசிக்கவேண்டியிருக்கிறது. ப்ரிடிஷ் ராஜ்ஜியத்தைச் சேர்ந்த உஷ்ணப் பிரதேசங்களிலும் ஏறக்குறைய அம்மாதிரியேயுள்ள பிரதேசங்களிலும் மாத்திரமே மேலே கண்டபடி குடியேறுவது சாத்தியப்படுமென்னும் விஷயத்தைப்பற்றி ஆலோசிக்கவேண்டியிருக்கிறது. இப்போது இந்தியத் தொழிலாளிகள் ஸிலோனுக்கும் ப்ரிடிஷ் மலேயாவுக்கும் அதிகமாய்ப் போகிறார்கள். ஆனால், இந்த பாகங்களில் போய் ஜனங்கள் குடியேறக்கூடிய முழு அளவுக்கும் வெகுசாய்க் குடியேறியாய்விட்டதாக சொல்லக்கூடும். ப்ரிடிஷ் மேற்கிந்தியத் தீவுகள், மோரீஸ், ப்ரிடிஷ் கயானா, பிஜி தீவுகள் ஆகிய இந்த நாடுகளுக்குங்கூட சில இந்தியர்கள் போய்க் குடியேறுகிறார்கள். ஆனால், மேற்படி நாடுகளில் ப்ரிடிஷ் கயானா ஒன்றில்தான் ஜனங்கள் விசேஷமாய்ப் போய் குடியேறுவதற்கு இடமிருப்பதாக தோற்றுகிறது. ப்ரிடிஷ் கயானாவுக்குப் போய் ஜனங்கள் குடியேறுவதற்கு உதவி செய்வதற்கான ஏற்பாடொன்று இப்போது ஆராய்ச்சி செய்யப்பட்டு வருகிறது. இந்த ஏற்பாட்டின் விஷயமாய்ப் பின்னும் பூராவாக ஆராய்ச்சி செய்வது விரும்பத்தக்கதாகும். ஏனென்றால், இருபது லட்ச ஜனங்களுக்கு அதிகமாகவாவது இப்போது வெளிநாடுகளில் வசித்துவரும் இந்தியர்களின் மொத்த ஜனத் தொகையைவிட அதிகமானவர்களாவது மேலேகண்ட குடியேற்ற நாட்டுக்குப் போய் வசிப்பதற்கு இடம் இருப்பதாக தோற்றுகிறது.

## 15. தோட்ட வேலையும் தோட்டப் பயிர்களும்.

*பிரதான ரிபோர்ட்டின் 17-ம் அத்தியாயம்.*

பழங்களையும் காய்கறிகளையும் பயிர் செய்யும் விஷயத்தை இரு வகையான நோக்கங்களைக்கொண்டு, அதாவது வீட்டு உபயோகத்துக்கு வேண்டியிருப்பவைகளைப் பெறுவது, விற்பனைக்காக உற்பத்தி செய்வது என்னும் நோக்கங்களைக்கொண்டு கவனிக்கலாம். எந்த வகையிலாவது ஒரு வகையில் காய்கறிகள் இந்தியருடைய வீட்டில் ஏறக்குறைய தினந்தோறும் உபயோகிக்கப்பட்டு வருகின்றன. மேலும், விலையின்றியோ சொற்ப விலைக்கோ பழங்கள் கிடைக்கிறபோதெல்லாம், அவைகளையும் ஜனங்கள் சாதாரணமாய் காய்கறிகளுடன் உபயோகித்து வருகிறார்கள். விற்பனைக்காக உற்பத்தி செய்யப்படும் பழவர்க்கங்களையும் காய்கறி வர்க்கங்களையும்

விருத்தி செய்வதற்கு அனுகூலமான சந்தர்ப்பங்களைப்பற்றி நாங்கள் எங்களுடைய ரிபோர்ட்டில் முக்கியமாய்ச் சொல்லியிருக்கிறோம். விற்பனை செய்வதற்காக ஷை வஸ்துக்களைப் பயிரிடுபவர்கள் வீட்டு உபயோகத்துக்காக அவைகளைப் பயிரிடுபவர்களைக் காட்டிலும் குறைவாயிருக்கிறார்கள். ஆகவே, பின் சொன்னவர்களைக் காட்டிலும் முன் சொன்னவர்களுக்கு விவசாய இலாகாக்கள் ஆலோசனை சொல்லியும் வழிகாட்டியும் அவர்களை மிகவும் சுலபமாய்த் திருப்பக்கூடுமென்றும், அவர்களால் எவையேனும் அபிவிருத்திகள் செய்யப்பட்டால் பின் சொன்னவர்கள் பழவர்க்கங்களையும் காய்கறிவர்க்கங்களையும் பயிரிடும் விஷயத்துக்கும் அந்த அபிவிருத்திகளினால் பிரயோசனம் ஏற்படுமென்றும் நாங்கள் எண்ணுகிறோம்.

உள்ளூரிலேயே விற்பனை செய்வதற்காக விலை சரசமாகவும் வருஷ முழுவதும் திறந்தலையான இடத்தில் பயிராகக் கூடியவைகளாகவுமுள்ள பழங்களை உற்பத்திசெய்து தம்முடைய வரும்படியை அதிகப்படுத்திக்கொள்ள முயற்சிக்கும் சொற்ப விவசாயிக்கு அந்தப்படி செய்துகொள்ள அதிக இடமிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. ஆயினும், ஜனங்கள் விசேஷமாய் நோட்டம் பார்த்து சரக்குகளை வாங்கும் பட்டணங்களிலுள்ள பெரிய மார்க்கெட்டுகளில் விற்பனை செய்வதற்காக பழங்களை உற்பத்தி செய்யும் விஷயத்தில் விசேஷமாய்ப் பயிற்சி பெற உத்தேசிக்கும் உற்பத்தி செய்பவர்களுக்குப் பிரமாதமான தடங்கல்கள் ஏற்பட்டு அவைகளை அவர் சமாளிக்கவேண்டியிருக்கிறது. வேண்டிய மூலதனம் சம்பாதிப்பது ஒரே பெரிய தடங்கலாக ஒரு வேளை இருக்கக்கூடும். அதிலும் முக்கியமாய் சொற்ப விவசாயி இந்தத் தொழிலில் சித்தி பெறவேண்டுமானால், தம்முடைய தோட்டம் ஒருமுறை பழம் கொடுக்க ஆரம்பித்துவிட்டால், அதையே அவர் தம்முடைய முக்கியமான வருமான ஆதாரமாக நம்பியிருக்கவேண்டுமென்று எங்களுக்குத் தெரிவிக்கப்பட்ட விவரங்களிலிருந்து தெரியவருகிறது. மேலும், கடையில் விற்பனையாகக்கூடிய உயர்தரமான பழங்களைச் சித்திகரமாய் உற்பத்தி செய்யவேண்டுமானால், பழவகைகளைப் பொறுக்கியெடுக்கும் விஷயத்திலும் செடிகளை நடும் விஷயத்திலும் கிளைகளைத் தறிக்கும் விஷயத்திலும் செடிகளின்மேல் மருந்துத்தண்ணீரைத் தூவும்விஷயத்திலும் சாமர்த்தியம் வேண்டியிருக்கிறது. ஆனால், சாதாரணமாய்ப் பயிரிடுபவருக்கு அப்படிப்பட்ட சாமர்த்தியம் இருப்பதில்லை. அன்றியும், அவர் சாதாரணமாய்த் தம்முடைய கைப்பற்று நிலத்தில் வசிப்பதில்லை. அதனால், அந்த கைப்பற்று நிலமானது நெருக்கமாய் ஒரே சவுக்கமாக அமைந்திருந்தபோதிலும், பழச்செடிகள் பயிராகும் சிறு விஸ்தீர்ணங்களைப் பாதுகாப்பது கஷ்டமாயிருக்கும். மேற்படி விஸ்தீர்ணங்கள் சாதாரணமாய் எங்கும் இருப்பதைப்போல் தனித்தனியான பல துண்டுகளாயிருந்தால், அவைகளைப் பாதுகாப்பது முற்றிலும் அசாத்தியமாகும். ஆகவே, கடையில் விற்பனை செயவதற்காக பழவர்க்கங்களைச் சித்திகரமாய் உற்பத்தி செய்யவேண்டுமானால், உற்பத்தி செய்பவர் வேண்டிய மூலதனம் உடையவராயிருப்பதுடன் பழச்செடிகளை வைத்து நிர்வகிக்கும் விஷயத்தில் சாமர்த்தியமுள்ளவராயும் இருக்கவேண்டும். மேலும், அவருடைய தோட்டமானது ஒரே தொகுதியாக நெருக்கமாய் அமைந்திருக்கவேண்டி

யதுமல்லாமல், பழம் பழுக்கும் பருவத்தில் அந்தப் பழங்களைக் காப்பாற்றும் பொருட்டு அவர் அந்த தோட்டத்திலேயே வசிக்கத் தயாராக இருக்கவும் வேண்டும். மேலும், தோட்டத்துக்குப் பாய்ச்சுவதற்கு வேண்டிய தண்ணீரும் எருவும் உடனே கிடைக்கக்கூடியவைகளாயிருக்கவேண்டும். அன்றியும், பழங்களைத் திருப்திகரமாய் விற்கக்கூடிய ஒரு கடையோடு அவர் சம்பந்தம் வைத்துக் கொள்ளவேண்டும்.

வியாபார நோக்கத்துடன் பழங்களை உற்பத்தி செய்பவர் தம்முடைய பழங்களை விற்பனை செய்வதற்காக முக்கியமாய்ப் பெரிய பட்டணங்களையே நாடவேண்டும். மேலும், பழங்களை ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோவது சம்பந்தமாகவும் விற்பனை செய்வது சம்பந்தமாகவும் ஏற்படக்கூடிய கஷ்டங்களையும் அவர் சமாளிக்கவேண்டியிருக்கிறது. பழங்கள் ரெயில்வே ஸ்டேஷனுக்குப் போய்ச் சேருவதற்குமுன், அவைகளைக் கொண்டுபோவது விஷயமாய் ஏற்படும் கஷ்டங்கள் முக்கியமாய் அதிகமாக இருக்கின்றன. பழங்களைச் சிப்பம் செய்யும் விஷயத்திலும் தகுதியான ஏனங்களை உபயோகிக்கும் விஷயத்திலும் சீர்திருத்தமான முறைகளை அனுசரிப்பதனால் மாத்திரமே மேற்படி கஷ்டங்களை நிவர்த்திக்கக்கூடும். விற்பனையைக் குறித்தமட்டில் சாதாரணமாய் ஒரு காரியஸ்தர் மூலமாகவே விற்பனை நடக்கிறது. பழங்களைக் குளிர்ச்சியான இடத்தில் சேர்த்துவைப்பதற்கான சௌகரியங்களும் ஓரிடத்தில் தவறினால் மற்றோரிடத்தில் விற்பதற்கான வசதிகளும் பொதுவாய் ஏற்படாதிருப்பது பழங்களைச் சித்திகரமாய் விற்பனை செய்வதற்குத் தடங்கலாக இருக்கிறது. உள்ளூர் தேவைக்கு வேண்டிய பழங்கள் உற்பத்தி செய்யப்படுகிற பிரதேசங்களில் ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்ட மார்க்கெட்டுகள் ஏற்பட்டிருந்தால், மொத்த விற்பனை செய்பவருக்கு அவைகளினால் விசேஷ நன்மை ஏற்படக்கூடும். முக்கியமாய் நல்ல ரகமான மாம்பழங்களைப்போல் சிரேஷ்டமான பழவகைகளுக்கு வெளிதேசங்களில் கிராக்கியிருக்கிறதா என்பதைக் கண்டறிந்து இந்த தேசத்திலேயே விற்பனை செய்வதுதான் இந்த தொழில் சீக்கிரத்தில் அபிவிருத்தி அடைவதற்குச் சிறந்த மார்க்கமென்று தோற்றுகிறது. நாங்கள் இங்கே எழுதியிருக்கும் விஷயங்கள் காய்கறி வர்க்கங்களுக்கு இன்னும் அதிகமாக பொருந்துகின்றன. ஏனென்றால், ஜனத்தொகையில் பெரும்பாலார் பழங்களைவிட காய்கறிகளை மிகவும் அதிகமாக வாங்குகிறார்களென்று சொல்லலாம். இப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், பழங்களை உற்பத்தி செய்வதைவிட விற்பனைக்கு வேண்டிய காய்கறிகளைத் தோட்டங்களில பயிர் செய்வதனால் அதிக லாபம் கிடைக்கக்கூடுமென்று எதிர் பார்ப்பதற்கு இடம் இருக்கிறது. புதிய பழங்கள் எவ்வளவுமட்டில் தேவையாயிருக்கிறதோ அதற்கு அதிகமாய் உற்பத்தியாகி மிகுந்துபோகிறபட்சத்திலே, அவைகளை ஒருவகை செய்வதற்கான சௌகரியங்களை ஏற்படுத்தும் விஷயமானது - வியாபார ரீதியாக பழம் உற்பத்தி செய்பவர்கள் வெகு முக்கியமாய்க் கவனிக்கவேண்டிய விஷயமாகிறது. பழங்களை இந்த தேசத்திலேயே விற்பனை செய்வது எவ்வளவோ முக்கியமான விஷயமாயிருக்கிறபடி

யால், இந்தியாவில் அவைகளைக் கொள்பவர்களில் பெரும்பாலா ருடைய விருப்பத்தைக் கண்டறிவது அவ்சியமாகும். ஆனால், மாம் பழச் சதையைப் போன்ற இரண்டொரு விசேஷ வகைப் பொருள் களை அன்னிய தேசங்களில் விற்கவும் முயற்சி செய்யலாம்.

பழங்கள் சம்பந்தமாகவும் காய்கறிகள் சம்பந்தமாகவும் முக்கிய மான ஆராய்ச்சி வேலை எவ்வளவோ செய்யவேண்டியிருக்கிறது. விவசாய இலாகாதார் இவ்விஷயமாய் விசேஷ கவனம் செலுத்தி வருகிறார்கள். சொற்ப விவசாயிகளின் நன்மையை உத்தேசித்து விவசாய இலாகாதார் தோட்டப்பயிர் சம்பந்தமான தங்களுடைய பிரிவுகளை அபிவிருத்தி செய்வது எவ்வளவுமட்டில் நியாயமாயிருக்கு மென்று அந்த இலாகாதார் தெரிந்துகொள்ளும்பொருட்டு, பழ வர்க்கங்களின் உற்பத்தியையும் காய்கறி வர்க்கங்களின் உற்பத்தி யையும் அதிகப்படுத்துவதனால் இவ்வளவு திரவிய லாபம் கிடைக்கக் கூடுமென்பதைக் கண்டறிவது ஆராய்ச்சி வேலை நடத்துவதைக் காட்டிலும் இன்னும் அவசரமாய்ச் செய்யவேண்டிய காரியமாகும். ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்குக் கொண்டுபோவதும் விற்பனை செய்வதும் அடிப்படையாய் நேரிடக்கூடிய கஷ்டங்களாகும். விற் பனை செய்வது சம்பந்தமாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் மாகாண உத் தியோகஸ்தர்கள் இந்த பிரசினைகளைப்பற்றி ஆராய்ச்சி செய்யும் வேலையை ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பழவர்க்கங்களின் உற்பத்தியையும் காய்கறி வகைகளின் உற்பத் தியையும் அதிகப்படுத்துவதனால் இவ்வளவு திரவிய லாபம் கிடைக் கக்கூடுமென்பதை இந்தப்படி கண்டறியும்போது, பூமியின் பற்பல நிலைமைகளுக்கும் சீதோஷ்ண நிலைமைகளுக்கும் மிகவும் தகுதியா யிருக்கும் பழவகைகள் இன்னவையென்றும் காய்கறி வகைகள் இன் னவையென்றும் கண்டறியும் உத்தேசத்துடன் விவசாய இலாகாக் கள் பரீட்சைகள் செய்து பார்க்கவேண்டுமென்று நாங்கள் ஆலோ சனை சொல்லுகிறோம். இந்தப்படி பரீட்சை செய்து பார்ப்பதனால் கிடைக்கும் விவரங்களை, பழவகைகளையு ட காய்கறிவகைகளையும் உற் பத்திசெய்ய ஆரம்பிக்க உத்தேசிப்பவர்கள் அவைகளினால் பிரயோ சனம் அடையக்கூடிய முறையில் எழுதிவைக்கவேண்டும். சிறிய பழச்செடிகளும் சீர்திருத்தமானவகைகளைச் சேர்ந்த காய்கறி வர்க்கங் களின் விதைகளும் அதிகமாக தேவையாயிருக்குமென்று தெரிய வந்தால், பொது ஜனங்களுக்கு நம்பகமான சரக்கு தவறாமல் கிடை க்கும்படி செய்வதற்கேற்ற ஏற்பாடுகளை விவசாய இலாகாக்கள் செய்யவேண்டும். லாபம் தரக்கூடிய வெளிநாட்டுச் செடிவகை களை இங்கே பயிரிடுவது எவ்வளவுமட்டில் சாத்தியப்படுமென்ப தைப்பற்றி ஆராய்ச்சி செய்தால், அதனாலும் நன்மை ஏற்படும். இளஞ்செடிகளை வளர்த்து வருபவர்களும் விதைகளை விற்பனை செய் பவர்களும் இப்போது இந்தியாவில் ஏற்பட்டு வருகிறார்கள். ஆனால், அவர்களை ஒரு வகுப்பாராக பாவித்து நோக்கும்போது, பழச்செடிகளையும் காய்கறி வர்க்கங்களின் விதைகளையும் தாங்க ளாகவே சொந்தத்தில் பொறுக்கி யெடுப்பதற்கு அவர்கள் இன்னும் தகுதியானவர்களாயில்லை. இந்த வழியில் தனிநபர்கள் சேர்ந்து

முயற்சி செய்வதை உற்சாகப்படுத்தவும் பலப்படுத்தவும் விவசாய இலாகாக்கள் தங்களாலான உபாயங்களையெல்லாம் அனுசரிக்க வேண்டும்.

முக்கியமாய் தேயிலை, காப்பி, ரப்பர் செடிகள் வைத்துப் பயிராக்கும் தோட்டப்பயிர் சம்பந்தமான கைத்தொழில்கள் நன்றாய் ஒழுங்குபடுத்தி அமைக்கப்பட்டிருக்கின்றன. மேலும், இந்தியத் தேயிலைச் சங்கம், தென்னிந்தியாவிலுள்ள தோட்டப்பயிர் செய்பவர்களின் ஐக்கிய சங்கம் ஆகிய இவ்விரண்டு சங்கங்களும் பரிசோதனை நடத்திப்பார்ப்பதற்கான இடங்களையும் ரஸாயன சோதனைச் சாலைகளையும் சொந்தமாய் ஏற்படுத்தி வைத்திருக்கின்றன. மேலும், அவை இந்தியா கவர்ன்மென்டைச் சேர்ந்த விவசாய இலாகாவுடனும் மாகாண விவசாய இலாகாக்களுடனும் நெருங்கிய சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கின்றன. அவைகள் செய்யும் சாஸ்திர சம்பந்தமான வேலை பிரயோசனகரமானதென்னும் விஷயத்தை ஒப்புக்கொள்ளவேண்டுமென்றும், விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி சபையில் அந்த சங்கங்களுக்குக் கூட்டாய்ப் பிரதிநிதித்துவம் கிடைக்கும்படியான ஏற்பாடுகளைச் செய்து அந்த சங்கங்களும் விவசாய இலாகாக்களும் ஒத்துழைக்கும்படி செய்யவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

## 16. விவரக்கணக்குகள்.

பிரதான ரிபோர்ட்டின் 18-ம் அத்தியாயம்

இந்தியா முழுவதுக்கும் ஒரே மாதிரியான விவசாய சம்பந்தமான விவரக்கணக்குகளைத் தொகுக்கும் வேலை 1884-ம் வருஷத்தில் ஆரம்பமாயிற்று. 1880-ம் வருஷத்தில் நியமிக்கப்பட்ட பஞ்ச விசாரணைக் கம்மிட்டியார் விவரக்கணக்குகள் தயார்செய்வதை விருத்திசெய்வது முக்கியமான விஷயமென்று அதைக் கவனிக்கும்படி எழுதியிருந்தார்கள் விவசாய இலாகாக்களின் ஆரம்ப முயற்சிகள் பெரும்பாலும் இந்த வேலை விஷயமாகவே செய்யப்பட்டுவந்தன.

விவசாய சம்பந்தமான விஷயங்களைக் குறித்து இந்தியா கவர்ன்மென்டாரால் பிரசித்தம் செய்யப்படும் விவரக்கணக்குகளில், (a) சாகுபடியைக்குறித்தும் மாசூல்களைக்குறித்தும், (b) கால்நடைகளைக்குறித்தும் கருவிகளைக்குறித்தும், (c) ஜனன மரண விவரக்கணக்குகளைக் குறித்தும், (d) திரவிய சம்பந்தமான ஆதாரங்களைக் குறித்தும் சொல்லப்பட்டிருக்கிறது.

இந்திய அக்ரிகல்சுரல் ஸ்டாடிஸ்டிக்ஸ் என்னும் விவசாய சம்பந்தமான விவரக்கணக்குகள் வருஷந்தோறும் இரண்டு சம்புடங்களாக பிரசுரிக்கப்படுகின்றன. அவைகளில் முதல புஸ்தகம் ப்ரிடிஷ் இந்தியாவுக்கும் இரண்டாவது புஸ்தகம் சில இந்திய சமஸ்தானங்களுக்கும் சம்பந்தப்படுகிறது. ஒவ்வொரு மாகாணம் அல்லது சமஸ்தானத்துக்கும், பயிரிடப்படும் நிலங்கள், பயிரிடப்படாத நிலங்கள், காடுகள் என்று வகைப்படுத்தி மொத்த விஸ்தீர்ணத்தைக்குறித்தும், தண்ணீர் பாய்ச்சப்படும் விஸ்தீர்ணத்தைக்குறித்தும் பயிர்களைக் குறித்தும், பயிராயிருக்கும் மொத்த விஸ்தீர்ணத்தைக்குறித்தும்,

முக்கியமான ஒவ்வொரு மாசூலும் பயிராயிருக்கும் மொத்த விஸ்தீர்ணத்தைக்குறித்தும், கால்நடைகள்-கலப்பைகள்-வண்டிகள் ஆகிய இவைகளைக்குறித்தும், இன்ன வீதப்படி நிலவரி விதிக்கப்படுகிறதென்பதைக்குறித்தும், சில முக்கியமான மாசூல்களுக்கு அறுவடைக் காலத்தில் கிடைக்கும் விலைகளைக்குறித்தும், ஒவ்வொரு மாகாணத்திலும் முக்கியமான பயிர்களின் சராசரி கண்டுமுதலைக்குறித்தும் கணக்குகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. இந்தப்படி பிரசுரிப்பது சம்பந்தமாய் நாங்கள் இரண்டு சிபாரிசுகள் செய்ய விரும்புகிறோம். மேற்படி புஸ்தகங்களை விரைவில் வெளிவிட்டால் நன்மை ஏற்படும். மேலும், முன்பு செய்துவந்ததைப்போல விவரக்கணக்குகளை ஜில்லாவாரியாகக் கொடுக்கலாம்.

இந்தியாவில் சாகுபடியாகும் முக்கியமான மாசூல்களின் விஷயத்தில் ஒவ்வொரு மாகாணத்திலும் ஏகரா ஒன்றுக்குச் சராசரி கண்டு முதல் இவ்வளவென்று குறிப்பிட்டு ஐந்து வருஷத்துக்கொரு முறை ஒரு ரிபோர்ட் பிரசித்தம் செய்யப்படுகிறது. இதில் பதினேழு வகையான மாசூல்களைக்குறித்துச் சொல்லியிருக்கிறது. மேலும், பிரஸ்தாப விஷயங்கள் எந்த வருஷத்துக்குச் சம்பந்தப்படுகின்றனவோ அதற்குச் சுமார் ஒரு வருஷத்துக்குப் பிறகு இந்திய விவசாய சம்பந்தமான விவரக்கணக்குகளின் 1-வது சம்புடம் அங்காமியாகவும், தேயிலே, காப்பி, ரப்பர் ஆகிய இவைகளுக்குச் சம்பந்தப்பட்ட பூர்த்தியான விவரங்களும் இந்திய ட்ரேட் ஜர்னல் என்னும் ஒரு வாராந்த வியாபார சமாசார பத்திரிகையிலும் பிரசுரிக்கப்படுகின்றன. பயிர்களைக் காட்டும் தேசபட புஸ்தகம் ஒன்றுகூட பிரசுரிக்கப்பட்டிருக்கிறது.

இந்தியா முழுவதுக்கும் முக்கியமான பயிர்களில் பதினொரு வகைப் பயிர்களின் எதிர்கால நிலைமை இன்னதாயிருக்குமென்று முன்னதாகவே கண்டறிந்து குறிப்பிட்டு ஒவ்வொரு பருவத்துக்கும் விவரங்கள் வெளிவிடப்படுகின்றன. மேலும், இந்தப்படி எந்தப் பயிர்களுக்கு முன்னதாகவே விவரங்கள் வெளிவிடப்படுகின்றனவோ அப்படிப்பட்ட சகல பயிர்களும் தேயிலே, காப்பி, ரப்பர் முதலிய சில பயிர்களும் உட்பட, இந்தியாவில் செய்யப்படும் முக்கியமான பயிர்களின் விஸ்தீர்ணத்தைக் குறித்தும் கண்டுமுதலைக் குறித்தும் உத்தேச மதிப்புகள் வருஷந்தோறும் பிரசித்தம் செய்யப்படுகின்றன. இந்த விவரங்களைத் தொகுக்கும்போது விஸ்தீர்ணங்களைக்குறித்தும் கண்டுமுதலைக்குறித்தும் வெளியிடும் கணக்குகளை ப்ரிடிஷ் இந்தியாவுக்கும் இந்திய சமஸ்தானங்களுக்கும் தனித்தனியாக கொடுக்கவேண்டுமென்றும், அவுரிப் பயிரைக்குறித்த விவரங்களை இப்போது விட்டுவிடவேண்டுமென்றும் நாங்கள் குறிப்பிட விரும்புகிறோம்.

மாகாண சம்பந்தமாகவும் இந்தியா முழுவதுக்கும் மாசூல்களின் எதிர்கால நிலைமையைப்பற்றி முன்னதாகவே குறிப்பிடும் விவரங்கள் இந்திய ட்ரேட் ஜர்னல் என்னும் பத்திரிகையில் பிரசுரிக்கப்படுகின்றன. அந்த விவரங்களைத் துண்டு பத்திரிகைகள் ரூபமாய் வெளியிடும் வழக்கத்தை மறுபடியும் அனுசரிக்கவேண்டுமென்று

நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். மேலேகண்டபடி, முன்னதாய்த் தெரிவிக்கும் விவரங்களைச் சுதேச பாஷையில் வெளிவிடுவதற்காகவும் அவைகளை விவசாயிகளுக்குக் கொடுப்பதற்காகவுங்கூட ஏற்பாடுகள் செய்யவேண்டும்.

பர்மாவிலும் மத்திய மாகாணத்திலும் தவிர மற்ற மாகாணங்களில் மேலேகண்ட விவரங்களை விவசாய இலாகாக்கள் தயார்செய்கின்றன. நாங்கள் பின்னால் சிபாரிசு செய்கிறபடி விவரக்கணக்குகளைத் தயார்செய்யும் விஷயத்தில் இந்த இலாகாக்களுக்கு உதவி கிடைக்கிறபட்சத்திலே, இந்த இரண்டு மாகாணங்களிலும் மேலேகண்ட விவரங்களை விவசாய இலாகாக்களே தயார்செய்வது பிரயோசனகரமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆயினும், பர்மாவில் நெல் சாகுபடியின் எதிர்கால நிலைமை விஷயமாய் முன்னதாக பிரசுரிக்கப்படும் விவரங்களை இப்போது செய்வதைப் போலவே ஸெட்டில்மென்ட்-லாண்ட் ரெகார்ட்ஸ் கம்மிஷனரவர்களே தயார்செய்துவரவேண்டும்.

கால்நடைகள், கலப்பைகள், வண்டிகள் ஆகிய இவைகள் சம்பந்தமாய் ஐந்து வருஷத்துக்கொருமுறை க்ானிஷ்மாரி கணக்கு எடுக்கப்படுகிறது.

பருவகாலத்தைக்குறித்தும் சாகுபடியாகும் பயிரைக்குறித்தும் மாகாணங்களில் பிரசுரிக்கப்படும் ரிபோர்ட்டுகளிலும் பற்பல இலாகாக்களால் வெளியிடப்படும் ரிபோர்ட்டுகளிலும் விவரக்கணக்குகள் தயார் செய்வதற்கு உபயோகப்படக்கூடிய சங்கதிகள் ஏராளமாய் அடங்கியிருக்கின்றன. நீர்ப்பாசன இலாகாவின் ரிபோர்ட்டிலும் வித்தியா இலாகாவின் ரிபோர்ட்டிலும் காட்டிலாகாவின் ரிபோர்ட்டிலும் கண்ட விவரக்கணக்குகளை முன்னிலும் பூர்த்தியான விவரங்கள் கிடைக்கும் விதமாய் சில வழிகளில் திருத்துவது அவசியமென்று நாங்கள் குறிப்பிடுகிறோம்.

ப்ரிடிஷ் இந்திய ஸ்டாடிஸ்டிகல் அப்ஸ்ட்ராக்ட் என்னும் ப்ரிடிஷ் இந்தியாவுக்குரிய விவரக்கணக்குகளின் சங்கிரகத்தில் மேலே குறிப்பிடப்பட்ட ரிபோர்ட்டுகளில் கண்ட விவரங்களில் பெரும்பாகம் சுருக்கமாக சொல்லப்பட்டிருக்கிறது.

பற்பல இலாகாக்கள் சம்பந்தமான ரிடான்களில் கண்ட கணக்குகளுக்கும் இந்திய விவசாய சம்பந்தமான விவரக் கணக்குகளில் கண்ட கணக்குகளுக்கும் உள்ள வித்தியாசங்களை ஜாக்கிரதையாய்ச் சரிப்படுத்தவேண்டும்.

"பயிரிடுவதற்குக் கிடைக்காதது" என்றும் "பயிரிடக்கூடிய தரிசு நிலம்" என்றும் பிரிக்கப்பட்டிருக்கும் நிலத்தைக் குறிப்பிடும் கணக்குகளினால் தப்பெண்ணம் ஏற்படுவதற்கு இடம் இருக்கிறது. இந்திய விவசாய சம்பந்தமான விவரக்கணக்குகளைப் பார்த்தால் ப்ரிடிஷ் இந்தியாவின் மொத்த விஸ்தீர்ணத்தில் கிட்டத்தட்ட கால் பாகம் பயிரிடக்கூடியதாயிருந்தும் பயிரிடப்படாமலிருக்கிறதென்று தெரியவருகிறது. நிலங்களைத் தரம் பிரித்திருப்பதை ஜாக்கிரதையாய் மறுபடியும் பரிசோதனை செய்வது அவசியமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

பற்பல பயிர்வகைகள் விதைக்கப்பட்டிருக்கும் விஸ்தீர்ணங்களைக்குறித்துக் கொடுக்கப்பட்டிருக்கும் வருஷாந்த கணக்குகள் மிகவும் சரியாயிருப்பதாக யாவராலும் ஒப்புக்கொள்ளப்படுகிறது. பெரும்பான்மையான மாகாணங்களில் இந்த கணக்குகளைச் சேகரிப்பதற்குத் திருப்திகரமான ஸ்தாபனம் ஒன்று இருக்கிறது. ஆனால், வங்காளத்திலும் பீஹார்-ஒரிஸ்ஸாவிலும் அப்படிப்பட்ட ஸ்தாபனம் எதுவும் இல்லை. சணல் உற்பத்தியைப்பற்றிய விவரக்கணக்குகளைச் சேகரிப்பதற்காக சுமாராய்த் திறமையாக வேலை செய்யக்கூடிய ஸ்தாபனம் ஒன்று ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி கீழே குறிப்பிடுகிறோம். மேலேகண்ட இரண்டு மாகாணங்களிலும் ஆஸ்ஸாமிலும் நிலையாய்ப் பைசலேற்பாடு செய்யப்பட்டிருக்கும் பாகங்களில் இதர வகையான மாசூல்களுக்கும் மேற்படி ஸ்தாபனத்தை உபயோகித்துக்கொள்வது எவ்வளவுமட்டில் சாத்தியப்படுமென்பதைப்பற்றி ஆலோசிக்கும்படி நாங்கள் சொல்ல விரும்புகிறோம்.

யாதொரு மாசூலின் கண்டுமுதலை மதிப்பிடுவதற்கு, நில விஸ்தீர்ணம், சகஜமாய்க் கிடைக்கும் கண்டுமுதல், நிலைமையைப்பற்றிய உத்தேச மதிப்பு ஆகிய இந்த மூன்று அம்சங்களையும் கவனிப்பது அவசியமாகும். பல வருஷகாலமாய்ச் செய்யப்பட்டுவரும் மாசூல் அறுவடை சம்பந்தமான பரிசோதனைகளை ஆதாரமாகக்கொண்டு சகஜமாய்க் கிடைக்கும் மாசூல் இவ்வளவென்று மதிப்பிடப்படுகிறது. இப்போது, இந்தப் பரிசோதனைகள் சாதாரணமாய் ரெவினியு இலாகாக்களால் நடத்தப்படுகின்றன. விவசாய இலாகாக்களின் விவரக்கணக்குகள் சம்பந்தமான வேலைப் பிரிவு விஸ்தரிக்கப்படுகிறவரையில் இந்த வழக்கத்தையே அனுசரித்து வரவேண்டும். பயிர்களின் பரிமாணக் கண்டுமுதலைக் குறிப்பிடும் கணக்குகளில் மாறுதல்கள் செய்யவேண்டுமானால், சரியான மாசூல் அறுவடைகளுக்குச் சம்பந்தப்பட்ட கணக்குகளை ஆதாரமாகக்கொண்டே செய்ய வேண்டும் பயிர்களின் நிலைமையைக் குறிப்பிடும் உத்தேச மதிப்பைத் திருப்திகரமாய் ஏற்படுத்துவது மிகவும் கஷ்டமான விஷயமாகும். சகஜமான பயிரைப்பற்றி சரியாய் மனதில் கற்பிதம் செய்து கொள்ள பிரதமத்தில் ரிபோர்ட் செய்பவர்களுக்குக் கற்றுக்கொடுப்பதற்கான சகல முயற்சிகளையும் விட்டுவிடவேண்டுமென்றும், கிராமக் கணக்கரின் உத்தேச மதிப்புக்கணக்கு யார்மூலமாய் அனுப்பப்படுகிறதோ அந்த ஜில்லா ஆபிஸர்களும் மாகாண அதிகாரிகளும் அதைத் திருத்தவேண்டுமென்றும் விவசாய சம்பந்தமான ஆலோசனை சபையார் 1919-ம்வருஷத்தில் அபிப்பிராயம் தெரிவித்தார்கள். நாங்கள் அதை ஒப்புக்கொள்ளுகிறோம்.

சணல் பயிரின் கண்டுமுதலைப்பற்றிய மதிப்புக்கணக்கைப் பிரசுரிப்பதற்குத்தான் டிபார்ட்மெண்ட் ஆவ் கம்மெர்ஷியல் இன்டெலிஜென்ஸ் அண்ட் ஸ்டாடிஸ்டிக்ஸ் என்னும் வியாபார சம்பந்தமான சமாசாரத்தையும் விவரக்கணக்குகளையும் குறித்த இலாகா உத்தரவாதம் ஏற்றுக்கொளவதில்லை. வங்காளத்தின் விவசாய இலாகா டைரெக்டரவர்கள் வங்காளத்துக்காக மாத்திரமேயல்லாமல், பீஹார்-ஒரிஸ்ஸாவுக்காகவும் ஆஸ்ஸாமுக்காகவுங்கூட மேற்படி மதிப்புக்

கணக்குகளை வெளியிடுகிறார். இது சம்பந்தமாய்த் தமக்கு வேண்டிய புள்ளி விவரங்களுக்கு அவர் இப்போது பஞ்சாயத்துகளின் ப்ரெஸிடெண்டுகளை நம்பியிருக்கிறார். இந்த புள்ளி விவரங்கள் சரியாயிருக்கின்றனவா என்று ஸப் டிவிஷன் ஆபிஸர்களும் ஜில்லா ஆபிஸர்களும் பரிசோதித்துப் பார்த்து, அவைகளை விவசாய இலாகா டைரெக்டருக்கு அனுப்புகிறார்கள். சாத்தியப்பட்ட இடங்களிலெல்லாம் விவசாய இலாகா உத்தியோகஸ்தர்கள் ஜில்லா ஆபிஸர்களுக்கு உதவிசெய்கிறார்கள். ரங்கூனில் அரிசி வியாபாரிகள் செய்வதைப்போலவே வங்காள கவர்ன்மெண்டாருடன் அங்கே வியாபாரம் செய்பவர்கள் ஏன் கூடி வேலை செய்யக்கூடாதென்பதற்குத் தகுதியான நியாயம் எதுவும் இருப்பதாகத் தோற்றவில்லை. இந்த மதிப்புக்கணக்குகள் சரியாயிருக்கவேண்டுமென்னும் விஷயத்தில் சணல் வியாபாரிகளுக்கு எவ்வளவு முக்கியமான சிரத்தை இருக்கிறதோ அவ்வளவு முக்கியமான சிரத்தை அதைப் பயிரிடும் விவசாயிகளுக்கும் இருக்கிறதென்னும் விஷயத்தை எப்போதும் ஞாபகத்தில் வைத்திருக்கவேண்டும்.

இந்திய மத்திய பஞ்சு விசாரணைக் கம்மிட்டியார் பஞ்சைப் பற்றிய விவரக்கணக்குகளில் சிறிது காலத்துக்கு முன் செய்திருக்கும் சீர்திருத்தத்தைக் கவனித்தால், குறித்த ஒரு பயிருக்குச் சம்பந்தப்பட்ட சகலமானவர்களும் நன்றாக ஒழுங்கான அமைப்புடன் வேலை செய்கிறபட்சத்திலே, விவரக்கணக்குகளினால் ஏற்படும் நன்மைகள் இன்னவையென்று தெரிந்துகொள்ளக்கூடும்.

ரெயில் மார்க்கமாகவும் நதிகள் மூலமாகவும் நடக்கும் வர்த்தகத்தைப்பற்றிய வருஷாந்த விவரக்கணக்குகள் அனுப்பும் வழக்கம் நிறுத்திவிடப்பட்டிருக்கிறது. இது தௌர்ப்பாக்கியமான ஸ்திதியென்று நாங்கள் கருதுகிறோம். ஏனென்றால், விவசாய சம்பந்தமான மாகூல்கள் இந்தியாவுக்குள் ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்துக்கு அனுப்பப்படுவதைப்பற்றிய விவரங்கள் கிடைப்பதற்கு இப்போது ஒரு வழியும் இல்லாமலிருக்கிறது. ஆகவே, ஷை விவரக் கணக்குகள் தயார்செய்வதை மறுபடியும் ஆரம்பிக்கவேண்டுமென்றும், இந்தியாவின் எல்லைப்புறங்களைக் கடந்துபோகும முக்கியமான ரஸ்தாக்கள் மூலமாக நடக்கும் வர்த்தகத்தைக் குறித்த விவரக் கணக்குகளைச் சேகரிக்கவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

கால்நடைகளைப்பற்றிய விவரக்கணக்குகள் சம்பந்தப்பட்டமட்டில், ஐந்து வருஷத்துக்கொருமுறை எடுக்கும் கானிஷ்மாரி கணக்கைச் சகல மாகாணங்களிலும் ஏககாலத்தில் எடுக்கவேண்டுமென்றும், கால்நடைகளை எங்கும் ஒரே மாதிரியாய் இனம் பிரிக்கும்படியாக முயற்சி செய்யவேண்டுமென்றும் நாங்கள் சிபாரிசு செய்ய விரும்புகிறோம். கால்நடைகள் சம்பந்தமான மகாநாட்டில் தகுதியான இனப் பிரிவினையை ஏற்படுத்தலாம்.

ஜனன மரண விவரக்கணக்குகள் விஷயத்திலே, நகர்ப்புறமாயுள்ள ஜில்லாக்களுக்கும் கிராமப்புறமாயுள்ள ஜில்லாக்களுக்கும் தனித்தனியாய்க் கணக்குகள் கொடுக்கவேண்டுமென்று நாங்கள்

குறிப்பிடுகிறோம். மேலும், வியாதிகளுக்குச் சிகிச்சை செய்வதற்காக ஏற்பட்டிருக்கும் ஸ்தாபனங்களின் தொகையையும் அவைகளை இன்ன விதமாய்ப் பங்கீடு செய்திருக்கிறதென்பதையையும், பயிற்சி செய்விக்கப்பட்ட மருத்துவச்சிகள் உட்பட வைத்திய இலாகாவிலும் ஆரோக்கிய இலாகாவிலும் இத்தனை பேர் வேலைக்கு அமர்த்திக் கொள்ளப்பட்டிருக்கிறார்களென்பதையும் எவ்வெவ்விடங்களில் அவர்கள் அந்தப்படி அமர்த்திக்கொள்ளப்பட்டிருக்கிறார்களென்பதையும் நகர்ப்புறமாயுள்ள ஜில்லாக்களுக்கும் கிராமப்புறமாயுள்ள ஜில்லாக்களுக்கும் தனித்தனியாக காட்டவேண்டுமென்றும் நாங்கள் எண்ணுகிறோம். ஏனென்றால், முக்கியமாய் ஏற்படுத்தப்படவேண்டிய இந்த ஊழிய வர்க்கங்கள் சம்பந்தமாய் கிராமப் பிரதேசங்களின் நிலைமை இன்னதென்று தெளிவாய்க் காட்டப்படவேண்டியது மிகவும் அவசியமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

ஜனனமரண விவரக்கணக்குகளையும் ஆரோக்கிய சம்பந்தமான ஆதார விஷயங்களையும் விவசாய சம்பந்தமாகவும் நீர்ப்பாய்ச்சல் சம்பந்தமாகவும் உள்ள நிலைமைகளுக்குப் பொருத்தமான விவரங்களுடன் சம்பந்தப்படுத்தும் விஷயத்தில் ஸர்க்காரைச் சேராத தனி நபர்களும் சங்கங்களும் பிரயோசனகரமாய்ச் செய்யக்கூடிய வேலை எவ்வளவோ இருக்கிறது. அம்மாதிரியாகவே, கடன்பட்டிருப்பது, கொதுவைக் கடன், கைப்பற்று நிலங்களைத் துண்டுபடுத்துவது ஆகிய இவைகளைப் போன்ற சமுதாயப் பொருளாதார சம்பந்தமான பிரசினைகளைக் குறித்து சாஸ்திர ரீதியாய் ஆராய்ச்சி நடத்துவதற்கும் விசேஷ இடமிருக்கிறது. சர்வகலாசாலையைச் சேர்ந்த ஸ்தாபனங்களும் பஞ்சாப் பொருளாதார விசாரணை சபையைப் போன்ற ஒருமட்டில் உத்தியோகப் பற்றுள்ள சபைகளும் டிெ வேலையைச் செய்ய ஏற்றுக்கொள்ளக்கூடும்.

விவரக்கணக்குகளைக்குறித்துப் போதுமானமட்டில் நடவடிக்கை நடத்தவேண்டுமானால், அதுசம்பந்தப்பட்ட எல்லா ஸ்தாபனங்களிலும் சிப்பந்திகளை அதிகப்படுத்தவேண்டுமென்று நாங்கள் கருதுகிறோம். விவரக்கணக்குகள் தயார்செய்வது சம்பந்தமான ஸ்தாபனம் எதுவும் இப்போது எந்த மாகாணத்திலும் இல்லை. முதலில், விவரக்கணக்குகள் தயார்செய்யும் விஷயத்தில் திறமை வாய்ந்த உதவி உத்தியோகஸ்தர் ஒருவரை ஒவ்வொரு விவசாய இலாகா டைரெக்டருக்கும் ஆலசியம் பண்ணமல் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டும். பயிர்களின் எதிர்கால நிலைமையை முன்னதாக அறிந்து விவரங்களைத் தொகுப்பதும், விவசாய சம்பந்தமான விளைபொருள்களைப்பற்றிய விவரக்கணக்குகள் தயாரிப்பதும், மாசூல் அறுவடை சம்பந்தமான பரிசோதனைகள் நடத்துவதைக் குறித்த சாஸ்திர முறைகளைக் கவனிப்பதும் அந்தப் பரிசோதனைகளை மேற்பார்வையிடுவதும், விலைவாசிகள் விஷயமான விவரக்கணக்குகளைச் சேகரிப்பதும் டிெ உத்தியோகஸ்தரின் முக்கியமான வேலையாகும். அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களை விவரக்கணக்குகள் தயாரிப்பது சம்பந்தமான மத்திய ஸ்தாபனத்துடன் சேர்த்து வேலை செய்யும்படி செய்வது பொருத்தமாயிருக்கும். மேலும்,

விவசாய சம்பந்தமாய்க் கணித சாஸ்திரத்தைப் பிரயோகிப்பது காரணமாக சாஸ்திர ரீதியாய் விவசாயம் செய்வதில் முற்றிலும் புதிய அம்சமொன்று ஏற்பட்டிருக்கிறது. ஆகவே, விவசாய சாஸ்திரத்தைச் சேர்ந்த இந்தப் பிரிவில் மிகவும் உயர்ந்த யோக்கியதாம்சங்கள் பெற்றிருக்கும் ஒரு நிபுணரை இம்பீரியல் அக்ரிகல்சரல் ரிஸர்ச் இன்ஸ்டிட்யூட் என்னும் ஏகாதிபத்திய விவசாய ஆராய்ச்சி ஸ்தாபனத்துடன் சேர்க்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

விவசாய சம்பந்தமான பிரசினைகள் ஒருபுறமிருக்க, சமூகக் கொள்கைகளை நிர்ணயமாய் ஏற்படுத்துவதற்கு அனுகுணமாக விவரக்கணக்குகளைக்குறித்து ஆராய்ச்சி செய்யும் விஷயம் இப்போது உலகமுழுவதும் அதிக முக்கியமானதென்று கருதப்பட்டு வருவதைக் கவனிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம். விவரக் கணக்குகள் தயாரிக்கும் விஷயத்தில் தகுந்த யோக்கியதை பெற்றுள்ள உத்தியோகஸ்தர் ஒருவரை மாகாணத் தலைமை ஸ்தாபனங்களில் நியமித்து, பொருளாதார சம்பந்தமாகவும் சமூக சம்பந்தமாகவும் அந்த மாகாணத்தில் ஏற்பட்டிருக்கும் முன்னேற்றத்தைப் பற்றிய சகல அம்சங்களைப்பற்றியும் ஆராய்ச்சி செய்யும் வேலையை அவரிடத்தில் ஒப்புவிக்கிறபட்சத்திலே, கிராமக் குடிஜனங்களின் க்ஷேமத்தை அபிவிருத்தி செய்யும் விஷயத்தில் கவர்ன்மெண்டார் செய்யும் முயற்சிகளுக்கு விசேஷமாய் உதவி ஏற்படக்கூடுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அப்படிப்பட்ட உத்தியோகஸ்தரானவர் முற்றிலும் உத்தியோகஸ்தர்கள் சேர்ந்தே அமைக்கப்பட்டிருக்கும் ஒரு ஸ்தாபனத்தின் தலைவராயிருப்பதைக்காட்டிலும் பொருளாதார விஷயமாகவும் சமூக விஷயமாகவும் விவரக்கணக்குகள் தயாரிப்பதில் சுயேச்சையாய் வேலைசெய்யவருபவர்கள் அடையக்கூடிய ஒரு முக்கியஸ்தராயிருக்கவேண்டும். சுருக்கமாய்க் கூறுவோமானால், அவர் விவரக்கணக்குகள் சம்பந்தமான செய்திகளைத் தெரிவிக்கும் ஒரு சாலையை நடத்துபவராக இருக்கவேண்டும்.

மத்திய ஸ்தாபனத்தைப்பற்றி பேசுவோம். விவரக்கணக்குகள் சம்பந்தமான இலாகாவை ஒரு தனி இலாகாவாக திருத்தியமைக்கவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். டைரெக்டரானவர் அங்கீகரிக்கப்பட்ட திறமையுடையவராயிருக்கவேண்டும். மேலும், சாதாரண விவரக்கணக்குகள் சம்பந்தமாக வாலாயமாய்க் கவனிக்கவேண்டிய விஷயங்களில் எந்தெந்த விஷயங்களை நீக்கிவிடலாமோ அவைகளையெல்லாம் கூடுமானவரையில் அவர் கவனிக்கவேண்டியிராதபடி செய்யவேண்டும். நாங்கள் உத்தேசித்திருக்கும் அலுவல்களைச் செய்வதற்கு முதல்தரமான விவரக்கணக்கு நிபுணரல்லாத வேறே எவரையும் அமர்த்திக்கொள்வது வியர்த்தமாகுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். தேர்ந்தெடுக்கப்பட்ட உத்தியோகஸ்தரானவர் - விவரக்கணக்குகள் சம்பந்தமான மாகாண உத்தியோகஸ்தர்கள் மாத்திரமேயல்லாமல் பொதுவாய் வியாபாரஸ்தர்களும் விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கும் பொது ஜனங்களும் அவர் சொல்லும் யோசனையை அங்கீகரிக்கக்கூடிய அளவுக்குப் போதுமான அந்தஸ்துள்ளவராயிருக்கவேண்

டும். பொது ஜனங்களுக்குள் உத்தியோகப்பற்றில்லாத இந்த முக்கியமான பிரிவாருடன் நெருங்கிய சம்பந்தம் ஏற்படுத்துவது அவருடைய மிகவும் முக்கியமான அலுவல்களில் ஒன்றாகும். மேலும், விவரக்கணக்குகளைப் பிரசித்தம் செய்யும் விஷயத்திலும் அவைகளை நிஷ்கரிஷையான காலத்துக்கொருமுறை திருத்தும் விஷயத்திலும் ஆலோசனை சொல்லக்கூடிய சபைகளை விவரக்கணக்கு சம்பந்தமான மத்திய ஸ்தாபனத்தில் அமைப்பதற்காக ஏற்பாடு செய்யப்படுமென்றும், இந்த சபைகளில் இதுவிஷயமாய் சிரத்தையுள்ள இலாகாக்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுடன்கூட, பிரதிநிதித்துவம் வாய்ந்த முதன்மையான பொருளாதார நிபுணர்களும் சாஸ்திர நிபுணர்களும் வியாபாரிகளும் மெம்பர்களாயிருப்பார்களென்றும் நாங்கள் நம்புகிறோம். இந்தப்படி செய்கிறபட்சத்திலே, விவரக்கணக்குகளைப்பற்றி விவரித்துக் கூறும் ஸ்தாபனமொன்று இந்த தேசத்தில் ஏற்பட்டு விருத்தியாகக்கூடுமென்று நாங்கள் நம்புகிறோம். இந்த ஸ்தாபனத்துக்கும் கவர்ன்மென்டுக்கும் அனேகமாய் முறைமையான சம்பந்தம் எதுவும் இராது. ஆயினும், விவரக்கணக்குகள் சம்பந்தமான சகல வகையான ஆபிஸ் தஸ்தவேஜுகளும் இந்த ஸ்தாபனத்தில் உள்ளவர்களுக்குக் கிடைக்கக்கூடியவைகளாயிருப்பதுடன், அவர்கள் அந்த தஸ்தவேஜுகளிலுள்ள விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டவர்களாகவும் இருப்பார்கள். வாஸ்தவத்தில், விவரக்கணக்குகளைச் சேர்ந்த செய்திகளைத் தெரிவிக்கும் மத்திய ஸ்தாபனத்துடன்கூடவே இந்தியாவுக்கு ராயல் ஸ்டாடிஸ்டிகல் ஸொஸைட்டி என்னும் விவரக்கணக்குகளைக் குறித்த ராஜாங்க சங்கமொன்று ஏற்படுவதற்குரிய சின்னங்கள் காணப்படுமென்று நாங்கள் நம்புகிறோம்.

இந்தியாவில் விவரக்கணக்குகள் தயார்செய்வது சம்பந்தமான அடிப்படை முழுவதையும் சீக்கிரத்திலேயே விரிவுபடுத்துவது அவசியமாயிருக்கிறது. ஷை ஆதாரமானது சில கவர்ன்மென்ட் உத்தியோகஸ்தர்கள் எவ்வளவு திறமையுள்ளவர்களாயிருந்தபோதிலும், அவர்களுடைய வேலையைப் பொறுத்ததாயிருக்கக்கூடாது. ஆனால், அது - விஷயங்களை நன்றாய்த் தெரிந்துகொண்டிருக்கும் பொது ஜனங்களின் ஆதரவு பெற்றதாயிருக்கவேண்டும். மேலும், அது - அந்தப்படி அவர்களுடைய ஆதரவைப் பெறுவது மூலமாய், சாஸ்திர முறைப்படி விவசாயம் செய்யும் விஷயமும் சமூக பரிபாலன விஷயமும் ஒரேமாதிரியாக சீக்கிரமாய் விருத்தியடைவதற்கு இன்றியமையாத உதவி ஏற்படக்கூடிய நிலைமையில் விவரக்கணக்குகள் தயார்செய்வது சம்பந்தமாய்த் தற்காலத்தில் அனுசரித்துவரும் முறைகள் இருக்கின்றனவென்று சட்டநிரூபண சபைகளும் பொது ஜனங்களும் அங்கீகாரம் செய்வதையும் பொறுத்ததாயிருக்கவேண்டும்.

விவரக்கணக்குகள் தயார்செய்வது சம்பந்தமாய் ரோமாபுரியிலுள்ள இன்டர்நாஷனல் இன்ஸ்டிட்யூட் ஆவ் அக்ரிகல்சர் என்னும் விவசாய சம்பந்தமான சர்வதேச ஸ்தாபனம் அடைந்திருக்கும் அனுபவத்தைப் பயன்படுத்திக்கொள்வதற்கு வாய்க்கும் ஒவ்வொரு சந்தர்ப்பத்தையும் கைக்கொள்ளவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம்.

அங்காமியாய்ப் பைசலேற்பாடு செய்யப்பட்டிருக்கும் பிரதேசங்களில் விவசாய சம்பந்தமான விவரக்கணக்குகளைச் சேகரிப்பதற்கு கீழ்ப்பட்ட ரெவினியு உத்தியோகஸ்தர்களைப் பிரதமத்தில் தொடர்ச்சியாய் உபயோகித்துக்கொள்வதைக்காட்டிலும் வேறே எந்த முறையும் சாத்தியப்படுமென்று எங்களுக்குத் தோற்றவில்லை. ஆனால், உத்தியோகப்பற்றில்லாத ஸ்தாபனங்களை இதுசம்பந்தமாக அதிகமாய் உபயோகித்துக்கொள்ளவேண்டும்.

## 17. விவசாய சம்பந்தமான ஊழிய வர்க்கங்கள்.

பிரதான ரிபோர்ட்டின் 19-ம் அத்தியாயம்.

இந்த ரிபோர்ட்டில் நாங்கள் செய்திருக்கும் சிபாரிசுகள் ஒப்புக்கொள்ளப்படுகிறபட்சத்திலே, விவசாய இலாகாக்களில் வேலையாயிருப்பவர்களுக்கு ஏற்படும் அதிகமான உத்தரவாதங்களை முக்கியமாய்க் கவனித்து, அவர்களை உத்தியோகத்துக்குப் புதிதாய்ச் சேர்த்துக்கொள்வதைக் குறித்தும் ஒழுங்குபடுத்தி அமைப்பதைக் குறித்தும் அவர்களுக்குக் கொடுக்கும் சம்பளம், அவர்களின் ஊழிய நிலைமைகள் ஆகிய இவைகளைக் குறித்தும் நாங்கள் இங்கே ஆலோசனை செய்திருக்கிறோம். 1919-ம்வருஷத்திலே அரசியல் அமைப்பில் செய்யபபட்ட திருத்தங்களின்படி மந்திரிமார்களுடன் சேர்ந்து பிரவர்த்திக்கும் மாகாண கவர்னர்களின் மேல்விசாரணைக்கு மாற்றப்பட்டிருந்த விஷயங்களில் விவசாயம் ஒன்று. அகில இந்திய ஊழிய வர்க்கங்களில் எவை பகுப்பட்ட விஷயங்களைப் பரிபாலனம் செய்துவந்தனவோ அந்த வர்க்கங்களுக்கு இனி உத்தியோகஸ்தர்களைப் புதிதாய்த் தேர்ந்தெடுக்கக்கூடாதென்று இந்தியாவில் உயர்தர ஸிவில் ஸெர்விஸ் என்னும் ஊழிய வர்க்கங்கள் விஷயமாய் ஏற்படுத்தப்பட்ட ராஜாங்கக் கம்மிஷன் செய்த சிபாரிசின்மேல் பொதுவாய்ச் செய்யப்பட்ட தீர்மானத்தின் பலனாக இந்திய விவசாய ஊழிய வர்க்கத்துக்கு உத்தியோகஸ்தர்களைப் புதிதாய்ச் சேர்த்துக்கொள்வது 1924-ம்வருஷத்தில் நின்றுபோயிற்று. அந்தப்படி புதிதாய்ச் சேர்ப்பது 1924-ம்வருஷத்தில் நின்றுபோனபோது, ஷை ஊழிய வர்க்கத்திலே மொத்தத்தில் 157 உத்தியோகஸ்தர்கள் இருக்கலாமென்று அனுமதி கொடுக்கப்பட்டிருந்தது. இவர்களில் 19 பேர் இந்தியா கவர்ன்மென்டின்கீழும் 135 பேர் பிரதேச கவர்ன்மென்டுகளின்கீழும் வேலை செய்ய வேண்டியவர்களாயிருந்தார்கள். ஆயினும், இந்த ஊழிய வர்க்கத்திலிருந்த உத்தியோகஸ்தர்களின் சங்கியை மேலேகண்ட தொகையைக்காட்டிலும் மிகக்குறைவாக இருந்தது. 109 உத்தியோகஸ்தர்களே ஷை ஊழிய வர்க்கத்தில் இருந்தார்கள். இந்தத் தொகையானது பிறகு 93 ஆக குறைந்து போய்விட்டது. இந்த உத்தியோகஸ்தர்களில் 12 பேர் இந்தியா கவர்ன்மென்டின்கீழும் 81 பேர் மாகாண கவர்ன்மென்டுகளின் கீழும் வேலை செய்துவந்தார்கள். இந்திய விவசாய ஊழிய வர்க்கத் தொகுதியில் சேராமல் சாசுவதமான உத்தியோகங்கள் வகித்துவரும் 16 உத்தியோகஸ்தர்களை மேலேகண்ட 81 உத்தியோகஸ்தர்களுடன் சேர்த்துக்கொள்ளவேண்டும். ஆகவே, மாகாணங்களில் பிரஸ்தாப ஊழியத்தைச் சேர்ந்த உயர்தரப் பிரிவுகளுக்குரிய அலுவல்

களை இப்போது 97 உத்தியோகஸ்தர்கள் செய்துவருகிறார்கள். இதை இப்போதுள்ள வேலையைச் செய்வதற்கு குறைந்தபட்சம் வேண்டிய தொகையாகவே கொள்ளலாம்.

1920-ம் வருஷத்துக்கு முன்னே, பம்பாய், மத்திய மாகாணம் ஆகிய இந்த மாகாணங்களில்தான் கிரமமான மாகாண ஊழிய வர்க்க மொன்று ஏற்படுத்தப்பட்டிருந்தது. ஐலிங்டன் கமிஷனென்று சாதாரணமாய்ச் சொல்லப்படும் பப்ளிக் ஸெர்விஸஸ் கம்மிஷன் என்னும் விசாரணைச் சபையார் செய்த சிபாரிசுகளின் பலனாக, ஷை ஊழிய வர்க்கங்கள் 1920-ம் வருஷத்துக்குப் பிறகு எல்லா மாகாணங் களிலும் ஏற்படுத்தப்பட்டன. சிறிதுமட்டில் பிரத்தியேகமான உத்தியோகங்களென்று ஏற்பட்டிருந்தவைகளை இந்த ஊழிய வர்க் கத்தில் சேர்த்தும், சிறிதுமட்டில் கீழ்ப்பட்ட உத்தியோக வர்க்கங் களுக்குள் மேல்தரத்திலுள்ளவர்களை மேலுக்கு உயர்த்தியும், சிறிது மட்டில் உத்தியோகஸ்தர்களை நேராகத் தேர்ந்தெடுத்தும் ஷை ஊழிய வர்க்கங்கள் அமைக்கப்பட்டன. இந்திய விவசாய ஊழிய வர்க்கமானது இந்தப்படி குறைக்கப்பட்டிருக்கும் தற்கால நிலைமை யில், மாகாண ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த சில உத்தியோகஸ்தர் கள் ஆசிரியர் பதவிகளிலோ ஆராய்ச்சி சம்பந்தமான பதவி களிலோ ஏறக்குறைய தொடர்ச்சியாக வேலை செய்து வருகிறார்கள். பர்மாவைத்தவிர மற்ற சகல மாகாணங்களிலும் இந்த ஊழிய வர்க் கத்துக்கு மாதமொன்றுக்கு 250 ரூபாய்க்குக் குறையாமலும் 750 ரூபாய்க்கு மேற்படாமலும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால், பர்மாவில் ஷை ஊழிய வர்க்கத்துக்கு 300 ரூபாய்க்குக் குறையாம லும் 800 ரூபாய்க்கு மேற்படாமலும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. மாகாண ஊழிய வர்க்கங்களில் இப்போது 157 உத்தியோகஸ்தர்கள் இருக்கிறார்கள்.

சகல மாகாணங்களிலும் ஷை மாகாண ஊழியவர்க்கங்களுக்குக் கீழ், கீழ்ப்பட்ட ஊழியவர்க்கங்கள் இருக்கின்றன. இந்த ஊழிய வர்க்கங்களின் உத்தியோகப் பெயர்கள் அவர்களுக்குக் கொடுக்கப் படும் சம்பள விகிதங்களுக்கேற்றபடி வித்தியாசப்படுகின்றன. பெரும்பான்மையான மாகாணங்களில், கீழ்ப்பட்ட ஊழியவர்க்கத் தைச் சேர்ந்த மேல்தரத்தில் உள்ளவர்களுக்கு, யாதொரு விவசா யக் கலாசாலையில் கொடுக்கப்படும் பட்டமாகிலும் டிப்ளோமா என் னும் யோக்கியதா பத்திரமாகிலும் பெற்றிருப்பது யோக்கியதாம்ச மாகும். சம்பளவீத நிர்ணயங்கள் ஒன்றுக்கொன்று பெரிதும் வித் தியாசப்படுகின்றன. ஆயினும், எந்த மாகாணத்திலும் ஷை மேல் தரத்திலுள்ள உத்தியோகஸ்தர்களுக்கு மாதமொன்றுக்கு 60 ரூபாய் க்குக் குறைவான ஆரம்ப சம்பளமோ 300 ரூபாய்க்கு மேற்பட்ட சம்பளமோ கொடுக்கப்படுவதில்லை. கீழ்ப்பட்ட வர்க்கங்களைச் சேர்ந்த மேல்தரத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள் பண்ணைகளின் மானேஜர்களாகவும் உதவி மானேஜர்களாகவும், விவசாய சம்பந்த மான சீர்திருத்தங்களைச் செய்துகாட்டுபவர்களாகவும், கலாசாலை களில் ரஸாயனப் பரிசோதனை செய்யும் உதவி உத்தியோகஸ்தர்க ளாகவும் கல்வி கற்பிக்கும் உதவி ஆசிரியர்களாகவும் இருக்கிறார்கள். மேலும், அவர்கள் விவசாய இலாகாவைச் சேர்ந்த டெப்யுடி டை

ரெக்டர்களுடைய அல்லது அஸிஸ்டன்ட் டைரெக்டர்களுடைய உத்தரவின்படி ஷை இலாகா சம்பந்தமான வேலையில் பொதுவாய் உதவி செய்கிறார்கள். கீழ்ப்பட்ட ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த கீழ்த்தரத்திலுள்ள உத்தியோகஸ்தர்கள் பெரும்பாலும் யாதொரு விவசாயக் கலாசாலையில் இரண்டு வருஷப் பயிற்சி பெற்றுத் தேறியிருப்பதாக ஸெர்டிபிகேட் பெற்றவர்களாகவே இருக்கிறார்கள். அந்த உத்தியோகஸ்தர்கள் சிறு பண்ணைகளுக்கும் விவசாய சம்பந்தமான முறைகளைச் செய்துகாட்டுவதற்கான இடங்களுக்கும் ஓவர்ஸியர்களாகவும், கலாசாலைகளைச் சேர்ந்த ஆராய்ச்சி வேலைப் பிரிவில் ஸப் அஸிஸ்டன்டுகளாகவுங்கூட வேலை செய்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள வீதங்கள் ஒன்றுக்கொன்று பெரிதும் வித்தியாசப்படுகின்றன. ஆயினும், எவ்விடத்திலும் அவர்களுக்கு மாதமொன்றுக்கு 30 ரூபாய்க்குக் குறைவாகவோ 180 ரூபாய்க்கு மேற்பட்டோ சம்பளம் கொடுக்கப்படுவதில்லை.

இப்போது விவரிக்கப்பட்டிருக்கும் இரண்டு தரங்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களுக்குக்கீழ், கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்கள் பெருந் தொகையினராய் இருக்கிறார்கள். இவர்களில் பெரும்பாலார் விவசாயிகளின் பிள்ளைகளுக்குள்ளிருந்து தேர்ந்தெடுக்கப்படுகிறார்கள். இவர்களுக்கு எழுதப்படிக்கத் தெரியுமேயொழிய, இவர்கள் மத்தியதரக்கல்வி பெற்றவர்களல்ல. ஆயினும், இவர்கள் ஒரு முறைப்படி விசேஷ பயிற்சி பெற்றிருக்கிறார்கள். அவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பள வீதமானது மாதமொன்றுக்கு 15 ரூபாய்க்குக் குறையாமலும் 60 ரூபாய்க்கு மேற்படாமலும் இருக்கிறது.

குறிப்பிடுவதற்குச் சௌகரியமாயிருக்கும் பொருட்டு, இந்திய விவசாய ஊழிய வர்க்கத்தின் அலுவல்கள் முழுவதையும் முடிவாக ஏற்றுக்கொள்ளப்போகும் புதிய உயர்தர மாகாண விவசாய ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த உத்தியோகங்களுக்கு 1-ம் வகுப்பு உத்தியோகங்களென்றும், ஏற்கனவே உள்ள மாகாண விவசாய ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த உத்தியோகங்களுக்கு 2-ம் வகுப்பு உத்தியோகங்களென்றும் இந்த அத்தியாயத்தின் மீதிபாகம் முழுவதும் பெயர் கொடுக்க நாங்கள் உத்தேசிக்கிறோம்.

விவசாய இலாகா டைரெக்டர், விவசாயக் கலாசாலையின் ப்ரின்ஸிபால் என்னும் இவ்விரண்டு உத்தியோகங்களும் மிகவும முக்கியமானவையென்று நாங்கள் கருதுகிறோம். ஆகவே, 1-ம் வகுப்பு உத்தியோகஸ்தர்களின் தொகுதியில் அடங்காத 'ஸெலெக்ஷன் போஸ்ட்' என்னும் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படும் உத்தியோகங்களாக அவைகளைப் பிரிக்க விரும்புகிறோம். டைரெக்டர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்படும் உத்தியோகஸ்தருக்குப் பரிபாலன சக்தியும் சாஸ்திர சம்பந்தமான உயர்ந்த யோக்கியதாம்சங்களும் சேர்ந்தாற்போல் இருக்கவேண்டும். டைரெக்டர்களின் பரிபாலன சம்பந்தமான பொறுப்புகள் அதிகரிக்குமெனபது நிச்சயம். மேலும், இப்போது அவர்கள் செய்துவரும் சாஸ்திர சம்பந்தமான வேலையில் பெரும்பாகம் அவர்களுக்குக் கீழ்ப்பட்ட உத்தியோகஸ்தர்களின் விசாரணைக்கு மாறவேண்டும். கிராம அபிவிருத்திக்கு அனுகுணமாயிருக்கும் முக்கியமான பதவிகளில் விவசாய இலாகா

டைரெக்டர் பதவி ஒன்றென்றும், விவசாய முன்னேற்றமானது ஷை பதவிக்கு நியமிக்கப்படும் உத்தியோகஸ்தரின் தகுதியைப் பெரும்பாலும் பொறுத்திருக்கிறதென்றும் நாங்கள் உறுதியாய் நம்புவதை இதைக்காட்டிலும் பலமாக வற்புறுத்திக் கூற எங்களால் முடியாது. குறித்த யாதொரு மாகாணத்தில் விவசாய இலாகா டைரெக்டர் பதவி காலியாகும்போது அப்படிப்பட்ட பதவிக்கு அவசியமான யோக்கியதாம்சமாக நாங்கள் சொல்லியிருக்கும் பரிபாலன சக்தியானது அந்த மாகாணத்தைச் சேர்ந்த விவசாய இலாகாவில் எவரிடத்திலும் காணப்படாமல் இருக்கக்கூடும். அப்படிப்பட்ட சந்தர்ப்பங்களில், பிரதேச கவர்ன்மெண்டார் முதலில் வேறொரு மாகாணத்தைச் சேர்ந்த விவசாய இலாகாவிலிருந்து தகுதியான நபரைத் தேர்ந்தெடுக்க பிரயத்தனப்படவேண்டும். அங்கேயும் தகுதியான நபர் கிடைக்காவிட்டால், இந்திய ஸிவில் ஸெர்விஸ் என்னும் ஊழியவர்க்கத்திலிருந்து ஒருவரை நியமிக்கவேண்டும்.

விவசாய இலாகா டைரெக்டரைத் தவிர விவசாயக் கலாசாலையின் ப்ரின்ஸிபாலைப்போல் வேறே எந்த உத்தியோகஸ்தருக்கும் தம்முடைய மாகாணத்தில் விவசாய சம்பந்தமான முன்னேற்றத்தைத் துரிதப்படுத்துவதற்கு அவ்வளவு சந்தர்ப்பங்கள் வாய்ப்பதில்லை. ஷை ப்ரின்ஸிபால் இந்த சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிப்போகிற பட்சத்திலும், அது காரணமாக கலாசாலையின் திறமை குறைந்துபோய்விடுகிற பட்சத்திலும், அந்த மாகாணத்தின் விவசாய முன்னேற்றம் தடைப்பட்டுப்போகும். அந்த நிலைமையிலிருந்து மீண்டும் முற்றிலும் பழைய நிலைமைக்கு வருவதற்குப் பல வருஷங்கள் பிடிக்கக்கூடும். விவசாய ஊழிய வர்க்கத்திலிருந்து ஷை பதவிக்குத் தகுதியான உத்தியோகஸ்தர் கிடைக்காமற் போகிறபட்சத்திலே, வித்தியா சம்பந்தமான ஊழிய வர்க்கத்திலிருந்து ஒருவரைத் தேர்ந்தெடுப்பதைப்பற்றி ஆலோசிக்க வேண்டும்.

நாங்கள் சிபாரிசு செய்கிற விதமாக இலாகாவின் அமைப்பு அபிவிருத்தி அடைகிற பட்சத்திலே, விவசாய இலாகா டைரெக்டர்களுக்கு விசேஷயாய் அதிகரித்த பொறுப்புகள் ஏற்படும். அதை உத்தேசித்து, அவர்களுடைய சம்பளத்தையும் அந்தஸ்தையும் உயர்த்தவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். ஆகவே, வித்தியா இலாகா, காட்டிலாகா ஆகிய இதர முக்கியமான இலாகாக்களின் தலைவர்களுக்குச் சமமாக விவசாய இலாகாவின் டைரெக்டர்களையும் வைக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். தற்காலத்தில் விவசாயக் கலாசாலைகளின் ப்ரின்ஸிபால்கள் இந்திய விவசாய ஊழிய வர்க்கத்துக்குக் கால முறைப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சம்பளமும் மாதமொன்றுக்கு விசேஷ சம்பளமாக 150 ரூபாயும் பெற்று வருகிறார்கள். இந்திய விவசாய ஊழிய வர்க்கத்துக்குச் சாதாரணமாய்க் கால முறைப்படி நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சம்பளமானது அந்த பதவிக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்புக்குத் தக்கபடி யில்லையென்பது எங்களுடைய அபிப்பிராயம். ஆகவே, அந்த சம்பள விகிதத்தை ரூ. 1,500-50—2,000ஆக நிர்ணயிக்கவேண்டுமென்று நாங்கள் ஆலோசனை சொல்ல விரும்புகிறோம். மாதமொன்

ருக்கு விசேஷ சம்பளமாக கொடுத்துவரும் 150 ரூபாய் நிறுத்தி விடப்படும். இந்த இரண்டு உத்தியோகங்களின் விஷயத்திலும், கடல்களுக்கப்பாலிருந்து வந்து ஊழியம் செய்பவர்களுக்குக் கொடுக்கப்படும் சம்பளத்தைப் பெற அருகர்களாயிருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு வழக்கம்போல் அந்த சம்பளம் கொடுத்துவரப்படும். மேலும், அந்த உத்தியோகங்களில் இருப்பவர்கள் சாதாரண விதிகளின்படி முன்போலவே பென்ஷன் என்னும் உபகாரச் சம்பளம் பெற்று வருவார்கள். விவசாய இலாகா டைரெக்டரானவர் உயர்ந்த விதப்படி அதிகப்படியான பென்ஷன் பெறுவதற்கு அருகராயிருக்கவேண்டும்.

பெரிய மாகாணங்கள் சிலவற்றில், எங்களுடைய சிபாரிசுகளை ஒப்புக்கொள்வதனால் விவசாய இலாகா டைரெக்டருக்கு அதிகப்படியான பொறுப்புகள் ஏற்படும். அது காரணமாக, டைரெக்டருக்கு உதவி செய்யும்பொருட்டு ஜாய்ன்ட் டைரெக்டர் என்னும் கூட்டாய் வேலை செய்யும் டைரெக்டர் ஒருவரை ஏற்படுத்துவது விரும்பத்தக்கதாயிருக்கலாம். அந்தப்படி ஒருவரை ஏற்படுத்துகிற பட்சத்திலே, ஷை ஜாய்ன்ட் டைரெக்டருக்குச் சாதாரண ஊழியக் கிரமத்தில் அவருக்குக் கிடைக்கும் சம்பளத்துடன்கூட அவருக்கு அதிகமாய் ஏற்பட்டிருக்கும் பொறுப்பை அனுசரித்து தக்கபடியான விசேஷ சம்பளமும் கொடுக்கவேண்டும்.

இந்திய விவசாய ஊழிய வர்க்கத்துக்கு உத்தியோகஸ்தர்களைப் புதிதாய்த் தேர்ந்தெடுக்கும் முறை 1924-ம் வருஷத்தில் நின்றுவிட்ட போதிலும், அந்த ஊழிய வர்க்கத்துக்குப் பர்த்தியாக புதிய உயர் தரமான மாகாண ஊழிய வர்க்கமொன்று நாளதுவரையில் எந்த மாகாணத்திலும் அமைக்கப்படவில்லை. விவசாய ஊழிய வர்க்கங்களுக்கு இன்ன விதமாய் உத்தியோகஸ்தர்களைப் புதிதாய்த் தேர்ந்தெடுத்து ஒழுங்காய் அமைக்கவேண்டுமென்பதைக் குறித்தும் ஊழிய சம்பந்தமான இன்ன ஷரத்துகளின்படியும் திட்டங்களின்படியும் அவர்களுக்கு உத்தியோகம் கொடுக்கவேண்டுமென்பதைக் குறித்தும் நாங்கள் அடியிற்கண்ட ஆலோசனைகள் சொல்லுகிறோம். ஆயினும், மாகாணங்களின் திரவிய சம்பந்தமான நிலைமை ஒன்றுக்கொன்று விசேஷமாய் வேறுபடுகிறதென்பதையும், ஒரு மாகாணத்தில் உடனே அனுசரிக்கக்கூடிய நிர்மாண திட்டமானது மற்றொரு மாகாணத்தில் வெகுகாலம் பொறுத்தே அனுசரிக்கக்கூடிய லட்சியமாக இருக்கக்கூடுமென்பதையும் நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம்.

உத்தியோகஸ்தர்களுக்கு இருக்கவேண்டிய யோக்கியதாம்சங்களைக் குறித்துச் சொல்லுவோம். இந்த தேசத்தில் விவசாய ஆராய்ச்சி சம்பந்தமாய் ஏற்படும் பிரசினைகளைக் கவனிக்கும்போது விசேஷ வகையில் அதிக தேர்ச்சி பெற்றுள்ள உத்தியோகஸ்தர்களையே நியமிக்கவேண்டிய காலம் இப்போது வந்துவிட்டதென்று நாங்கள் எண்ணுகிறோம். செடிகளின் உற்பத்தி, செடிகளுக்குக் காணும் வியாதிகளைப்பற்றிய ஆராய்ச்சி ஆகிய இவைகளைப் போன்ற சாஸ்திரப் பிரிவுகளில் ஆராய்ச்சி வேலையானது முதன்முதல் ஆரம்பிக்கப்

பட்டிருப்பது காரணமாக இது சம்பந்தமாய்ச் செய்யும் முயற்சி சீக்கிரத்திலேயே சித்திபெறக்கூடிய நிலைமைகள் ஏற்கனவே வாஸ்தவத்தில் மாறிபிராவிட்டாலும் இப்போதாவது மாறிக் கொண்டு வருகின்றன. புதிய முறையில் நூதனமாய் வேலைகள் செய்ய ஆரம்பிப்பதற்கு அவசியமான தூரதிருஷ்டியும் கற்பனு சக்தியும் உள்ளவர்களாய் சாஸ்திர சம்பந்தமான ஞானமும் முதல் தரமான வேலைத் திறமையும் சேர்ந்தாற்போல் அமையப்பெற்றிருக்கும் நபர்களே இப்போது இந்தியாவில் விவசாய சம்பந்தமான ஆராய்ச்சி நடத்துவதற்குத் தேவையாயிருக்கிறார்கள். எந்த மாகாணத்திலும், உயர்தரமான மாகாண ஊழியவர்க்கத்துக்கு உத்தியோகஸ்தர்களைப் புதிதாய்த் தேர்ந்தெடுக்கும்போது, அந்த மாகாணத்திலேயே இருந்து அல்லது இந்தியாவிலிருந்துதான் தேர்ந்தெடுக்க வேண்டுமென்னும் நிர்ப்பந்தம் இருக்கக்கூடாதென்று நாங்கள் உறுதியாய் நம்புகிறோம். மிகச் சிறந்த நபர் எவ்விடத்தில் கிடைத்த போதிலுஞ்சரி, அவரையே தேர்ந்தெடுக்கவேண்டும். அபேட்சகரின் யோக்கியதாம்சத்தைக் கவனிக்கும்போது, அவர் சர்வகலா சாலைகளில் பெற்றிருக்கும் பட்டங்களைக் காட்டிலும் எந்த ஆராய்ச்சித் துறையில் வேலை செய்வதற்காக அவர் நியமிக்கப்படுகிறாரோ அந்த ஆராய்ச்சித் துறையில் அவர் செய்திருக்கும் வேலையையே அதிக முக்கியமாய்க் கவனிக்கவேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். ஆனால், ஒரு பிரக்கியாதியான சர்வகலாசாலையில் சாஸ்திரக் கல்வி விஷயமாய் ஹானர்ஸ் பட்டத்தையாவது அதற்குச் சமமான ஒரு பட்டத்தையாவது ஷை உத்தியோகத்துக்கு அவசியமாய் இருக்கவேண்டிய யோக்கியதாம்சமாக கருதவேண்டும்.

ஷை உத்தியோகஸ்தர்களை வேலையில் அமர்த்திக்கொள்வது சம்பந்தமான ஷரத்துகளைக் கவனிப்போம். சொற்ப கால அளவுகளுக்கு ஒப்பந்தம் செய்துகொண்டு அப்படிப்பட்ட உத்தியோகஸ்தர்களை வேலையில் அமர்த்திக்கொள்வதை நாங்கள் ஆதரிக்கமுடியாது. அப்படிப்பட்ட முறையை அனுசரிக்கிற பட்சத்திலே, யாதொரு உத்தியோகஸ்தர் தாம் ஊழியம் செய்யும் கால அளவில் அடைந்திருக்கும் சிறந்த அனுபவமானது அந்தக் கால அளவு முடிவாகும்போது அனேக சந்தர்ப்பங்களில் இந்தியாவுக்குக் கிடைக்காமற் போகும்படி ஏற்படும். மேலும், அவசியமான திறமையுள்ள ஆராய்ச்சி வேலை செய்பவர்களைப் புதிதாகத் தேர்ந்தெடுக்கவேண்டியிருந்தால், அது விஷயமாய் விசேஷ ஏற்பாடுகள் செய்யவேண்டியது அவசியமாகும். சரியான திறமை வாய்ந்த பரிபாலன உத்தியோகஸ்தரையாவது போதன உத்தியோகஸ்தரையாவது ஏற்படுத்துவதற்குப் போதுமானதாயிருக்கக்கூடிய அடிப்படையான சம்பளமானது முதல்தரமான ஆராய்ச்சி வேலை செய்யும் உத்தியோகஸ்தரை ஏற்படுத்துவதற்குப் போதுமானதாயிராதென்பது எங்களுடைய அபிப்பிராயம். தனித்தனி உத்தியோகஸ்தருக்கே உரியதாக விசேஷ சம்பள ரூபமாய் இதைக் கொடுத்தால் மிகுந்த பிரயோசனம் ஏற்படுமென்று நாங்கள் எண்ணுகிறோம். ஸர்க்காரைச் சேராத தனி ஸ்தாபனங்களிலிருந்தும் குடியேற்ற நாட்டு சாஸ்திர சம்பந்தமான ஊழிய வர்க்கம் நூதனமாய் ஏற்படுத்தப்பட்ட காலத்தில் அந்த

ஊழிய வர்க்கத்திலிருந்தும் முதல் தரமான அபேட்சகர்களுக்காக ஏற்பட்டிருக்கும் பலமான போட்டியை உத்தேசித்து, மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய அபேட்சகர்களுக்கு ஸ்காலர்ஷிப் என்னும் உபகாரச் சம்பளம் கொடுக்கும் முறையை ஏற்படுத்துவது நல்லதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த ஸ்காலர்ஷிப்புகள் - வேண்டியிருக்கும் வகையைச் சேர்ந்த யோக்கியதாம்சங்கள் பெற்றிருப்பவர்களாய்த் தேர்ந்தெடுக்கப்பட்ட பட்டதாரிகளுக்குக் கொடுக்கப்படும். மேலும், ஆராய்ச்சி செய்வதற்கான பதவிகளுக்கு அவசியமான யோக்கியதாம்சங்களைப் பெறுவதற்கு ஷை அபேட்சகர் பட்டம் பெற்ற பிறகு பயிற்சி அடைந்து வரும்போது, அவருடைய செலவுக்குப் போதுமானதாயிருக்கும்படி ஸ்காலர்ஷிப் கொடுக்கவேண்டும். இந்த ஸ்காலர்ஷிப்புகள் கொடுப்பதற்கும், ஸ்காலர்ஷிப் பெற்று வருபவர்கள் பட்டம் பெற்ற பிறகு தகுதியான மத்திய ஸ்தானங்களில் படிப்பதற்காக ஏற்பாடுகள் செய்வதற்கும், அவர்களுடைய அபிவிருத்தியைக் கவனித்து வருவதற்கும் விசேஷ வகையான சாதனம் வேண்டியிருக்கும். ஆகவே, பிரஸ்தாப ஏற்பாட்டுக்குச் சம்பந்தப்பட்ட காரியங்களை விவசாய ஆராய்ச்சி வேலை சம்பந்தமான ஆலோசனை சபையைச் சேர்ந்த ஒரு ஸப் கம்மிட்டியார் நிர்வகித்து வருவது உசிதமாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

மாகாண கவர்ன்மெண்டுகள் தங்களுடைய ஆராய்ச்சி வேலை சம்பந்தமான இலாகாக்களை ஒழுங்குபடுத்தி அமைக்கும்போது, அவர்கள் நூதனமாய் ஆராய்ச்சி வேலை நடத்துவதற்குரிய திறமை வாய்ந்தவர்களென்றும் ஏற்கனவே நன்றாய் ஏற்படுத்தப்பட்டிருக்கும் முறைகளின்படி மாத்திரமே வேலை செய்ய தகுதியுடையவர்களென்றும் முற்றிலும் வேறான இரண்டு வகைகளைச் சேர்ந்த ஆராய்ச்சி• வேலை செய்பவர்கள் இருக்கிறார்களென்பதை உணர வேண்டும். பின்னால் சொன்ன வகையைச் சேர்ந்தவர்களால் செய்யப்படும் வேலையானது ஒரு ஆராய்ச்சி ஸ்தாபனத்தில் நடக்கும் வேலையில் முக்கியமான பாகமாகும். ஆனால், இந்த வேலைக்கு உயர் தரமான திறமை வாய்ந்தவர்கள் வேண்டுமென்பதில்லை. ஆராய்ச்சி வேலை சம்பந்தமாக யாதொரு உத்தியோகத்தைப் புதிதாய் ஏற்படுத்தும் விஷயத்தைப்பற்றியாவது அந்த உத்தியோகத்துக்கு ஒருவரை நியமிக்கும் விஷயத்தைப்பற்றியாவது ஆலோசனை செய்யும்போது, மேற்சொன்ன இரண்டு வகைகளைப்பற்றியும் குழப்பம் எதுவும் ஏற்படாதபடி பார்த்துக்கொள்வது மிகவும் முக்கியமானதாகும். வாலாயமாய்ச் செய்துவரும் வேலையையே செய்யவேண்டியிருந்தால், அதற்கு 2-ம் வகுப்பைச் சேர்ந்த ஒரு உத்தியோகஸ்தரை ஏற்படுத்தவேண்டும். ஆராய்ச்சி வேலை சம்பந்தமான பதவிகளின் விஷயத்தில், 2-ம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களை 1-ம் வகுப்புக்கு உயர்த்துவதாயிருந்தால், உண்மையான ஆராய்ச்சி வேலை நடத்துபவருக்குரிய யோக்கியதாம்சங்கள் பெற்றிருக்கும் 2-ம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் கிடைத்தால் மாத்திரமே அந்தப்படி உயர்த்தவேண்டுமென்று இதனால் ஏற்படுகிறது.

உயர்தரமான விவசாயபபயிற்சி அடையும் விஷயத்தில் இந்தியாவானது பிறதேசங்களை எதிர்பார்க்காமல் தனக்குத்தானே உதவி செய்துகொள்ளக்கூடிய நிலைமையை இன்னும் அதிகமாய் அடைய வேண்டுமானால், விவசாயக் கலாசாலைகளில் செய்யப்படும் போதனையின் பரிமாணம் உயர்ந்ததாயிருக்கவேண்டுமென்பது அவசியமாகும். ஏனென்றால், பட்டதாரிகளுக்கு பட்டம் பெற்ற பிறகு பயிற்சி பெறுவதற்காக பூஸாவில் ஏற்படுத்திக் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்திருக்கும் வசதிகளை அவர்கள் பயன்படுத்திக் கொள்ளக்கூடியவர்களாயிருக்கும் விஷயமானது, விவசாயக் கலாசாலைகளில் விவசாய சம்பந்தமான மூலாதார சாஸ்திரங்களில் மாணுக்கர்கள் பெற்றிருக்கும் போதனையின் லட்சணத்தைப் பொறுத்ததாயிருக்கிறது. ஆகவே, விவசாயக் கலாசாலைகளைச் சேர்ந்த போதனைப் பகுதியைப் பலப்படுத்தவேண்டுமென்றும், விவசாய விஷயமாகவும் விவசாயப் பொருளாதார விஷயமாகவும் போதிக்கும் ஆசிரியர் பதவிகளுக்கும், தாவர சாஸ்திர சம்பந்தமாகவும் ரஸாயன சாஸ்திர சம்பந்தமாகவும் போதனை செய்யும் ஆசிரியர் பதவிகளை ஆராய்ச்சி வேலை செய்யும் உத்தியோகஸ்தர்கள் வகித்து வந்தால் இந்த விஷயங்களைக் கற்பிக்கும் முதன்மையான உபந்நியாசகர் பதவிகளுக்குங்கூட எப்போதும் இந்திய விவசாயஊழியவர்க்கத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களையே அல்லது புதிய மாகாண ஊழியவர்க்கங்களைச் சேர்ந்த 1-ம் வகுப்பு உத்தியோகஸ்தர்களையே நியமிக்கவேண்டுமென்றும் நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆராய்ச்சி வேலை செய்யும் பதவிகளை வகிப்பவர்களுக்காக நாங்கள் சிபாரிசு செய்கிற விசேஷ சம்பளத்தை, கலாசாலைகளிலுள்ள எந்த பதவிகளுக்குரிய வேலைகள் முற்றிலும் போதனை செய்யும் வேலையாகவோ அல்லது முக்கியமாய் அப்படிப்பட்ட வேலையாகவோ இருக்கிறதோ அந்தப் பதவிகளை வகிப்பவர்களுக்கே கொடுக்கவேண்டுமென்று நாங்கள் உத்தேசிக்கவில்லை.

பரிபாலன சம்பந்தமான பிரிவைக் கவனிக்கும்போது, 1-ம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகங்களில் ஏற்படும் காலிஸ்தானங்களில் அனேக ஸ்தானங்களுக்குச் சகஜமாய் 2-ம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் மேலுக்கு உயர்த்தப்படுவார்களென்று நாங்கள் எண்ணுகிறோம். நேராக உத்தியோகஸ்தர்களை நியமிக்கும் விஷயத்தில், அபேட்சகர்கள் சாஸ்திரப் பிரிவில் சர்வகலாசபையாரால் கொடுக்கப்படும் ஹானர்ஸ் பட்டமாவது அங்கீகாரமான யாதொரு விவசாயக் கலாசாலையில் கொடுக்கப்படும் டிப்ளோமா என்னும் யோக்கியதா பத்திரமாவது அம்மாதிரியான வேறே பட்டமாவது பெற்று விவசாயத்தில் அனுஷ்டான ரீதியாக அனுபவம் பெற்றவர்களாய் இருக்கவேண்டுமென்று வற்புறுத்தவேண்டும். அபேட்சகர் இதற்கு முன்னே ஒரு மாகாண விவசாயக் கலாசாலையிலாவது இந்தியாவிலுள்ள ஒரு சர்வகலாசாலையிலாவது பயிற்சி பெற்றவராயிருந்தால், பட்டம் பெற்ற பிறகு பயிற்சி அடைவதை முக்கியமான யோக்கியதாம்சமாக ஏற்படுத்தவேண்டும். நேராக புதிதாய்த் தேர்ந்தெடுக்கப்பட்டாவது கீழ் உத்தியோகத்திலிருந்து உயர்த்தப்பட்டாவது 1-ம் வகுப்பைச் சேர்ந்த பதவிகளுக்கு நியமிக்கப்படும் சகல

உத்தியோகஸ்தர்களையும், அவர்கள் அந்த பதவிகளுக்குத் தகுதியுடையவர்களாயிருக்கிறார்களா என்பதைக் கண்டறிய போதுமான காலம் வரையில், ப்ரொபேஷனில் (உமேதவாரியாக) நியமிக்க வேண்டும். இந்த கால அளவானது இரண்டு வருஷத்துக்குக் குறைவாயிருக்க முடியாதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ப்ரொபேஷனில் நியமிக்கப்பட்டவர் தம்மைத் தகுதியுள்ளவரென்று காட்டிக்கொள்ளத் தவறிப்போய்விட்டால், அவரை உத்தியோகத்தில் காயம் செய்வதைத் தயக்கமில்லாமல் மறுத்துவிட வேண்டும்.

ஊழியத்தின் ஆரம்ப வருஷங்களில் ஊழியத்தைச் சேர்ந்த பரிபாலனப் பிரிவிலும் ஆராய்ச்சிப் பிரிவிலும் போதனைப் பிரிவிலும் நியமிக்கப்பட்டிருப்பவர்களை ஒன்றிலிருந்து மற்றொன்றுக்கு மாற்றுவதற்குத் தாராளமாய் அனுமதி கொடுக்கிற பட்சத்திலே, உத்தியோகஸ்தர்கள் திறமை உள்ளவர்களாவார்களென்று நாஙகள் எண்ணுகிறோம்.

ஆராய்ச்சி சம்பந்தமான பதவிகளுக்கு விசேஷ சம்பளம் கொடுப்பது விஷயமாய் ஏற்கனவே சொல்லியிருக்கும் நிர்ப்பந்தத்துக்குட்பட்டும், விவசாய முறைகளை நடத்திக்காட்டுவதற்காகவும் பிரசார வேலை செய்வதற்காகவும் விற்பனை சம்பந்தமான ஆராய்ச்சிகள் செய்வதற்காகவும் ஏற்பட்டிருக்கும் டெப்யுடி டைரெக்டர் ஸ்தானங்களைப்போல் விசேஷ யோக்கியதாம்சங்கள் வேண்டியிருக்கும் பரிபாலன சம்பந்தமான பதவிகளுக்கு மேலேகண்ட மாதிரி சம்பளம் கொடுப்பது விரும்பத்தக்கதாயிருக்கக்கூடுமென்பதற்குட்பட்டும், இப்போது இந்திய விவசாய ஊழியவர்க்கத்துக்குக் கால முறைப்படி நிர்ணயித்துக் கொடுத்துவரப்படும் (மாதமொன்றுக்கு 350 ரூபாய் முதல் 1,250 ரூபாய் வரையில் கொடுத்து வரப்படும்) அடிப்படையான சம்பளம் விதமானது 1-ம் வகுப்பு உத்தியோகங்களுக்குப் போதுமானதாயிருக்குமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தியாவிலுள்ள உயர்தரமான ஸிவில் ஸெர்விஸ் என்னும் ஊழிய வர்க்கங்களைக் குறித்து விசாரணை நடத்திய ராஜாங்கக் கம்மிஷனானது புதிதாய் ஏற்படும் மாகாண ஊழிய வர்க்கங்கள், ஏற்கனவே ஏற்பட்டிருக்கும் மாகாணஊழிய வர்க்கங்கள் ஆகிய இவ்விரண்டு வர்க்கங்களைக் குறித்தும் ஒழுங்கேற்படுத்துவதற்காக பப்ளிக் ஸெர்விஸ் ஆக்ட் என்னும் ஸர்க்கார் ஊழிய சம்பந்தமான ஆக்டுகளை ஜாரிசெய்ய பிரதேச கவர்ன்மென்டுகளும் பிரதேச சட்டநிரூபண சபைகளும் உடனே நடவடிக்கை நடத்தவேண்டுமென்று சிபாரிசு செய்திருந்தது. சாதாரணமாய்த் தங்களுக்கு மிகவும் அனுகூலமாயுள்ள திட்டங்கள் ஏற்பட்டிருப்பதாகக் கருதி உத்தியோகத்தைப் பெற விரும்பக்கூடிய நிலைமையிலிருந்து விசேஷ திறமை வாய்ந்தவர்களாயிருக்கும் நபர்கள் கிடைக்கவேண்டுமானால், 1-ம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகங்களுக்கு நபர்களைப் புதிதாய்த் தேர்ந்தெடுக்க ஆரம்பிப்பதற்கு முன்னே மேலேகண்ட சிபாரிசை அமுலுக்குக் கொண்டுவருவது மிகவும் முக்கியமான விஷயமென்று நாங்கள் கருதுகிறோம். அரசியல் கட்சிகளில் உள்ளவர்கள் தங்களுடைய செல்

வாக்கை உபயோகித்து உத்தியோகங்கள் விஷயமாய்த் தலையிடுவது காரணமாக ஏற் படக்கூடிய தீமைகளை விலக்கவேண்டுமானால், மாகாண கவர்ன் மென்டுகளுக்குப் புறம்பாக இருந்து ஊழிய சம்பந்தமான விஷயங்களைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற்கு ஒரு அதிகாரியோ அல்லது அதிகார சபையோ இருக்கவேண்டுமென்பது பிரத்தியட்ச மான விஷயமென்று எங்களுக்குத் தோற்றுகிறது.

பற்பல மாகாண ஊழிய வர்க்கங்களுக்குள்ளும் எவ்வளவு நெருக்கமாய்ச் சம்பந்தம் ஏற்படுவது சாத்தியமோ அவ்வளவு நெருக்கமான சம்பந்தம் ஏற்படவேண்டுமென்றும், விசேஷப் பிரசினைகளைக் குறித்து விவகரிப்பதற்கு ஒரு வர்க்கத்திலுள்ள உத்தியோகஸ்தர்களை மற்றொரு வர்க்கத்துக்கு மாற்றுவதற்கு ஏற்பாடுகள் செய்யப்படவேண்டுமென்றும் நாங்கள் எண்ணுகிறோம். அம்மாதிரியே, இந்தியாவில் இது விஷயமாய் வேலை செய்பவர்கள் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த இதர நாடுகளில் வேலை செய்பவர்களுடன் சம்பந்தம் வைத்துக்கொள்ளவேண்டும். ஏகாதிபத்தியத்தில் ஒரே தொடர்ச்சியாய் ஆராய்ச்சி வேலை ஸ்தாபனங்களை ஏற்படுத்தினால், அந்த வேலை செய்பவர்கள் தங்களுக்குள் நேராக சம்பந்தம் வைத்துக்கொள்வதற்குச் சிறந்த சந்தர்ப்பம் வாய்க்கும். எப்படியென்றால், அப்படிப்பட்ட சம்பந்தம் ஏற்படுகிறபட்சத்திலே, இந்தியாவில் ஆராய்ச்சி வேலை செய்பவர்களும் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த இதர பாகங்களில் அப்படிப்பட்ட வேலை செய்பவர்களும் ஒருவருக்கொருவரைப் போய்ப் பார்த்துக்கொள்வதற்கு ஏற்பாடுகள் செய்வது மிகவும் சுலபமாவது மாத்திரமேயல்லாமல், அந்தப்படி பார்த்துக் கொள்வதனால் நேராகவும் அதைக்காட்டிலும் அதிகமாக நேராகவல்லாமல் மற்றப்படியும் ஏற்படும் பலன்கள் இருவகையாருக்கும் அதிக பிரயோசனகரமாகவும் இருக்கும். விஷயங்களைக் கற்றறிவதற்காகச் செல்லும் உத்தியோகஸ்தர்களுக்குத் தாராளமாக ரஜா கொடுக்கவேண்டும். மேலும், ஆராய்ச்சி வேலை செய்பவர்களுக்கு இந்தப்படி ரஜா கொடுப்பதனால், இந்தியாவிலுள்ள ஆராய்ச்சி வேலை ஸ்தாபனங்களிலும் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த இதர பாகங்களிலுள்ள ஆராய்ச்சி வேலை ஸ்தாபனங்களிலும் இருக்கும் உத்தியோகஸ்தர்கள் நிஷ்கரிஷையான கால அளவுகளுக்கு ஒரு ஸ்தாபனத்திலிருந்து மற்றொரு ஸ்தாபனத்துக்கு மாறி வேலை பார்க்கும் முறை நாளாவர்த்தியில் விருத்தி அடையுமென்று நாங்கள் நம்புகிறோம்.

இப்போது இருக்கும் மாகாண விவசாய ஊழிய வர்க்கங்களில் உள்ளவர்களுக்கு ஏற்படும் அலுவல்களின் தன்மையில் முக்கியமான மாறுதல் எதுவும் ஏற்படுமென்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. ஆயினும், விவசாயம் அபிவிருத்தி அடைந்துவரும்போது அவர்களுடைய அலுவல்களின் முக்கியத்தையும் விரைவில் அதிகரிக்கும். இவர்கள் - விவசாய சங்கங்களுக்கும், தாலூகா அபிவிருத்தி சங்கங்களுக்கும், கூட்டுறவு முறையில் முன்னிலும் நன்றாய்ப் பயிரிடுவதற்காக ஏற்பட்டிருக்கும் சங்கங்களுக்கும், விவசாய அபிவிருத்தி ஏற்படவேண்டுமென்னும் விருப்பம் நாளாவர்த்தியில் அதிகமாய் எந்த ஸ்தாபனங்கள் மூலமாக வெளிப்படுத்தப்படுமென்று நாங்கள் நம்புகிறோமோ அப்படிப்பட்ட இதர ஸ்தாபனங்களுக்கும் ஆலோசனை சொல்

பவர்களாய் இருந்துவருகிறார்கள். அதனால், இவர்கள் 1-ம் வகுப்பைச் சேர்ந்த நிபுணர்களாயிருக்கும் உத்தியோகஸ்தர்களையும் தனித் தனியான நிலத்துக்குடையவரையும் விவசாயியையும் சம்பந்தப்படுத்திவைக்கும் உத்தியோகஸ்தர்களாக இருந்துவருவார்கள். ஆகவே, 2-ம் வகுப்புப் பதவிகளுக்கு கீழ் உத்தியோகஸ்தர்களை உயர்த்தும்போது, கண்டிப்பாய் அவர்களுடைய திறமையை அனுசரித்துப் பொறுக்கியெடுத்து அந்தப்படி உயர்த்தவேண்டுமேயொழிய உத்தியோகத்தில் அவர்கள் முதன்மையாயிருக்கிறார்களென்பதை முக்கியமான விஷயமாக கருதவேகூடாது. இந்த ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுக்கும் முறையில் எவ்வித மாறுதலும் செய்யும்படி ஆலோசனை சொல்வதற்கு நியாயம் ஏதுவும் இருப்பதாக எங்களுக்குத் தோற்றவில்லை. பரிபாலன சம்பந்தமான பதவிகளில் காலி ஸ்தானங்கள் ஏற்பட்டால், அப்படிப்பட்ட காலி ஸ்தானங்களுக்கு கீழ்ப்பட்ட ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த மேல் தரங்களிலிருக்கும் உத்தியோகஸ்தர்களை உயர்த்தி அவைகளைச் சாதாரணமாய்ப் பூர்த்திசெய்யலாம். ஆராய்ச்சி சம்பந்தமான வேலைகளுக்கும் போதனை செய்வது சம்பந்தமான வேலைகளுக்கும் சாதாரணமாய் நேராக உத்தியோகஸ்தர்கள் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படுவார்கள். பப்ளிக் ஸெர்விஸ் கம்மிஷன் என்னும் சபைகள் மாகாணங்களில் ஏற்படுத்தப்படுகிறவரையில், இந்த ஊழிய வர்க்கங்களுக்கு கீழேயிருக்கும் உத்தியோகஸ்தர்களை மேலுக்கு உயர்த்தும் விஷயத்தையும் நேராக உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்கும் விஷயத்தையும், அபேட்சகர்களின் யோக்கியதைகளைச் சீர்தூக்கிப் பார்த்துத் தெரிந்தெடுப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் ஒரு திடமான கம்மிட்டியாரின் சிபாரிசை அனுசரித்துச் செய்யவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம்.

அடுத்தபடியாக விவசாய ஊழிய வர்க்கங்களில் கீழ்த்தரமான உத்தியோகங்கள் வகிப்பவர்களைக் குறித்துச் சொல்லுவோம். இந்த தரங்களிலுள்ள உத்தியோகஸ்தர்கள்தான் சிறிய பண்ணைகளை நிர்வாகம் செய்வது, விதைகளைப் பொறுக்கியெடுத்து விருத்திசெய்து விவசாயிகளுக்குப் பங்கீடு செய்வது, கால்நடைகளை நிர்வகித்து வருவது ஆகிய இவைகளைப்போன்ற விவசாய இலாகாவைச் சேர்ந்த நுட்பமான வேலைகளையெல்லாம் செய்துவருகிறார்கள். இந்த வேலைகளைச் சித்திகரமாய்ச் செய்யவேண்டுமானால், அவர்களுக்கு உயர்தரமான சாமர்த்தியமும் புத்திசாலித்தனமும் இருப்பது அவசியமாகும். விவசாயக் கலாசாலைகளைச் சேர்ந்த பட்டதாரிகளிலிருந்தும் யோக்கியதா பத்திரம் பெற்றிருப்பவர்களிலிருந்தும் மேலே கண்ட கீழ்ப்பட்ட ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த மேல் தரங்களிலுள்ள உத்தியோகஸ்தர்கள் நியமிக்கப்படுகிறார்கள். மேலும், இவர்கள் செய்துவரும் அலுவல்களின் முக்கியதையைக் குறித்து உண்டாகக்கூடிய யாதொரு சந்தேகத்தை நிவர்த்திக்கும்பொருட்டு, சகல மாகாணங்களிலும் கூடி கீழ்ப்பட்ட ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த இரண்டு உயர்தரங்களில் இருக்கும் உத்தியோகஸ்தர்களுக்கு 1-ம் வகுப்பு விவசாய உதவி உத்தியோகஸ்தர்களென்றும் 2-ம் வகுப்பு விவசாய உதவி உத்தியோகஸ்தர்களென்றும் பெயர் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம். இந்த உதவி உத்தி

யோகஸ்தர்களில் ஒரு தொகையார் சாதாரண காலக்கிரமத்தில் மாகாண விவசாய ஊழிய வர்க்கங்களைச் சேர்ந்த 2-ம் வகுப்புப் பதவி களுக்கு உயர்த்தப்படுவார்கள். ஆகையால், அவர்களை முதலில் உத்தியோகத்துக்கு நியமிக்கும்போதே ஜாக்கிரதையாய்த் தேர்ந் தெடுத்து நியமிப்பது முக்கியமென்றும், அவர்களைச் சிறிதுகாலம் ப்ரொபேஷனில் வைத்திருப்பது அவசியமென்றும், அவர்கள் ப்ரொ பேஷனில் இருந்த காலத்தில் செய்த வேலையைக் குறித்த விவரங் களைக் கண்டிப்பாய்ப் பரிசோதனை செய்து பார்த்தபிறகே அவர்களை வேலையில் காயம் செய்யவேண்டுமென்றும் நாங்கள் வற்புறுத்த விரு ம்புகிறோம்.

பூஸாவிலிருக்கும் ஆராய்ச்சி ஸ்தாபனமானது இந்தியாவிலுள்ள சகல ஆராய்ச்சி ஸ்தாபனங்களுக்கும் ஒரு பிரமாணமாக இருக்குமெ ன்று நாங்கள் எண்ணுகிறோம். மேலும், அது மாகாண விவசாயக் கலாசாலைகளில் படித்துத் தேறிய மாணக்கர்கள் பட்டம் பெற்ற பிறகு படிப்பதற்கு ஒரு மத்திய ஸ்தானமாயிருக்குமென்று நாங்கள் நம்புகிறோம். அன்றியும், பூஸாவிலுள்ள ஸ்தாபனமானது இந்தி யாவில் விவசாய ஆராய்ச்சி வேலையை நடத்துவதற்கு ஒரு பிரமாண த்தை நிர்ணயிக்கவேண்டியிருந்து, மாணக்கர்கள் பட்டம் பெற்ற பிறகு பயிற்சி பெறுவதற்கு அது அங்கீகாரமான முக்கிய ஸ்தாபன மாக விளங்கவேண்டுமானால், அதைச் சேர்ந்த உயர்தர சிப்பந்திகள் மிகச்சிறந்த திறமை வாய்ந்தவர்களாயிருக்கும் ஆராய்ச்சி வேலை செய்பவர்களாகவும் உபாத்தியாயர்களாகவும் இருப்பது அவசியமா கும். இந்தியா கவர்ன்மெண்டுக்கு விவசாய விஷயங்களில் ஆலோ சனை சொலலும அக்ரிகல்சுரல் அட்வைஸர் என்னும உத்தியோகஸ் தருடன்கூட இப்போது பூஸாவில் ஒன்பது உத்தியோகஸ்தர்கள் வசித்துவருகிறார்கள். இவர்கள் ஏகாதிபத்திய விவசாய இலாகா வில் 1-ம்வகுப்பு உத்தியோகங்களென்று சொல்லப்படும் உத்தி யோகங்கள் வகித்துவருகிறார்கள். இவர்களில் ஆறு பேர் ஷெ ஸ்தாபனத்தின் வேலையைப் பிரித்திருக்கும் ஆறு பிரிவுகளுக்குத் தலைவர்களாயிருக்கிறார்கள். அந்த பிரிவுகள் - கிருமி சாஸ்திரம், தாவர சாஸ்திரம், ரஸாயன சாஸ்திரம், பயிரிடுவதும் கால்நடைகளை வளர்ப்பதும் (இது இம்பீரியல் அக்ரிகல்சுரிஸ்ட் என்னும் உத்தி யோகஸ்தரின் விசாரணையில் இருக்கிறது), பூச்சி இலக்கண நூல், பூஞ்சண சாஸ்திரம் ஆகிய இவை சம்பந்தமான பிரிவுகளாகும். அங்கதர்ம சாஸ்திர சம்பந்தமான ரஸாயன சாஸ்திர நிபுணர், இம்பீரியல் டேய்ரி எக்ஸ்பொர்ட் என்னும் நிபுணர் ஆகிய இவர்களின் ஆபிஸ் தலைமை ஸ்தானம் பங்களூ ரில் இருக்கிறது. அவர்களும் தங்கள் தங்களுடைய பிரிவுகளுக்குத் தலைவர்களாயிருக்கிறார்கள். இனிமேல் ஏற்படுத்தவேண்டியிருக் கும் உத்தியோகங்களின் தொகையைக் குறித்தும் தன்மையைக் குறித்தும் நிச்சயமாக எவ்விதத்திலும் மதிப்பிட்டுச் சொல்லமுடி யாது. ஆனால், பூஸாவிலுள்ள சிப்பந்திகளின் தொகையைப்பற்றி ஆலோசிக்கும்போது, பூஸாவிலிருக்கும் ஸ்தாபனமானது ஆராய்ச்சி ஸ்தாபனம் என்னும் சொற்றொடர் இதர தேசங்களில் உப யோகிக்கப்படுகிறபடி, ஒரு சாதாரண ஆராய்ச்சி ஸ்தாபன மல்லவென்பதையும், அது பல ஸ்தாபனங்கள் சேர்ந்த ஒரு தொகுதி என்பதையும், அது பிரிக்கப்பட்டிருக்கும் பிரிவுகளுக்கு

ர்ன்துவரையில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிப்பந்திகள் இதர இடங் களில், உதாரணமாக க்ரேட் ப்ரிட்டனில், இருக்கும் அம்மாதிரியான ஸ்தாபனங்களில் ஏற்படுத்தப்பட்டிருக்கும் சிப்பந்திகளைக்காட்டிலும் மிகக்குறைந்த விதப்படி ஏற்படுத்தப்பட்டிருக்கிறார்களென்பதை யும் ஞாபகத்தில் வைக்கவேண்டும். டைரெக்டரையும் அந்தந்த பிரிவுகளின் தலைவர்களையும் வெகு ஜாக்கிரதையாக தேர்ந்தெடுப் பது அவசியமாயிருக்கும். ஏற்கனவே ஊழியத்திலிருக்கும் மிக்க திறமை வாய்ந்த எந்த உத்தியோகஸ்தரையும் டைரெக்டராகவோ பிரிவின் தலைமை அதிகாரியாகவோ நியமிப்பதைத் தடுக்க நாங்கள் விரும்பவில்லை. ஆயினும், இப்போதுள்ள நிலைமைகளைக் கவனிக்கும் போது, இந்த உத்தியோகங்களுக்குப் பெரும்பாலும் வெளிநாடுகளி லிருந்து அபேட்சகர்களை நேராய்த் தேர்ந்தெடுத்து நியமிப்பது அவ சியமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். 1-ம் வகுப்பைச் சேர் ந்த இதர உத்தியோகஸ்தர்களை நேராகவாவது இந்திய விவசாய ஊழிய வர்க்கத்திலிருந்தாகிலும் உயர்தர மாகாண விவசாய ஊழிய வர்க்கங்களிலிருந்தாகிலும் தேர்ந்தெடுத்தாவது நியமிக்கவேண்டும். பூஸாவிலுள்ள ஸ்தாபனத்துக்கும் அதன் உப ஸ்தாபனங்களுக்கும் வேண்டிய சிப்பந்திகளை நிரந்தரமான ஒரு ஊழிய வர்க்கத்தைச் சேர் ந்த உத்தியோகஸ்தர்களாக நியமிக்கவேண்டுமேயொழிய, சொற்ப கால அளவுகளுக்கு ஒப்பந்தம் செய்துகொண்டு அவர்களை நியமிக்கக் கூடாது. மேலும், இந்த ஊழிய வர்க்கத்துக்கு ஸெண்ட்ரல் அக்ரிகல் சுரல் ரிஸர்ச் ஸெர்விஸ் என்னும் மத்திய விவசாய ஆராய்ச்சி ஊழிய வர்க்கமென்னும் பெயர் கொடுக்கவேண்டுமென்று நாங்கள் பிரேரே பிக்கிறோம். கிடைக்கக்கூடிய அபேட்சகர்களில் மிகச் சிறந்தவரை டைரெக்டராக நியமிப்பதற்கு என்ன விதப்படி சம்பளத்தை நிர்ண யிக்கவேண்டியிருக்குமோ அந்த விதப்படி நிர்ணயிப்பது அவசிய மாகும். பிரிவுகளின் தலைமை உத்தியோகஸ்தர்களுக்குத் தகுதியான ஒரு சம்பள விதத்தைப் பிரேரேபிப்பது எங்களுக்குக் கஷ்டமாக இருக்கிறது. ஆயினும், நாங்கள் அவசியமென்று கருதும் திறமை யுள்ள உத்தியோகஸ்தர்கள் கிடைக்கவேண்டுமானால், அவர்களின் சம்பள விதமானது வெகுசாய் ரூ. 1,500—50—2,000க்குக் குறைவா யிருக்கக்கூடாதென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். டைரெக் டரும் பிரிவுகளின் தலைமை உத்தியோகஸ்தர்களும் பென்ஷன் பெறு வதற்கான உரிமையை ஏற்கனவே பெற்றிராவிட்டால், அவர்களு க்கு ப்ராவிடென்ட் பண்ட் என்னும் எதிர்கால சகாயநிதியை ஏற்படு த்தவேண்டும்.

நாங்கள் ஏற்கனவே சொல்லியிருக்கிறபடி இத்தனை உத்தியோ கங்கள் வேண்டியிருக்குமென்று எங்களால் மதிப்பிட்டுச் சொல்ல முடியாவிட்டாலும், ஆரம்ப ஏற்பாடாக பிரிவுகளின் தலைமை உத்தி யோகஸ்தர்களுடன்கூட ஒவ்வொரு பிரிவுடனும் குறைந்தபட்சம் ஒரு 1-ம் வகுப்பு 'உத்தியோகஸ்தராவது ஏற்பட்டிருக்கவேண்டு மென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். பிரிவுகளின் தலைமை உத்தியோகஸ்தர்களுக்கும் இந்த 1-ம் வகுப்பு உத்தியோகஸ்தர்களுக் கும் உள்ள சம்பந்தமானது - அனேகமாய் யாதொரு சர்வகலாசாலை யில் ஒரு விஷயத்தைக் கற்பிக்கும் ஆசிரியருக்கும் அதே விஷயத்தில்

உபந்யாசம் செய்பவருக்குமுள்ள சம்பந்தத்தைப் போலவே இருக்கும். இவர்களை மூன்று வருஷ காலம் ப்ரொபேஷனில் வைத்திருப்பது தகுதியாயிருக்கும். இந்தப்படி ப்ரொபேஷனில் வைத்திருப்பதற்காக நிஷ்கரிஷை செய்யப்பட்ட கால அளவு கழிந்த பிறகு, இந்த உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய உத்தியோகங்களில் காயம் செய்யப்பட்டு அவர்கள் ஊழியம் செய்யும் மீதிகாலம் வரையில் ஸென்ட்ரல் அக்ரிகல்சுரல் ரிஸேர்ச் ஸெர்விஸ் என்னும் மத்திய விவசாய ஆராய்ச்சி செய்யும் ஊழியவர்க்கத்திலேயே சாதாரணமாய் இருந்துவருவார்களென்றாவது, அவர்களுடைய மாகாணங்களுக்குத் திருப்பி அனுப்பிவிடப்படுவார்களென்றாவது நாங்கள் எண்ணுகிறோம். இந்த உத்தியோகஸ்தர்கள் சம்பந்தப்பட்டமட்டில், இப்போது பூஸாவில் ஊழியம் செய்வதற்காக கொடுக்கப்படும் வர்த்தனைக்குப் பர்த்தியாக தற்காலத்தில் இந்திய விவசாய ஊழிய வர்க்கத்துக்குக் காலக்கிரமத்தை அனுசரித்து நிர்ணயிக்கப்பட்டிருக்கும் சம்பளத்துடன் தகுதியான ஒரு தொகையைச் சேர்த்து அந்த வீதப்படி சம்பளம் கொடுத்துவருவது போதுமானதென்று நாங்கள் எண்ணுகிறோம். நிலைமை எங்கும் ஒரேமாதிரியாய் இருக்கும்பொருட்டு, இந்த உத்தியோகங்களுக்கு நேராய்த தேர்ந்தெடுத்து நியமிக்கப்படும் உத்தியோகஸ்தர்களுக்கு ப்ராவிடென்ட் பண்ட் ஏற்படுத்தவேண்டும். இந்திய விவசாய ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த அல்லது மாகாண ஊழிய வர்க்கங்களில் 1-ம் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் சாதாரண விதிகளின்படி பென்ஷன் பெற்றுவருவார்கள்.

ஏகாதிபத்திய விவசாய இலாகாவில் 2-ம் வகுப்பு உத்தியோகஸ்தர்களென்று அழைக்கப்படும் உத்தியோகஸ்தர்கள் இப்போது பூஸாவிலிருக்கும் உயர்தர சிப்பந்திகளுக்கு உதவி செய்துவருகிறார்கள். அவர்கள் - சாதாரணமாய் விவசாயக் கலாசாலைகளைச் சேர்ந்த பட்டதாரிகளாகவாவது யோக்கியதாபத்திரம் பெற்றவர்களாகவாவது சாஸ்திர சம்பந்தமாய்ப் பிரசித்தி அடைந்திருக்கும் சர்வகலாசாலைகளைச் சேர்ந்த பட்டதாரிகளாகவாவது இருக்கிறார்கள். உபயோககரமான இந்த வகுப்பு உத்தியோகஸ்தர்களை விருத்தி செய்வதுடன் அவர்களுடைய அந்தஸ்தையும் உயர்த்தவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்த வகுப்பைச் சேர்ந்த உத்தியோகங்களுக்கு மாகாணங்களில் முன்னேற்றமடையக்கூடியவர்களென்று தோற்றும் கீழ்த்தரத்திலுள்ள 1-ம் வகுப்பு உத்தியோகஸ்தர்களையும், சிறிதுமட்டில் மாகாணங்களில் விசேஷ திறமை வாய்ந்திருப்பவர்களென்று காட்டக்கூடிய வேலை செய்திருக்கும் 2-ம் வகுப்பு உத்தியோகஸ்தர்களையும் பெரும்பாலும் நியமிப்பது பிரயோசனகரமாயிருக்குமென்று நாங்கள் எண்ணுகிறோம். பூஸாவிலுள்ள ஊழிய வர்க்கங்களுக்கும் மாகாண ஊழிய வர்க்கங்களுக்கும் இன்னும் ஒரு வழியில் சம்பந்தம் ஏற்படுத்தும்பொருட்டு, இந்த உத்தியோகங்களை மாகாண ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் வகித்துவந்தால் அவைகளின் கால அளவை ஐந்து வருஷமாக நிர்ணயிக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்திய சர்வகலாசாலைகளைச் சேர்ந்த பட்டதாரிகளும் விவசாயக் கலாசாலைகளில் படித்துத் தேறிய மாணுக்கர்களும் பட்டம் பெற்ற பிறகு ஒரு

குறிப்பிட்ட காலஅளவுக்குப் பயிற்சி அடைந்திருந்தால், அவர்கள் இந்த வகுப்பைச் சேர்ந்த உத்தியோகங்களுக்கு நேராய் நியமிக்கப் படத் தகுதியுள்ளவர்களாக இருந்துவருவார்கள். அவர்களுடைய சம்பளம் சம்பந்தப்பட்டமட்டில், மாகாண ஊழிய வர்க்கத்தைச் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் அவர்களுடைய மாகாணத்தில் நிர்ண யிக்கப்பட்டிருக்கும் திட்டத்தின்படி சம்பளமும், மாதமொன்றுக்கு பூஸாவில் கொடுக்கப்படும் 150 ரூபாய் வர்த்தனையும் பெற்றுவர வேண்டுமென்றும், நேராய்த் தேர்ந்தெடுத்து நியமிக்கப்படும் உத்தி யோகஸ்தர்கள் மாகாண ஊழிய வர்க்கத்தில் 2-ம் வகுப்பு உத்தியோ கஸ்தர்களுக்காக நிர்ணயிக்கப்பட்டிருக்கும் திட்டப்படி சம்பளமும் மேலேகண்ட வர்த்தனையைப் போன்ற ஒரு வர்த்தனையும் பெற்று வரவேண்டுமென்றும் நாங்கள் ஆலோசனை சொல்லுகிறோம். இவ் வகுப்பைச் சேர்ந்த உத்தியோகங்களிலுள்ள ஒவ்வொருவரும் பென் ஷன் பெறக்கூடியவர்களாக இருக்கவேண்டும்.

விவசாய ஆராய்ச்சிவேலை சம்பந்தமான ஆலோசனை சபை ஏற் பட்டிருப்பதனால், பூஸாவிலுள்ள சிப்பந்திகளுக்கும் மாகாண விவ சாய இலாகாக்களுக்கும் இப்போது இருப்பதைக்காட்டிலும் அதிக நெருக்கமான சம்பந்தம் ஏற்படுமென்று நாங்கள் நம்புகிறோம். அவர்கள் மாகாணங்களைப் போய்ப் பார்ப்பதனால் மத்திய விவசாய ஊழிய வர்க்கத்திலுள்ள உத்தியோகஸ்தர்களின் நோக்கம் விரிவடை யாமலும் அவர்களுடைய அநுபவம் அதிகப்படாமலும் இருக்கமுடி யாது. சொற்பகாலம் மாகாணங்களுக்குப் போய்ப் பார்த்துவிட்டு வருவதற்காகப் பிடிக்கும் செலவைப் பூஸாவிலிருக்கும் ஸ்தாபனத்துக் குச் சாதாரணமாய்ப் பிடிக்கும் செலவின் ஒரு பாகமாக கருத வேண்டுமென்று நாங்கள் எண்ணுகிறோம். மேலும், திரவிய விஷய மாய் இந்தியா கவர்ன்மென்டுக்கும் மாகாண கவர்ன்மென்டுகளுக்கும் ஏற்பட்டிருக்கும் சம்பந்தத்தைக் குறித்து ஒழுங்கேற்படுத்துவதற் காக இப்போதிருக்கும் விதிகளின்படி இந்தப்படி செய்வதற்குத் தடங்கல் ஏதாகிலும் உண்டானால் அதை நீக்கவேண்டும்.

புதிதாய் ஏற்படுத்தப்பட்ட உயர்தர மாகாண விவசாய ஊழிய வர்க்கங்களுக்கு யாதொரு மாகாணத்திலிருந்துதான் அல்லது இந்தி யாவிலிருந்துதான் உத்தியோகஸ்தர்களைத் தேர்ந்தெடுத்து நியமிக்க வேண்டுமென்று நிர்ப்பந்தம் ஏற்படுத்துகிற பட்சத்திலே, ஊழிய வர்க்கங்களின் திறமைக்குப் பிரமாதமாய் பாதகம் ஏற்படுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். இந்தப்படி நாங்கள் நன்றாய் ஆலோசித்து முடிவுக்கு வந்திருக்கும் விஷயத்தை இங்கே கடைசி யாக எழுதிவைக்க விரும்புகிறோம். முன்னிலும் விரிவான நோக்க மும் பலவகைப்பட்ட அநுபவமும் இருக்கவேண்டுமென்று கோரு கிற பட்சத்திலே, வெளிதேசங்களிலிருந்து நேராய் உத்தியோகஸ் தர்களைத் தேர்ந்தெடுத்து நியமித்தால் அவர்களால் இந்திய விவசாய அபிவிருத்திக்குச் சிறந்த உதவி ஏற்படக்கூடும். ஆகவே, ஐரோப் பிய உத்தியோகஸ்தர்கள் இடைவிடாமல் ஒத்துழைத்து வருவதைப் பற்றி இந்தியாவிலுள்ள உயர்தர ஸிவில் ஊழிய வர்க்கங்களைக் குறி த்து விசாரணை செய்யும்படி நியமிக்கப்பட்ட ராஜாங்க கம்மிஷன் வெளியிட்டிருக்கும் கோரிக்கையை நாங்கள் பலமாய் ஆதரிக் கிறோம்.

## 18. பலவகைப்பட்டவை.

பிரதான ரிபோர்ட்டின் 20-ம் அத்தியாயம்

இந்தியா கவர்ன்மெண்டாரின் நேரான மேல்விசாரணைக்குட்பட்டிருக்கும் சிறிய மாகாணங்களில் விவசாய அபிவிருத்தியைப்பற்றி இதுவரையில் கவனித்து வந்ததைவிட அதிகமாய் கவனம் செலுத்துவது அவசியமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். வடமேற்கு எல்லைப்புற மாகாணமானது விஸ்தீர்ணத்தில் மிகப் பெரியதாயிராவிட்டாலும், சிறு மாகாணங்கள் எல்லாவற்றிலும் மிகவும் முக்கியமானதாகும். இந்த மாகாணத்தின் விவசாய சம்பந்தமான பிரசினைகளும் கிராம அபிவிருத்தி சம்பந்தமான இதர பிரசினைகளும் - இந்த ரிபோர்ட்டின் முந்திய அத்தியாயங்களில் இந்தியாவிலுள்ள ஒன்பது பெரிய மாகாணங்களின் பிரசினைகளோடு சேர்த்துப் பரிசீலனை செய்யப்பட்டிருக்கின்றன. ஆகவே, இங்கே அவைகளைப்பற்றி பின்னும் விவகரிப்பது அனுவசியமாகும். இந்தியா கவர்ன்மெண்டாரின் மேல்விசாரணைக்குட்பட்டிருக்கும் மற்ற ஐந்து சிறிய மாகாணங்கள் எவையென்றால், பலுசிஸ்தானம், ஆஜ்மீர் - மேர்வாரா, அந்தமான் தீவு, குடகு, டெல்லி என்பவைகளாகும். இவைகளில் டெல்லியைத் தவிர மற்ற மாகாணங்களுக்கு ஒரு திட்டமான விவசாய அமைப்பு ஏற்பட்டிருக்கவேண்டுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். அப்படிப்பட்ட அமைப்புக்காகப் பிடிக்கும் செலவை அவை கொடுக்க முடியாவிட்டால், இந்தியா கவர்ன்மெண்டின் வரும்படியிலிருந்து அதைக் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யவேண்டும். ஆராய்ச்சிவேலை சம்பந்தப்பட்டமட்டில், அவை பூஸாவிலிருக்கும் ஸ்தாபனத்தையும் சமீபத்திலுள்ள பெரிய மாகாணங்களில் ஆராய்ச்சிவேலை சம்பந்தமாய் ஏற்பட்டிருக்கும் சிப்பந்திகளையும் நம்பியிருக்கவேண்டும். ஜில்லாவில் நடத்தப்படும் வேலை சம்பந்தப்பட்டமட்டில், பலுசிஸ்தானம், ஆஜ்மீர்-மேர்வாரா, குடகு, அந்தமான் தீவு ஆகிய இவைகளுக்கு ஒரு டெப்யுடி டைரெக்டரின் வட்டத்தைச் சேர்ந்த சிப்பந்திகளை ஏற்படுத்துவது தகுதியானதாயிருக்கும். இதர மாகாணங்களிலிருந்து டெப்யுடி டைரெக்டரின் உத்தியோகத்துக்கு ஒருவரை வருவிக்கவேண்டும். சமீபத்திலுள்ள பெரிய மாகாணத்திலிருந்து ஒருவரை அந்தப்படி எடுத்துக் கொள்வது சிலாக்கியமாயிருக்கும். மேலும், அவருக்கு அதிகரித்த பொறுப்பு ஏற்பட்டிருப்பதை உத்தேசித்து அவருக்கு ஒரு விசேஷ வர்த்தனை கொடுக்கவேண்டும். சம்பந்தப்பட்ட பெரிய மாகாணங்களிலுள்ள விவசாய இலாகா டைரெக்டர்களும் கால்நடை வைத்திய இலாகா தலைமை உத்தியோகஸ்தர்களும் சிறிய மாகாணங்களிலுள்ள தலைமை உத்தியோகஸ்தர்களுக்கு ஆலோசனை கூறுபவர்களாயிருக்க வேண்டும். மேலும், அவர்கள் நிஷ்கரிஷையான காலத்துக்கொரு முறை அந்த மாகாணங்களைப் போய்ப் பார்த்துவரவேண்டும். டெப்யுடி டைரெக்டரின் ஆலோசனையின்பேரில் கீழ்த்தர சிப்பந்திகளைத் தேர்ந்தெடுத்து நியமிக்கவேண்டும். டெல்லி மாகாணமானது - இதுவரையில் செய்துவந்ததுபோலவே பஞ்சாபிலுள்ள விவசாய இலாகா, கால்நடை வைத்திய இலாகா ஆகிய இவைகளின் உதவியை நாடியிருக்கவேண்டும்.

விவசாய ஆராய்ச்சிவேலை சம்பந்தமான ஆலோசனை சபையார் அது இந்த பிரதேசங்களின் விவசாய அபிவிருத்தி விஷயத்தில் விசேஷ சிரத்தை எடுத்துக்கொள்ளுமென்று நாங்கள் நம்புகிறோம். இந்த மாகாணங்களில் சரியான வழிகளில் விவசாய முன்னேற்றம் ஏற்படவேண்டுமானால், கல்வி, கூட்டுறவு ஆகிய இவைகளின் அபிவிருத்தி விஷயத்தில் இப்போது செலுத்துவதைக் காட்டிலும் அதிகமாய் கவனம் செலுத்துவது அவசியமாகும்.

சில இந்திய சமஸ்தானங்களுக்கு இந்தியாவைச் சேர்ந்த மத்திய பஞ்சு விசாரணைக் கம்மிட்டியிலும் விவசாய போர்ட் என்னும் ஆலோசனை சபையிலும் பிரதிநிதித்துவம் ஏற்படுத்திக் கொடுத்திருப்பது மூலமாக, விவசாய சம்பந்தமான விஷயங்களிலும் கூட்டுறவு சம்பந்தமான விஷயங்களிலும் ப்ரிடிஷ் இந்தியாவிலுள்ள கவர்ன்மென்டுக்கும் இந்திய சமஸ்தானங்களுக்கும் தீவிரமான முறையில் ஒதத்துழைப்பு ஏற்படுவதற்கு ஏற்கனவே அஸ்திவாரம் போடப்பட்டிருக்கிறது. இந்த ஒத்துழைப்பை இன்ன விதமாக அதிக சித்திகரமாயிருக்கும்படி செய்யக்கூடுமென்பதைக் குறித்தும், அதிலும் முக்கியமாய் ப்ரிடிஷ் இந்தியாவில் நடத்தப்படும் ஆராய்ச்சி வேலை சம்பந்தமான அமைப்பில் இந்திய சமஸ்தானங்களை இன்ன விதமாய் மிகப் பிரயோசனகரமாக சம்பந்தப்படுத்தக்கூடுமென்பதைக் குறித்தும் இந்தியா கவர்ன்மென்டாரும் இந்திய சமஸ்தானாதிபதிகளும் சீக்கிரத்திலேயே ஜாக்கிரதையாய் ஆலோசனை செய்வார்களென்று நம்பப்படுகிறது.

பொதுவாய் கிராமக் குடிஜனங்களின் க்ஷேமத்தைக் கவனித்து 1927-ம் வருஷத்தில் பம்பாய் ராஜதானிக்கென்று ஒரு பிரதேச சுய ஆட்சி ஸ்தாபனத்தை ஏற்படுத்தியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். இந்த ஸ்தாபனத்தின் நோக்கம் மெச்சத்தக்கதாயிருக்கிறதென்று எங்களுக்குத் தோற்றுகிறது. "பிரதேச சுய ஆட்சி என்பதன் அர்த்தத்தையும் லட்சியத்தையும், அதன் முக்கியதையையும், அது சம்பந்தமான பிரசினைகளையும், அந்த பிரசினைகளைக் குறித்து விவகரிக்கும் முறைகளையும் ஜனங்கள் தெரிந்துகொள்ளும்படி செய்வதே" மேற்படி ஸ்தாபனத்தின் நோக்கமாகும். அந்த ஸ்தாபனத்துக்கு ராஜதானி முழுவதிலும் உள்ளூர்களில் கிளை ஸ்தாபனங்கள் இருக்கும். ஜில்லா, டிவிஷன், மாகாண மகாநாடுகளை ஒழுங்காய் அமைப்பது அதன் முக்கியமான வேலைகளில் ஒன்றாயிருக்கும். வருஷத்துக்கொருமுறையோ இருமுறையோ ஜில்லா மகாநாடுகள் கூட்டப்படும். மேலும், அந்தந்த ஜில்லாவிலுள்ள பிரதேச அதிகார சபைகளின் பிரதிநிதிகள் ஒன்றாய்க்கூடி அவ்வவ்விடத்திய பிரசினைகளைக் குறித்தும் கஷ்டங்களைக் குறித்தும் ஆராய்ச்சி செய்வதற்கு மேற்படி மகாநாடுகளினால் சந்தர்ப்பம் வாய்க்கும். கிராமக் குடிஜனங்களின் க்ஷேமத்துக்கும் பட்டணங்களில் உள்ளவர்களின் க்ஷேமத்துக்கும் இந்த ஏற்பாட்டினால் நன்மை உண்டாவதற்கு விசேஷ இடமிருப்பதாக எங்களுக்குத் தோற்றுகிறது. மேலும், இந்த ஏற்பாட்டினால் கிராமக் குடிஜனங்களும் பட்டணங்களில் உள்ளவர்களும் பொதுவாக ஒன்றாகக் கூடுவதற்கு இடம் உண்டாகிறது. அந்தப்படி கூடுவதனால் அவர்கள் தங்களுடைய பரஸ்பர நன்மைகளை அதிகமாய்த்

தெரிந்துகொள்வதற்கும் பரஸ்பர உதவி செய்துகொள்ளவேண்டுமென்னும் உணர்ச்சி அதிகப்படுவதற்கும் அது விசேஷமாய்ச் சகாயம் செய்யக்கூடும். பம்பாயில் அனுசரிக்கப்பட்டுவரும் இந்த ஏற்பாட்டின் கொள்கைகளை இதர மாகாண கவர்ன்மெண்டுகளும் அந்த மாகாணங்களிலுள்ள பிரதேச சுய ஆட்சி ஸ்தாபனங்களும் கவனிப்பது நல்லதென்று நாங்கள் சிபாரிசு செய்கிறோம்.

மீடியொராலொஜி என்னும் வாயுபேத இயல்பைக் குறித்த சாஸ்திரத்துக்கும் விவசாயத்துக்கும் நெருங்கிய சம்பந்தம் ஏற்பட்டிருக்கிறதென்பது பிரத்தியட்சம். கால சுபாவத்தைக் குறித்த விதிகளைப்பற்றி ஆராய்ச்சி செய்வது ஷை சாஸ்திரத்தில் தேர்ச்சி பெற்றவரின் வேலையாகும். கால சுபாவத்தினால் பயிருக்கு ஏற்படும் பலாபலன்களைக் கவனிப்பது விவசாயியின் வேலையாகும். மீடியொரொலாஜிகல் இலாகாவின் தலைமை ஸ்தானத்தை ஸிம்லாவிலிருந்து பூனாவுக்கு மாற்றியதனால், விவசாய சம்பந்தமான ஷை சாஸ்திர விஷயமாய் ஏற்படும் பிரசினைகளை ஆராய்ச்சி செய்யும் விஷயத்தை விருத்திபடுத்துவதற்கும், இந்த வேலை சம்பந்தமான பற்பல பிரிவுகளுக்கு இன்னின்ன இலாகாக்களை உத்தரவாதியாகக் கொள்ளவேண்டுமென்பதைத் தீர்மானிப்பதற்கும் இன்ன நடவடிக்கை நடத்த வேண்டுமென்பதைக் குறித்துப் பரிசீலனை செய்வதற்குத் தக்க சமயம் வாய்க்கிறது. விவசாயத்தில் சிரத்தையுள்ள சாஸ்திர ஞானமுள்ளவர்கள் இரண்டு வழிகளில் ஆராய்ச்சிகள் செய்ய ஏற்றுக்கொள்ளலாம். அதாவது, முதலில் விவரக்கணக்குகள் சம்பந்தமாகவும், இரண்டாவது பிராணி சாஸ்திர சம்பந்தமாகவும் ஆராய்ச்சிகள் செய்யலாம். கால சுபாவத்தைக் குறித்து மீடியொரொலாஜிகல் இலாகாவால் சேகரிக்கப்படும் ஆதாரங்களை, விதைக்கப்பட்ட நில விஸ்தீரணம், பயிர்களின் கண்டுமுதல் ஆகிய இவைகள் விஷயமாய் ரெவினியு இலாகாவால் சேகரிக்கப்படும் விவரக்கணக்குகளுடன் சம்பந்தப்படுத்திப் பார்க்கிறபட்சத்திலே, விவசாயப் பிரசினைகள் சம்பந்தமாய் உபயோககரமான அனேக விஷயங்களைத் தெரிந்துகொள்ளலாம். சீதோஷ்ண நிலைமை காரணமாக விளைந்துகொண்டிருக்கும் பயிர்களுக்கு ஏற்படும் பலாபலன்களைக் குறித்து வாயுபேத இயல்பு சாஸ்திர முறைப்படி விஷயங்களைக் கண்டறிவதற்கு விவசாய இலாகாக்களே உத்தரவாதம் ஏற்றுக்கொள்ளவேண்டும். ஸிந்தில் ஸுக்கூர் அணைக்கட்டு வேலை முடிவாகிறபட்சத்திலே அதன் சீதோஷ்ண நிலைமையில் ஸ்பஷ்டமான மாறுதல் ஏற்படக்கூடியதை உத்தேசித்து மேலேகண்டபடி விஷயங்களைக் கவனித்தறிவதும் ஆராய்ச்சி செய்வதும் அவ்விடத்தில் முக்கியமாய் அவசியமாயிருப்பதாக தோற்றுகிறது.

ரோமாபுரியிலிருக்கும் இன்டர்நாஷனல் இன்ஸ்டிட்யூட் ஆவ் அக்ரிகல்சர் என்னும் சர்வதேச விவசாய ஸ்தாபனத்துடன் இந்தியா இதுவரையில் வைத்திருந்ததுபோலவே இன்னும் சம்பந்தம் வைத்துக்கொண்டிருக்கவேண்டும். மேலும், அந்த ஸ்தாபனத்தின் மகா சபைக் கூட்டங்களுக்கு இந்தியா பிரதிநிதிகளை அனுப்பிவரவும் வேண்டும். ஷை ஸ்தாபனத்தைச் சேர்ந்த நிரந்தர கம்மிட்டியில் இந்தியாவுக்குப் பிரதிநிதித்துவம் ஏற்படுத்துவதைக் குறித்து யோ

சிக்கும்போது, இப்போதிருப்பதைப் போலவே இந்தியாவின் நன்மையை ப்ரிடிஷ் பிரதிநிதி போதுமானமட்டில் கவனித்துவரக்கூடுமென்று சொல்லலாம். இந்த ஸ்தாபனமானது இந்தியாவுக்கு மிகவும் பிரயோசனகரமாயிருக்கும் விவரங்களை ஏராளமாய்ச் சேகரித்திருக்கிறது. ட்ராபிகல் அண்ட் கலோனியல் அக்ரிகல்சர் பீரோ என்னும் உஷ்ணப் பிரதேசங்களிலும் குடியேற்ற நாடுகளிலும் செய்யப்படும் விவசாயத்தைப்பற்றிய சமாசாரங்களைத் தெரிவிக்கும் சாலை ஒன்றை ஏற்படுத்தியிருப்பதனால் அதன் உபயோகம் சமீப காலத்தில் பின்னும் அதிகரித்திருக்கிறது. ஆகவே, விவசாய இலாகாவையும் அதற்குச் சம்பந்தப்பட்ட இதர இலாகாக்களையும் சேர்ந்த உத்தியோகஸ்தர்கள் ரஜாவின்மேலாகிலும் அலுவலின்மேலாகிலும ஐரோப்பாவுக்குப் போய் அங்கே இருக்கும்போது குறிப்பிட்ட எந்த விஷயத்தையாகிலும் கற்றறிவதற்கு இந்த ஸ்தாபனத்தைப் போய்ப் பார்க்கும்படி அவர்களைத் தூண்டுவது விசேஷமாய் விரும்பத்தக்கதாகும்.

ஏகாதிபத்தியத்தில் கிடைக்கும் வேலை செய்யப்படாத மூலப் பொருள்களின் உற்பத்திக்கும் உபயோகத்துக்கும் சம்பந்தப்பட்ட விவரங்களைப் பரிவர்த்தனம் செய்துகொள்வதற்கேற்ற இடமாயிருப்பதும், மூலப்பொருள்கள் விஷயமாய் பிரதமத்தில் நடத்தவேண்டிய ஆராய்ச்சிகளைத் தன்னுடைய ரஸாயன பரிசோதனைச் சாலைகளில் நடத்துவதும் லண்டனிலுள்ள இம்பீரியல் இன்ஸ்டிட்யூட் என்னும் ஏகாதிபத்திய ஸ்தாபனத்தின் முக்கியமான வேலைகளாகும். இந்தியாவில் விவசாய சம்பந்தமாய் வேலை செயபவர்களுக்கும் வியாபாரப் பற்றுள்ளவர்களுக்கும் இந்த ஸ்தாபனம் பிரயோசனகரமாய் பெரிதும் உதவி செய்யக்கூடும். மேலும், அதில் கிடைக்கக்கூடிய வசதிகளைக்குறித்து யாவர்க்கும் தெரியும்படி விளம்பரம் செய்ய வேண்டும். சுய ஆட்சி நாடுகளும் ஏகாதிபத்தியத்தைச் சேர்ந்த குடியேற்ற நாடுகளும் அனுசரித்துவரும் முறைப்படி அந்த ஸ்தாபனத்தில் இந்தியாவுக்கென்று ஒரு பகுதியை மீண்டும் ஒழுங்குபடுத்தியமைக்கும் விஷயத்தைக்குறித்தும், அந்தப் பகுதியைப் பராமரித்து வருவதற்காக மறுபடியும சந்தா கொடுத்துவரும் விஷயத்தைக் குறித்தும் ஆலோசிக்கவேண்டும்.

## 19. முடிவுரை.

பிரதான ரிபோர்ட்டின் 21-ம் அத்தியாயம்

ப்ரிடிஷ் இந்தியாவில் விவசாயம், கிராமப் பொருளாதாரம் ஆகிய இவைகளின் தற்போதைய நிலைமைகளைப் பரிசோதனைபண்ணி ரிபோர்ட் செய்யும்படியும், விவசாய அபிவிருத்தி சம்பந்தமாகவும் கிராமக் குடிஜனங்களின் க்ஷேமத்தையும் செல்வத்தையும் விருத்தி செய்வது சம்பந்தமாகவும் சிபாரிசுகள் செய்யும்படியும் எங்களுக்கு உத்தரவு செய்யப்பட்டது.

விவசாய உற்பத்தி சம்பந்தமான துறைமுழுவதிலும் முன்னிலும் அதிக திறமையை உண்டாக்கவேண்டுமென்னும் நோக்கத்துடனும், பயிர்தொழிலை விவசாயிக்கு அதிக லாபகரமானதாய்ச் செய்யும் நோக்கத்துடனுமே முந்திய அத்தியாயங்களில் நாங்கள் சில ஆலோ

சனைகளும் சிபாரிசுகளும் செய்திருக்கிறோம். முன்னிலும் நல்ல மாதிரியாய் வாழ்வை நடத்த விருப்பமும், அறிவு வளர்ச்சிக்கும் தேக ஆரோக்கியத்துக்கும் சம்பந்தப்பட்டமட்டில் சாஸ்திரங்கள் மூலமாகவும் நல்ல சட்டங்கள் மூலமாகவும் சிறந்த பரிபாலன மூலமாகவும் தமக்கு வாய்க்கக்கூடிய சந்தர்ப்பங்களைப் பயன்படுத்திக்கொள்வதற்கான சக்தியும் விவசாயிக்கு இருந்தாலொழிய, விவசாய விஷயமாய் முக்கியமான சீர்திருத்தம் எதுவும் செய்யமுடியாதென்று நாங்கள் உறுதியாய் நம்புகிறோம். அதை ஸ்பஷ்டமாய்க் காட்ட எங்கள் ரிபோர்ட் முழுவதிலும் நாங்கள் முயற்சி செய்திருக்கிறோம். விவசாயம் செழிப்பாய் இருப்பதற்குக் காரணமாயிருக்கும் சகல அம்சங்களிலும், விவசாயியின் மனப்பான்மையே மற்ற அம்சங்களைக் காட்டிலும் எவ்வளவோ முக்கியமானதாகும்.

இது அவரைச் சுற்றிலும் இருக்கும் நிலைமைகளைப் பெரும்பாலும் பொறுத்ததாயிருக்கிறது. ஆகவே, விவசாய முன்னேற்றத்தைக் கருதி செய்யப்படும் சகல ஏற்பாடுகளும் சித்தி பெறுவதானது - அபிவிருத்திக்கு அனுகுணமான நிலைமைகள் ஏற்படுத்துவதைப் பொறுத்ததாயிருக்கவேண்டும். இந்த முடிவு ஒப்புக்கொள்ளப்படுகிறபட்சத்திலே, சகல வழிகளிலும் கிராம வாழ்க்கையைச் சீர்திருத்தும் விஷயத்துக்கு உடனே ஒரு புதிய முக்கியதை ஏற்படுகிறது. ஜனத்தொகை முழுவதன் க்ஷேமத்தை விருத்தி செய்வதையும் மூலாதாரத்திலேயே தேச வருமானத்தைப் பெருக்குவதையும் உத்தேசித்து அனுசரித்துவரும் ஒரு விரிவான கொள்கையில் க்ஷி அபிவிருத்தி விஷயமானது அவசியமாய் அனுசரிக்கவேண்டிய முதற்படியாயிருப்பது காரணமாக, அதற்கு அப்படிப்பட்ட முக்கியதை ஏற்படுகிறது. நாட்டுப்புறங்களில் பொதுவான நிலைமைகளைச் சீர்படுத்த முன்யோசனையுடனும் ஒற்றுமையாகவும் முயற்சி செய்தால் மாத்திரமே முன்னிலும் சிறந்த வாழ்க்கை நடத்துவதற்குத் தூண்டுதல் ஏற்படுமென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம் மேலும், இப்படிப்பட்ட சீர்திருத்தம் செய்வதற்கு வேண்டிய காரியங்களைப் பிரதமத்தில் நடத்த ஆரம்பிப்பதற்கான பொறுப்பு கவர்ன்மென்டாருடையதேயென்று உறுதியாய்ச் சொல்ல நாங்கள் தயங்கமாட்டோம்

இந்த முக்கியமான உண்மையை உணர்ந்தது காரணமாக, கிராமக் குடிஜனங்களின் க்ஷேமத்தில் சம்பந்தப்பட்ட இலாகாக்களுக்காக செய்யப்படும் செலவு சமீப காலத்தில் விசேஷமாய் அதிகரித்திருக்கிறது. அந்தப்படி செலவு அதிகரித்திருந்தபோதிலும், அந்த உண்மையின் கருத்தை இந்தியா கவர்ன்மென்டும் பிரதேச கவர்ன்மென்டுகளும் போதுமானமட்டில் சரியாய்த் தெரிந்துகொள்ளவில்லையென்றும், கிராமங்களின் பிரசினையைத் தீர்ப்பதற்கு ஒரே மொத்தமாகவும் ஏக காலத்தில் சகல அம்சங்களிலும் நடவடிக்கை நடத்துவது அவசியமென்னும் விஷயமானது இன்னும் அவர்களுடைய மனதில் போதுமானமட்டில் ஏற்படவில்லையென்றும் நாங்கள் எண்ணுகிறோம். விவசாயியைச் சுற்றிலுமுள்ள நிலைமைகளிலும் அவருடைய மனப்பான்மையிலும் எவ்வித மாறுதல் உண்டாகாத பட்சத்திலே அவருடைய வாழ்க்கை நிலைமையை முக்கியாம்சத்தில் உயர்த்

தக்கூடுமென்னும் நம்பிக்கை ஏற்படுவதற்கு இடமிராதே அப்படிப் பட்ட மாறுதலை ஏற்படுத்தும் விஷயத்தில் ஒற்றுமையுடன் ஒழுங் காய் எவ்வித முயற்சிகளும் செய்யப்படாமலிருப்பதற்கு நாங்கள் விதித்திருக்கும் சித்தாந்தத்தின் அர்த்தத்தைப் பூர்த்தியாய்த் தெரிந்துகொள்ளத் தவறிப்போனது சிறிதுமட்டில் காரணமாகுமென்று நாங்கள் எண்ணுமல் இருக்கமுடியாது.

பல நூற்றுண்டுகளாக ஏற்பட்டிருக்கும் சுறுசுறுப்பின்மையை ஒழிக்கவேண்டுமானுல், கிராம முன்னேற்ற சம்பந்தமான பிரசினை யைத் தீர்ப்பதற்கு ராஜாங்கத்தின் வசத்திலிருக்கும் சகல ஆதாரங் களையும் உபயோகிக்கவேண்டும். எந்த இலாகாக்களினுல் செய்யப் படும் வேலைகள் கிராமக் குடிஜனங்களின் வாழ்க்கைக்கும் அவர்க ளைச் சுற்றிலுமுள்ள நிலைமைகளுக்கும் சம்பந்தப்படுகின்றனவோ அந்த இலாகாக்களெல்லாம் ஒழுங்காகவும் இடைவிடாமலும் இது விஷயமாய் முயற்சி செய்யவேண்டும். இதுவே இப்போது செய்ய வேண்டிய காரியமாகும்.

சகல மாகாணங்களிலும் இது விஷயத்தில் சம்பந்தப்பட்ட பற் பல இலாக்காக்களில் செய்யப்படும் வேலைகளை டெவெலப்மென்ட் போர்ட் என்னும் அபிவிருத்தி சபைகளைக்கொண்டாவது, அட்வை ஸரி கம்மிட்டி என்னும் ஆலோசனை சொல்லும் கம்மிட்டிகளைக் கொண்டாவது; குறித்த ஒரு நோக்கம் நிறைவேறும்பொருட்டு ஒன்றுபட்டு வேலைசெய்யும்படிச் செய்வதென்றும் குறிப்பான அலு வல் ஒப்புவிக்கப் பெற்றிருக்கும் உத்தியோகஸ்தர்களைக்கொண்டா வது ஒற்றுமைப்படுத்தி ஒழுங்காய் நடத்தினுலொழிய, இது விஷய மாய் நிரந்தரமான முன்னேற்றம் வெகுசாய் உண்டாகமாட்டா தென்னும் அபிப்பிராயம் பல இடங்களில் ஏற்பட்டிருக்கிறது. காரி யங்களை ஒற்றுமைப்படுத்தி ஒழுங்காய் நடத்துவதன் அவசியத்தை ஜனங்கள் உணர்ந்து கொண்டதனுலேயே அப்படிப்பட்ட அபிப்பி ராயம் ஏற்பட்டிருக்கிறதென்பதில் சந்தேகமில்லை. சில மாகாணங் களில் டெவெலப்மென்ட் போர்டுகளும், எல்லா மாகாணங்களிலும் அட்வைஸரி கம்மிட்டிகளும் ஏற்பட்டிருக்கின்றன. பற்பல இலா காக்களை ஒன்றுபடுத்தும் விஷயத்திலும் பொது ஜன அபிப்பிராயம் ஏற்படுவதற்குக் காரணமாயிருக்கும் தலைவர்களை இலாகாக்களில் நடத்தப்பட்டுவரும் வேலைகளில் சிரத்தை எடுத்துக்கொள்ளும்படிச் செய்யும் விஷயத்திலும் டி போர்டுகளினுலும் கம்மிட்டிகளினுலும் பலன் ஏற்படாமலில்லை. ஆனுல், கவர்ன்மென்டுகள் தங்களுடைய அலுவல்களைச் செய்யும் விஷயத்தை நியாயமாகவோ பிரயோசனகர மாகவோ இவ்வளவுமட்டில்தான் இந்த ஸ்தாபனங்களிடத்தில் ஒப்பு விக்கலாமென்பதற்குத் திட்டமான வரையறைகள் இருக்கின்றன. ஒரு கொள்கையை நிர்ணயிப்பதற்கான பொறுப்பும் அந்தக் கொள் கையை அமுலுக்குக் கொண்டுவரும்பொருட்டு இரண்டு அல்லது இரண்டுக்கு மேற்பட்ட இலாகாக்களின் முயற்சிகளை ஒன்றுபடுத் துவதற்கான பொறுப்பும் கவர்ன்மென்டாருடையதாயிருக்கவேண் டுமேயொழிய, வேறே எவருடையதாகவும் இருக்கக்கூடாது.

பல இலாகாக்களின் முயற்சிகளை ஒற்றுமைப்படுத்தி ஒழுங்கு படுத்துவதற்காக கவர்ன்மென்டுகள் உள்ளுக்குள் எவ்விதமான

அமைப்பை ஏற்படுத்திக்கொள்ளவேண்டுமென்பதைக் குறித்துச் சிபாரிசுகள் செய்வது எங்களுடைய கடமையைச் சேர்ந்ததல்ல. ஆயினும், இந்துதேசத்திலுள்ள நிலைமைகளைக் கவனித்தால், இது விஷயத்தில் ஒரு விசேஷ வகையான பொறுப்பு இராஜப்பிரதிநிதி அவர்களுக்கும் மாகாண கவர்னர்களுக்கும் ஏற்படுகிறதென்று நாங்கள் எடுத்துக்காட்ட விரும்புகிறோம். இராஜப்பிரதிநிதி அவர்கள் விவசாய விஷயங்களில் சொந்தமாய் சிரத்தை காட்டுகிறபட்சத்திலே, இந்தியாவின் முதன்மையான கைத்தொழில் எவ்வளவோ விருத்தியடையக்கூடுமென்னும் விஷயம் நாங்கள் நடத்திய விசாரணை முழுவதிலும் எங்களுடைய மனதில் நன்றாய்ப் பதிந்திருக்கிறது. ஆனால், இது விஷயத்தில் மாகாண கவர்னர்களுக்கு நேரில் ஏற்பட்டிருக்கும் பொறுப்பானது இராஜப்பிரதிநிதி அவர்களுக்கு ஏற்பட்டிருக்கும் பொறுப்பைக்காட்டிலும் அதிகமாயிருக்கிறது ஏனென்றால், கிராம அபிவிருத்தி விஷயத்தில் மிகவும நேராக சம்பந்தப்பட்டிருக்கும் ஊழிய வர்க்கங்கள் மாகாண கவர்ன்மென்டுகளாலேயே பரிபாலனம் செய்யப்படுவதுமல்லாமல், அவர்களே ஒதுக்கிவைக்கப்பட்ட இலாகாக்களுக்கும் மாற்றப்பட்ட இலாகாக்களுக்கும் ஒருவித சம்பந்தத்தையும் ஏற்படுத்துகிறார்கள். கிராமக் குடிஜனங்களின க்ஷேமத்தில் மிகவும் நேராக சம்பந்தப்பட்டிருக்கும் இலாகாக்களெல்லாம் மாற்றப்பட்ட இலாகாக்களில் அடங்கியிருக்கின்றன. அந்த இலாகாக்களின் விசாரணை வகிக்கும் மந்திரிமார்களுக்கும் இது விஷயத்தில் விசேஷ பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. மேலும், முதன்மையாகவும் அநுபவம் வாய்ந்தவர்களாகவும் உள்ள பரிபாலன கர்த்தர்கள் தலைமை வகிக்கும் பலமான ஸெக்ரெடேரியட் என்னும் ஆபிஸுகள் அவர்களுக்குச் செய்யக்கூடிய சகல வகையான உதவியும் அவர்களுக்கு வேண்டியிருக்கும்.

ஆனால், கிராமக் குடிஜனங்களின் அபிவிருத்தியை முன்னிட்டு ஒன்றாய்ச்சேர்ந்து நடத்தும் ஒரு இயக்கத்தை ஆரம்பிப்பது கவர்ன்மென்டுகளின் கடமையென்று நாங்கள் அபிப்பிராயப்படுகிறோம். ஆயினும், அப்படிப்பட்ட இயக்கத்துக்குப் பொது ஜனங்களின் அபிமானமும் சிரத்தையும் தீவிரமான ஆதரவும் கிடைத்தால் மாத்திரமே, அது பெருத்த அளவில் சித்தியடைந்து அந்தப் பலன் நிரந்தரமாய் இருக்கக்கூடுமென்பதை நாங்கள் ஒப்புக்கொள்ளுகிறோம். இது விஷயத்தில் சம்பந்தப்பட்ட ஜனத்தொகை மிகவும் அதிகமாகவும் நில விஸ்தீர்ணங்கள் மிகவும் விஸ்தாரமாகவும் இருப்பதால், ராஜாங்கத்தாரால் உபயோகிக்கப்படக்கூடுமென்று எதிர்பார்க்கக்கூடிய எவ்வகையான சாதனங்களும் இப்போது ஏற்றுக்கொண்டிருக்கும் காரியத்துக்குப் போதுமானவைகளாயிருக்கமுடியாது.

எங்களுடைய சிபாரிசுகள் அதி விஸ்தாரமாக அனேக விஷயங்களுக்குச் சம்பந்தப்பட்டவைகளாயிருக்கின்றன. ஆகவே, எங்களுடைய பிரேரேபணைகளில் செலவு ஏற்படக்கூடிய பிரேரேபணைகளுக்ுச் சரியாய் இவ்வளவு செலவு பிடிக்குமென்று மதிப்பிட்டுச் சொல்லவோ, அவைகளில் எவைகளை அவசரமாய் நிறைவேற்றவேண்டுமென்று முறைப்படுத்திக் கூறவோ எங்களுக்குச் சாத்தியப்படவில்லை. நாங்கள் கிராம அபிவிருத்தி விஷயமாக சுருக்கமாய் எடுத்துச் சொல்ல முயற்சித்திருக்கும் கொள்கையை நிறைவேற்றுதற்

குரிய பணம் கிடைக்கும்போது, பற்பல சட்டநிரூபண சபைகளும அதற்குச் சம்பந்தப்பட்ட இலாகாக்களின் வசத்தில் அவைகளுக்கு வேண்டிய பணத்தை ஒப்புவிக்க இஷ்டப்படுமென்று நாங்கள் மனப்பூர்வமாய் நம்புவதை இங்கே வெளியிட விரும்புகிறோம். ஒரு பெரிய முயற்சியின் முன்னேற்றத்துக்கு அனுகூலமான பொதுஜன அபிப்பிராயம் ஏற்படும்படிச் செய்யும் விஷயத்தில ஷ சட்டநிரூபண சபைகளின் மெம்பர்கள் தங்களுடைய கடமையைச் செய்வார்களென்று நாங்கள் உறுதியாய் நம்புகிறோம். இந்தியாவிலுள்ள விவசாயிகளுக்குச் சந்தர்ப்பம் வாய்க்கும்படி செய்கிறபட்சத்திலே, விவசாய விளைபொருள்களை உற்பத்திசெய்யும் வேலையில் சாஸ்திரங்கள் மூலமாகவும் ஒழுங்கான அமைப்புகளை ஏற்படுத்துவது மூலமாகவும் கிடைக்கக்கூடிய உதவியை நாளாவர்த்தியில் அதிகமாய்ப் பயன்படுத்திக்கொள்ள அவர்கள் விருப்பமுள்ளவர்களாகவும் சக்தியுள்ளவர்களாகவும் இருப்பார்களென்று எங்களுடைய விசாரணை மூலமாக நாங்கள் நன்றாய்த் தெரிந்துகொண்டோம்.

(A true translation)

C. N. SARAVANA MUDALIYAR,
*Tamil Translator to Government.*

**MADRAS: PRINTED BY THE SUPERINTENDENT, GOVERNMENT PRESS.**

## AGENTS FOR THE SALE OF MADRAS GOVERNMENT PUBLICATIONS

### IN INDIA

The Superintendent, NAZAIR KANUN HIND PRESS, Allahabad.

M. C. KOTHARI, Bookseller, Publisher and Newspaper Agent, Raopur Road, Baroda.

R. SUNDER PANDURANG, Kalbadevi Road, Bombay.

D. B. TARAPOREVALA SONS & Co., Bombay.

THACKER & Co. (LTD.), Bombay.

THE BURMA BOOK CLUB (LTD.), 240-A, Merchant Street, Rangoon, Burma.

THE BOOK COMPANY, Calcutta.

BUTTERWORTH & Co. (LTD.), 6, Hastings Street, Calcutta.

R. CAMBRAY & Co., Calcutta.

THACKER, SPINK & Co., 3, Esplanade East, Calcutta.

SHRI SHANKAR KARNATAKA PUSTAKA BHANDARA, Malamadui, Dharwar.

RAMAKRISHNA & SONS, Lahore.

THE UPPER INDIA PUBLISHING HOUSE (LTD.), Lucknow.

The Superintendent, DIOCESAN PRESS, Vepery, Madras.

HIGGINBOTHAMS (LTD.), Mount Road, Madras.

THE LAW BOOK DEPOT (LTD.), 15 & 16, Francis Joseph Street, Madras.

S. MURTHY & Co., Madras.

G. A. NATESAN & Co., Madras.

P. R. RAMA IYER & Co., Madras.

P. VARADACHARI & Co., Booksellers, 8, Linga Chetti Street, Madras.

S. VAS & Co., Madras.

THE THEOSOPHICAL PUBLISHING HOUSE, Adyar (Madras).

THE UNIVERSAL PUBLISHING Co., Bezwada (Madras).

E. M. GOPALAKRISHNA KONE, Pudumantapam, Madura (Madras).

THE MODERN STORES, Salem (Madras).

THE SRIVILLIPUTTUR CO-OPERATIVE TRADING UNION (LTD.), Srivilliputtur (Madras).

S. KRISHNASWAMI & Co., Teppakulam Post, Trichinopoly Fort (Madras).

CITY BOOK Co., Post Box No. 283, Madras.

NIVASARKAR, Manager, "Hitawada," Nagpur.

### IN STRAITS SETTLEMENTS

THE FEDERAL RUBBER STAMP Co., Penang.

### NOTICE

Official publications may be obtained in the United Kingdom either direct from the office of the High Commissioner for India, India House, Aldwych, London, W.C.-2, or through any bookseller.